# நெஞ்சம் மறப்பதில்லை

## உமா மகேஸ்வரி



## உள்ளே...


1. நெஞ்சம் மறப்பதில்லை 5
2. காதல் தந்த பரிசு 127


# நெஞ்சம் மறப்பதில்லை

## 1

*நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்;*
*நினைப்பவை எல்லாம் நடப்பதில்லை;*
*நடப்பவை நினைக்கப்படுவதில்லை.*

**'எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே யெண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்தநல் லறிவு வேண்டும்**
**பண்ணிய பாவ மெல்லாம்**
**பரிதிமுன் பனியே போல**
**நண்ணிய நின்மு னிங்கு**
**நசித்திடல் வேண்டும் மன்னாய்'**

பாரதியாரின் பாடலை முணுமுணுத்தபடி... நெஞ்சு நிறைய பக்தியோடு ஹாலில் இருந்த கடவுள் படங்களுக்கும், பூஜை அறையில் இருந்த படங்களுக்கும்... இன்ஸ்டெண்ட் சாம்பிராணி வில்லைகள் நாலைந்தைப் பற்ற வைத்து, சாம்பிராணி கரண்டி கொண்டு காட்டிக் கொண்டிருந்தாள் சாரதா. கிட்டத்தட்ட அந்த வீடு முழுவதும் கனவு சீன்களில் வரும் காட்சி போல் புகை மூட்டமாகக் காட்சியளித்தது. ஊதுபத்தி சூடம், ஆணியடித்தல் என்று எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு, தட்டில் உள்ள திருநீரை எடுத்து இரு புருவங்களுக்கு மத்தியில் பாலம் அமைத்துக் கொண்டு நிமிர்ந்தவளுக்கு...

நாற்பத்தி எட்டு வயது நிறைவடைந்து விட்டது. அதிகாலைக் குளியல் நடத்தியதை முகம் காட்டியது. விபூதிக் கீற்றை தவிர அந்த முகத்தில் சொல்லிக் கொள்ளும்படி வேறு எதுவும் வைக்கப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெள்ளிக் கம்பிகள் வெளியே தெரிந்தது. குறைவான கூந்தலும் ஈரம் சொட்டுவதற்காக... உலர வேண்டும் என்பதற்காக... தளர்த்தி நுனியில் கொண்டை போட்டு இறுக்கப்பட்டிருந்தது. புடவையும், ஜாக்கெட்டும் வெண்மை நிறத்தில் அவள் ஒரு விதவை என்று முரசு கொட்டியது. கைகளில்... கால்களில் நரம்பு தெரியும் அளவு... சுருக்கம்... கண்களுக்குக் கீழ் கருவளையத்தோடு கூடிய சின்ன குழி...

பூஜையை முடித்துக் கொண்டு, நேராய் கீதாஞ்சலி உறங்கிக் கொண்டு இருக்கும் அறையை எட்டிப் பார்த்தாள். படுக்கையில் ஆள் இல்லை. போர்வை மடித்துத் தலையணை மேல் போடப்பட்டு இருந்தது.

'நான் எழுப்பாமலேயே எழுந்து விட்டாளா?' எண்ணிக் கொண்டே சமையல் அறைக்குள் நுழைந்து ஃபில்டரில் இருந்த டிக்காசனை பாலோடு கலந்தாள்.



பாத்ரூம் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

ப்ளூ கலர் நைட்டியில் மஞ்சள் நிற டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டே சமையல் அறையை நோக்கி வந்தாள். சலங்கை, முத்துக்கள் இல்லாத மெல்லிய கொலுசுகள் அவள் கணுக்காலை தழுவிக் கொண்டு இருந்தாலும்... அந்த நடைக்கு ஏற்ற சங்கீதம் ஒன்றை சத்தமில்லாமல் கொடுத்தன. டவலைத் தோளில் போட்டுக் கொண்டாள். பளிச்சென்ற அந்த காந்த முகத்தில் சின்னதாய் ஒரு கறுப்பு ஸ்டிக்கர் கோடு போட்டது போல் அழகாய் மெலிந்த புருவங்கள் பன்னீரில் மிதக்கும் கறுப்பு திராட்சை போல் மின்னும் விழிகள். ஈரம் ஊற்றெடுக்கும் இதழ்கள். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் வித்தியாசம் சிவந்த கோதுமை கலர். ஐந்தரை அடியைத் தொடலாமா - வேண்டாமா என்று எண்ணும் உயரம் சதை போடலாமா வேண்டாமா என்று யோசிக்கும் மெல்லிய தேகம்.

கிச்சனின் கதவைப் பிடித்துக் கொண்டு, கதவை முன்னும் பின்னும் ஆட்டிக் கொண்டே,

''காபிம்மா'' என்றாள்.

நுரை பொங்க சூடான காபியோடு திரும்பிய சாரதா,

''கதவை ஆட்டாதடி... சண்டை வரும்.''

''சண்டையா? யாருக்கு? உனக்கும் எனக்குமா?'' காபியை பிடுங்கிக் கொண்டாள் கீதாஞ்சலி.

''உனக்கும் எனக்கும் தான் தினமும் நடக்குதே... வேற ஏதாவது வந்திடப் போவுது.''

''ஓ... இதில் அப்படி ஒரு விஷயம் இருக்காம்மா... தள்ளி நிக்கிறேன்'' என்றபடி உள்ளே நுழைந்து கொண்டு, காலி டம்ளரை கேஸ் ஸ்டவ் அருகில் இருந்த வாஷ் பேசினில் போட்டு விட்டுத் திரும்பினாள்.

''அதிசயமா எம்பொண்ணு எழுப்பாம எழுந்திரிச்சிருக்கா சீக்கிரம் கம்பெனிக்குப் போகனுமா?'' என்ற பெற்றவளைப் பார்த்து...

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை... நீ போட்ட சாம்பி ராணிதான் மூச்சு முட்டுதே... பின்ன எப்படித் தூங்குறது? செவ்வாய்... வெள்ளி வந்துடக் கூடாதும்மா உனக்கு'' கழுத்தை வெட்டினாள்.

''ரொம்ப திருப்பாதடி... சுளுக்கிக்கப் போவுது... இந்தக் காலத்துப் பொண்ணுங்க கடவுள் பக்தின்னா, கிலோ என் னன்னு கேக்குதுங்க. நான் கண்ணை மூடிக்கிட்டா நீ எங்கே இதெல்லாம் கடைபிடிக்கப் போற?'' குரலில் உண்மையான வருத்தம் தெரிந்தது.

''கண்டிப்பா ஃபாலோ பண்ணமாட்டேன்.''

மகளைத் திரும்பிப் பார்த்த சாரதா... எதுவும் பேசாமல் ஃப்ரிஜ்ஜை திறந்து... அன்றைக்கு தேவையான காய்களை எடுத்து வெளியே வைத்தாள்.

''ம்மா.''

''என்னம்மா?''

''கம்பெனி ஒர்க் கொஞ்சம் இருக்கு. ஃபைல்ஸ் எல்லாம் எடுத்துக்கிட்டு வந்திருக்கேன்.''

''ஃபைலா? நீ கம்ப்யூட்டர் எஞ்ஜினீயராச்சே... ஃபைல்ல கூட வேலை பார்க்கணுமா?'' சந்தேகமாகக் கேட்டாள்.

''இம்... இதுக்குத்தான் எல்லாத்தையும் சொல்லக் கூடாது. கம்ப்யூட்டர் முன்னால இருந்தா... ஃபைல்கள் இருக்காதா?'' அருகில் சென்று தோளைக் கட்டிக் கொண்டாள்.

''வெந்நீர் இப்போதே போட்டுடட்டுமா?''



''ம்கூம்... இப்போ வேண்டாம்... கொஞ்சம் நேரமாகட் டும்.''

''என்னடா சமைக்கட்டும்?''

''உன் இஷ்டம்மா... உன் கைபட்டாலே எல்லாமே நல்லா இருக்கும்.''

''அதெல்லாம் வேண்டாம்... என்ன வேணும் சொல்லு?''

''என்ன சொன்னாலும் செஞ்சி தருவியா?''

''மொதல்ல சொல்லு.''

''பழைய சோறு.''

''இந்தக் குறும்புதானே வேணாங்கறது. பழைய சோறு என்ன கேட்டதும் கிடைக்குமா? வேணுன்னா சொல்லு... நாளைக்குப் பழைய சோறு வக்கிற மாதிரி கொஞ்சம் சாதம் கூட வடிச்சிடறேன்.''

''வேண்டாம்மா... வேணுன்னா சொல்றேன்... இன்னைக்கு டிபன் எதுவும் வேண்டாம்மா ஒரேயடியா சமைச்சிடேன்.''

''சரிடா.''

சமையல் அறையை விட்டு வெளியே வரும்போது...

''அஞ்சலி'' என்றாள் சாரதா.

''என்னம்மா?''

''நேத்து சொன்ன வரன்.''

''ம்... வரச் சொல்லு.''

''உனக்கு?''

''இங்கே பாரும்மா... உனக்குப் பிடிச்சிருக்கான்னு முதல்ல பாரு... உனக்குப் பிடிச்சிருந்தால் சரி... நோ அப்ஜக்சன்.''

''நிஜமாவா?'' கண்களில் லேசாய் நீர்த் துளி கசிந்தது.

''நிஜம் மட்டும் அல்ல... ப்ராமிஸ்.''

''அப்போ வர்ற வாரம் வரச் சொல்லிடட்டா?''

''ம்... வரச் சொல்லு... ம்மா... அதே நேரம் என் கண்டிசனையும் சொன்னியா?''

''யாருகிட்டே? வரன்கிட்டேயா?''

''வரன் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம். தரகர்கிட்டே முதல்ல சொல்லு.'' என்றவள், ஃபைல் நினைவு வந்ததும்,

'இதைப் பற்றி அப்புறமா பேசலாம்' என்று கூறிவிட்டு, தன் அறைக்கு வேகமாய் நடந்து... டேபிள் மேல் நைட் லேம்ப் அருகில் இருந்த... அந்த ப்ரவுன் கலர் ஃபைலைப் புரட்டும் போது, சம்பந்தம் இல்லாமல் கொஞ்ச நாட்களாய் தோன்றும் அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. தினமும் அவள் கம்பெனிக்கு வந்து கம்ப்யூட்டரை ஆப்பரேட் பண்ணினால்.. வெளிர் பச்சை ஸ்கிரீனில் 'ஐ லவ் யூ' என்ற வார்த்தைகள் ஒளிரும். கீழே பெயர் இருக்காது. கம்ப்யூட்டரில் உள்ள ஃபைலையும் ஸ்டோர் பண்ணி குளோஸ் பண்ணி வைத்தாலும், சரியாய் 'ஐ' ஃபைல் மட்டும் இவள் வரும்போது ஓப்பனாகி இருக்கும்.

கம்பெனியில் தன்னோடு பணிபுரிபவர் யாரோதான் இப்படி விளையாடிக் கொண்டிருப்பது; யார் என்று தான் புரியவில்லை. கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இவளுக்கு இன்று வரை வந்ததில்லை. ஆனால் வரன் பற்றி பேசியதும், முகம் தெரியாத அறியாத 'ஐ லவ் யூ' மனிதனைத் தான் நினைவிற்கு வந்தது.

சட்டென அந்த எண்ணத்தை உதறிவிட்டு...



ஃபைலைப் புரட்டினாள். ஃபைல் கரெக்ஷன் எல்லாவற்றையும் முடித்து வால் கிளாக்கைப் பார்த்தபோது பகீர் என்றது. வேகமாய் வெளியே வந்தவள்...

''அம்மா... தண்ணி காஞ்சிடுச்சா?'' என்றாள்.

''இல்லையே.. இன்னும் வைக்கவே இல்லையே!''

''மை காட்... ஏன்''

''நீதானே நான் சொல்லும்போது தண்ணீர் சுடப் பண்ணுன்னு சொன்ன?''

''அய்யோ...'' தன் தலையில் அடித்துக் கொண்டாள்.

''சரி... கத்தாத... கேஸ்ல போட்டால் பத்து நிமிஷம் தான்.''

''நீ இனிமே ஒண்ணும் போட வேண்டாம். சமையல் பண்ண ஆரம்பிச்சிட்டின்னா பக்கத்துல பாம் வச்சாக்கூடத் தெரியாது.''

''டேய்... இருடா... போட்டுடறேன்'' சாரதா கெஞ்சலோடு வெளிப்பட..

''வேண்டாம்... வேண்டாம்... ஏற்கனவே நேரமாச்சி... பச்சத் தண்ணீலேயே குளிச்சிடுறேன்.''

''வேண்டாம் வீம்பு... நீ பச்ச தண்ணியில குளிக்க மாட்டே.''

''குளிச்சிக் காட்டறேன்.''

''குளிக்காமத்தான் வெளியே வரப் போற.''

''அம்மா... பேசிப் பேசி டைம் வேஸ்ட் பண்ற... வந்து பேசிக்கறேன்'' என்று படபடத்து விட்டு கையில் பட்ட நைட்டி,

உள்ளாடைகளோடு பாத்ரூமுக்குள் தன்னை அடைத்துக் கொண்டாள்.

சுவிட்சைத் தட்டினாள்.

தொட்டியில், இரண்டு பக்கெட்டில், வழிய, வழிய தண்ணீர் நிரம்பி இருந்தது. கை வைத்துப் பார்த்தாள்.

ஜிலீர் என்றது.

கையை உதறிக் கொண்டாள்.

திரும்பத் தண்ணீரைத் தொட்டுப் பார்த்தாள். அத்தனை நரம்புகளும் விழித்துக் கொண்டு விறைத்தது. பனிக்கட்டியை விட தண்ணீர் ஜில்லென்று இருந்தது. ஒரு நாலைந்து முறை கை வைத்துப் பார்த்துப் பார்த்து கடைசியாய்த் தன் தோல்வியை ஒப்புக்கொள்ள இயலாமல், குளிக்க முடிவு செய்தாள்.

கண்களை மூடிக்கொண்டு, சடசடவென நாலைந்து மக் தண்ணீர் எடுத்து, படீர், படீர் என ஊற்றிக் கொண்டாள். காக்காக் குளியல் என்றால் என்ன என்பதை அன்றுதான் அறிந்து கொண்டாள்.

ஸாரி கட்டி, மேக்கப் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு, 8.45க்கு எல்லாம், டைனிங் டேபிளுக்கு வந்தாள். நிதானமாய் சாப்பிட நேரம் இல்லாததால், அவசர அவசரமாய் அள்ளிக் கொட்டிக் கொண்டாள். டிபன் கேரியரை வாங்கி, அதற்கென்று உள்ள பேக்கில் வைத்துக் கொண்டு செருப்பிற்குள் காலைத் திணித்தபோது...

''எதுக்கு இந்த அவசரம்? கொஞ்சம் சீக்கிரம் எழுந்தால் போதும்.''

''இந்த நேரத்தில் அட்வைஸா?'' சொல்லிக் கொண்டே... படியிறங்கும்போது கால் தடுக்கியது.



''அஞ்சலி... பாத்து'' பதட்டத்தோடு சாரதாவின் குரல் ஒலித்தது.

''ஒண்ணுமில்லைம்மா...'' கைகளை ஆட்டிவிட்டு நடந்தாள்.

''மெதுவா போ.''

''மெதுவா நடந்தா, பஸ்ஸை புடிச்சி நைன் தோர்ட்டிக்கு கம்பெனிக்குப் போக முடியாது.''

''வண்டி வாங்கிக்கன்னு சொன்னா கேக்குறியா? இப்படி அரக்கப் பறக்கப் போக வேண்டியது இருக்காதில்ல?''

''யோசிக்கலாம்... யோசிக்கலாம்.''

மகள் கண்களில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு, உருவம் மறைந்ததும், வீட்டிற்குள் நுழைந்து கதவைத் தாழிட்டாள். அரை குறையாய் சாப்பிட்டு விட்டு மீதம் வைத்து விட்டு போன மகளின் தட்டிலேயே... மேலும் சாப்பாடு போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கினாள்.

ரவிக்குமார் புட் புராடெக்ட் பிரைவேட் லிட் என்ற எழுத்துக்களைத் தாங்கி கம்பீரமாய் உயர்ந்து நின்ற கட்டடத்தின் வாயிலை கீதாஞ்சலி வந்தடைந்தபோது, சரியாய் மணி 9.30.

''வள்ளி, குட்மார்னிங்'' கீதாஞ்சலி ரிசப்ஷனிஸ்டைப் பார்த்துக் கூறியபோது...

''டைம் நைன் தோர்ட்டியா'' அந்த அலுவலகத்தில் பணி புரியும் ஒருவர், தன் அருகில் இருக்கும் மற்றொருவரிடம் கேட்க... அவர் தன் வாட்சில் டைம் பார்த்து,

''ஆமாம்! ஒன்பது முப்பது.''

''அதானே பார்த்தேன்.''

''ஏன்?''

''வெரி சிம்பிள். கம்ப்யூட்டர் எஞ்ஜினியர் கீதாஞ்சலி உள்ளே நுழைந்தாலே, நைன் தேர்ட்டி என்று அர்த்தம். அவ்வளவு பஞ்சுவாலிட்டி.''

அவர்கள் இருவரும் பேசியதை, உள்ளுக்குள் சிரித்த படியே கேட்டுக் கொண்டு தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். எல்லா சுவிட்சையும் பட்பட்டெனத் தட்டி விட்டாள். வெண்ணிற ஒளி அறையை நிறைத்துக் கொண்டது.

வேகமாய் ஆர்வமாய் போய்க் கம்ப்யூட்டரைத் தட்டினாள்.

அவள் எதிர்பார்த்தபடி 'ஐ லவ் யூ' திரையில் மின்னியது.

காதைத் தொட ஒரு பக்கம் இதழ் மேலேறி முயற்சித்தது. அதைப் பார்க்க, அவள் கேலியாய் சிரிப்பது போல் பட்டது. சேரில் அமர்ந்து கொண்டு,

கம்ப்யூட்டர் கீ போர்டில் பட்டன்களைத் தட்டினாள். கீ போர் டில் அவள் மெல்லிய அழகிய விரல்கள் வேகமாய் நர்த்தனம் ஆடியது.

அன்றைக்குத் தேவையான, எம்.டி. பார்க்க வேண்டிய அத்தனை அவுட்புட்டையும் ஒவ்வொன்றாய் வெளியே எடுத்தாள். எடுத்ததைச் சரி பார்த்துக் கொண்டிருந்தபோது...

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

''எஸ்... கமின்'' என்றாள்.

''ஹலோ... குட்மார்னிங்'' உற்சாகமாய்க் கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தான் சந்திரகாந்த்.



''குட்மார்னிங் ஸார்'' அவன் குரல் கேட்டதுமே மலர்ந் தாள்.

''எல்லாத்தையும் வெளியே எடுத்துட்டியா?''

''இதோ'' அத்தனையையும் அவன் கைகளில் கொடுத் தாள்.

புரட்டிப் பார்த்தவன்,

''குட்... குட்... குட்...'' கூறிக் கொண்டே ஒவ்வொரு பக்கத் தையும் புரட்டினான். அவன் கம்ப்யூட்டரில் இருந்து எடுத்த சீட்டைப் பார்க்க, இவள் அவனைப் பார்த்தாள்.

பெரிய பணக்காரத் தம்பதிகளுக்குப் பிறந்த ஒரே வாரிசு என்று கேள்விப்பட்டு இருக்கின்றாள். கம்பீரமான தோற்றம், கவர்ச்சியான குரல், காந்த விழி. மொத்தத்தில் ஹேண்சமான ஆள்... இவளுக்கு சீனியர். குழந்தைக்கு சொல்லிக் கொடுப்பது போல் டவுட்டைக் கிளியர் பண்ணுவான்.

அவன் பணிவும், நல்ல நடத்தையும் எல்லோருக்குமே பிடிக்கும் இன்னும் திருமணம் ஆகாத இளைஞன்.

''அஞ்சலி!

''ஸார்...''

''இயர் ப்ராடெக்ட் ஸ்டேட்மெண்ட் அவுட் புட் எங்கே?''

''அது யுரேன்ரன்ட் ஃபைல்ல இருக்கு.''

''அதை வெளியே எடு.''

அடுத்த விநாடியே எடுத்துக் கொடுத்தாள்.

வாங்கிக் கொண்டு, ''தேங்க்ஸ்'' என்று சிரித்தான்.

''இட்ஸ் மை ட்யூட்டி ஸார்'' என்றாள்.

''நீங்க ஏன் நின்னுகிட்டே இருக்கீங்க... சிடவுன்.''

''தேங்க் யூ'' கூறிவிட்டு அமர்ந்து கொண்டாள். அவன் இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் வேலையைத் தொடங்கினாள். சிறிது நேரம் தயக்கமாக அவளைப் பார்த்தவன்...

''மிஸ் கீதாஞ்சலி'' என்றான் மெதுவாய்...

''ஸார்!'' நிமிர்ந்து பார்த்தாள்.

''ஒரு ஹேப்பி மேட்டர்.''

''மேரேஜா சார்?'' சிரித்தாள்.

''நோ... நோ... ஸ்விச்சர்லாந்த் போறேன்.''

''வாவ்! எப்போ ஸார்?'' சேரைத் தள்ளிவிட்டு எழுந்தாள்.

அவளின் சந்தோஷம் அவனுக்குப் பெருமிதமாக இருந்தது.

''கம்மிங் செவண்டீன்த். நம்மோட மெயின் ப்ராஞ்சே ஸ்விச்சர்லாந்தில்தானே இருக்கு... புட் ப்ராடெக்ட் இன்க்ரீஸ் பண்றதைப் பற்றிய டிஸ்கஸன் ஒரு சிக்ஸ் மன்த் கோர்ஸ் ஒண்ணு இருக்கு... அதையும் ஒண்ணா முடிச்சிடலாம்னு...''

''கங்கிராஜுலேஷன்ஸ்!''

''நிறைய வேலை இருக்கு... அதனால் நாளைக்கு வரமாட்டேன். இனிமேல் நாம பார்க்கப் போறது சிக்ஸ் மன்த்ஸ்க்கப்புறம்தான். அதான் சொல்லலாம்னு.''

''தேங்க்ஸ் ஸார்... ஒ நீங்க ஃபாரின் போக இன்னும் ரெண்டு நாள் தான் இருக்கா?''

''ம்...'' தலையாட்டிக் கொண்டே கிளம்பியவனை...

''ஸார்...'' எனத் தடுத்து நிறுத்தினாள்.

''சொல்லுங்க...'' என்றான்.



''கல்யாணச் சாப்பாடு எப்போ?'' அவள் கேட்டதும், அவன் முகம் சிவந்தது.

''ஃபாரின் போய் வந்ததும்.''

''ரியலி!''

''உங்ககிட்டே எதுக்குப் பொய் சொல்லப் போறேன்... உண்மைதான்.''

''பொண்ணு பார்த்தாச்சா?'' கண்களைச் சிமிட்டினாள்.

''பார்த்தாச்சு.''

''சொல்லவே இல்லையே?''

''பொண்ணுகிட்டேயே சொல்லலை!''

''லவ் லாக்கா?'' கண்களில் கிண்டல் மின்னியது.

''ம்!'' அதற்கு மேல் அவன் அங்கு நிற்கவில்லை.

அவன் கேபின் உள்ளே நுழைந்தபோது, அவன் நண்பன் சுந்தர் அன்றைய ஆங்கில நாளிதழ் ஒன்றை புரட்டிக் கொண்டிருந்தான்.

''டேய்... நீ எப்படா வந்தே?'' வேகமாய் அவன் தோளைத் தட்டினான் சந்திரகாந்த்.

''நான் வந்து ரொம்ப நேரமாவுதுடா... எங்கே போய்ட்டு வர? உன் தேவதையைப் பார்க்கவா?''

தலையாட்டினான்.

''ஃபாரின் போவப் போறே... இப்பவாவது கீதாஞ்சலி கிட்டே உன் காதலைச் சொன்னியா?''

''அவ எவ்வளவு அழகா இருக்கா தெரியுமா? இன்னைக்கு ஒரு நேவி புளூவில ஒரு காட்டன் புடவை ஸோ ஃப்யூட்டிஃபுல்.''

''டேய்... டேய்... நான் என்ன கேக்குறேன்? நீ என்ன சொல்றே?''

''என்னால முடியலை சுந்தர்... அவளைப் பார்த்துகிட்டே இருக்கணும்னு தோணுதே தவிர... மனசுல இருக்கிறதை சொல்ல முடியலைடா...'' பரிதாபமாகப் பார்த்தான்.

''எந்த விஷயத்தில் வேணா மௌனமாவும், கோழையாவும் இருக்கலாம்... இந்த விஷயத்தில் அப்படி இருக்கக் கூடாது. கடைசியில் இதயம் பட முரளி மாதிரி ஆயிடக் கூடாது.''

''.........''

''நீ மௌனமா இருந்தா... திடீர்னு ஒரு நாள்... மேரேஜ் இன்விடேசனை கீதாஞ்சலி நீட்டிடலாம்'' அவன் முடிக்கும் முன்பே, அவன் கழுத்தில் கைகளைக் கொண்டு நெருக்கி...

''அது மட்டும் நடக்கக் கூடாது... நான் விரும்பின பொருள், உறவு எனக்கு மட்டும்தான் சொந்தமா இருக்கணும்... வேற யாராவது நினைச்சிப் பார்த்தாக்கூட அழிச்சிடுவேன்'' பற்கள் நெறிபட அவன் கூறுவதைப் பயத்தோடு சுந்தர் பார்த்தான்.

## 2

*கதவைத் தட்டாத காரணத்தால்*

*எத்தனையோ வாய்ப்புகளை இழக்க நேரிடுகிறது.*

''**சா**ரதாப் பாட்டி!'' என்று பெயர் சொல்லி அழைத்தபடி பக்கத்து வீட்டு மூன்று வயது வாண்டு ஓடி வந்தது.



''சாரதாப் பாட்டி!''

தோட்டத்துப் பக்கம் துணி உலர்த்திக் கொண்டிருந்த சாரதா குரல் கேட்டு, உலர்த்தும் வேலையை அப்படியே பாதியில் விட்டுவிட்டு, தூக்கிச் செருகியிருந்த சேலையைப் பற்றிக் கவலைப்படாமல் ஹாலுக்கு வந்தாள். பக்கத்து வீட்டு வாண்டு, இடுப்பில் கைகளை ஊன்றி நின்றது.

''வாடியம்மா ராசாத்தி'' சாரதா அணைத்துக் கொள்ள கைகளை நீட்டினாள்.

''ம்கூம்... வேண்டாம். உன் கையெல்லாம் ஈரம் இருக்கு'' ஒதுங்கிக் கொண்டது.

''சரியம்மா, வாயாடி.''

''வாயாடி ஒண்ணும் இல்லை... ஷர்மி'' வார்த்தைகளை மழலையின் காரணமாய் எச்சில் விழுங்குவது போல் விழுங்கி விழுங்கிப் பேசியது.

''எதுக்குக் கூப்ட?''

''பாட்டி... போன்.''

''எனக்கா?''

''இம்... உங்களைத்தான் கூப்பிட்டாங்க. மம்மி சொல்லிட்டு வரச் சொன்னா.''

''இதோ வந்துட்டேன்'' அவசர அவசரமாய் கதவைத் தாழிட்டுவிட்டு ஷர்மிளாவை தூக்கிக் கொண்டு பக்கத்து வீட்டில் நுழைந்தாள். டேபிள் மேல் இருந்த ஃபோனின் ரிசீவர் எடுத்து கீழே வைக்கப்பட்டு இருந்தது.

''யாரும்மா போன்ல? கீதாஞ்சலியா?'' ரிசீவரைத் தொடுவதற்கு முன்பு சாரதா கேட்க, ''இல்லம்மா.. நம்ம கீதா இல்லை... யாரோ ஆண் குரல் மாதிரி இருக்கு'' குட்டீசின் அம்மா கூற...

ரிசீவரை எடுத்து.

''ஹலோ!'' என்றாள் சாரதா.

''சாரதாங்களா'' எதிர்பக்கம் குரல் கேட்டது.

''ஆமாம்.''

''அம்மா, நான் தரகர் சுதர்சனம் பேசறேன்.''

''சொல்லுங்க.''

''நம்ம வீட்டைப் பத்தி, நம்ம பொண்ணைப் பத்தி எல்லாத்தையும் பிள்ளை வீட்டுக்காரங்க கிட்டே சொல்லிட்டேன். நம்ம பொண்ணோட ஃபோட்டோவை அவங்க எல்லாரும் பார்த்தாங்க ரொம்பப் பிடிச்சிருக்குன்னும் சொன்னாங்க.''

''ரொம்ப சந்தோஷம்.''

''நாளைக்கு அவங்க வராங்க.''

''நாளைக்கேவா.''

''ஆமாம்மா.''

''எப்போ?''

''காலையிலேயே நல்ல நேரத்தில கூட்டிகிட்டு வந்திடறேன். சாயந்தரம்தான் ராகு காலம் ஆச்சே!''

''சரி.''

''அப்போ வச்சிடறேம்மா!''

''வச்சிடுங்க'' தரகர் போனை வைக்கும் சத்தத்தைக் காதில் வாங்கிக் கொண்ட பின்னால் தானும் வைத்தாள்.

இரவு 8.30.

சாப்பிட்டு முடித்து கைகளைத் துடைத்துக் கொண்டு, டி.வி.யை ஆன் பண்ணினாள் கீதாஞ்சலி.



அதன்பின், அரைமணி நேரத்தில் சமையல் அறையில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு, சமையல் அறைக் கதவையும் சாத்திவிட்டு, மகள் அருகே சாரதா வந்து அமர்ந்து கொண்டாள். சாரதா பக்கத்தில் அமர்ந்து கொண்டதுமே, உட்கார்ந்து இருந்த கீதாஞ்சலி அப்படியே சரிந்து மடியில் தலை வைத்து, சாய்ந்து திரும்பி, தன் உடலைச் சுருக்கிக் கொண்டு டி.வி. பார்ப்பதை கண்டினியூ பண்ணினாள்.

மகள் தலையை ஆதரவாய் அன்பாய் தடவியவள், பேசத் தொடங்கினாள்.

''நாளைக்கு எங்காவது வெளியே போற வேலை இருக்காடா?''

''ஏம்மா... சண்டேகூட நான் ரெஸ்டில் இருக்கக் கூடாதா? எமர்ஜென்சின்னா மட்டும்தான் சண்டேவை நான் தியாகம் பண்ணுவேன். சண்டேன்னாவே தூங்கணும்மா... ஸோ.. நோ ப்ரோகிராம்.''

''அப்பாடி, சௌரியமாப் போச்சு.''

''சௌரியமா எதுக்கு?'' திரும்பித் தாயை அன்னாந்து பார்த்தாள். அவள் பார்வை சாரதாவின் நெஞ்சில் இருந்த புடவை மடிப்பில், சாம்பார் விழுந்து மஞ்சளாகிப் போயிருந்த கறை கண்ணில் பட்டது.

''ஏம்மா... எத்தனை முறை சொல்லியிருக்கேன். புடவையை மாத்தும்மா. வெள்ளைப் புடவை வேண்டாம்மா. நீ விடோன்னு ஊருக்கெல்லாம் தெரியணுமா? கலர் ஸாரி கட்டிக்கயேன். சந்தோஷமா உன்னிடம் பேச வந்தாலும், வெற்று நெற்றி, வளையல் இல்லாத கைகள், கிளை இல்லாத மரம் போல எதுவுமே இல்லாத கழுத்து, வெள்ளைப் புடவை, இதெல்லாம் கண்ணில் பட்டதும், கரண்ட் கட்டான மாதிரி மனசு இருட்டாயிடுது.''

''அதை விடும்மா... நடைமுறைக்கு ஒத்து வர்றதை எப்ப வுமே நான் கடைபிடிக்கிறவ. நீ நடைமுறைக்கு ஒத்து வராத எதார்த்தம்னு எதையாவது உளர்றவ.''

''நானா... நேரம்தான்.. இந்த விஷயத்தில் உன்னை மாத்த முடியலம்மா!''

''நான் மாறுவது இருக்கட்டும். காலையில் நீ சீக்கிரம் எழுந்திரு.''

''ஏன்?''

''உன்னைப் பெண் பார்க்க வர்றாங்க.''

''என்னது?'' எழுந்து உட்கார்ந்தவள், டி.வி. வால்யூமை எழுந்து போய்க் குறைத்துவிட்டு வந்து, சாரதாவை உரசிய படி உட்கார்ந்தாள்.

''பொண்ணு பார்க்க வர்றாங்களா?''

''ஆமாம்... காலையில.''

''யாரு?''

''வாத்தியார் மாப்பிள்ளைதான்.''

''எந்த வாத்தியாரும்மா? நீதான் ஒவ்வொரு வேலை யிலும் பத்து, பதினைந்து ஃபோட்டோவைக் காட்டியிருக்கே? யாரு?''

''நீ பாத்து, சரீன்னு சொன்னதுதான்.''

''நான்தான் கொண்டு வந்து கொடுத்த ஃபோட்டோவில் பாதி பேருக்கு தலையாட்டினேனே... எல்லாருமே நல்லாத் தானே இருந்தாங்க.''

''விவேகானந்தா காலேஜில் வேலை செய்யறாரே!''



''ஓ... ஓ... மிஸ்டர் கௌரிசங்கர். கெமிஸ்ட்ரி ஃபுரபஸர்.''

''ம்... ம்... அந்தத் தம்பிதான்.''

''வாத்தியாராம்மா?''

''ஏன்... அதுக்கு என்ன?''

''குச்செடுத்துக்கிட்டு மிரட்டினா?'' பலமாய்ச் சிரித்தாள்.

''இனிமேல் இப்படி எல்லாம் பேசக்கூடாது.''

''என்னோட கண்டிஷனைச் சொல்லிட்டியா?''

''.....''

''சொல்லும்மா... சொன்னியா?''

''சொல்லலை...''

''அப்போ எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்.''

''புரிஞ்சிக்கம்மா... மாப்பிள்ளையோட மகளை அனுப்புவது தான் வழக்கம்... மாமியாரும் கூடப் போய் உட்காருவது இல்லை. அதுவும் இல்லாமல் அம்மா, அப்பா, தம்பி, தங்கைன்னு குடும்பத்தில் இருக்கும் பையனோடு, நான் வந்து எப்படிம்மா உன்னோடு தங்கிக் கொள்ள முடியும்? இதை யாருமே சரீன்னு சொல்ல மாட்டாங்க. வெளியூருக்கா போகப் போறே... இதே மெட்ராஸ்... நினைச்ச நேரம் நீ என்னை வந்தும், உன்னை வந்து நானும் பார்க்கலாம்.''

''அதெல்லாம் முடியாது...''

''என்ன முடியாது? நீ நினைச்ச மாதிரி நடக்கணும்னா... ஒரு அனாதைப் பையனைப் பார்த்து மாப்பிள்ளையாக்கிக் கொண்டால்தான்.''

''ரொம்ப சந்தோஷம்மா... அது மாதிரியே பார்த்திடேன்.''

''பாக்கலாம்மா... ஆனா என்னை மாதிரி உறவில்லாமல் நீயும் வாழ்ந்திடக் கூடாது. உனக்கு மாமனார், மாமியார், கொழுந் தனார், நாத்தின்னு உறவுகள் சூழ நீ வாழணும். உன் சந்ததிக் கும் நிறைய சொந்த பந்தம் வேணும். நம்பளையே எடுத் துக்க. என்னை விட்டா யாராவது உனக்கு இருக்காங்களா? அதே நிலை உன் பிள்ளைக்கும் வேண்டுமா?''

''என்னைக் குழப்புறம்மா.''

''குழப்பலடா செல்லம்... உண்மையைச் சொன்னேன்.''

''சரி, யோசிப்போம்.''

''யோசிக்க இதிலென்ன இருக்கு?''

''என்ன இருக்கா?''

''மாப்பிள்ளையை எனக்குப் பிடிக்க வேண்டாமா... ஃபோட்டோவில் ஆளு நன்றாய் இருப்பதாய்ச் சொன் னேன்... அவ்வளவுதான். நேரில் பார்க்கணும். பேசணும். அதுக் கப்புறம்தான் நல்லா யோசிச்சி முடிவெடுக்கணும்.''

''உனக்குப் பிடிக்காமலா இது நடக்கப் போவுது?''

''அதுக்கில்லைம்மா'' தயங்கினாள்.

''ஒண்ணுமில்லைடா ராசாத்தி... உனக்குப் பிடிச்சாத் தானே செய்யப் போறோம். உனக்குப் பிடிக்கலைன்னா, அது உண்மையா இருந்தா மட்டும் சொல்லு. ஏன்னா என்னைப் பிரிஞ்சி போகணும்னு கண்களை மூடிக் கொண்டு வேண் டான்னு சொல்லாதே. இது நாள் வரைக்கும் நீ வேண்டாம், வேண்டாம்னு தட்டிக் கழித்தது போதும். ரொம்ப வடிகட் டினா, நல்லது எல்லாம் கீழே போய், திப்பிகள் தங்கிடும்மா.''

சாரதாவின் கழுத்தைத் தன் கைகளில் சுற்றிக் கொண் டவள்,



''என்னவோ தத்துவம் மாதிரி சொல்ற... அட்வைஸ் மாதிரியும் இருக்கு. பட் எனக்குப் புரியலையே! எனிவே பிடித்து இருந்தால், சொதப்பாமல் உண்மையைச் சொல்றேன். போதுமா?'' கண்களைச் சிமிட்டினாள்.

''சரி... டி.வி. பார்க்காதே, படு. காலையில் சீக்கிரம் எழுந்திரிக்கணும்.'' சொன்னதோடு நில்லாமல் மகளை எழுப்பி, படுக்கையில் படுக்க வைத்து கழுத்து வரை போர்த்திவிட்டு, அறை வெளிச்சத்தை இருளாக்கி, இரவு விளக்கைப் போட்டு விட்டு, வெளியே வந்த சாரதா...

அடுத்த நாள் காலையில் தயார் செய்ய வேண்டிய விருந்திற்கு, முன்னேற்பாடாய் என்ன, என்ன செய்யமுடி யுமோ, அத்தனையையும் செய்து முடித்து, சோபாவில் தன்னைச் சுருட்டிக் கொள்ளும்போது மணி 1.00 எனக் காட்டியது.

**ஞா**யிறு காலை 8.48க்கு எல்லாம் ஒரு வெள்ளை நிற மாருதி வேனில் ரத்தினசாமி குடும்பத்தினரோடு, புரோக்கரும் வந்து இறங்கினார். அறைக்குள் இருந்து கீதாஞ்சலி வரவில்லை. சாரதாதான் வரவேற்று, வரவேற்பறையில் அனைவரையும் உட்கார வைத்தாள். தானும் நிலைப்படி அருகே ஓரமாய் ஒதுங்கிக் கொண்டாள். நிலைமையைப் புரிந்து கொண்ட புரோக்கர்,

''என்ன சார்? பேச வேண்டியதைப் பேச வேண்டாமா?''

''என்ன பேசணும்?''

''பொண்ணோட அம்மா இவங்கதான். பொண்ணப் பத்தி யும், குடும்பத்தைப் பத்தியும் ஏற்கனவே சொல்லி இருக்கேன். மேற்கொண்டு பேச வேண்டியதை, கேட்க வேண்டியதை நேரடியாய்ப் பேசிக்குங்க.''

தரகர் பேசியதைக் காதில் வாங்கிக் கொண்ட ரத்தினசாமி, சிரித்தபடி, ஸ்நேகமான புன்னகையுடன் ஒதுங்கி நின்று கொண் டிருந்த சாரதாவைப் பார்த்து,

"நீங்களும் உட்காருங்கம்மா" என்றார்.

"இல்லைங்க... பரவாயில்லை" என்றபடி விலகாத முந்தானைச் சேலையை மேலும் இழுத்துத் தோளோடு போர்த்திக் கொண்டாள் சாரதா.

"உட்காருங்கம்மா..." வற்புறுத்தினார்.

"இல்லைங்க... பரவாயில்லை..."

"நீங்க உட்கார்ந்தால்தான் நான் பேச முடியும்!" அவர் விடுவதாய் இல்லை.

அவர் மனைவியும், மகளும் அமர்ந்திருந்த சோபாவில் ஒரு ஓரத்தில் மிகத் தயக்கமாக, சங்கடமாக அமர்ந்து கொண்டாள்.

"பெண்ணை வரச் சொல்லுறீங்களாம்மா?"

"இதோ" என்றபடி எழுந்தாள்.

"நீங்க உட்காருங்கம்மா..." கை நீட்டித் தடுத்துவிட்டு...

"மைதிலி! போய் கூட்டிக்கிட்டு வா" கட்டளை இட்டார். உடனே அந்த பத்தொன்பது வயது சிட்டு கீதாஞ்சலி இருந்த அறை நோக்கிப் பறந்து கதவைத் தள்ளியது.

"நான் உள்ளே வரலாமா?"

"வித் ப்ளஷர்" என்றபடி எழுந்து நின்றாள்.

"என் பேர் மைதிலி. என் அண்ணாவிற்காகத்தான் வந்திருக்கிறோம்."

"உட்காருங்க" என்றாள்.

"நோ ஃபார்மாலிட்டீஸ்."

"ப்ளீஸ்." என்றாள்.



"சரி" தோளைக் குலுக்கிக் கொண்டு அமர்ந்தாள்.

"என்ன பண்றீங்க?" கேட்டுக் கொண்டே ஜாக்கெட்டோடு சேலையின் பின்னைச் சரியாகக் குத்தி விட்டாள்.

"பி.காம் செகண்ட் இயர்."

"உங்க வீட்டில் எத்தனைப் பேர்?"

"அஞ்சு பேர்... அம்மா, அப்பா... அப்பா கார்ப்பரேஷன்ல ஒர்க் பண்றார். இன்னும் இரண்டு மூன்று வருடத்தில் ரிட்டையர் ஆயிடுவார். அம்மா ஹவுஸ் வொய்ப். எனக்கு ரெண்டு அண்ணன். கௌரி சங்கர் பெரிய அண்ணன் உங்களைப் பார்க்க வந்திருப்பவர். கெமிஸ்ட்ரி புரபஸர் அப்புறம் சசிகுமார்... சின்ன அண்ணன், எஞ்ஜினியரிங் முடித்து இருக்கான். வேலைக்குப் போகலை. அப்புறம் நான்."

மைதிலி சொல்லி முடிக்கும்போது, கீதாஞ்சலி தன் மேக்கப் எல்லாம் முடித்து இருந்தாள். "போலாமா?" கண் சிமிட்டினாள் மைதிலி.

"ம்." கிளம்பினாள். எந்தவிதமான நடுக்கமோ, சஞ்சலமோ, தவிப்போ இல்லாமல் கீதாஞ்சலி வெகு இயல்பாக இருந்தது மைதிலிக்கு லேசான ஆச்சரியமாக இருந்தது. ரத்தினசாமியும், அவர் மனைவியும் கீதாஞ்சலியை வெகு ஆர்வத்தோடு நிமிர்ந்து பார்த்தார்கள். பார்த்த நொடியே திருப்தியின் ரேகை பளிச்சென்று முகத்தில் பரவியது. நேரில் பார்க்க, ஏஞ்சலாய் இறங்கி வந்திருந்தாள்.

கௌரிசங்கரும் சரி... கீதாஞ்சலியும் சரி... ஒருவரை ஒருவர் நேரடியாகவே நன்றாகவே பார்த்து, புன்னகை பூத்துக் கொண்டார்கள். கௌரிசங்கர் கெமிஸ்ட்ரி புரபஸர் என்பதால் எந்த சால்ட்டுக்கு இவளை உதாரணமாகச் சொல்லலாம் என்று யோசித்தான். கீதாஞ்சலிக்கும் கௌரி சங்கரைப் பார்த்த மாத்திரத்திலேயே பிடித்துப் போய் விட்டது.

''என்னம்மா, என் பையனைப் பிடிச்சிருக்கா?'' ரத்தின சாமி கேட்டதும்,

''பிடிச்சிருக்கு'' பட்டெனச் சொன்னாள்.

''ஐ லைக் இட்... உங்கிட்டே இந்த வெளிப்படையான பேச்சு எனக்குப் பிடிச்சிருக்கு!''

''அப்பா மேற்கொண்டு பேசலாமா?'' என்று சாரதாவைப் பார்த்துக் கேட்டார்.

''பேசலாங்க'' என்றவளைத் தடுத்தாள் கீதாஞ்சலி.

''கொஞ்சம் வெயிட் பண்ணுங்க சார்... இப்போதான் சொன் னீங்க. நான் வெளிப்படையாக பேசறது பிடிச்சிருக்குன்னு... அதனால இப்போ என் மனதிலே பட்டதைச் சொல்லட் டுமா?''

''நான் பிடிச்சிருக்குன்னு வெளிப்படையா சொல்லிட்டேன்... பட், உங்க சன் எதுவும் சொல்லலையே...''

வாய்விட்டுச் சிரித்தார் ரத்தினசாமி. அவர் மட்டும் அல்ல. அந்தக் குடும்ப நபர்கள் அனைவருமே டூத் பேஸ்டிற்கு விளம்பரம் கொடுத்தார்கள்.

''ஸாரிம்மா... வெரி ஸாரி...'' என அவளிடம் கூறிவிட்டு, தன் மகன் புறம் திரும்பி,

''நீ என்னப்பா சொல்ற?'' என்றார்.

கீதாஞ்சலியை நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தான். சாரதா விற்கோ ஏன் இந்தப் பெண்ணிற்கு இப்படிப் புத்தி போகின்றது என்று கலக்கமாக இருந்தது.

''பிடிச்சிருக்குன்னு சொன்னா... அது நான் சாதாரண மாகவும் பொய் சொல்றதாகவும் இருக்கும்.''



எல்லாருமே அவனை அதிர்ச்சியோடு பார்த்தார்கள்.

''டேய்... என்னப்பா சொல்ற? உன் முகத்தைப் பார்த்து தானே, அதில் தெரிந்த சந்தோசத்தைக் கண்டுதானே...'' பேசுவதை நிறுத்தி மௌனமாய்ப் பார்த்தார்.

''அதுக்குள்ளே ஏம்பா அவசரப்படறீங்க... பிடிச்சிருக் குன்னு சொல்றதைவிட... வர்ற தேதிகள்ள முதல் முகூர்த்தம் எப்போன்னு தெரிஞ்சிக்க ஆசைப்படறேன்னு சொல்ல வந்தேன்'' என்று கீதாஞ்சலியை அடிக்கண்களை மேலேற்றிப் பார்த்தான்.

''கௌரிகிட்டே வேற ஏதாவது பேசணுமாம்மா?''

'ஆமாம்' என்று சொல்ல வந்து, 'இல்லை' எனத் தலையாட்டி னாள்.

அடுத்த பத்து நாட்களில் இருந்த சுப முகூர்த்த தினம் ஒன்றில் இருவரின் திருமணமும் எளிமையாய் கௌரிசங் கரின் விருப்பப்படி... நடந்தேறியது. பெண் பார்க்க வந்த போது சந்தித்துக் கொண்ட கௌரிசங்கரும், கீதாஞ்சலியும் திரும்ப சந்தித்துக் கொண்டது திருமணத்தன்றுதான். தனிமை யில் சந்தித்துக் கொண்டது அவர்களின் முதலிரவில்தான். சினிமாவிலும், நாவல்களிலும் கேட்ட இப்படித்தான் இருக்கும் என்று கற்பனை செய்யப்பட்ட முதலிரவு என்றாலும், ஏதோ ஒரு சிலிர்ப்புடன், தவிப்புடன்தான் உட்கார்ந்து இருந் தாள் கீதாஞ்சலி.

வலது கையின் நடுவிரலைப் பற்களுக்கு இடையில் கொடுத்து, கடித்துக் கொண்டே அறையைச் சுற்றும் முற்றும் பார்த்தாள். சிம்பிளாகவும், அழகாகவும் இருந்தது. சாரதா வாங்கிக் கொடுத்த கட்டில், மெத்தை, பீரோவைத் தவிர, மற்ற அனைத்துப் பொருட்களும் கௌரிசங்கரின் அறையில் ஏற் கனவே இருந்தவைதான்.

டேபிள், சேர்... டேபிள் மேல் அன்றைய தினசரி, சில வார இதழ்கள், டேபிள் லைட், பென் ஸ்டேண்ட் என்று இருந்தன. ஒரு பக்கம் முழுவதும் இருந்த மிகப் பெரிய அலமாரியில் தலையணைப் போல் தடிமனான புத்தக வரிசைகள். சின்ன தாய் ஒரு ட்ரஸிங் டேபிள். அதில் ஆணுக்குத் தேவையான அத்தனை வாசனை திரவியங்களும் இருந்தன. படுக்கைக்கு நேராய் வெள்ளை நிறத்தில் ஒரு சீலிங் பேன் சத்தமில்லாமல் சுழன்று கொண்டிருந்தது.

படுக்கையில் கிடந்த பூக்களைத் தடவிப் பார்த்து உருட்டிக் கொண்டிருந்தாள். சத்தமில்லாமல் கதவைத் திறந்து, சத்தமில் லாமல் கதவைத் தாழிட்டு, பூனை போல் அடிமேல் அடி வைத்து மெல்ல அவள் அருகில் வந்து நின்று, அவள் முதுகைத் தொடலாமா? இல்லை... பேசலாமா என்று யோசித்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் பின்னால் வந்து நிற்பதை அறியாமல் குனிந்தபடி, உதிர்ந்து கிடந்த பூக்களை ஒன்று கூட்டுவதில் மும்முரமாய் இருந்தாள் கீதாஞ்சலி.

அவள் தலையில் மல்லிகையும், ரோஜாவும் சரம், சரமாய் தொங்கிக் கொண்டு இருந்தது. அப்போது அவள் தலையில் மஞ்சள் அரிசி ஒன்றும் விடாப்பிடியாய் உதிராமல் அவள் முடிகளில் இன்னும் ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டு பிடித்தான். அதை எடுக்கலாம் என்று கையை உயர்த் தியபோது, படுக்கை மேல் விழுந்து இருந்த நிழலைப் பார்த்து, அதிர்ச்சியைச் சுமந்து கொண்டு, திரும்பிப் பார்த்து, எழ முயற்சித்தவளை...

''உட்கார்... உட்கார்...'' என்று தடுத்து, அவள் அமர்ந்து கொண்டதும், அவள் அருகிலேயே தானும் அமர்ந்து கொண் டான்.

''எனக்கு... என்ன பேசறதுன்னே தெரியலை'' கைகளைப் பிசைந்து கொண்டான்.



''பேசத் தெரியலைன்னு பேசத் தொடங்கிட்டீங்களே...'' கூறிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள். குனிந்து அவள் முகத்தைப் பார்த்து, முகத்தை நிமிர்த்தி நேராய் பார்த்தான்.

''பட்டு, பட்டுன்னு பேசற?''

''பட்டு பட்டுன்னு பேசுவேனே தவிர, பட்டு வேணும்னு தொந்தரவு பண்ண மாட்டேன்.''

''ஆச்சரியமா இருக்கு.''

''ஏது?''

''பட்டை விரும்பாத பொண்ணா?''

''ஏன் இருக்கக் கூடாதா? பட்டு மட்டும் இல்லை. ஜுவல்ஸ் கூட எனக்குப் பிடிக்காது. பொண்ணுன்னா புடவை... நகை... பூ... இந்த கான்செப்டில் எனக்கு நம்பிக்கையும் இல்லை... உடன்பாடும் இல்லை.''

''வாவ்!'' கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்தான்.

''ஏன்?''

''நிறைய பணம் மிச்சம். இம்... இந்த செலவு வைக்க லன்னா... வேற செலவு வைப்பேன்.''

''என்ன வேண்டுமானாலும் வை. தாக்குப் பிடிப்பேன்'' அவள் கைகளைப் பற்றினான். அவன் பக்கம் திரும்பிப் பார்த்த படி உட்கார்ந்தவள்,

''உங்க குடும்பத்து நபர்களின் விருப்பு, வெறுப்பு பற்றி நான் தெரிஞ்சுக்கலாமா?''

''வெல்... யாரைப் பற்றி?''

''இம்... மைதிலி?''

''புத்திசாலி.. ஹெல்பிங் மெண்டாலிட்டி அதிகம். வெரி இன்ட்ரஸ்டிங் கேரக்டர். நல்லா அவளிடம் பழகிட்டா, என்னையே மறந்திடும் அளவு அவளோட நெருக்கமாயிடுவே!''

''சசிக்குமார்.''

''எதையாவது சாதிக்கணும்னு வெறி உண்டு. எஞ்ஜினியரிங் முடிச்சிருக்கான். இங்கேயே ஏதோ ஒரு வேலையைத் தேடிக்கோடான்னு நாங்க எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டோம். ஆனா அவன் கேட்கலை.''

''ஏன்?''

''அவனுக்கு ஃபாரின் பைத்தியம் புடிச்சிருக்கு. எப்படியாவது ஃபாரின் போகணும்னு பிடிவாதமாக இருந்தான். அவ்வளவு சீக்கிரம் யாரிடமும் பேச மாட்டான். ரொம்ப ரிசர்வ்ட் டைப்.''

''அன்னைக்கே நினைச்சேன்.''

''என்னன்னு?''

''உங்க தம்பியைப் பார்க்கும்போதே, ரிசர்வ்ட் டைப்பா இருப்பார்ன்னு தோணிச்சு.''

''அப்படியா?... இம்.''

''சரி... உங்கப்பா, அம்மா?''

''நான் நல்லவனா, கெட்டவனான்னு தெரியாது. ஆனா எங்கப்பா, அம்மா ரொம்ப நல்லவங்க. அவங்க விஷயத்தில் நீ ரொம்ப கொடுத்து வச்சவ.''

''இம்... நல்லவனா... கெட்டவனான்னு தன்னைப் பற்றியே தெரியாத ஒருத்தரையா நான் கல்யாணம் பண்ணியிருக்கேன்? உங்கப்பா, அம்மா மட்டும்தான் நல்லவங்களா?



அப்போ ஊரில் இருக்கும் பேரண்ட்ஸ் எல்லாம் கெட்டவங்களா?'' சிரித்தாள்.

''..........'' எதுவும் பேச முடியாமல் மௌனமானான். முதலிரவில் ஒருத்தி இப்படிக்கூட பேசுவாளா? உண்மை என்ற பெயரில், மனதில் படுவதை உடனே கேட்டு, விரைவில் மற்றவர்களைப் புண்படுத்தி விடுவாளோ... யோசித்தான். அவன் மௌனம் அவளுக்கு சந்தேகத்தைக் கொடுக்க,

''ஐ'ம் ஸாரி!''

சிரித்தான்.

''இப்படியே பேசிப் பழகிட்டேன். மத்தவங்களைப் புண்படுத்தணும்னு... எந்த ஒரு கஷ்டமான சூழ்நிலையிலும் நினைக்க மாட்டேன். எனக்கு எங்கப்பா சொல்லிக் கொடுத்து கட்டாயப்படுத்தின விஷயம்... மனதில் பட்டதைப் பேசு... உண்மையைப் பேசு... வாழ்நாளில் நேர்மையா இருப்பதை ஒரு கடமையா நினைச்சுக்கோ.. மத்தவங்களோட மனசு புண்படுமோன்னு நினைச்சித் தயங்காதே. பாகற்காய் சூப் குடிக்கக் கசக்கும். குடலைப் புரட்டும். ஆனா உடம்புக்கு நல்லது. உண்மைங்கறது மனசுக்கு நல்லது. பொய் பேச புத்திசாலித்தனமும், நிறைய ஞாபக சக்தியும் வேண்டும். அப்பதான் சொன்ன பொய்களை நினைவு வச்சிக்க முடியும். அதுக்கு உண்மையே பேசிடறது பெட்டர், அப்படிங்கற அவரோட கொள்கை அப்படியே எனக்குள்ளே பதிஞ்சு போயிடுச்சி'' எங்கே அவனைப் புண்படுத்தி விட்டோமோ என்று வருத்தத்தோடு அவள் பேசப் பேச, அவளையே ஆசையோடு பார்த்துக் கொண்டே...

''உன்னை எப்படிக் கூப்பிடட்டும்?''

''எப்படி வேணா?''

''அஞ்சலின்னு.''

''நீங்க ஆறெலின்னு கூப்பிட்டாலும் நோ ப்ராப்ளம்.''

''என்னை எப்படிக் கூப்பிடப் போற?''

''எப்படிக் கூப்பிடணும்?''

''எல்லாரும் என்னை கௌரீம்பாங்க. நீ மட்டும் சங்கர்னு கூப்பிடேன்.''

''ஏன்?''

''நீ எனக்கு ஸ்பெஷல் இல்லையா? அதனால... மத்தவங்க மாதிரி இல்லாம டிஃபரண்டா எனக்குத் தெரியணும். அதை நான் ஃபீல் பண்ணணும்.''

''ஸ்பெஷலாய் மட்டும் இல்லை... சின்சியராகவும், டெடிக் கேட்டாவும், உங்க நம்பிக்கையைக் காப்பாத்துற மாதிரி நடந்துப்பேன் சங்கர்.''

''எனக்கு அது போதும்...'' என்றபடி கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டு முத்தமிட்டான். நெகிழ்ந்து போய் உட்கார்ந்து இருந்தவளை நெஞ்சோடு சாய்த்துக் கொண்டான்.

''சங்கர்!''

''ம்.''

''என்னைப் பார்த்த உடன் கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணிச்சா?''

''ம்.''

''ஏன்...? நான் அவ்வளவு அழகா?''

''அழகுதான்... அதுக்காக இல்லை.''

''எதுக்காக?''



''உண்மையைச் சொல்லட்டுமா?''

''நான் எதிர்பார்க்கறதும் அதுதான்.''

''முதல் காரணம் நீ வேலைக்குப் போகிற பொண்ணுங் கறது.''

சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''உண்மை கசந்தாலும் பேசணும்னு நீதானே சொன்ன?'' பரிதாபமாய் அவன் கேட்டதும்,

''அப்போ என் வேலைக்காகத்தான் கல்யாணம் பண்ணிகிட் டீங்களா?''

''அதுவும் ஒரு காரணம்.''

''.........''

''சரி... என்னிடம் என்ன க்வாலிபிகேஷன்னு நீ விரும் பின?''

''உங்க க்வாலிபிகேஷனோ, இல்லை உங்க அழகோ என்னைப் பாதிக்கலை. ஏன்னா இதைவிட... ஐ மீன் உங்களை விட உயர்ந்த தகுதியும், அழகுள்ளவங்களையும், என் சுயம் வர மண்டபத்தில் பார்த்துட்டேன். நீங்களும் மெட்ராஸ் என்பதால் எப்போதும், நினைத்த நேரம் எங்கம்மாவைப் பார்க்கலாம் என்ற ஆசை. எங்கம்மாவிற்கு ஒரு நல்ல மகனா நீங்க இருப்பீங்கங்கற நம்பிக்கை... தட்ஸ் ஆல்.''

''எந்த நிமிஷமும் உன் நம்பிக்கையை சிதைக்க மாட் டேன்.''

''தேங்க்ஸ்.''

''ம்கூம்... நோ தேங்ஸ்... நோ ஸாரி...'' அவள் கழுத்தை அவன் கைகள் சுற்றி வளைத்து வருடியது.

''அஞ்சலி.''

''ம்.''

''நாம ரெண்டு பேரும் ஒரு அக்ரிமெண்டிற்கு வரு வோமா?''

''என்ன அக்ரிமெண்ட்?''

''நாளையில் இருந்தே... ஒவ்வொரு நாளும் யார் யாரைப் பார்த்தோம்? என்னென்ன நடந்தது? என்ன பேசினோம் என்பதை எல்லாம் ஒண்ணுவிடாம மற்றவரிடம் ஒரு டைரி எழுதுவதுபோல் சொல்லிடணும்... நமக்குள்ளே எந்த ஒளிவு மறைவும் இருக்கக் கூடாது. ஓ.கே.''

''டன்.'' என்றாள்.

அவர்களுடைய அந்த அக்ரிமெண்ட் எவ்வளவு பெரிய ஆபத்தில் கொண்டுவிடப் போகிறது என்பதை அறியாமல் வாழ்க்கையின் ஆரம்பத்தை ஆனந்தமாய்த் தொடங்க ஆர்வ மாய் கௌரிசங்கரின் கைவிரல்கள் விளக்கை அணைக்கப் பரபரத்தது.

# 3

> அன்பில் நம்பிக்கை வை. அது துயரில் கொண்டு போய்விட்டாலும் பரவாயில்லை. இதயத்தை மூடாதே.

**நா**ட்கள் மெல்ல அல்ல... வேகமாகவே உருண்டோ டியது. நேற்று திருமணம் ஆனதுபோல் இருந்தது. அதற்குள் நான்கு மாதங்களை உருட்டிக் கொண்டு ஓடியது காலம். சந்தோஷம், மகிழ்ச்சி, ஆனந்தம் போன்ற வார்த்தைகளுக்கு



அர்த்தம் காணாதவர்கள் கௌரிசங்கர் - கீதாஞ்சலியின் வாழ்க்கையைக் கேள்விப்பட்டால் போதும். தானாய் விளங் கும் அளவிற்கு... ஆனந்தக் கூத்தாடியது. அந்த வீட்டில் அவள் நின்ற இடம், நடந்த இடம், சுவாசித்த இடம் என்று எல்லா இடமும் பூத்துக் குலுங்கியது. புகுந்த வீடு இவ்வளவு புதுமையாய் சந்தோஷமாய் இருக்கும் என்று கனவு கண்ட தில்லை.

கடல் அலை போல் இடைவிடாது அஞ்சலி! அஞ்சலி! என்று ஆர்ப்பரிக்கும் சங்கர், மனது நிறைய மகிழ்ச்சியோடு... கண் நிறைய அன்போடு... அண்ணி! அண்ணி! என அழைக் கும் மைதிலி. அதிகம் பேசாவிட்டாலும்... அன்பைக் காட்டத் தவறாத சசி என அத்தனைச் சொந்தங்களும், அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடியது.

தென்பொதிகைச் சாரல்... முத்தமிழின் தேன்சுவை... தென்றலின் சிலிர்க்கும் வருடல் அனைத்தும் அந்த இல்லத் தில்தான் கூத்தடித்தது. இன்னுமா? இன்னுமா? என்று குட்டி சங்கரின் வரவுக்காகவும், குட்டி அஞ்சலியின் வருகைக்காக வும் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டது. நிம்மதிப் பெரு மூச்சு என்பதையே சாரதா இப்போதுதான் விட்டுப் பார்க்கத் தொடங்கினாள்.

**அ**ன்று... கம்பெனிக்கு அஞ்சலி, காலேஜுக்கு சங்கர், மைதிலி, யாரையாவது பார்க்க வேண்டும் என சசி, அலு வலகத்திற்கு ரத்தினசாமி என்று எல்லோரும் அவசர, அவசர மாய்... ஆலாய்ப் பறந்தபடி புறப்பட்டுக் கொண்டிருந்தார் கள். ரத்தினசாமியின் மனைவி சரசு மட்டும் கிச்சனில் சசியைத் தவிர மற்ற அத்தனை பேருக்கும் டிபன் பாக்சில் மதிய உணவை அடைப்பதில் மும்முரமாய் இருந்தாள்.

''அம்மா! ரெடியா?'' மைதிலி கத்தினாள்.

''எல்லாம் ரெடி'' பதில் வந்தது.

அவசர, அவசரமாகக் கிளம்பிய மைதிலி கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தபோதுதான் நெற்றி வெறுமையாக இருப்பதைக் கவனித்தாள். போட்டிருந்த சல்வாருக்கு ஏற்ற பொட்டைத் தேடிப் பார்த்து, ஒழுங்காய் இருந்த இடத்தைக் கலைத்துப் போட்டுவிட்டு, நேராய் அஞ்சலியின் அறைக்கு ஓடி வந்தாள்.

''அண்ணி!''

தலையைச் சீவி, பின் குத்திக் கொண்டிருந்த அஞ்சலி... ட்ரஸிங் டேபிள் முன்பு அமர்ந்தபடியே... கண்ணாடியில் இருந்து முகம் எடுக்காமல் கேட்டாள்.

''என்ன மைதிலி?'' என்று.

''ஸ்டிக்கர் வேணும்'' அருகில் வந்தாள்.

''எடுத்துக்கோடா.''

''மேச்சா... ப்ளூ வேணும்.''

''ம்... வேணுங்கறதை எடுத்துக்கோ.''

அஞ்சலி முன்பு கிடந்த அத்தனை ஸ்டிக்கர் லேபிளையும் தேடிப் பார்த்தும் கிடைக்காமல் உதட்டைப் பிதுக்கியபடி...

''உங்ககிட்டேயும் இல்லண்ணி.''

''என்ன கலர் சொன்ன?'' சட்டையைப் பின்னி, பேண்ட் போட்டு... முன்னால் இழுத்துவிட்டு பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''ப்ளூ.''

''ப்ளூவா?'' கேட்டபடி நிமிர்ந்தவள், தன் நெற்றியில் அந்தக் கலரில் உள்ள ஸ்டிக்கர் சம்மணம் போட்டு ஸ்ட்ராங் காய் இருப்பதைக் கண்டு...



''என் நெற்றியில் இருக்கு இந்தா?'' தோளோடு பிணைந் திருந்த பொட்டை உரித்து எடுத்து நீட்டினாள்.

''உங்களுக்கு... உங்க புடவைக்கு மேட்சா இருக்கும் போல இருக்கே?'' வாங்கத் தயங்கினாள் மைதிலி.

''பரவாயில்லைடா... பொட்டுல எல்லாம் நான் மேட்சிங் பார்க்கிறது இல்லை.''

''தேங்க்ஸ்'' வாங்கி அங்கேயே ஒட்டிக் கொண்டாள்.

''கிளம்பிட்டே போல இருக்கு? இன்னைக்கு ஏன் இவ்வளவு சீக்கிரம்?''

''சீக்கிரம் போகணும்ணீ.''

''அதான் ஏன்?''

''வந்து.''

''லவ்ஸா?'' சுற்றும், முற்றும் பார்த்தபடி கேட்டாள்.

''ஐய்யய்யோ இல்லை'' அவசர, அவசரமாய் மறுத்தாள்.

''பின்ன என்ன?'' நாத்தியின் தோளில் கை போட்டு இழுத்து அருகில் கட்டிலில் உட்கார வைத்தாள்.

''ப்ரண்டோட பர்த்டே. ட்ரீட் கொடுக்குறா... அம்மா கிட்டே சொன்னா... ஹோட்டல்லாம் போகக் கூடாது என்று ஸ்ட்ரைக் பண்ணும். அதான் ஸ்பெஷல் கிளாஸ் இருக்குன்னு சொல்லிட்டேன்.''

''எந்த ஹோட்டல்?''

''பார்க் ஷெரட்டான்.''

''வாவ்... காஸ்ட்லியான ஃப்ரண்டா?''

''ம்.''

''நினைச்சேன்... அம்மா என்ன ட்ரஸில் அசத்துறான்னு அப்பவே சந்தேகப்பட்டேன்.''

''ட்ரஸ் நல்லா இருக்கா?''

''மைதிலி குட்டி மாதிரி அம்சமா இருக்கு'' தன் கைகளைக் கொண்டு, மைதிலியின் கன்னத்தில் நெட்டி முறித்தாள்.

''வரேண்ணீ.''

''இம்...'' எனத் தலையாட்டியவள் ''ஏய்...ய்...ய்...'' தடுத்தாள்.

''என்னண்ணீ.''

''உன் ஃப்ரெண்டுக்கு நீ ப்ரசண்ட் பண்ண வேண்டாமா?''

''இம்'' ஆமோதித்தாள்.

''பணம் வேணும்னா பர்ஸில் எடுத்துக்க'' என்றாள்.

''மைடியர் சுவீட் அண்ணி. பணம் எங்கிட்ட இருக்கு. எனிவே கேட்டதுக்கு தேங்க்ஸ்'' என்றபடி அஞ்சலி எதிர் பார்க்காத விநாடி, அவள் நெற்றியில் முத்தமிட்டு ஓடி மறைந்தாள் மைதிலி. அவள் முத்தமிட்ட இடத்தைத் தொட்டுப் பார்த்த அஞ்சலி உதட்டை மடித்து தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.

சுவரோடு ஒட்டியிருந்த வால் கிளாக்கைப் பார்த்தாள். மணி 8.20 என்று காட்டியது. 8.00 மணிக்கெல்லாம் பாத் ரூமிற்குள் நுழைந்த மனிதர்... இன்னும் காணோமே... மனிதர் குளிக்கிறர்ரா? இல்லை படுத்துத் தூங்குகிறாரா?

எழுந்து வேகமாய்ப் போய் பாத்ரூம் கதவைத் தட்டினாள். தட்டியதுமே உள்ளே இருந்து தண்ணீர் கொட்டும் சத்தம் நின்றது.



''சங்கர்.''

''என்ன?'' கதவைத் தாண்டி வெளியே வரும் அளவு சத்தமாய்க் கேட்டான்.

''இன்னுமா குளியல் நடக்குது?''

கதவைத் திறந்து கொண்டு... தலையை மட்டும் நீட்டினான். சொட்டு சொட்டாய் தண்ணீர் முகத்தில் வழிந்தது.

''கொஞ்சம் உள்ளே வரியா?''

''எதுக்கு?''

''சோப்பு போட... முதுகுக்கு சோப்பு போட முடியலை அஞ்சலி. ப்ளீஸ்...'' கையை வெளியே நீட்டி... அவள் கையை சட்டெனப் பற்றினான்.

''மைகாட்... கையை விடுங்க... ப்ளீஸ்'' வேகமாய் உதறிக் கொண்டாள்.

''அஞ்சலி...!''

''ஐ'ம் வெரி ஸாரி... நைட்ல பண்ற தொல்லையே தாங்க முடியலை. பகல்ல அதுவும் பாத்ரூம்ல சில்மிஷமா...''

''ஏய்... ய்...''

''ரொம்பவே கெட்டுப் போய்ட்டே மேன்...'' அவன் மூக்கைப் பிடித்துத் திருகிவிட்டு அவன் தலையை உள்ளே தள்ளி, கதவைச் சாத்திவிட்டு வந்தவளுக்கு,

பொறிதட்டினாற் போல் அப்போதுதான் நினைவுக்கு வந்தது. வேகமாய் கிச்சனுக்கு வந்தவள்...

''அத்தை'' என்றாள்.

''என்னம்மா... சாப்பிடுறியா?''

''ம்கூம்... இப்ப வேண்டாம்... அதுக்கு நான் வரலை.''

பிறகு எதற்கு சமையல் அறைக்கு வந்தாய் என்பது போல் சரசு பார்க்கவும்.

''சசி எங்கேத்தை? ஹால்ல காணோம். வெளியேயும் காணோம்... அதுக்குள்ளே சாப்பிட்டு கிளம்பியாச்சா?''

''இல்லையேம்மா... இன்னும் அவன் சாப்பிடலையே... சாப்பிடாம வெளியேயும் போக மாட்டானே... எதுக்கும் அவன் ரூம்ல போய் பாரு.''

''சரித்த.''

''அஞ்சலி'' போனவளை தடுத்து நிறுத்தினாள்.

''என்னத்த?''

''சசியை எதுக்குத் தேடற?''

''வேலை விஷயமாத்தான்.''

''நீயாவது அவனுக்கு புத்தி சொல்லும்மா.''

''நான் புத்தி சொல்ற அளவு சசி இல்லையத்த.''

சசிக்குமாரின் அறை மாடியில் இருந்தது. மேலேறி பார்த்த போது அறைக் கதவு திறந்துதான் இருந்தது.

''சசீ!'' அழைத்துக் கொண்டே சென்றாள்.

இவள் குரல் கேட்டதுமே... தடாபுடாவென வாரி சுருட்டிக் கொண்டு... படுக்கையில் இருந்து குதித்தான். இவள் உள்ளே நுழையும்போது வேக வேகமாய் கைலியை இறுக்கிக் கொண்டு...

''என்னண்ணீ... கூப்பிட்டு இருந்தா நானே வந்திருப் பேனே...'' தலையைக் குனிந்து கொண்டு சுவர்புறமாகப் பார்த்த படி கூறினான்.



''நான் இங்கே நிக்கிறேன்... சுவத்தைப் பார்த்து பேசிக் கிட்டு இருக்கே?'' எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டே... இருந்தான்.

''என்னைப் பார்த்து பேசறதைவிட... சுவத்தைப் பார்த்துப் பேசுவது பெட்டர்ன்னு தோணுதா?''

''நோ... நோ...''

''பின்னென்ன... என்னிடம் எதுக்கு வெட்கம்...? சரி... என்ன பண்ணிகிட்டு இருந்த?''

''பேப்பர் பார்த்துகிட்டு.''

''வாண்டட் காலமா?''

சங்கடமாய் தலையசைத்தான்.

''இதுக்கு எதுக்கு சங்கடப்படற? போன வருஷம்தானே கோர்ஸ் முடிச்ச அதுக்குள்ளே வருத்தப்பட்டா எப்படி ஸார்?''

''.......''

''உன் வேலைக்கு நான் ஏற்பாடு பண்ணியிருக்கேன்.''

நிமிர்ந்தான்.

''அண்ணீ... அது வந்து...''

''பயப்படாதே... உன் லட்சியம் எனக்குத் தெரியும். பாஸ்போர்ட் இருக்கா?''.

''அண்ணீ!'' அவன் குரலில் அப்படி ஒரு வியப்பு. எங் கேயோ இருந்து அண்ணாந்து பார்த்து பிரமித்த கோயில் கோபுரம் ஒன்று, வளைந்து குனிந்து இவன் கையில் அடைக் கலம் ஆனது போல் இருந்தது.

''பாஸ்போர்ட் இருக்கா?''

''இல்லண்ணீ.''

''என்னடாம்மா... ஃபாரின் போகணும்னு இவ்வளவு ஆசை வச்சிகிட்டு... ஒரு பாஸ்போர்ட் இல்லாம இருக்கியே... நல்லா இருக்கா?''

''அண்ணீ.''

''இன்னைக்கே பாஸ்போர்ட் ஆபீஸுக்குப் போற...''

''இன்னைக்கா?''

''ஆமாம்... எங்க கம்பெனிக்கு ஸ்விட்சர்லாந்தில் இருந்து ஒருத்தர் அடிக்கடி வருவார். அவர் ஒர்க் பண்ற கம்பெனியில் உனக்கும் போஸ்ட் வாங்கிடுறதா சொல்றார். எந்த நிமிஷமும் உனக்கு ஆர்டர் வரலாம்.''

''அண்ணீ'' தழுதழுத்தான்.

''நன்றி எல்லாம் அப்புறம் சொல்லலாம். அர்ஜெண்டா பாஸ்போர்ட் கையில் வர எப்படியாவது ஏற்பாடு பண்ணு... பணம் இருக்கா?''

''இல்லை.''

''சரி... போகும்போது ரூமுக்கு வா... தரேன்.''

''இல்ல வேண்டாம்... அண்ணன்கிட்டே வாங்கிக்கறேன்.''

''ஏன் அண்ணி கொடுத்தா வாங்கக் கூடாதா?''

''அப்படி இல்லை.''

''பின்ன எப்படி ஸார்? உன் பயோடேட்டா அனைத்தும் ஒரு காப்பி என்னிடம் கொடு இன்னைக்கு அவருக்கு அனுப்பிடறேன். எடுத்து வை. போகும்போது வாங்கிக்கறேன்.''

''அஞ்சலி!'' சங்கர் குரல் கொடுக்க அவசர, அவசரமாய்க் கீழே இறங்கினாள். அன்று சங்கரோடு பைக்கில் தொற்றிக் கொண்டு, கம்பெனி வாசலில் இறங்கும்போது... சங்கரின் பைக்கை உரசிப் பார்ப்பதுபோல் அருகில் வந்து அந்த சாக்லெட் கலர் காண்டஸா நின்றது.



கோபத்தோடு இருவரும் பார்க்க...

காரில் இருந்து சந்திரகாந்த் இறங்கினான்.

''சார் நீங்களா?'' கீதாஞ்சலிக்கு வியப்பும் சந்தோஷமும் மேலிட்டது.

''என்னங்க... இவர் என்னோட சீஃப் மிஸ்டர் சந்திரகாந்த்'' சங்கருக்கு அறிமுகப்படுத்தினாள்.

''ஹலோ சார்'' கை நீட்டினான். அவன் கையைப் பற்றிய சந்திரகாந்த். ''இவர் யாருன்னு சொல்லலையே?'' என்று சிரித்தான்.

''ஸாரி சார்... இவர் என்னோட ஹஸ்பெண்ட். விவேகானந்தாவில் கெமிஸ்ட்ரி புரபஸர். நீங்க ஃபாரின் போய்ட்டதினால் இன்ஃபார்ம் பண்ண முடியலை'' சந்திரகாந்த் எதுவும் பேசவில்லை. இவர் என்னுடைய ஹஸ்பெண்ட் என்றபோதே... அவன் இறந்து போயிருந்தான்.

'கம்பெனிக்குள் கூட நுழையாமல், உன்னை முதலில் பார்க்க வேண்டும் என்று இங்கேயே நிறுத்தி இறங்கினேனே... இதற்கா இந்தப் பரிசு? கல்யாணம் ஆயிடுச்சா? என் கீதாஞ்சலிக்கு கல்யாணம் ஆயிடுச்சா? இருக்கக் கூடாது. என்னைத் தவிர வேறு யாரும் உனக்கு சொந்தமில்லை. ஐ வாண்ட் யூ ஐ மேரி யூ. அதுக்காக என்ன வேணா செய்வேன்.' சந்திரகாந்தின் சிந்தனை தடுமாறியது. எண்ண அலைகள் தாறுமாறாய் தறிகெட்டு மூலைக் கொன்றாய் பறந்தது. மூளை நரம்புகள் வின்னென நிமிர்ந்து, புடைத்து நின்றது. ரத்தக் குழாயை யாரோ வெட்டி விட்டது போல்... பலமிழந்தான். செய்வது அறியாது திகைத்து, செயல் இழந்து நின்றாலும்...

'கீதாஞ்சலி! நீ எனக்கு மட்டும்தான். எத்தனை பேர் உனக்கு தாலி கட்டினாலும் நீ என்னவள்தான்' என்ற வெறி புயல் காற்றைப் போல் உள்ளுக்குள் சுழன்று அவனை மிருகமாக்கிக் கொண்டிருந்தது.

# 4

> *மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும், வசதிகளுமல்ல... இடையூறுகளும், துன்பங்களுமே.*

லஞ்ச் அவர்.

கேண்டீனே சிரிப்பாலும், பேச்சாலும் கலகலத்துக் கொண்டிருந்தது. பாதிப் பேருக்கு மேல் கேண்டீன் சாப்பாட்டிலும், மீதிப் பேர் வீட்டிலிருந்து கொண்டு வந்த டிபன் பாக்ஸோடும் இருந்தார்கள். ஹாலின் கடைசி ஓரத்தில் உள்ள டேபிளில் உடன் இரண்டு பெண்களோடு சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள் கீதாஞ்சலி. மூவரின் சாப்பாடும், மூன்று பேரிடமே இடம் மாறியிருந்தது.

''என்ன நந்து, காரமா இருக்கு?'' அஞ்சலி கேட்டதும்,

''வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே.''

''ஏன் காலையிலேயே உள்நாட்டுப் போரா?'' செல்வி கேட்டதும்,

இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் முறைத்த நந்தினி,

''அதான் தெரிஞ்ச விவகாரமாச்சே'' என்றாள் சலிப்போடு.

''இன்னைக்கு என்ன?''



''அதை அப்புறம் சொல்றேன். ஒரு விஷயம் இன்னைக்கு கவனிச்சீங்களா?''

''என்னது?''

''சந்திரகாந்த் பற்றிதான்.''

''ஆமாம் செல்வி, நானே சொல்லணும்னு நினைச்சேன். ஃபாரின் போய்ட்டு வந்தவர்... ஏன் இப்படி? யாரிடமும் பேசாமல்.. கடுகடுன்னு இருக்கார். அதுவும் இன்னைக்குக் காலையில் என் ஹஸ்பெண்டை இண்ட்ரடியூஸ் பண்ணினேன். எதுவுமே பேசாமல் போய்ட்டார். சம்திங் ராங்.''

''எஸ்... யூ ஆர் கரெக்ட் அஞ்சலி! நல்லா கலகலப்பாக இருப்பவர், இப்படி என்றால், போன இடத்தில் ஏதாவது நடந்து இருக்கும். எப்படியும் தெரியத்தான் போகிறது. வெயிட் அண்ட் சீ.''

''அது மட்டும் இல்லை. மாதவி காலையில் கொடுத்த ஸ்டேட்மெண்டில் ஏதோ ஓர் சின்ன மிஸ்டேக் போல இருக்கு... அதுக்காக அவளைக் கடித்துக் குதறாத குறைதான். சீட்டுக்கு வந்து ஒரே அழுகை. அவளைச் சமாதானப்படுத்துவதற்குள் போதும், போதும் என்றாகிப் போனது.''

''அதான் சாப்பிட வரலையா?''

''ஆளே இங்கே இல்லை அஞ்சலி. லீவ் போட்டுட்டு வீட்டுக்குப் போய்ட்டாள்...''

''ஓ... இதெல்லாம் லஞ்ச் ஹவர் வந்து... உங்களைப் பார்த்தாத்தான் தெரியுது.''

''ஆமாம்... கம்ப்யூட்டர் முன்னால நீ உட்கார்ந்துட்டா வெடிகுண்டு வச்சாலும் தெரியாது.'' எதுவும் பேசாமல் சாப்பிடுவதில் மும்முரமாய் இருந்தாள் அஞ்சலி.

''அஞ்சலி... வில்சனைப் பாத்தியா?''

''ஓ... பார்த்தாச்சி... முதல் வேலையே இன்னைக்கு அதான். சசியோட பயோடேட்டா. எல்லா இன்பர்மேஷனும் கொடுத்துட்டேன்.''

''போஸ்ட் கன்பார்மா?''

''ம்... ஷ்யூர்.''

''உன்னை மாதிரி அண்ணிங்க இருந்தா, அத்தனைக் கொழுந்தனும் ஃபாரின்தான்'' இவர்கள் ஒருவரை ஒருவர் வாரிக் கொண்டிருக்கும்போதே,

''மேடம்!'' என்றான் கம்பெனி ஹெல்பர்.

''எஸ்!'' மூன்று பேருமே ஒட்டு மொத்தமாய் நிமிர்ந் தார்கள்.

''மேடம்... உங்களை சந்திரகாந்த் ஸார் வரச் சொன்னார்'' என்றான் கீதாஞ்சலியைப் பார்த்து...

''என்னையா?'' என்றாள் கீதாஞ்சலி.

''ஆமாம் மேடம்.''

''இப்பவா?''

''சாப்பிட்டுட்டு வாங்க.''

''ஸார் எங்கே இருக்கார்?''

''அவரோட கேபின்ல.''

''வரேன்'' அவன் நகர்ந்ததும்...

''என்னவா இருக்கும்? இந்த மாதிரி டைமில் அவர் அழைத்ததே இல்லையே?''



''போய்ப் பாரு'' செல்வியும், நந்தினியும் கோரஸாய்க் கூறினார்கள். அதற்கு மேல் மெல்ல கொறித்துச் சாப்பிட அவளால் முடியவில்லை. அள்ளிக் கொட்டிக் கொண்டு... அவசரமாய் சந்திரகாந்தைப் பார்க்கக் கிளம்பினாள்.

அவள் சந்திரகாந்த் கேபின் உள்ளே அனுமதியோடு நுழைந்த போதே... ஏதோ ஒரு வித்தியாசமான சூழ்நிலை அவளுக்குத் தெரிந்தது. இதற்கு முன் எத்தனையோ முறை வந்து போன அறைதான். இன்று ஏனோ வித்தியாசமாய் இருந்தது. அறையில் பளிச்சென்று இருக்கும் விளக்குகள் எல்லாம் அணைக் கப்பட்டு... ஏ.ஸி. ஆஃப் செய்யப்பட்டு, ஏதோ ஒரு ஜீரோ வாட்ஸ் பல்ப் மட்டும் மங்கலாய்... அந்த வெளிச்சத்திலும் சந்திரகாந்த் தலையைக் கவிழ்த்துக் கொண்டு படுத்திருந் தான். இளம் பச்சையில் வெறுமனே ஒளிர்ந்து கொண்டிருந்த கம்ப்யூட்டர் ஒளி அவன் தலையில் பட்டு பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

என்னாச்சி இவருக்கு? புரியவில்லை, நிற்பதா நடந்து பேசாமல் வெளியே போவதா... இல்லை.. உட்காருவதா? ஒன்றும் தெரியவில்லை.

நிதானித்தவள் அறையின் அத்தனை லைட்டையும் போட் டாள். அப்போதும் அவன் நிமிரவில்லை.

''ஸார்!'' என்றாள்.

''உட்காருங்க'' தலையை எடுக்காமலேயே சொன்னான்.

உட்கார்ந்து கொண்டாள். மண்டைக்குள் நண்டு ஊர்ந்தது. இனம் தெரியாத பயம் திடீர் என்று கவ்விக் கொண்டது.

''ஸார்! எதாவது ப்ராப்ளமா?'' உருட்டி அவளை உரித்து விடுவது போல் பார்த்தான்.

''எப்போ கல்யாணம் ஆச்சி?'' கேள்வியில் பூகம்பம் கக்கியது.

சொன்னாள்.

"வீட்டுக்காரர் என்ன பண்றார்?" கேட்டுக் கொண்டே எழுந்து வந்தான்.

"காலையில் கூட சொன்னனே ஸார்... கெமிஸ்ட்ரி புரபஸர்."

"ஓ... ரிச் பேமிலியா?"

"இல்ல ஸார்... மிடில் க்ளாஸ்."

"மிடில் கிளாஸில்தான் ரெண்டு ரகம் இருக்கே... எது?" கேட்டுக் கொண்டே கதவைத் தாழிட்டான்.

"ஸார்" பதறியபடி எழுந்தாள்.

"கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்" மரியாதையான சொல்லை காற்றில் பறக்கவிட்டான். பதில் சொல்லாமல் விபரீதத்தை உணர்ந்து டக்கென எழுந்து நின்றாள்.

"உட்கார்" கட்டளையிட்டான்.

அவள் லட்சியம் செய்யாமல் நடக்க... அவள் முன்பு போய் குறுக்கே கையை நீட்டினான். அவன் கையை தட்டிவிட அவள் கையைத் தூக்க... அந்தக் கையையே அப்படியே பற்றி, இழுத்துப் போய்ச் சேரில் உட்கார வைத்தான். அவன் பிடித்த இடம் விண்ணென வலித்தது. டேபிளுக்குக் கீழே இருந்த அத்தனை ஃபாரின் குட்ஸையும் அள்ளி மேஜை மேல் போட்டான். அத்தனையும் அவள் நினைத்துக் கூட பார்க்க முடியாத விலையுயர்ந்த பொருட்கள்.

"உன் புருஷனோட வருடச் சம்பளத்தைக் கொண்டு, இதில் உள்ள ஒரு பொருளையாவது பார்க்க முடியுமா? வாங்கித்தான் தர முடியுமா?"



"ஸார் பிகேவ் யுவர் செல்ஃப்" கீதாஞ்சலிக்கு சுர்ரென கோபம் தலைக்கேறியது.

"என்னோட எந்தத் தகுதிக்காவது அவன் ஈடாவானா?"

"ஸட்டப் யுவர் ப்ளடி மவுத்" எழுந்து நின்று கத்தினாள்.

"நீ எந்த நிமிஷம் இந்த ஆபீஸ்ல காலடி எடுத்து வச்சியோ... அந்த விநாடியில் இருந்து... இப்ப வரைக்கும் உன் உயிரைவிட உன்னை நேசிச்சவன்... கீதாஞ்சலி ஐ லவ் யூ... ஐ லவ் யூ வெரி மச். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் மூச்சுக் காத்து மாதிரி உன்னையே சுவாசிச்சிகிட்டு இருக்கும்போது... காத்திருந்தவன் மனைவியை நேத்து வந்தவன் கொத்திட்டுப் போன கதையா?" மூச்சு வாங்கியது. கண்களில் ஆக்ரோஷம் தெரிந்தது."

"ஸார்... நீங்க... இதெல்லாம்..."

"உன்னிடம் சொல்லாதது தப்புதான். அதற்காக... நீ அவசரப்பட்டு கல்யாணம் பண்ணியிருக்கக் கூடாது. அதுவும் என்னைக் கேட்காம... நான் இல்லாதப்ப பண்ணிகிட்டது... தப்பு... தப்பு... என்னை நீ ஏமாத்திட்ட.." சொல்லிக் கொண்டே அவள் அருகே நெருங்கி வந்தான்.

விழிக்குள் பழுத்த கம்பியை செருகிய அதிர்வோடு..

"ஸார்... வேண்டாம்" தடுமாறியபடி பின்னால் நடந்தாள்.

"நீ எனக்கு வேணும் கீதாஞ்சலி... நீ எனக்கு வேணும் கீதாஞ்சலி..."

"ஸார்... ப்ளீஸ்... கத்தி கூச்சல் போடுவேன்" பேசிக் கொண்டே பின்னால் நகர்ந்து சுவரில் போய் மோதி நின்றாள். அவளுக்கு நேராய் வந்து நின்றவன்.. அவள் முகத்தை சிறையாக்கி இரண்டு கைகளாலும் கழுத்தின் இரு பக்கமும் கொண்டு போய்... சுவற்றை தன் கைகளாலும் அழுத்திக் கொண்டான்.

''ஸார்... ப்ளீஸ்... கையெடுத்துக் கும்பிட்டாள்.

''நீ எனக்கு வேணும்... தாலியைக் கழற்றிப் போட்டுட்டு வா... நாம எங்கேயாவது போய்டலாம்'' அவன் மூச்சுக் காற்று கருந்தேளாய் அவளைக் கொட்டியது.

''போடா...'' அதற்கு மேல் பேசத் தோன்றாமல் பற்களைக் கடித்தாள்.

''இதுவரைக்கும் நான் அமைதியா இருந்தது போதும்... வா... நீயே வா...''

''வேண்டாம்... வேண்டாம் ஸார்...'' சட்டென அவன் காலில் விழுந்தாள். விழுந்தவளை அப்படியே அள்ளித் தூக்கி இறுக்கி அணைத்தான். உடும்பிடம் மாட்டிக் கொண்டது போல் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் தடுமாறினாள்.

மேலும் அவளை இறுக்கினான். எலும்புகள் நொறுங்கத் தொடங்கிய உணர்வில் செத்துச் சுண்ணாம்பானாள். உடல் நடுநடுங்கியது. ஓடவும், தப்பிக்கவும் கைகால் துடித்தாலும், அடுத்த அடி வைக்க முடியாமல் துவண்டு தொங்கியது. பெண்கள் உடல் ரீதியாய்ப் பலகீனமானவர்கள் என்பதை அனுபவப் பூர்வமாய் உணர்ந்தாள்.

''விட்றா... என்னை விட்றா...'' அவன் தோளைப் பிடித்துத் தள்ளினாள். வேகமய்த் தன் பலமனைத்தையும் ஒன்றாக்கி அறைந்தான் சந்திரகாந்த். செவிக்குள் வண்டு ரீங்காரம் இட... கண்ணில் நெருப்புப் பூச்சி விழ... மயங்கத் தொடங்க... மயங்கி அவன் மேலேயே சரிந்தவளை அப்படியே தரையில் கிடத்தி, அந்தப் பொன்வண்ண புனித மலரின் ஒவ்வொரு இதழையும் பிய்த்துப் போடத் துவங்கினான் சந்திரகாந்த்.



கீதாஞ்சலி திரும்ப கண் விழிக்க கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் ஆனது. அவள் கண்களை நன்றாய்த் திறந்தபோது, அவளைப் பார்த்தபடியே உட்கார்ந்து இருந்தான் சந்திரகாந்த். தனக்கு நடந்து முடிந்த கொடுமை மின்னலாய் கண்களைப் பறிக்க... துடித்துப் போய்... ஆத்திரத்தோடு கத்திக் கொண்டே எழுந்தாள்.

'பதட்டப்படாதே... உன்னை மனைவியாக்கி.. அணு அணுவா ரசிக்கணும். பூ மாதிரி பொத்திப் பொத்திப் பாது காக்கணும். என் விரல் நகம் கூட உன்னை அழுத்தமா உரசிப் பார்க்கக் கூடாதுன்னு ஆசைப்பட்டேன். கனவு கண்டேன். ஆனா, உன்னைப் பலாத்காரம் பண்ணும்படியான சூழ்நிலை... ஸாரி... ரொம்ப ரொம்ப கஷ்டமா இருக்கு.''

''யூ... ப்ளடி.''

''ஆத்திரப்படாதம்மா... நான் விரும்பின. நான் நேசித்த பொருள் எனக்கு மட்டுமே சொந்தமா இருக்கணும். வேற யாருக்கும் அதைச் சொந்தமாக்க விடமாட்டேன். அப்படிச் சொந்தமாயிட்டா... அந்தப் பொருளையே அழிச்சிடுவேன். உன்னைக் கொல்ல மனசு வரலை. ஆனா என்னை ஏமாத்தின நீ... சந்தோஷமா இருக்கக் கூடாது. என்னிடம் இருந்து உன்னைப் பிரிச்ச அந்த கௌரிசங்கரும் அணு அணுவா துடிக்கணும். இங்கே நடந்ததை எங்கே வேண்டுமானாலும் நீ போய்ச் சொல்லு... ஐ டோண்ட் கேர்... ஏற்கனவே இங்கே நடந்த விஷயம் உனக்குப் போதுமானது... இதை வெளியே சொல்லி... இன்னும் அவமானத்தைத் தேடிக்காதே...''

''..........''

''தலை கலைந்து இருக்கு. உதடு கன்னிப் போய் இருக்கு. எல்லாத்தையும் சரி பண்ணிகிட்டு வெளியே போ... ஆமாம்... இதை உன் புருஷன்கிட்டே சொல்லுவியா?''

''............''

''சொன்னா வாழ்க்கை போச்சு. சொல்லாட்டி, அப்பப்ப சொல்லுவியே.. உண்மை, நேர்மைன்னு அது போச்சு, தட்ஸ் ஆல்.''

''............''

''நான்தான் கெடுத்தேன்னு நீ கோர்ட்டுக்குப் போனா லும், குற்றத்தைத் தாராளமாய் ஏற்றுக் கொள்வேன். கேரி ஆன்'' சொல்லிவிட்டு, எதுவும் நடக்காதது போல் கம்ப் யூட்டர் கீ போர்டில் உள்ள பட்டன்களைத் தட்டினான்.

வெகுநேரம் அவனையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு இருந்தவள், தட்டுத் தடுமாறி எழுந்தாள். பிணமாய் நடந்து வெளிவந்தாள். எதையும் யாரிடமும் சொல்லாமல், கம் பெனியை விட்டு வெளியே வந்தாள். ஏடாகூடமாய் வேறு பஸ்ஸில் ஏறிவிடுவோமோன்னு பயந்து, பத்திரமாய் வீடா வது போய்ச் சேர வேண்டுமே என்ற எண்ணத்தில் ஆட்டோ பிடித்து வீட்டு முகவரியைச் சொன்னாள்.

வீட்டிற்கு வந்து நின்றபோது, ஆட்டோக்காரர் மீட்டர் பார்த்து கட்டணம் கேட்டபோதுதான், ஹேண்ட் பேக்கை தன் அறையிலேயே விட்டு, தான் மட்டுமே வந்திருக்கின்றோம் என்று, காத்திருக்கச் சொல்லி, வீட்டில் இருந்து அத்தையிடம் வாங்கிக் கொடுத்து ஆட்டோவை அனுப்பி வைத்தாள்.

அவளின் துவண்ட நடை... சோர்ந்து, வீங்கிப் போயிருந்த முகம், உதட்டில் கோடாய் இருந்த ரத்தக் கசிவு... சரசுவின் கண்களை உறுத்த..

''அஞ்சலி'' அழைத்தாள்.

''என்னம்மா? உடம்பு சரியில்லையா?''



''..........''

''ஏன் சீக்கிரம் வந்திட்ட... கௌரிகூடத்தானே வருவ?''

''அத்தை... எனக்கு முடியலை.''

''என்னம்மா பண்ணுது?'' பதற்றத்தோடு.

''ஒரு மாதிரி மயக்கமா... என்னவோ போல இருக்கு.''

''மயக்கமா?'' கேட்டுக்கொண்டே... மருமகளின் முகத்தை நிமிர்த்தியவள் பதறினாள்.

''என்னம்மா உதடு வீங்கி இருக்கு? என்னாச்சி?''

''வழுக்கி விழுந்துட்டேன்!''

''வழுக்கியா?''

''ஆமாத்த... பாத்ரூமில் சிலிப்பாயிடுச்சி... பல்லு உதட்டில் குத்திடுச்சி...''

''டாக்டர்கிட்டே...''

''வேண்டாந்த்தே... கொஞ்ச நேரம் படுத்து எழுந்தால் சரியாயிடும். மாத்திரை போட்டுக்கிட்டு படுத்துக்குறேன்.''

''சரி'' சரசுவிற்கு சம்மதத்தை வாய் மட்டும்தான் சொன்னது. மனது ஏனோ, கீதாஞ்சலியை சந்தேகக் கண்ணோடுதான் பார்த்தது. அவள் பொய் பேசுவது போல் மனதிற்கு பட்டது. தன் அறைக்குள் நுழைந்ததுமே, மெடிசின் பாக்சைத் திறந்து, விதவிதமானக் கலர்களில் மூன்று மாத்திரைகளை உரித்து வாயில் போட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்தாள்.

கண்களில் நீர் கொப்பளித்தது. கொப்பளித்து வெளி யேறியது. சத்தம் வெளிவராமல் அழத் தொடங்க... கொஞ்ச நேரத்தில் தூக்கம் கண்ணுக்குள் குடியேற... இமை தானாய் கீழிறங்கி மூடிக் கொண்டது. பெயின் கில்லர் டேப்லட்டோடு.

ஸ்லீப்பிங் டேப்லட்டும் இணைந்ததன் விளைவு... அடித்துப் போட்டார் போல் மரக்கட்டையாய்ப் படுத்துக் கிடந்தாள்.

வீட்டிற்கு வந்த இல்லத்து உறுப்பினர்கள் அனைவருக் குமே, கீதாஞ்சலி படுத்துக் கிடந்த கோலம் அதிர்ச்சியைக் கொடுத்தது. சசி மணிக்கொரு முறை வந்து பார்த்தான். இரவு எட்டு மணிவரை மைதிலி. கீதாஞ்சலியின் அருகேயே உட் கார்ந்துவிட்டு... எழாத காரணத்தால் தூக்கத்தோடு தன் அறைக்குத் திரும்பினாள். கௌரிசங்கர் ஆடிப் போய் உட்கார்ந்து இருந்தான்.

''பார்த்து பாத்ருமுக்குள்ளே காலை வைக்கக் கூடாது'' எனத் தனக்குத் தானே பிதற்றிக் கொண்டிருந்தான். காத் திருந்து காத்திருந்து, அனைவரும் உறங்கிப் போக, கௌரி சங்கர் மட்டும் அஞ்சலியின் தலைமாட்டில் கொட்ட விழித் திருந்தான்.

இரவு 11.46.

கீதாஞ்சலி புரண்டு படுத்தாள்.

''ம்மா... ஆ...ம்மா... ஆ'' முனகினாள்.

மூச்சு விட்டுவிட்டு வெளிவந்தது. எழுப்ப வேண்டாம் என்று ஆறாவது அறிவு எச்சரித்தாலும் உள்ளம் கேட்காமல்,

''அஞ்சலி'' தோளைத் தட்டினாள்.

''........''

''அஞ்சலி!''

''.........''

''அஞ்சு!''

''...........''



''ஏய்... அஞ்சலி!''

கண்களை மெல்லத் திறந்தாள். விளக்கு வெளிச்சம் கண் களைக் கூசியது. தான் இருக்கும் இடம் எது என்று கணிக்கவே வெகு நேரம் ஆனது. கண் கலங்கத் தன் கணவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

வாய்விட்டு அழத் தொடங்கினாள்.

''என்ன அஞ்சலி? என்ன?'' மனைவியை அள்ளி நெஞ் சோடு சரித்துக் கொண்டு...

''பாத்ருமில் விழுந்ததுக்குப் போய் இப்படியா அழறது? டோண்ட் பீ சில்லி'' அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

''என்னங்க...?''

''ம்... பசிக்குதா?''

இல்லையெனத் தலையாட்டினாள். உண்மையை மறைத்து விடலாமா? சில கணம் யோசித்தாள். உடனே அவன் மார்பில் இருந்து தலையை எடுத்துக் கொண்டு, நகர்ந்து உட்கார்ந் தாள். தூக்கக் கலக்கம். மாத்திரைகளின் தாக்கத்தால் ஏற்பட்ட மயக்கம் இன்னும் அவளுக்குள் மிச்சமிருந்தது. உதடு, உடம்பைவிட மனது தாங்கிக் கொள்ள முடியாமல் வலித்தது.

''என்னங்க! இன்னைக்கு நடந்தெல்லாம் சொல்லிடட் டுமா?''

''வேண்டாம்மா... நாளைக்குப் பேசிக்கலாம். ரெஸ்ட் எடு. நான் சாப்பிட ஏதாவது எடுத்துக்கிட்டு வரேன்.''

''வேண்டாம்... நம்ம அக்ரிமெண்ட் என்னைக்கும் ஸ்பாயில் ஆகக் கூடாது.''

''சரிடா... என் மடியில் படுத்துக்கோ... முதல்ல நான் சொல் றேன்...''

''நோ...! லேடீஸ் ஃபர்ஸ்ட்'' சுரத்தே இல்லாமல் பேசி னாள்.

''ஓ.கே. நீ சொல்லி மறுத்து இருக்கேனா? ம்... சொல்லு...'' என்றான்.

ஆரம்பித்தாள். காலையில் மைதிலிக்கு ப்ளூ கலர் ஸ்டிக்கர் கொடுத்ததில் இருந்து... அவன் இல்லாமல் அவள் சந்தித்த அத்தனை சம்பவத்தையும் சொல்லத் தொடங்கி... அழுகை யோடு தனக்கு அன்று நடந்த அநீதியையும் வரி விடாமல் சொல்ல... தன் முகத்தின் மேல் ஆசிட் கொட்டியது போல், துடித்துப் போய், உடலும் மனமும் எரிய சிலுவையில் அறைந்தது போல் அமர்ந்து இருந்தான்.

அவன் அமைதி கீதாஞ்சலி, எதிர்பார்த்தது என்பதால், எதுவும் பேசாமல் அவளும் அமைதியாய் தலையைக் குனிந்து இருந்தாள். கிட்டத்தட்ட அவர்களுக்கு இடையே நிலவிய மௌனம் அரை மணி நேரத்தை யாருக்கும் தெரி யாமல் கடத்தியது.

''அ...ஞ்..ச..லி!'' தலையைக் குனிந்தபடியே அழைத் தான்.

சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''போய்... தலை குளிச்சிட்டு வா.''

புரியாமல் பார்த்தாள்.

''போ... குளிச்சிட்டு வா... சொல்றேன். நீ பாட்டுக்கு பச்சைத் தண்ணியில் குளிக்காதே... ஹீட்டர் போட்டுக்க.''

எழுந்து பாத்ரூம் போனாள் தலையில் தண்ணீர் விழும் போது.



'என்னைத் தலை முழுகிவிடு' என்று சொல்லத் தோன் றாமல்... சிம்பாலிக்காய் இப்படிச் சொல்லி விட்டானோ வயிற்றைக் கலக்கியது. அறைக்கு வந்தபோது...

''நல்லா துவட்டு... ஜலதோஷம் பிடிக்கப் போகுது'' என்றான்.

''ச...ங்...க...ர்'' உட்காராமல் நின்று கொண்டிருந்தாள்.

''வா'' அவள் கையைப் பற்றி தன் அருகில் உட்கார வைத்து... அவள் தோளில் கை போட்டான். புதியதாய் அவ ளுக்குக் கூசியது.

''இதுக்காக உன்னை வெறுத்திடுவேனோன்னோ... கை விட்டுடுவேனோன்னு நினைச்சியா? பைத்தியக்காரி... இது நடக்கக் கூடாத விஷயம்தான். நடந்திருச்சி... அதுக்காக என்ன பண்றது? கை, காலில் அசிங்கப்பட்டால் டெட்டால் ஊத்திக் கழுவிக்கலாம்... அதுக்காக கை, காலை வெட்டிக்க முடியாது.''

''ச...ங்...க...ர்.''

''நான் என்னவோ புரியாமல் பேசற மாதிரி கூடத் தோனும். பட் நெவர்... சில சால்ட்டைப் பார்த்ததும் பெயர் சொல்ல முடியாது. டெஸ்ட் பண்ணி... ரிசல்ட் வச்சிதான் சொல்ல முடியும். ஆனா... காப்பர் சல்பேட் மாதிரி சில குறிப்பிட்ட சால்ட்டைப் பார்த்ததும், நிறத்தை வைத்தே இதுதான்னு சொல்லிடலாம். நீ எப்படிப்பட்டவன்னு எனக்குத் தெரியும்... உன்னைச் சோதித்துப் பார்க்கவோ... இழக்கவோ... எனக்கு விருப்பம் இல்லை.''

''சங்கர்...''

''இங்கே பார்... எதையாவது மனதில் நினைத்துக் கொண்டு குழம்பாதே...'' என்றபோது அப்படியே அவனைக் கட்டிக் கொண்டு அழுது பொங்கினாள்.

''டேக் இட் ஈஸி!'' அவளை மேலும் இறுக்கிக் கொண் டான்.

''நோ... எது டேக் இட் ஈஸி... இதுவா?...'' பரிதாபமாய்க் கேட்டாள்.

''ப்ளீஸ்...''

''என்னை...''

''என்னடா'' அவன் மேலும் அவளை இறுக்கி.. அவள் தலையைக் கோத ''வேண்டாங்க. இந்த மன்னிப்பு எனக்கு வேண்டாம். என்னால தாங்க முடியலை... தண்டனையை விட மன்னிக்கறது கொடுமைய்யா.. என்னால தாங்க முடியல. குற்ற உணர்வு தாங்காம என்னை நானே அழிச்சிக்க வச்சிடா தீங்க...'' அவன் மார்பு அவள் தலை ஈரத்தாலும்... கண்ணீ ராலும் கசகசத்தது.

''நீ புரியாம பேசற... நீ என்ன தப்பு பண்ணின?... என்னை மன்னிக்க.. தப்பு பண்ணினது அந்த ராஸ்கல். நீ பாதிக்கப் பட்டவம்மா... உனக்கு ஆறுதலா இருக்கறது என்னோட கடமையில்லையாடா?'' என்றவனை நிமிர்ந்து பார்த்து...

''என்மேல் கோபம் இல்லையா?''

''இல்லை.''

''சத்தியமா?''

''சத்தியமா.''

''........''

''நான் ஒன்னு கேட்கட்டா.''

''ம்.''

''அவன் லவ் பண்றது இதுநாள் வரை உனக்குத் தெரி யாதா?''



''ம்கூம்.''

''ஆள் எப்படி... சைக்கோ மாதிரியா... நீ சொல்றதைப் பார்த்தா... அப்படித்தானே தெரியுது.''

''இல்லை... அவரா இப்படின்னு இன்னும் என்னால நம்ப முடியல...'' கீதாஞ்சலி பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அழுகைக்குள் அகப்பட்ட பின்புதான் வெளியே வந்தது.

வேதனையாய் சிரித்தான்.

''கள்ளிச்செடிகூட பார்க்க அழகாகத்தான் இருக்கும். அதே பால் விஷமாச்சே.''

''..........''

''இங்கே பார்... இது எப்போதும் நமக்குள்ள இருக் கட்டும். கெட்ட கனவு கண்ட மாதிரி மறந்திடு. அதான் உன் மனசிற்கும் நம்மோட வாழ்க்கைக்கும் நல்லது.''

அவன் பேசப் பேச உருகி உருகி கரைந்து கொண் டிருந்தாள். நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. சந்திரகாந்த் நடந்து கொண்ட விதமும் அதிர்ச்சிதான். இப்படி ஆறுதல் சொல்லும் கௌரி சங்கரும் அதிர்ச்சியாய்தான் தெரிந்தான். காலையில் தனக்குக் கிடைக் காதவளை அழித்துப் பார்த்தவன். இரவில் எது நடந்தால் என்ன நீ என் தங்கமடி என தாங்கிக் கொள்பவன். இரண்டு துருவத்தையும் அடுத்தடுத்து சந்தித்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் தவித்தாள்.

''நா... ஜாபை ரிசைன்...'' தயங்கினாள்.

''மூச்... எதுக்கு ரிசைன் பண்ற...? உன் வேலைக்காக சொல் லலை. இங்கே இல்லை என்றால் எத்தனையோ கம்பெனி... உன் தகுதிக்கு.... அப்பாயின்மெண்ட் ஆர்டரோடு காத்

திருக்கு. தப்பு பண்ணின அவன் தைரியமா வரும்போது... நீ ஏன் ஓடி ஒளியிற... நீ ரிசைன் பண்ணினாலோ... இல்லை கலகலப்பா முன்பு போல் இல்லை என்றாலோ... அவன் எதிர்பார்த்த வெற்றி அவனுக்குக் கிடைச்சிடும். அதுக்கு நாம இடம் கொடுக்கலாமா?''

''............''

''நாளைக்குக் கூட நீ லீவ் போடக்கூடாது. டூ யூ அண்டர்ஸ்டேன்ட்.''

''..............'' அவன் சொல்வதற்கு எல்லாம் தலை அசைப்பதை தவிர வேறு ஒன்றும் அவளுக்குத் தோன்றவில்லை.

''எப்பவும் போல இருக்கணும்... சரியா?''

''சங்கர்... ஐ லவ்யூ மேன்... ஐ லவ் யூ... யூ ஆர் வெரி க்ரேட்.''

''..........''

''நான் பிறந்த ஒவ்வொரு ஜென்மத்திலும்... நிறைய புண்ணியம் பண்ணியிருக்கேன் சங்கர். இல்லைன்னா நீங்க எனக்குக் கிடைச்சிருக்க மாட்டீங்க... சங்கர் உங்களுக்கு நான் தகுதியானவள்தானா?''

''ஏன்டா... இதுக்கு போய் இப்படியா... உனக்குத் தகுதியானவன்தான் நானில்லை. வைரத்தின் மேல் தூசு பட்டால்... வைரத்தோட தரம் குறைஞ்சிடுமா?''

அதற்கு மேல் இருவருமே பேசவில்லை. விடியும் வரை எதுவும் பேசாமல் விழித்திருந்தனர். பேச்சைவிட... அந்த மௌனம் அப்படி ஒரு நிம்மதியையும்... வலிமையையும் கொடுத்தது. மந்திரமே கற்றிருந்தானோ என்னவோ...



அஞ்சலியை... பழைய அஞ்சலியாய் விடிவதற்குள் ஓரளவு மாற்றியிருந்தான்.

இப்போது இப்பிரச்சினையை இருவரும் ஆழ குழி தோண்டி புதைத்தாலும்... காலம் என்ற காவல்காரன் தோண்டி போஸ்ட் மார்ட்டம் பண்ணப் போகின்றான்... அது பூகம்பமாய் கக்கப் போவது அறியாமல் கண்களை மூடி இருந்தனர்.

# 5

*தீர்மானமுள்ள மனிதன் துன்பத்தைப் பொருட்படுத்த மாட்டான்; ஒருநாள் கவலை, ஒரு மாத மகிழ்ச்சியைவிட நீளமானது.*

அடுத்த நாள் அலுவலகத்திற்குள் சந்திரகாந்த் நுழைந்த போது... பூமி தன் சுழற்சியை நிறுத்திக் கொண்டது போல் தவித்துப் போனான். அத்தனை அலுவலக நபர்களையும் அழைத்து... நட்ட நடு ஹாலில் தன்னை நிர்வாணப்படுத்தியது போல் கூனி குறுகிப் போனான். தான் எதிர்பார்த்த எதுவும் நடக்காதபோது ஏமாற்றமாகத்தான் இருக்கும். அதுவும் சின்ன ஏமாற்றத்தைக் கூட தாங்காதவன் என்பதால்... உணர்வுகள் தடுமாற ஆடிப்போய்த்தான் நின்றான். சந்திரகாந்தின் இந்த தடுமாற்றத்திற்குக் காரணம்...

வெகு இயல்பாய் சிரித்துக் கொண்டே...

''குட்மார்னிங் சார்'' என்று கீதாஞ்சலி சொன்ன இரண்டு சொற்களினால் வந்த விளைவு... எதுவும் பேசாமல்... உடம்பு

குப்பென பற்றிக் கொண்டு எரிய... வேர்வைப் பூக்கள் ஈசலாய் உடம்பிற்குள் கூட்டமிட... வேகவேகமாய் சென்று தன் அறைக்குள் நுழைந்து கொண்டான். அவனை விடுவதாய் இல்லை... தன் சந்தோஷம்... அவன் சந்தோஷத்திற்கு சத்ரு... என்பதை உணர்ந்தவள்... நேரடியாய் அவன் தடுமாற்றத்தை ரசித்தவள்... கதவைத் தட்டிக் கொண்டு... அவன் அனுமதிக்குக் காத்திருக்காமல்... உள்ளே நுழைந்தாள்.

''ஸாரி பார் த டிஸ்டர்பென்ஸ் ஸார்.''

''நீங்க ஏன் ஸார் என்னை பார்த்து எந்திரிக்கிறீங்க... உட்காருங்க'' குரலில் கேலி கலந்திருந்தது.

''விஷ் பண்ணினால்... பதிலுக்கு விஷ் பண்றது மரியாதை... அதுகூடவா உங்களுக்குத் தெரியாது.''

''.........'' உட்காராமல் பார்வையில் பயம் கலக்க எதுவும் பேசாமல் பார்த்தான்.

''என்ன பாக்குறீங்க?''

''..............''

''பேசமுடியலையா.. போனவ அப்படியே தூக்கில் தொங்கி இருப்பாள்... இல்லை ரெசிகினேஷன் லெட்டர் கொடுத்துட்டு எங்காவது ஓடி இருப்பாள்ன்னு எதிர்பார்த்து இருப்பீங்க... இப்படிச் சிரிச்சிகிட்டு வந்து நிக்கிறது ஷாக்கா இருக்கா?''

''...........''

''நான்கூட நேத்து மனமார செத்துதான் போயிட்டேன். எனக்கு உயிர் கொடுத்தது யார் தெரியுமா? சங்கர்... என்னோட சங்கர் என் ஹஸ்பென்ட்.''

''............'' அவள் வார்த்தை ஊசியால் அவன் கண்ணுக்குள் குத்தி குத்தி செருகியது.

''கையிலோ... கால்லயோ அசிங்கம் பட்டு விட்டால்... ஐய்யய்யோன்னு வெட்டியாப் போட்டுட்றோம். இல்லையே... பெட்டால் ஊத்திக் கழுவிக் கொள்வோம் இல்லையா... அது மாதிரிதான். என்னைப் பொருத்தவரை நீங்க அசிங்கம்... தட்ஸ் ஆல்.''



''..........'' பற்களைக் கடித்துக் கொண்டான்.

''இதை யார் சொன்னா தெரியுமா?... என் புருஷன். ஒரு வகையில் இந்த அசிங்கமான சம்பவம்... என் கணவன் எப்படிப்பட்டவர்ன்னும்... எப்படிப்பட்ட ஒரு தெய்வப் பிறவின்னும் எனக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கு...''

''..........''

''நீங்க எதிர்பார்த்த எதுவுமே என் வாழ்க்கையில் நடக்கப் போவது இல்லை. சங்கரைப் பற்றி நன்றாய் தெரிந்து கொண்டதால் முன்பை விட இன்னும் சந்தோஷமாய் இருக்கிறேன். இன்னும் உங்களை மரியாதையாக அழைத்துக் கொண்டு இருப்பதன் காரணம் என்ன தெரியுமா? காதல்ங்கற பேர்ல வெறி புடிச்ச உங்களுக்கும் எனக்கும் வித்தியாசம் தெரிய வேண்டாம்? அதற்குத்தான்'' சொல்லிவிட்டு அலட்சியமாய் ஒரு பார்வையும் பார்த்துவிட்டு விடுவிடுவென வெளியேறி தன் அறை நோக்கி நடந்தாள்.

அதன் பிறகு... எந்த எந்த விஷயத்தில் கீதாஞ்சலியைப் பார்க்க முடியாமல் தவிர்க்க முடியுமோ... அத்தனை வழி முறைகளையும் கையாண்டான். அவளைக் கண்டால் ஓடி ஒளியத் துவங்கினான். குற்ற உணர்வு மேலிட அவன் வேலையில் கூட கவனம் சிதறியது. எம்.டி.யில் இருந்து அத்தனை பேருமே அவனை வித்தியாசமாகப் பார்த்தார்கள். கடைசியில் டில்லியில் உள்ள கம்பெனி ப்ராஞ்ச் அலுவலகத்திற்கு தன்னை மாற்றிக் கொண்டான். போகும்போது கூட அலுவலக நபர்கள் யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. எல்லோருமே.. அவன் ட்ரான்ஸ்பர் பற்றியும் கொஞ்ச நாட்க

ளாய் அவன் நடந்து கொண்ட முறை பற்றியுமே பேசிக் கொண்டு இருந்தார்கள்.

மூன்றாவது நாள் கீதாஞ்சலிக்கு ஒரு கூரியர் போஸ்ட் வந்தது. அனுப்புபவர் இடத்தில் சந்திரகாந்த் பெயரைப் பார்த்து... உதட்டைச் சுழித்துக் கொண்டு... கடிதத்தின் உறையை கிழித்து... உள்ளிருக்கும் கடிதத்தை உருவினாள். பாதியாய் கிழிக்கப்பட்ட ஒரு கம்ப்யூட்டர் ஷீட். பிரித்தாள்.

'**கீ**தாஞ்சலி'

உன் பெயரை எழுதக்கூட எனக்குத் தகுதியில்லை என்று எனக்கு நன்றாய் தெரியும்... குற்ற உணர்வாலும்... என் தவறான செய்கையாலும்... ஒவ்வொரு விநாடியும் செத்து செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறேன். மன்னித்து விடு என்று சொல்லும் கடிதமல்ல இது. காரணம் மன்னிக்கக் கூடிய காரியமா நான் செய்தது. இல்லையே! தவறைச் செய்துவிட்டு ஸாரி என்ற வார்த்தையை சொல்பவர்களை தண்டிக்க வேண்டும் என்பவன் நான். நீ எனக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்பது இல்லை... அதை நானே அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றேன். நான் உன்னை விரும்பிய உடனே என் காதலை வெளிப்படுத்தாதது என்னுடைய தவறு. நீ எனக்கில்லையே என்ற ஆத்திரத்தில் உன்னை அவமானப் படுத்தியது... அழிக்க முயன்றது என்னுடைய மற்றொரு மாபெரும் தவறு. இந்தக் கடிதம் எதற்கு என்று கேட்கின்றாயா?... என் காதல் பொய்... வெறி... என்றாயே... அது இல்லையென சொல்லத்தான். உன் மேல் தூசு பட்டாலோ. காற்று கொஞ்சம் வேகமாய் உன்னைத் தொட்டாலோ துடித்துப் போகும் நான். நீ இன்னொரு ஆண் மகனுக்கு சொந்தமாகி விட்டாய் என்பதை எப்படித் தாங்கிக்



கொள்வேன்?... என் மேல் எனக்கே ஏற்பட்ட கோபம். என் இயலாமை... என் தைரியமின்மை... என் கையாலாகா தகுதி... எல்லாம் ஒன்று சேர்ந்து விலங்கை விட கேவலமான செயலுக்குத் தூண்டி விட்டது. உன்னை அழிக்க நினைத்து... என்னை நானே அழித்துக் கொண்டேன். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம்கூட நஞ்சுதான். என் காதல்கூட அப்படித்தான் முடிந்து விட்டது. உன் பாதம் பட்ட மண்ணைக் கூட பத்திரப் படுத்த நினைப்பவன் நான். நீ எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் உலகமே உன்னை ஒதுக்கிப் பார்த்தாலும்... உனக்காக உன்னை நினைத்துக் கொண்டே சாகப் போகின்றவன் இந்த சந்திரகாந்த். உன் முகம் பார்த்துச் சொல்லி வரத் தகுதியை இழந்ததால்... என் காதல் நிஜம்... சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்பதற்காக இக்கடிதம்.

உணர்வுப் போராட்டங்களோடு
உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும்

சந்திரகாந்த்.

**முக்கிய குறிப்பு:** உன் குடும்ப வாழ்க்கை... சந்தோஷத்தை சலங்கையாய் கட்டிக் கொண்டு... ஆனந்த நர்த்தனம் ஆடட்டும்... இந்த அபஸ்வரத்தால் எந்த ஆபத்தும் எப்போதும் ஏற்படாது.

எந்தவித உணர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல் படித்து முடித்து மடித்து தன் ஹேண்ட் பேக்கில் பத்திரப்படுத்தினாள். சங்கரிடம் காட்ட வேண்டும் என்பதற்காக வீட்டிற்குப் போனதும் முதல் வேலையாய்... கடிதத்தை நீட்டினாள்.

வாங்கிப் படித்து... எப்படி மடித்து இருந்ததோ அப்படி மடித்துக் கொடுத்தான்.

''என்னது எதுவுமே சொல்லாமல கொடுக்கறீங்க?''

''சொல்ல இதுல என்ன இருக்கு? கிழிச்சிப் போடு'' என்றான் சாதாரணமாக... கடிதத்தை மட்டும் அல்ல... அவன் பற்றிய நினைவுகள்... நடந்த அத்தனை நிகழ்ச்சியையும் சேர்த்தே கிழித்து எறிந்தாள். யாருக்காகவும் தன் விருப்பு வெறுப்புக்களை விட்டுக் கொடுக்காதவள்... சங்கருக்காக அத்தனையையும் விட்டுக் கொடுத்தாள்... சொல்லப் போனால் நன்றி விசுவாசம் கொண்ட ஒரு நாயைப் போல் மாறி... அவன் மேல் காதல் கொண்டாள்.

அடுத்த இரண்டாவது மாதத்தில் சசிக்கு அவள் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததால் அந்தக் குடும்பமே... அவளை நெஞ்சுக்குள் வைத்து நாட்டியமாடியது.

''டேய் கிளம்புடா! ப்ளைட்டிற்கு நேரமாச்சு!'' மைதிலி சத்தமாக அழைத்தாள். ஒரு பெரிய சூட்கேஸ் நிறைய துணிமணிகள் ஃபைல்கள் என்று தனக்குத் தேவையான அனைத்தையும் அடுக்கி முடித்த சசிக்குமார் மூடி லாக் பண்ணி... அது சரிதானா என்று செக் பண்ணிக் கொண்டு சூட்கேஸோடு கீழே இறங்கினான்.

அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாய் அவன் இறங்கி வருவதையே பார்த்தார்கள். சின்னச் சின்ன கட்டம் போட்ட க்ரே கலர் புல்ஹேண்ட் சர்ட்... க்ரே கலரோடு ஓரளவு சமா தானமாகப் போகும் பேண்ட்... கௌரி சங்கர் வாங்கிக் கொடுத்தது. பெல்ட்.. டை... மைதிலி வாங்கிக் கொடுத்திருந்தாள். புத்தம் புதிய சூட்கேஸ் தாயின் பரிசாய் இருந்தது. காலில் இருந்த கேன்வாஸ் கையில் இருந்த அன்றைய மாடல் டைட்டன் வாட்ச் தந்தையின் அன்பளிப்பாய் இருந்தது. சாரதாவும் அவனை வழியனுப்ப... கையில் ஒரு கவரோடு வந்திருந்தாள்.

அவன் இறங்கி வரும் அழகைக் கண்டு.

''டேய் சசி... நீ பாரின் போறதைவிட... சினிமாவுக்கு ட்ரை பண்றா...'' என்றாள் மைதிலி. இறங்கி வந்தவனைச் சுற்றி...



''சசி... உடம்பை நல்லா கவனிச்சிக்கடா... நேரா நேரம் சாப்பிடு... ரொம்ப உடம்பை வருத்திக்கிட்டு வேலை செய்யாதே'' மகனின் கேசத்தை தடவிக் கொடுத்தபடி.. சுண்டி கண்களில் வழிந்த கண்ணீரை எறிந்து கொண்டே சரசு கூற...

''டேய்! அம்மா சொல்றபடி வேலை செய்யாமல் இருக்காதே. நல்லா ஒர்க் பண்ணி நல்ல பேர் எடுக்கணும்'' என்று மகனின் தோளைத் தட்டினார் ரத்தினசாமி.

''சரி... பெஸ்ட் ஆஃப் லக்'' கை குலுக்கினான் கௌரி சங்கர்.

''டேய் சின்னண்ணா... யாராவது வெள்ளைக்காரியா பார்த்து லவ் பண்ணிகிட்டு வந்து நிக்காதே'' என்ற தங்கையைப் பார்த்து வேகமாய் கையை ஓங்கியவன்... சிரித்தபடி உடனே கையை இறக்கிக் கொண்டான்.

''தம்பீ... இதை செலவுக்கு வச்சிக்கப்பா'' தான் கையோடு கொண்டு வந்த கவரை சாரதா நீட்டத் தயங்கினான் சசி.

''வேண்டாத்த... உங்க ஆசீர்வாதம் மட்டும் போதும்'' மறுத்தான்.

''பரவாயில்லை தம்பி... வச்சிக்க.''

''இல்லத்த வேண்டாம்.''

''உன்னை என் பிள்ளை மாதிரி நினைக்கிறேன். நீயும் அப்படி நினைச்சா மறுக்காம வாங்கணும்.''

''சரி... கொண்டாங்க'' வாங்கிக் கொண்டு... அவளின் காலைத் தொட்டு வணங்க...

''மகராசனா இருப்பா'' குரல் தழுதழுத்தது சாரதாவிற்கு பெற்றவர் இருவரையும் நிற்க வைத்து வணங்கியவன்.. நேராய் கீதாஞ்சலியின் பக்கம் திரும்பி... அருகில் வந்து...

"என்னண்ணி! எதுவுமே பேசலை" என்றான்.

"ஒண்ணுமில்லை சசி... வேலை பளுவில் உனக்கு எதுவுமே வாங்கலை... அதான் யோசிச்சுகிட்டு இருக்கேன்."

"என்னண்ணி இப்படிச் சொல்றீங்க... எனக்கு வேலை வாங்கிக் கொடுத்ததே நீங்கதான். இன்னும் சொல்லணும்னா ஒரு ஒளிமயமான வாழ்க்கையை எனக்கு வாங்கிக் கொடுத்து இருக்கீங்க... ஆண்டவன் செய்ய வேண்டியதை அண்ணியா செஞ்சி இருக்கீங்க... இதைவிட எனக்கு என்ன வேணும்?"

"அதுக்கில்ல சசி..."

"வில்ஸன் சார் உங்கமேலே எவ்வளவு நம்பிக்கை வச்சிருக்கார்னு அவர்கிட்டே பேசும்போது தெரிஞ்சிகிட்டேன். அந்த நம்பிக்கை இன்னும் ஸ்ட்ராங்ற மாதிரி ஒர்க்கில் பர்ஃபெக்டா... பஞ்சுவாலிட்டியா நடந்துப்பேன்."

"தட்ஸ் குட்" அவன் தோளையும் கன்னத்தையும் செல்லமாய் தட்டினாள். பிரிய முடியாமல் ஆனால் சந்தோஷ வேதனையை அனுபவித்துக் கொண்டு... மீனம்பாக்கம் வரை அனைவருமே சென்று... ப்ளைட் லேன்டாகி... திரும்பி விண்ணில் சசியோடு பறக்கும் வரை பார்த்துவிட்டு வீடு திரும்பியிருந்தனர்.

அன்று இரவு யாருமே சரியாய் சாப்பிடவில்லை... சாப்பிட முடியவில்லை... பிரிவு போல் ஒரு வேதனையான விசயம் எதுவுமே இல்லை போல் தோன்றியது. சசி போய்ச் சேர்ந்து போன் பண்ணும் வரை... மனது கலக்கமாய் கலங்கிப்போய் கிடந்தது. இப்போதுதான் ப்ளைட் வெடித்துச் சிதறுவதும், கடத்தப்படுவதும் சின்னப் பிள்ளைகள் லாலிபாப் சாப்பிடுவது போல் ஆகிவிட்டதே.

எத்தனையோ உறவுகளுக்கு இல்லாத சக்தியும்... பிணைப்பும்... தாய்க்கு உண்டு தாய்மைக்கு உண்டு. பூக்கும் செடிக்கும்... காய்க்கும் மரத்திற்கும்... கறக்கும் பசுவிற்கும் உள்ள மதிப்பு... பூவில்லாத செடிக்கோ.. . ஆண் மரத்திற்கோ... காளை மாட்டிற்கோ இல்லை. ஒரு விதையைப் போடும்போது இல்லாத மகிழ்ச்சி... அது முளைக்கும்போது ஏற்படாத சந்தோஷம், அது செழிப்பாய் வளரும்போது ஏற்படாத திருப்தி... அது மொட்டுவிட்டு மலராய் விரியும்போது... மனதை அள்ளுகிறது. அதுவும் முதல் பூ என்றால் சொல்லவே வேண்டாம். எந்தக் கடவுளின் கிரீடத்தில் அதை சூட்டிப் பார்க்கலாம் என்று லிஸ்ட் போடவே தோன்றும்.



கீதாஞ்சலிக்கு ஒரு குட்டி கௌரி சங்கரோ... ஒரு குட்டி கீதாஞ்சலியோ... முளை விட்டு இருக்கின்றார்கள் என்று அறிந்தபோது... உச்சகட்ட சந்தோஷம் அந்த வீடு முழுவதும் உலா வந்தது. கீதாஞ்சலியின் பாதம் தரையில் பட்டாலே நோகும் என்று அத்தனை பேரும் அவள் பாதம் படும் இடம் எல்லாம் தன் கைகளை வைக்கத் தயாராக இருந்தனர். ஏழாவது மாதத்தில் சீமந்தம் என்ற பெயரில் அவளை விட்டு கௌரி சங்கர் பிரிய மனம் இல்லாமல் சாரதாவை தன் வீட்டில் தங்கச் சொல்லி கட்டாயப்படுத்தி... டெலிவரி ஆகும் வரை வைத்தான். சில வேளைகளில் அன்பு மிகுதியாகி சில வேளைகளில் தொந்தரவாகக் கூட முடிந்தது.

ஒன்பதாவது மாதம் முடிந்து... பத்தாவது மாத முதல் வாரக் கடைசியில்... புதன்கிழமை மதியம் இரண்டு மணிக்கும், இரண்டே கால் மணிக்கும் என்று காஷ்மீர் ஆப்பிள் போல் செக்கச் செவேல் என்று இரண்டு ஆண் குழந்தைகளுக்குத் தாயாகினாள். இரண்டு சிங்கக் குட்டிகளுக்குமே இடது கையில் சுண்டு விரலுக்கு அருகில் குட்டியாய் இன்னொரு விரலும் உருவாகி இருந்தது.

ஆறாவது விரல் அதிர்ஷ்டத்தின் அஸ்திவாரம் என்று உச்சி மோந்தார்கள். ரோஹித் என்ற பெயரிலும் ராகுல் என்ற

பெயரிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாய் வளர்ந்தார்கள்.

தேனாய்... அமுதமாய் அவர்கள் வாயில் மழலை வழிந்தது. அவர்களின் மூன்றாவது வயதிலேயே இனிக்கும் பேச்சில்... கேட்கும் கேள்விக்கு ஈடு கொடுக்க முடியாமல் தடுமாறி னார்கள். சதைப் பிடிப்பாய் மொழு மொழுவென... சந்தோசத் தில் அஞ்சலியும் - கௌரி சங்கரும் பூரித்துப் போய் இருந் தார்கள். அஞ்சலிக்கு முன்பைவிட அழகு கூடிப் போய் இருந்தது.

**அன்று...**

அவசர அவசரமாய் கிளம்பிக் கொண்டிருந்தான் கௌரி சங்கர். உதட்டைக் கடித்துக் கொண்டு... சத்தமில்லாமல் அறைக்குள் நுழைந்து - அவன் முதுகைக் கட்டிக் கொண்டாள் அஞ்சலி...

தலை சீவுவதை நிறுத்தாமல்...

''அம்மாவுக்கு என்ன வேணும்?'' என்றான்.

''சங்கர்.''

''ம்.''

''அவசியம் இன்னைக்கு டில்லி கிளம்பணுமா?...''

''ஆமான்டா செல்லம்.''

''மன்டே ராகுலுக்கும், ரோஹித்துக்கும் பர்த்டே நினை விருக்கா?''

''இருக்குடா'' என்றபடி திரும்பி... அவளை விலக விடா மல் அவள் இடுப்போடு தன் கைகளைக் கோர்த்து... நெற்றி யில் செல்லமாய் இடித்து...



''கான்பிரன்சிற்காக மட்டும் நான் போகலை... நம்ம மைதிலிக்குப் பார்த்திருக்கிற அலையன்ஸ் டில்லியில தானே ஒர்க் பண்றார்... அவரையும் பார்த்து பேசறதுக்காகத்தான் இந்த ட்ரிப்...''

''அதுக்கில்ல.''

''ம்கூம்.. தடுக்கக் கூடாது... சன்டே நைட் கிளம்பி... மன்டே எப்படியும் வந்திடறேன்.''

''வந்துடுவீங்களா?''

''கண்டிப்பா.''

''எனக்கென்னமோ... நீங்க போறது பிடிக்கலப்பா... மன சுக்கு என்னவோ போல இருக்கு.''

''என்ன சென்டிமென்டா?''

''இல்லை.''

''சரி... டில்லியில் என்ன வேணும்?''

''ஒண்ணும் வேண்டாம்... ஒழுங்காத் திரும்பி வாங்க.''

அவள் மூக்கைப் பிடித்துத் திருகியவன்.

''உனக்கு வேண்டாம் சரி... என் பிள்ளைகளுக்கு எதுவும் வேண்டாமா?''

''இம்... அதை நீங்களே அவங்ககிட்டே கேளுங்க.''

''கேட்டுக்கறேன்... நீ எதுவும் வாங்கலையா?''

''வாங்காம... இன்னைக்கு கம்பெனிக்கு லீவ் போட்டு இருக்கேன். இரண்டு வாலையும் கூட்டிகிட்டு ஷாப்பிங் போயிட்டு வரணும்.''

''எங்க என் பசங்க.''

''சமையல் கட்டுல அத்தையை ஒருவழி பண்ணிகிட்டு இருக்கானுங்க.''

''அடடா எங்கம்மாவைக் காப்பாத்தியாகணுமே'' என்று போலியாய் பரபரத்தவன் அவள் கன்னத்தை அவள் சற்றும் எதிர்பார்க்காத நொடியில்... முத்தம் என்ற பெயரில் ஒரு கடி கடித்துவிட்டு... வெளியே வந்தான்.

''அடேய் வாலுங்களா?''

சங்கரின் குரல் கேட்டதுமே இரண்டு குட்டீசும்... போர் வீரன் கணக்காய் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு நின்றார்கள். இருவரும் க்ரீன் கலர் ட்ராயர்... வெள்ளை நிற பனியனை டிராயர் உள்ளே விட்டு இன் பண்ணி இருந்தார்கள். ஒரே அச்சில் வார்த்த உருவமாய்... கோயில் தெப்பத்து தாமரையை குவித்தது போல் குண்டாய்... சிவப்பாய்... சுருள் முடிக்கு சொந்தக்காரர்களாய்... ஒளி சுமந்த கண்களை துருதுருவென அலைய விட்டுக் கொண்டு... ஆரஞ்சு சுளை களே பொறாமை கொள்ளும் சதைப் பிடிப்பான இதழ் திறந்து...

''எ...ன்...னா... டாடி...'' கோரஸாய் கேட்டார்கள்.

''கம் ஹியர்'' கை நீட்டி அழைத்தான். உடனே ராகுலும்... ரோஹித்தும் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்து அவன் மார்பின்மேல் பூச்செண்டாய் மோதினார்கள். இருவரையும் இரண்டு பக்கமும் அள்ளிக் கொண்டவன்,

''டாடி ஊருக்குப் போறேன்... உங்களுக்கு என்ன வேண்டும்?''

''டாடி... எக்கு சாக்லேட்'' சங்கரின் முகத்தை தன் பக்கம் திருப்பிக் கூறினான் ராகுல்.

''டாடி, எக்கு பிஸ்கட், சாக்லட்...'' என் சங்கரின் முகத்தைத் தன் பக்கம் திருப்பினான் ரோஹித்.



''எவ்வளவு வேணும்?''

''நிறை....ய்...ய... கூ.... டை... நிறைய்...ய.''

''நான் வாங்கிட்டு வரணும்னா டாடி கேக்கிறதை தரணும்... சரியா?''

இரண்டு வாண்டுகளும் வேகமாய் தலையாட்ட...

''முத்தம்'' என்றான்.

தங்கள் வாயில் உள்ள உமிழ்நீர் அனைத்தும் அவன் கன்னத்தில் வழிய வைத்தன இரண்டு குட்டீசும்.

**கா**ன்பரன்ஸ் முடிந்த கையோடு வெளியே வந்த கௌரி சங்கர்... சாப்பிட்டுவிட்டு... மைதிலிக்கு பார்த்து இருக்கும் அலையன்ஸை பார்க்கலாம் என்றெண்ணி... அருகில் இருக்கும் ரெஸ்டாரென்ட் ஒன்றிற்குள் நுழைந்தான். ரெஸ்டாரென்டில் மஞ்சள் நிறம் மங்கலாய் அப்பிக் கொண்டிருந்தது. நல்ல வெளிச்சத்தில் இருந்து உள்ளே நுழைந்ததால்... சில நிமிடங்கள் ஆனது உள்ளே எத்தனை டேபிள் இருக்கு... யார்யார்... எத்தனை பேர் வந்திருந்தார்கள். காலியான சேர் எங்கே இருக்கு என்று தேடினாள். ஒரே ஒரு நாற்காலி மட்டும் காலியாய் இருந்தது... அதில் போய் அமர்ந்து கொண்டான்.

உடனே ஒரு பேரர் ஐஸ் வாட்டரை அவனுக்கு வைத்து விட்டு...

''சாப்! ஆப் கே க்யா சாகியே?''

''மெனுக் கார்ட் ப்ளீஸ்.''

பவ்யமாய் நீட்டியதும்... மெனுக்கார்டில் பார்வையை பதித்த கௌரி சங்கர்.

''ஏக் சோலா பூரி'' என்றான்.

''டி.கே... சாப்'' பேரர் நகர்ந்ததும் ஐஸ் வாட்டரை எடுத்து குடித்து வைக்கும்போதுதான் எதிரே சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் நபரைப் பார்த்தான். எங்கோ எப்போதோ பார்த்த நினைவு. நினைவு மண்டலத்தை எல்லா வழியிலும் கீறிப் பார்த்தான். நினைவுக்கு வருவது போல் வந்து... சட்டென மறைந்தது. தன்னை யாரோ பார்ப்பது உணர்ந்து.. கையில் இருந்த ஸ்பூனை ப்ளேட்டிலேயே வைத்துவிட்டு... அவனைப் பார்த்த அந்த நபர்... சட்டென... அவனை அடையாளம் கண்டு...

''எக்ஸ்க்யூஸ்மி'' என்றான்.

''எஸ்.''

''நீங்க கௌரி சங்கர்தானே?''

''எஸ்'' ஆச்சரியப்பட்டான்.

''ஐ'ம் சந்திரகாந்த்'' கையை நீட்டினான்.

துணுக்குற்ற கௌரி சங்கர் அனிச்சையாய் தானும் கையை நீட்டினான்.

''உங்க மனைவி நல்லா இருக்காங்களா?''

''ம்'' தலையாட்டினான். வெளிப்படையாய் தன் அதிர்ச்சியை காட்டாவிட்டாலும் உள்ளம் புலியாய் உருமிக் கொண்டிருந்தது. சாப்பிட்டு முடித்த சந்திரகாந்த்... பேண்ட் பாக்கெட்டில் இருந்த ஹேண்ட் கர்ச்சீப்பை எடுத்து... கைகளைத் துடைத்து... வாயைத் துடைத்த போதுதான்... அவன் இடது கையில் ஆறு விரல் இருப்பது... கௌரி சங்கரின் கண்களுக்கு பட்டதுதான் தாமதம்... கண்ணில் கொள்ளிக் கட்டை செருகியதுபோல் துடித்துப் போனான்.

திங்கள் காலை வீட்டிற்கு வந்தபோது... வீடே ஆனந்தத்தை சலங்கையாய் கட்டிக் கொண்டு ஆடியது. ரோஹித்.. ராகுல் பெயரில் இரண்டு பெரிய கேக்குகள்... வண்ண வண்ணக் காகிதங்கள்... விதவிதமாய் கட்பண்ணப்பட்டு ஹால் முழுவதும் தொங்க விடப்பட்டு இருந்தன. கௌரி சங்கர் உள்ளே நுழைந்தபோது... இரண்டு வாண்டுகளும் ''டாடி'' என கத்திக் கொண்டு... அவன் காலைக் கட்டிக் கொள்ள... கல்லூரி விட்டு வந்தாலே வாரி அணைத்துக் கொள்பவன், இப்போது எதுவும் பேசாமல் அவர்களின் பிஞ்சுக் கைகளில் இருந்து தன் கால்களை விடுவித்துக் கொண்டு... நகர்ந்தான்.



எல்லோருமே அவனை ஆச்சர்யமாய் பார்க்க... அறைக்குள் நுழைந்து கொண்டவனைத் தொடர்ந்தவள்... அவன் தோளைப் பற்றி...

''என்னாச்சி சங்கர்'' என்றாள்.

''நத்திங்'' குரலில் எவ்வித உணர்ச்சியும் இல்லை.

''நோ... சம்திங்... உங்க முகமும் சரியில்லை... குரலும் சரியில்லை.''

''அப்படி எல்லாம் இல்லை.''

''ஓ.கே. சீக்கிரம் வாங்க... கேக் வெட்டணும்.''

''ஸாரிம்மா... எனக்கு உடம்பு சரியில்லை... நீங்களே போய் கேக் வெட்டுங்க.''

''என்ன பேசறீங்க?'' புரியாமல் கேட்க...

''ப்ளீஸ்... போ.''

''சங்கர்.''

''அஞ்சலி! ப்ளீஸ் கெட் அவுட்'' சொன்னவன் அத்தோடு நில்லாமல்... அவளைத் தள்ளிக் கொண்டு அறைக்கு வெளியே விட்டு... கதவை சாத்தி உள்புறம் தாழிட்டான்.

அஞ்சலி மட்டும் அல்ல... அத்தனை பேருமே அதிர்ச்சியில் உறைந்து போய் சாத்தப்பட்ட அறைக் கதவைப் பார்க்க நடக்கக் கூடாத ஒன்று இந்த வீட்டில் நடக்கப் போகின்றது என்ற அறிவிப்போடு அடர் சல்பூரிக் ஆசிட் அஞ்சலியின் அடிவயிற்றில் ஆக்ரோஷமாய் சுரக்கத் தொடங்கியது.

## 6

> *பேச்சு பெரியதுதான். ஆனால் மௌனம் அதைக் காட்டிலும் பெரியதாகும்.*

**செ**ன்னையை இருள் கவ்விக் கொண்ட நேரம்.

எப்படியும் இரவு நேரம் நடந்த அத்தனையும் தன்னிடம் சொல்லத்தானே போகின்றான் என்ற தைரியத்தில் கௌரி சங்கரைத் தொந்தரவு படுத்தாமல் மௌனமாகவே இருந்தாள். தன் பிள்ளைகளின் பர்த் டே இவ்வளவு அமைதியாய் களை இழந்து போனது... ஜீரணிக்க முடியாத கஷ்டமாகவே இருந்தது. இரவு டிபன்கூட யாரிடமும் பேசாமல் தான் கொறித்தான். எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கண்ணால் பேசிக் கொண்டார்களே தவிர... கௌரியிடம் பேசவில்லை.

சட்டையைக் கழற்றிவிட்டு... அதே ஹேங்கரில் மாட்டிவிட்டு... இரண்டு தலையணைக்கு மேலே தன் கைகளையும் மடித்துக் கொடுத்து... கண்களை மூடிக் கொண்டான். அறைக்குள் நுழைந்த ரோஹித்... கட்டில்மேல் சிறிது சிரமப்பட்டு ஏறி.



''டாடீ'' என மார்பில் போய் விழுந்தான். மற்ற நாளாய் இருந்தாலோ.. இல்லை சந்திரகாந்தை சந்திக்காமல் இருந்திருந்தாலோ... அந்தப் பூக் குவியலை அள்ளி தன் மேல் பூசி இருப்பான். மாலையாய் தொடுத்து தன் கழுத்தை சுற்றி இருப்பான். ஆனால் இப்போது அணுகுண்டு மேலே வந்து விழுந்தது போல் அதிர்ந்து போய்...

''எழுந்திரிடா'' என்றான் கண்களைத் திறக்காமல். ஆனால் அதைக் காதில் வாங்காமல் மேலும் முண்டிக் கொண்டு படுத்தான் ரோஹித்.

''சொல்றேன்ல... எழுந்திரிடா'' குரலைக் கடுமையாக்கினான்.

''மாட்டேன் போ'' என்று சிணுங்கினான்.

''சொன்னாக் கேளு.''

''கேக்கமாட்டேன் போ... ஊருக்குப் போய் ஒன்னுமே வாங்கல நீ... போ உன் கூட டூ... ஆ..'' மழலையில் கொஞ்சினான்.

''சொல்லிக்கிட்டே இருக்கேன்'' என்றபடி தன் இடது கையால் அவனைத் தூக்கி... கீழே எறிந்தான். வலி தாங்காமல் ரோஹித் 'ஓ'வென குரலெடுத்து கத்த அவன் குரல் கேட்டு ஹாலில் இருந்து ஓடிவந்து... மகனை வாரி அணைத்துக் கொண்டாள் அஞ்சலி.

''என்ன சாமி... என்னடா செல்லம்...''

''டாடீ வே...ணா... அ..டி..ச்...சிடுச்சி'' அதைக் கேட்டு கௌரி சங்கரைப் பார்த்தாள். அவன் கண்களை மூடிக் கொண்டு அப்படியே கிடந்தான். ரோஹித் அழுவதைப் பார்த்து தானும் அழலாமா என்று ராகுல் முகம் வெளிறிப் போய்... அவனும் தந்தை அருகே போய் அவன் தலைக்கு அருகில் நின்று கண்களை மூடியிருந்த அவன் கையை எடுக்க

முயற்சிக்க ஆத்திரத்தோடு வெகுண்டு எழுந்த கௌரி சங்கர் ராகுலின் முதுகில் ஓங்கி அறைந்து...

''சனியனே வெளியே போ...'' எனக் கத்த... ராகுலும் தன் பங்கிற்கு கோவெனக் கத்த...

''என்னாச்சி உங்களுக்கு... ஆர் யூ மேட்'' அஞ்சலி சொல்லிவிட்டு... இரண்டு பேரையும் வாரி அணைத்துக் கொண்டு... சமாதானப்படுத்த வெளியே வர நினைத்தபோது...

''எஸ்... எஸ்... எஸ்... ஐ'ம் மேட்... இன்னும் சட்டையைக் கிழிச்சிட்டு அலையல அவ்வளவுதான்'' என்றவனைக் கோப மாய்ப் பார்த்துவிட்டு குழந்தைகளிடம் சமாதானம் பேசி சமாதானப்படுத்திவிட்டு... அழுகை நிற்பதற்குள் தேமலோடு தூக்கமும் வர... இருவரையும்... தாத்தா பாட்டியிடம் கொடுத் தாள். ரத்தினசாமியும், சரசுவும் ஆளுக்கொரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு...

''என்னம்மா ஆச்சி அவனுக்கு?''

''தெரியல மாமா... ஏதோ பிரச்சனைன்னு நினைக்கிறேன்.''

''எந்தப் பிரச்சினையாகத்தான் இருக்கட்டுமே... அதுக் காக குழந்தையை அடிக்கணுமா... என்னத்த படிச்சான் இவ னெல்லாம்.''

''..........''

''சரி சரி. நீ போய் அவனைப் பார். பிள்ளைங்க இன் னைக்கு எங்ககிட்டே இருக்கட்டும்.''

''ராத்திரி அழுதா?'' தயங்கினாள்.

''நான் பாத்துகிறேன்... நீ போய் அவனைப் பார்...'' சரசும் கூற... எதுவும் புரியாமல் இதையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்த மைதிலியை...



''நீயும் போய் படு'' என ரத்தினசாமி கூற... மைதிலி அவள் ரூமிற்கும். அஞ்சலி தங்கள் அறைக்கும் போனார்கள். அறைக் கதவை சாத்தித் தாழிட்ட அஞ்சலி... கௌரி சங்கரின் தலைக் கருகில் அமர்ந்து கொண்டு... எதுவும் பேசாமல் அவன் நெற் றியை பிடித்து விட்டாள்.

''வேண்டாம் அஞ்சலி! நீ போய் படு.''

''சங்கர், என்னாச்சி.''

''..........''

''குழந்தைகளைத் திட்டினாலே உங்களால தாங்கிக்க முடி யாதே... நீங்களா.''

''.........''

''டில்லியில் என்னாச்சி. கான்பரன்சில் ஏதாவது ப்ராப்ளமா?''

''..........''

''நான் கேட்காமலேயே சொல்லுவீங்கன்னு எதிர்பார்த் தேன். ஆனா நான் கேட்டும் அமைதியா இருக்கிறது.'' தலை யில் இருந்து கொஞ்சம் இறங்கி அவன் தோளைப் பிடித்து விட்டாள். அவள் கைகளைப் பற்றியவன்.

''என்மேல் உனக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கில்ல'' என்றான்.

''இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி.''

''சொல்லு'' பிடிவாதமாய் கேட்டான். அவனிடம் இருந்து தன் கைகளை எடுத்துக் கொண்டு மெல்ல நகர்ந்து தளர்ந்து... அவன் நெஞ்சில் தலை வைத்துப் படுத்தாள். அவளை அணைத்துக் கொண்டவன்,

''நான் கேட்பதற்கு பதில் சொல்லவே இல்லையே'' என் றான்.

''என்னைப் பொருத்தவரை நீங்க தெய்வம்.''

''தெய்வம் தவறான முடிவு எடுக்குமா?''

''எடுக்காது... ஏன்?''

''நமக்கு கல்யாணம் ஆகி எவ்வளவு நாள் ஆகுது?''

''நாலு வருஷம் முடிஞ்சிடுச்சி.''

''பசங்க எப்போ பிறந்தாங்க.''

''இன்றோடு அவங்க பிறந்து மூன்று வருடம் ஆச்சி.''

''நான் அதைக் கேட்கலை... பிறந்த டேட்.''

''25.10.95.''

''அப்போ... முதல் மாசம் ஜனவரி தானே?''

''எந்த முதல் மாசம்.''

''கன்சீவானது.''

''ஆமாம். ஜனவரிதான்.''

''95 ஜனவரி, அந்த மாதத்தில் நடந்த முக்கியமான இன்சிடென்ட் ஏதாவது நினைவுக்கு வருதா?''

''யோசித்தாள்.''

''ம்கூம்.''

''நல்லா யோசிச்சி பாரு'' திரும்பவும் சில விநாடிகள் யோசித்தவள்.

''ம்கூம்'' என்றாள்.

''நினைவுக்கு வரலையா?''

''இல்லைப்பா.''



''இன்னொரு தடவை ட்ரை பண்ணேன்.''

''ம்கூம்'' ரொம்ப யோசிச்சா... மூளை கசிந்து... காது வழியா வந்திடும்.''

''....''

''உங்களுக்கு நினைவிருக்கா... இருந்தா நீங்களே சொல்லுங்க.''

''சந்திரகாந்த்.''

அந்தப் பேரைக் கேட்டதும்... நிமிர்ந்து அவன் முகத்தை புரியாமலும் புதிராகவும் பார்த்தாள்.

''அந்த இன்சிடென்ட் ஜனவரி 95' தானே?''

''இன்னும் அது உங்களுக்கு நினைவிருக்கா?''

''..............''

''என்ன பேச்சே காணோம்.''

''இதுநாள் வரைக்கும் இல்லை... ஆனா.''

''ஆனா?''

''டில்லியில...''

''டில்லியில?''

''ஒரு ஹோட்டலில் சந்திரகாந்தைப் பார்த்தேன்.''

''ஏதாவது பிரச்சினையா?'' எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இம்.''

''சண்டையா?''

''இல்லை.''

''சந்திரகாந்த் ஏதாவது... மனசு கஷ்டப்படற மாதிரி.''

''இல்லை... அவனோட இடது கையில்... ஆறு விரல்கள்.

''சரி... அதனால என்ன?''

''ரோஹித்துக்கும், ராகுலுக்கும்கூட ஆறுவிரல்கள்... அதனால.''

''அதனால?'' ஏதோ ஓர் விபரீதம் உறைத்தது அவளுக்கு.

''இவங்க ரெண்டு பேரும்.''

''ரெண்டு பேரும்.''

''என் குழந்தைகள் இல்லை.''

''சங்கர்!'' குரலெடுத்துக் கத்தினாள்.

''ஆமாம் அஞ்சலி... இவங்க நம்ம பிள்ளைகள் இல்லை. அந்த அயோக்கியன் வாரிசுகள்.''

''சங்கர்!''

அவள் பதற்றமாய் கத்த எழுந்து உட்கார்ந்து அவள் தோளைப் பிடித்து அழுத்தியவன்.

''பதற்றப்படாதே. கோபப்படாதே... அவனை பார்த்த போது நான் துடிச்சிப் போயிட்டேன். அந்த நிமிஷம் முதல் நிம்மதியில்லை... உறக்கமில்லை.''

''........''

''இந்த பிள்ளைகளைப் பார்க்கும்போது... அந்த நாளும் அந்த ஆறு விரலும் தான் நினைவுக்கு வருது.''

''.........''

''ரோஹித்தும்... ராகுலும் என் குழந்தைகள் இல்லை.''



''நோ... நோ... இருக்காது...'' தலையை பிடித்து அஞ்சலி கத்த.

''ப்ளீஸ்... ரிலாக்ஸ்.''

''இல்லை... இது நம்ம குழந்தைங்க... உங்க வாரிசு.''

''இல்லை அஞ்சலி.. இது அவனோட குழந்தைங்க.''

''இல்லைங்க வாய்ப்பே இல்லை... எனக்கு நல்லா தெரியும். அவங்க நம்ம ரெண்டு பேரோட குழந்தைங்கதான்.''

''அதெப்படி சொல்ல முடியும்.''

''சில நேரம் நாம நினைக்கிறதுதான் உண்மையா இருக்கும் என உள்ளுணர்வு சொல்லுது இவங்க... நம்ம பிள்ளைங்க.''

''அஞ்சலி சில நேரம் நான் நினைக்கிறது உண்மையாகலாம். ஆனால் பல நேரம் நாம நினைக்காததுதான் உண்மையாகும்.

''என்னங்க... ஒரு பேச்சுக்குத் தான் கேட்கிறேன், ஒரு வேளை நீங்க நினைக்கிறது. உண்மைன்னே வச்சிக்குவோம்.''

''வச்சிக்குவோம் இல்லை. அதான் உண்மை.''

''என்னடா இதுன்னு வேதனையா இருக்காப்பா.''

''அதுக்காக குழந்தைங்ககிட்டேயா கோபத்தைக் காட்டுவது.. உங்களுக்கு எரிச்சலாவோ ஆத்திரமாவே இருந்தா என்னை அடிச்சிடுங்க.. பாவம் பிஞ்சுங்க. உங்க கோபத்தை தாங்கிக்கிற சக்தி அதுங்களுக்கு இல்லை.''

''அஞ்சலி! ரெண்டு பேருக்கும் இளமையும் வயசும் இருக்கு.''

''அதுக்காக...''

''உன்னைத் தொட்டதை என்னால சகிச்சிக்க முடிந்தது. அட்ஜெஸ்ட் பண்ணிக்க தோணிச்சி. ஆனா... இன்னொருத் தன் குழந்தைக்கு என்னால தகப்பனா இருக்க முடியாது. நான் மறக்க நினைப்பதை மறந்து விட்டதை அவங்க ஞாபகப் படுத்துவாங்க.''

''அதனால.''

''சங்கடப்படாதே. இதுங்க நமக்கு வேண்டாம்.''

''சங்கர்'' அவனை உதறிவிட்டு எழுந்து நின்றாள்.

''எதார்த்தமா யோசிச்சி பார். காலம் முழுக்க இவங்க ளோட மனசஞ்சலத்தோட வாழ்வதைக் காட்டிலும்... அனாதை ஆசிரமத்தில்...''

''நீங்க மனுஷன்தானா?'' கத்தியவள் அவனை வெறுப் போடு பார்க்க,

''என்னை அசிங்கமா பார்க்கிறியா? நான் மனிதன்தான். நான் மனிதனா இருக்கிறதுனாலதான் இன்னும் பொறுமையா இருக்கேன். இவங்களைக் கொண்டு போய் எப்படி சேர்ப்பது என்றெல்லாம் முடிவு பண்ணிட்டேன். குழந்தைங்களை எங் காவது டூர் கூட்டிகிட்டுப் போற மாதிரி போவோம். ஒரு ஆசிர மத்தில் சேர்த்துட்டு... குழந்தைகளை மிஸ் பண்ணிட்டோம் என்று வீட்டில் வந்து சொல்லலாம்.''

அவனை கீழ்த்தரமான புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

'எல்லா முடிவும் பண்ணிவிட்டு என்னிடம் பார்மாலிட்டிக் காக கேக்கறீங்களா? குழந்தையும் தெய்வமும் ஒன்னும்பாங்க. என்னை நீங்க வெறுத்தால் அதில் ஒரு நியாயம் இருக்குங்க. ஆனா நீங்க எடுத்திருக்கிற முடிவு தப்பு. ரொம்ப தப்பு



முன்பின் எதையும் யோசிக்காமல் பாரம்பரியம் தெரியாத குழந்தைகளை எடுத்து எத்தனையோ பேர் வளர்க்கிறாங்க. நம்ம ராகுலும் ரோஹித்தும் அதைவிடவா மோசம் போய்ட் டாங்க. அவங்க யாரோட குழந்தைங்க என்பதைவிட என் வயிற்றில் பிறந்தவங்ககறதில் எந்த சந்தேகமும் இல்லையே!'' அவனைப் பிடித்து உலுக்கிக் கேட்டாள்.

''அஞ்சலி! நீ கோபப்படறதில் நோ யூஸ். என்னோட புகழுக்கு என்னோட பணத்திற்கு என் குழந்தைகள் தான் வாரி சாகணும். கண்டவனோட குழந்தைக்கு நான் இன்சியலாக இருக்க விரும்பல. அப்பாங்கற உறவு ஆத்மார்த்தமாதான் இருக்கணுமே தவிர... அடையாளமாக இருக்கக் கூடாது.''

''முடிவா என்ன சொல்றீங்க?''

''இனிமே என்னால முடியாது.''

''இப்போ இதைப்பற்றி பேச வேண்டாம். விடியட்டும்.''

''எப்போ விடிஞ்சாலும்.. இதான் என் முடிவு.''

''யோசிச்சிதான் பேசுறீங்களா?'' சினம் கொண்டாள்.

''ஆமாம்.''

''இங்க பாருங்க உங்களுக்கு புத்தி சொல்லும் அளவு நான் இல்லை. ஊமையனுக்கு பேசற பிள்ளை பிறக்கறது இல்லையா? படிக்காதவங்களுக்கு படிப்பில் ஆர்வமா பிள்ளை பிறப்பது இல்லையா? அவனுக்கு ஆறு விரல்கள் இருப்பதால் அவ னோட குழந்தைங்கன்னு நினைக்கிறது நியாயம் இல்லை. நீங்க சந்தேகம்தான் படலாம். உறுதியா சொல்ல முடியுமா?''

இத்தனை நாள் வாழ்க்கையில் அவனை எதிர்த்துப் பேசாதவள், முதல் முறையாகப் பேசவும் கோபமாய் நிமிர்ந்து பார்த்தான்.

''நான் சந்தேகப்படலை. உறுதியா நம்புறேன்.''

''அது உண்மையில் உங்க ரத்தமா இருந்தா.''

''இருக்காது.''

''பிள்ளைங்களை நீங்க வேண்டாங்கறதைவிட எனக்கு விஷம் கொடுத்துடலாம்.''

''அஞ்சலி!''

''உங்களை என்னவோ நினைச்சேன். இவ்வளவு மட்ட மானவராக இருப்பீங்கன்னு நினைச்சி கூடப் பார்க்க முடியலை. பெத்த பாசத்தைவிட... வளர்த்த பாசம் உயர்வும்பாங்க. அது கூடவா உங்களுக்கு இல்லாம போச்சு... நீங்க பசு இல்லை. பசுத்தோல் போர்த்திக்கிட்ட புலி... புலி... ஈவு இரக்கம் இல்லாத மிருகம்... மூணு வருஷம் நெஞ்சிலேயே போட்டு வளர்த்த பிள்ளைகளை எடுத்து எறியச் சொல்றீங்களே... உங்களுக்கு மனசாட்சியே இல்லையா?... நீங்க கொஞ்சம் கூட யோசிக்காம... கொலைகூட பண்ணுவீங்க'' என கண்ணீரோடு கதறியவளை... வேகமாய் எழுந்து ஓங்கி அறைந்தான்.

''பேசாதே, பேசினால்.''

''என்ன பண்ணுவீங்க?'' அழுகையோடு கேட்டாள்.

''சொல்லமாட்டேன். செஞ்சி காட்டுவேன்'' எனக் கூறி விட்டு... இழுத்துப் போர்த்திப் படுத்துக் கொண்டான். அவன் முதுகையே வெறித்துப் பார்த்தவள் தான் ஆத்திரப்படாமல் காலையில் பேச வேண்டும் என எண்ணினாள். ஆனால் தான் எப்படி இறங்கி வந்தாலும் தாழ்ந்து போனாலும்... இறைவன் முடிவு வேறு என்பதை எப்படி அவள் அறிய முடியும்!



# 7

> நம்பிக்கை என்று ஒன்று இல்லாவிடில்
> இவ்வுலகம் நொடியில் நிர்மூலமாகி விடும்.

''இப்படியே கம்முன்னு உட்கார்ந்து கொண்டு பீச் மணலை பிடி பிடியாய் குமிப்பதில் எந்தப் பலனும் இல்லை... எதுக்கு கூட்டிகிட்டு வந்து இப்படி உட்கார வச்சிருக்கீங்க.''

மணலை குவித்தபடியே...

''என்னதான் முடிவு பண்ணியிருக்க...'' என்றான் சங்கர்.

''முடிவா?... என்ன முடிவு.''

''குழந்தைங்களைப் பத்திதான்.''

''அவங்க நம்ம பிள்ளைகள் அதான் என் முடிவு...''

''பத்து நாளா நான் சொல்றது உன் காதில் ஏறலை இல்லை.''

''பத்து நாள் மட்டும் இல்லை.. பத்து ஜென்மங்களுக்கு இதை நீங்க சொன்னாலும்... நான் நம்பவும் போறது இல்லை... உங்க முடிவுக்கு உடன்படவும் போறது இல்லை...''

''அஞ்சலி! பீ சீரியஸ்.''

''எஸ்.எஸ். நான் சீரியஸாக மட்டும் இல்லை. சின்சிய ராகவும் சொல்றேன். கறை பட்டவ நான். களங்கப்பட்டவ நான். தண்டிக்கணும்னா என்னை தண்டிக்கலாம். அதை விட்டு, குழந்தைங்களைப் போய் கிராமத்துல எல்லாம் சொல்லு

வாங்க, தென்னை மரத்தில் தேள் கொட்டினா பனை மரத்தில் நெறியோடும்னு... அது இங்கதான் நடக்குது.''

''ஏய்... உளராதே. சேக்ரிபைஸ் பண்ணிக்கவும் ஒரு லிமிட் இருக்கு... எவ்வரிதிங்... அன்ட் எனி திங்க் ஃபார் லிமிட்... உன்னை நானே வெறுக்கும்படி பண்ணிடாதே. உன்னை ஏத்துக் கிட்டதே என்னோட பெருந்தன்மை. இத்தனை நாள் அதைப் பற்றி நினைக்காமல் மறந்து சந்தோஷமாய் குடும்பம் நடத்துறது உன்மேல் எனக்குள்ள பாசம்.''

''தெரியும்... எனக்கு நல்லாத் தெரியும். என்னை ஏத்துக் கிட்டது என் அதிர்ஷ்டம் மட்டும் அல்ல. உங்களோட நல்ல மனசு. அதுக்குத்தான் நாய் மாதிரி உங்க காலடியிலேயே கிடக்கிறேனே. என்னை ஏத்துக்கத் தெரிந்த மனசுக்கு... தன் பிள்ளைகளை அடையாளம் தெரியலையே.''

''அவங்க என் பிள்ளைகள் இல்லை... இல்லை.''

''எத்தனை முறை நீங்க இல்லை இல்லை என்றாலும்... அவங்க உங்க பிள்ளைங்கதான்.''

''அஞ்சலி! நான் ஒரு முடிவுக்கு வர மாட்டேன் வந்தா... அதான் இறுதியான முடிவு.''

''அதனால.''

''நானா.. அந்தப் பிள்ளைகளான்னு நீதான் முடிவு எடுக்கணும்.''

''நான் எப்படிங்க கேட்க முடியும்... வலது கண் வேணுமா? இடது கண் வேணுமான்னு கேட்டா நான் எப்படிங்க பதில் சொல்ல முடியும்? எதை இழந்தாலும் பாதிக்கப்படப் போவது நான்தானே? வேண்டாங்க இந்த முடிவு வேண்டாம். அந்தக் குழந்தைங்களோட பிறப்பை அசிங்கமாக்கிடாதீங்க. முன்ன மாதிரி அவங்களோடு நீங்க கொஞ்ச வேண்டாம்...



பேச வேண்டாம். ஆனா அவங்க நம்மோட வீட்டுலேயே இருக்கட்டுங்க... இந்த விஷயம் அத்தை மாமாவிற்கோ... வேற யாருக்காவது தெரிந்தாலோ... எவ்வளவு பெரிய பிரச்சினை? இதையெல்லாம் யோசிச்சிப் பார்த்தீங்களா?''

''நீ மட்டும்தான் எனக்கு வேணும்... அந்தக் குட்டி பிசாசுங்க இல்லை.''

''என்ன பேசறதுன்னு தெரியாம பேசறீங்க. இது நல்லா இல்லை.''

''ஆமாம். நான் இவ்வளவு பொறுமையா பேசிகிட்டு இருக்கிறது நல்லா இல்லைதான்.''

''.........''

''அஞ்சலி! கடைசியா சொல்றேன். இன்னொருத்தன் பிள்ளைக்கு அப்பாவா இருக்க என்னால முடியாது.''

''இன்னொருத்தன் பிள்ளைன்னு எப்படிச் சொல்றீங்க?''

''ஆறு விரல்.''

''ஆமாம் பெரிய ஆறு விரல்... உலகத்தில் இல்லாத ஆறு விரல்... நீங்க உங்க அப்பா மாதிரியா இருக்கீங்க... இல்லையே.. உங்கப்பாவிற்கு காது ஓரம் மொச்சை அளவு ஒரு மச்சம் இருக்கே. அது மாதிரி உங்களுக்கு இருக்கா... இல்லையே... அப்படின்னா நீங்க உங்கப்பா பிள்ளை இல்லை. அப்படித்தானே. என்னை மாதிரியே, உங்கம்மாவையும் யாரோ ஒருத்தன் கெடுத்துட்டானா?'' அவன் கேட்டதுதான் தாமதம் அது பீச் என்பதையும் மறந்து... அவள் கழுத்தை பிடித்து வேகமாய் இறுக்கினான்.

''அடிச்சி பல்லெல்லாம் பேத்துடுவேன்'' தாடை நரம்புகள் புடைக்க... நற நறக்கும் பற்களுக்கு இடையில் வார்த்தைகளை நசுக்கி விட்டான்.

''வலியா இருக்குல்ல. வேதனையா இருக்குல்ல... இப்படித் தான் எனக்கும் இருக்கும். நான் நினைச்ச மாதிரி நீங்க

இல்லை... என்னை மன்னிச்சி பெருந்தன்மையா நடந்து கிட்டது எல்லாம்... வேஷம்... பக்கா சுயநலம். என்னைப் பத்தி தான் எல்லாத்தையும் உங்ககிட்டே கொட்டிட்டேனே... குண்டுமணி அளவு அன்பைக் காட்டினாலும்... அதுக்காக கோடி முறை நன்றி காட்டும் பைத்தியக்காரின்னு... அதான் மன்னிச்சிட்டால், இவள் காலம் முழுக்க செருப்பா கிடப்பா... நாம என்ன வேணாலும் செய்யலாம்... எல்லாத்துக்கும் தலையாட்டுவாள். அப்படிங்கற கணிப்பு... புருசன் காலைப் புடிச்ச பெண்கள் எல்லாத்தையும் ஏட்டில் படிக்க வேண்டிய காலம் இது. எல்லா விதத்திலும் உங்களோடு சமமா இருக்கும் என்னை... தியாகம் பெருந்தன்மை என்ற பெயர்களில் அடிமைப் படுத்தினால்தானே முடியும்... நீங்க கெமிஸ்ட்ரி படிச்சிருக் கிறதை விட... மனோதத்துவம் படிச்சிருந்தா... டாக்டர் ஆயிருப்பீங்க...'' மனதில் பட்டதை எல்லாம் வார்த்தையாக்கி படபடவெனப் பொறிந்து தள்ளினாள்.

பீச் காற்றின் தாக்கத்திற்கும் ஈடு கொடுத்து... அவன் உடல் வேர்த்து, முகம் முழுவதும் நீர்த் திவலை சொட்டியது. எத்தனை நாள் ஒரு பெண்ணை உளமார ஏமாற்ற முடியும். அதுவும் தான் என்ன மனதில் கொண்டு அவளை ஏற்றுக் கொண் டானோ... அதை அப்படியே புட்டுப் புட்டு வைத்ததும்... உள் ளுக்குள் நாணிப் போனான். குட்டு வெளிப்பட்ட கோபம்... இயலாமையால் எழுந்த ஆத்திரம் தான் ஆண் என்ற ஈகோ அத்தனையும் ஒன்றாய் சேர்ந்து அவனை ஆட்கொள்ள...

விருட்டென எழுந்து பைக்கில் புறப்பட்டான்.

பைக்கில் புறப்பட்டவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். வரும்போது பின்னால் உட்கார வைத்து அழைத்து வந்தவன் இப்போது ஆவேசப்பட்டு அவன் மட்டும் தனியே போகின் றான். பைக்கில் விட்டுப் போனதைப் பற்றி அவள் பொறுத்துக்



கொள்வாள். வாழ்க்கைப் பயணத்தில் அல்லவா. விடப் பார்க்கிறான்.

'எந்த ஒரு தியாகமும் சொல்லிக் காட்டப்படும்போது... ஜீவன் இழந்து மதிப்பு மங்கிப் போய் விடுகின்றது?' இதை உணர்ந்தபடி... பீச் ரோட்டின் நடை பாதையில் மணலை மட்டும் தட்டிவிட்டு... எண்ணங்களை... வார்த்தைகளை எல் லாம் ஒவ்வொன்றாய் கோர்த்தபடி நடக்கத் தொடங்கினாள்.

**ர**த்தினசாமிக்கும்... சரசுவிற்கும்... இவர்களுக்குள் ஏதோ ஓர் புகைச்சல் ஏற்பட்டு இருப்பதை அறிந்தாலும்... என்ன வென்று தெரியாமல் தவித்தார்கள். தலையிட்டு... கேட்டு பிரச்சினை பெரியதாகி விட்டால் என்ன செய்வது என்ற பயம் வேறு... இருப்பினும் இரண்டு முறை கேட்டபோது... இரு வருமே ஒன்றும் இல்லை என்று மழுப்பித்தான் வைத்தார்கள். அன்று இரவு அஞ்சலியைத் தவிர்க்க... அறைக்குள் வராமல்... வெகு சின்சியராய்... பார்க்காத புரோக்கிராம்... பார்க்காத சேனல் அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக்க...

கொப்பளித்து வரும் சுடுநீரை அடக்க முடியாமல்... அடிக்கடி கன்னம் துடைத்துக் கொண்டு இருந்தாள் அஞ்சலி.

''மம்மீ!'' தேனாய் குரல் வந்து செவியில் விழுந்ததுமே... சட்டென கண்ணீர் முத்துக்களை காணாமல் செய்து இன்ஸ் டென்ட் புன்னகை ஒன்றை வரவழைத்துக் கொண்டு திரும்ப... ரோஹித் அவள் அருகே வந்து இடுப்பைக் கட்டிக் கொள்ள.. ராகுல் அவள் கழுத்தில் தன் கைகளால் ஊஞ்சல் கட்டினான்.

''சாப்பிட்டாச்சா செல்லம்.''

''இம்'' இரு வாண்டுகளும் ஒரு சேர தலையாட்டின.

''சமத்து.. என்ன சாப்பிட்ட?''

''இட்லி.''

''எத்தனை?''

''ரெண்டு.''

''யார் ஊட்டிவிட்டா.''

''பாட்டி...'' மாறி மாறி இருவரும் பதில் தர.

''நேரமாவுதுடா கண்ணா... படுத்துக்குங்க'' என்றபடி... இருவரையும் அருகருகே படுக்க வைத்து... கழுத்து வரை போர்த்தி விட்டாள்.

''மம்மீ.''

''ம்.''

''தூ...க்...க...ம் வரலை...''

''நான் தட்டி விட்றேன் தூங்கு.''

''ம்கூம்... நீயும்... படு'' ராகுல் கையைப் பிடித்து இழுத்தான்.

''சரி'' என ரோஹித் அருகே படுக்கப் போனவளை, கைகாலை உதறி, அழுது தடுத்தான் ராகுல்.

''என்னடா'' சலிப்பாய் கேட்டாள்.

''நடுலே... ப... டு...''

இரண்டு குழந்தைகளுக்கும் நடுவில் படுக்க... உடனே இரண்டும் அவளின் கழுத்துபுறம் தங்கள் முகத்தை ஒட்டிக் கொண்டு. ஆளுக்கொரு கையை அவள் மார்பில் போட்டு ஒட்டிக் கொண்டன. இந்தக் கற்கண்டுகளையா அனாதை ஆசிரமம் அனுப்பச் சொல்கின்றார். என்ன ஒரு கல் மனது எண்ணி எண்ணி துடித்துப் போனாள்.

''மம்மீ!'' என்றபடி அவள் மேல் தன் காலைப் போட்டான் ராகுல்.



''என்னடா!'' இரண்டு பேரின் தலையிலும் தன் விரல் கொண்டு ஏதாவது ஒரு வழி கிடைக்காதா என்று தேடிப் பார்த்தாள்.

''ரோஹித்.. ஒன்று சொன்னா.''

''என்ன...''

''அ...ன..தா... ஆ.. சி... ரம்'' அவன் சொல்லி முடிக்கும்போதே... அஞ்சலிக்கு நாடி நரம்பெல்லாம் ஸ்தம்பித்து உயிர் போய் மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டது.

''என்ன சொன்ன?'' துடித்தாள்.

''அனாதை ஆசிரமம்'' என்றான் மீண்டும்.

''அனாதை ஆசிரமம்'' கேட்டாள்.

''அங்கே கொண்டு போய் என்னையும் ரோஹித்தையும் உடப்போறியா?''

''ஐய்யோ கடவுளே! இன்னும் நான் உயிரோட இருக்கணுமா?'' தானாய் தலை தேடி அவள் கையிரண்டும் அடித்துக் கொள்ள...

இரண்டு குழந்தைகளும் கண்களில் பயம் கவ்வ அவளைப் பார்க்க...

''யாரு... யாரு... யாரு சொன்னா?''

''நீயும் டா.. டியும் தான் பேசனீங்களே... நான் தூங்.. கா...ம.. மு..ழிச்சிட்டு கேட்டேன்'' ரோஹித் திக்கித் திக்கிக் கூற... திசைக்கொன்றாய் அவள் உடல் சிதறுவது போல் இருந்தது.

''அ..ங்..க.. போ.. ய்.. படி..க்னு..மா?'' ராகுல் கேட்க....

பதில் சொல்ல முடியாமல் வேகமாய் அவனை தன் மார் போடு இறுக்கி... அவன் நெற்றியில் வைத்த தன் இதழை எடுக்க முடியாமல் தடுமாறினாள்.

''வே...ணா.. மம்மீ... நான் இங்கேயே படிக்...றேன்.. அ..ங்கல்லாம்...'' சொன்ன ரோஹித்தை கண்ணீர் மல்க.. நாசியில் நீர் வடியப் பார்த்தாள்.

''ஏன் ம..ம்.. மீ அழ..ற'' ரோஹித் அழத் தொடங்க...

''இல்லடா... இல்லடா கண்ணா... மம்மி அழல... தூசு தூசு பட்றிச்சி...'' சமாளித்துக் கொண்டு அவனை அழைத்துக் கொள்ள கையை நீட்ட... அதற்காகக் காத்திருந்தார் போல் வந்து ஒட்டிக் கொண்டு, தன் பிஞ்சு விரலால்... ஆக்ரோஷ மாய் அவள் கன்னங்களில் வழிந்த நீரைத் துடைத்து விட் டான். துடைத்து விட்ட அந்தப் பிஞ்சு மெல்லிய மல்லிகைப் பூ விரல்களை கண்களில் ஒத்திக் கொண்டாள்.

''மம்மீ.''

''என்னடா செல்லம்'' குழைந்தாள்.

''பாட்டிகிட்ட படுக்கல.''

''சரி... இங்கேயே படுத்துக்குங்க.''

''டாடி அடிக்காது?'' பயத்தோடு ராகுல் கேட்க... எந்த அளவு இந்தப் பிள்ளைகள் ஒரு வாரத்திற்குள் பயந்து கிடக்கின்றன. அந்தளவு நெருங்க விடாமல் கடித்தல்லவா குதறியிருக்கின்றான் கௌரிசங்கர். அந்த நினைப்பே, கடுக் காயைக் கடித்தது போல் அடிநாக்கு வரை கசந்தபடியே உள்ளிறங்கியது.

''நான் இருக்கேன்... எங்கூட இருங்க.''

''நல்ல மம்மி.''



''மம்மி'' ராகுல் அவள் கையைச் சொறிந்தான்.

''இம்.''

''அனாத ஆசிரம்...''

''வேண்டா'' இரண்டும் கோரஸாய்க் கூற...

''இல்லடா செல்லம்... நீங்க ரெண்டு பேரும் இல்லைன்னா, நான்தாண்டா அனாதை. என்னை விட்டு எங்கேயும் உங்களை அனுப்ப மாட்டேன். இந்த உலகத்தில் எனக்கு யாரும் வேணான்டா. அம்மா வேண்டாம். வேலை வேண்டாம். புருஷன் வேண்டாம். எந்த சொத்து சுகமோ, உறவோ வேண்டாம். நீங்க ரெண்டு பேர் மட்டும் போதுண்டா கண்ணுங்களா...'' அவள் வாய்விட்டுப் புலம்ப...

இரண்டும் புரியாமல் பார்த்தன. அவர்களைத் தூங்க வைக்க வெகு நேரம் ஆகியது அவளுக்கு. இதற்குக் கண்டிப் பாய் சீக்கிரம் ஒரு முடிவை எடுக்க வேண்டும். எவ்வளவு நேரம் யோசித்துப் பார்த்தும், எந்த ஒரு வழியும் அவளுக்குத் தென்படவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் சமாதானப் படுத்த முயற்சிப்பதும், தோல்வியைத் தழுவுவதும், பின் சண்டை இட்டுக் கொள்வதும் தங்களுக்கு அழகில்லை என்றும் தோன்றியது.

ஒரே இடத்தில் இருந்து கொண்டு சண்டை இட்டுக் கொள்வதைவிட சில நாட்கள் பிரிந்து இருந்தால் அந்தத் தனிமை மற்றவரிடம் இருக்கும் நியாயத்தை உணர வைக்க வாய்ப்பிருக்குமே.. கரும்பலகையில் கோடு கிழித்தார் போல் பளிச்சென தோன்றியதுமே... நாளையே அம்மா வீட்டிற்கு குழந்தைகளை அழைத்துக் கொண்டு போய் வரலாம் என்ற முடிவோடு குழந்தைகளை அணைத்துக் கொண்டு படுத் தாலும், தூங்க முடியாமல் போராடினாள். விடியும் வரை

கௌரி சங்கர் அறைக்குள் வரவே இல்லை. இரண்டு, மூன்று முறை வெளியே வந்து ஹாலைப் பார்த்தாள். சோபாவில் படுத்திருந்தான். அருகில் வந்து பார்த்தபோது.. அவன் உறக்கம் இல்லாமல் விழிகளை மூடிக் கொண்டுதான் படுத் திருந்தான்.

எழுப்ப நினைத்து... மனம் இல்லாமல் திரும்பிப் போனாள்.

**கா**லையிலேயே எழ மறுத்த இரண்டு குழந்தைகளையும் தட்டி.. தட்டி எழுப்பினாள். குழந்தைகளைக் கொண்டு போய் விட்டு விட்டு, கம்பெனி கிளம்ப வேண்டுமே... அந்த அவசரம்... குழந்தைகளிடம் சொல்லவில்லை. அழுது கொண்டே எழ மறுத்தன. தூங்கித் தூங்கி விழுந்த தலைகளை நேராக்கி, ஏதேதோ அட்ஜெஸ்ட் பண்ணி தூக்கி உட்கார வைத்தாள். இரண்டும் கண்களைக் கசக்கிக் கொண்டு உட் கார்ந்தபோது... உள்ளே நுழைந்தான் கௌரிசங்கர்.

ரோஹித்தின் பனியனையும், கால் டவுசரையும் கழற்றிக் கொண்டே... ''என்னங்க'' என்றாள்.

''ம்'' பாத்ரூம் கதவைத் திறந்தான்.

''நா... பிள்ளைங்களைக் கூட்டிக்கிட்டு அம்மா வீட்டுக் குப் போறேன்.''

''போறியா... போய்ட்டு வரியா?''

''உங்களுக்கு எதுல விருப்பம்?''

''தனியான்னா... சொல்லு. நானே உன்னைக் கூட்டி வரேன், மூணு பேருன்னா...'' அதற்கு மேல் பேசாமல், அவளே புரிந்து கொள்ள முடிக்காமல் விட்டான்.

''நான் உங்களுக்கு வேணும் இல்லையா?''

''ஆமாம்'' ப்ரஷ்ஷில் பேஸ்ட்டைப் பிதுக்கினான்.



''அதாவது என் போஸ்ட், என் சம்பளம்.''

''......'' ப்ரஷ்ஷை வாயிற்குள் திணித்து, மேலும் கீழும் ப்ரஷ் பண்ணினான்.

''இவங்க உங்க குழந்தைகளா, இல்லை சந்திரகாந்தோட குழந்தையாங்கறது எனக்கு இப்போது பிரச்சினை இல்லை. இவங்களைச் சுமந்தவ நான். என் ரத்தத்தில் ஊறி, என் உணர்வுகளில் வாழ்ந்து, ரத்தத்தைப் பாலாக்கியவள் நான். இதில் எந்த சந்தேகமும் எனக்கில்லை. புருஷன்ங்ற உறவு புனிதமானதுதான். ஆத்மார்த்தமானதுதான். ஆனா... தாய்ங் கறது, தாய்மைங்கறது ரொம்ப ரொம்ப உயர்ந்தது. நான் இல்லன்னா, ஆயிரம் பொண்டாட்டிங்க உங்களுக்குக் கிடைக் கலாம். என் குழந்தைகளுக்குத் தாய் கிடைப்பாளா?''

''சினிமாவிற்கு டயலாக் எழுது'' வாயைக் கொப் பளித்துத் துப்பினான்.

''தேங்க்ஸ் பார் யுவர் காம்ப்ளிமெண்ட்ஸ்.''

ரோஹித்தையும், ராகுலையும் கிளப்புவதற்குள் போதும், போதும் என்றாகிவிட்டது. பாட்டி வீட்டிற்குப் போறோம் என்று குஷியாக்கி வைத்தாள். எட்டு மணிக்கெல்லாம் மூவரும் புறப்பட...

''என்னம்மா... எங்கே?'' சரசு சந்தேகமாய்க் கேட்க...

''அம்மா வீட்டுக்கத்த!''

''என்ன திடீர்னு?''

''சும்மாதான் அம்மாவைப் போய்ப் பார்த்துட்டு வரலாம்னு.''

''எப்போ வருவே?''

''உங்க புள்ளைய கேளுங்கத்தே!''

கௌரிசங்கர் அஞ்சலியைப் பார்த்துவிட்டுப் பார்வையை கீழிறக்கினான்.

''என்னடா கௌரி. அஞ்சலியோட நீயும் போறியா?''

''இல்லம்மா.''

''போய்விட்டுட்டு வாயேன்.''

''போறவளை விட்டுடேம்மா... போறா, போய்ட்டு வருவாம்மா. ரொம்ப புத்திசாலின்ற நினைப்பு... தன்னைத் தவிர எல்லாரும் பைத்தியக்காரங்கற கணக்கு.''

''என்னடா சொல்ற? நீ சொல்றதும் புரிய மாட்டேங்குது. அவ நடந்துக்கிறதும் விளங்க மாட்டேங்குது. என்னடா பிரச்சினை?'' சத்தமாய்க் கேட்க...

''சொல்றேம்மா... எல்லாத்தையும் சொல்றேன்... இவகிட்டே மல்லுக்கட்டறதைவிட மனசு விட்டு உன்னிடம் அழுதிடலாம்...'' என்றவன்.

ஒவ்வொரு புஷ்பமாய் எடுத்து, அழகாய் மாலைத் தொடுப்பது போல், நடந்த அத்தனையையும் வரிசையாய், கோவையாய், கடந்த காலத்தில் இருந்து, நேற்று நடந்த உரையாடல் வரை ரத்தினச் சுருக்கமாய் சொல்லச் சொல்ல, அஞ்சலியைத் தவிர அத்தனை பேர் தலையிலும் நெருப்பிடியாய் கொட்டத் தொடங்க...

அஞ்சலியின் மேலும் அந்த இரண்டு தளிர் கொடிகள் மேல் படர்ந்த பார்வைகளில் நிறம் மாறி, வெறுப்பை உமிழ ஆரம்பித்தது. ஒட்டு மொத்தமாய் அத்தனைப் பேரின் பார்வையும், தன்னை அருவருப்பாய் பார்ப்பதை அறிந்து... ஒன்றும் பேச முடியாமல் கூனிக் குறுகிப்போய்... குழந்தைகளை அழைத்துக் கொண்டு, வெளியே நடந்தாள். அவள் போவதையே இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



''கௌரி!''

''என்னப்பா?'' ரத்தினசாமியைப் பார்த்தான்.

''நல்ல வக்கீலாப் பார்த்து...'' என ஆரம்பித்து, தயக்கமாய் மனைவியைப் பார்த்துப் பின்...

''டைவர்சுக்கு ஏற்பாடு பண்ணு'' என்றார்.

# 8

*ஒருவனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல. அவனுக்கு ஏற்படும் துன்பங்களும் தோல்விகளும் ஆகும்.*

''இந்தாம்மா, இந்த மாத்திரையைப் போடு'' வண்ண வண்ணமாய் மாத்திரையை உள்ளங்கையில் ஏந்திக் கொண்டு... தண்ணீர் டம்ளரோடு நின்றிருந்தாள் அஞ்சலி.

எழ முடியாமல் தத்தளித்த சாரதா, முயற்சித்து சாய்ந்து உட்கார...

''இதையெல்லாம் போட்டுக்கிட்டு நான் இன்னும் உயிரோட இருக்கணுமா?''

''............''

''இன்னும் என்ன என்ன கண்ராவியை நான் பார்க்கணும்னு ஆண்டவன் எழுதியிருக்கான்னு தெரியலையே?''

''சும்மா புலம்பாதே. மாத்திரையைப் போடு'' நீட்டினாள்.

''புள்ளைங்க எங்கே?''

''ஏன்? எதுக்கு? நீயும் கரித்துக் கொட்டவா?''

''ஏம்மா இப்படிப் பேசுற?''

''நான் எப்படியும் பேசலை... நீ மாத்திரை போட்டுகிட்டா லாயரை நான் பார்க்கப் போயிடுவேன்.''

''வேண்டாம்மா.''

''என்ன வேண்டாம்?''

''மாப்பிள்ளை சொல்ற மாதிரி கேளு.''

''பேசாம நல்ல ஆசிரமமாய்ப் பார்த்து...''

''ஏம்மா, நீயும் ஒரு தாய்தானே? நாக்கில் நரம்பில்லைங்கறதுனால என்ன வேணா பேசிடறதா? அந்தக் குழந்தைகளோட அம்மாவும், அப்பாவும் கல்லுக்குண்டு மாதிரி உயிரோட இருக்கோம். தாத்தா, பாட்டின்னு சொந்த பந்தம் இருக்கும்போது எதுக்கு அனாதை ஆசிரமம் போகணும்?''

''எந்த ஆம்பளைக்கும் வரக்கூடாத சந்தேகம் மாப்பிள்ளைக்கு வந்திடுச்சி. அதைத் தீர்த்து, நீ வாழ வேண்டாமா?''

''வாழணும்... கண்டிப்பா வாழணும்... அதுக்கு விலையா என் குழந்தைகளைப் பறிகொடுக்க நான் தயாரா இல்லை.''

''பிடிவாதம் வேண்டாம்மா... உனக்கு நடந்த நிலைக்கு வேற ஒருத்தனாக இருந்தால் அன்னைக்கே தள்ளி வச்சிருப்பான்... மாப்பிள்ளை...''

''என்ன நடந்து போச்சு எனக்கு? நானாவா கெட்டுப் போயிட்டேன்?''

''பொண்ணுங்க சில இடத்தில் தாழ்ந்துதான் போகணும்.''

''வாயைத் திற'' திறக்க வைத்து தண்ணீர் ஊற்றி ஒரு மாத்திரையை விழுங்க வைத்தாள்.



''டைவர்ஸ் வேணாம்.''

''நான் என்னமோ வேணும் வேணுங்கற மாதிரியில்ல நீ பேசுற? டைவர்ஸ் கேட்டு இருப்பது உன் மாப்பிள்ளை... வக்கீல் நோட்டீஸ் அனுப்பி இருக்கிறதும் உன் மாப்பிள்ளை... நான் இல்லம்மா.''

''என்ன பண்ணப் போற?''

''அவர் கேட்டா... ஆச்சா... என்னால முடியாது. டைவர்ஸ் வேணும்னு அவர் கோர்ட்டுக்குப் போனா, மாட்டேன்னு நான் போறேன். விலாசம் இல்லாத விதை இல்லை. என் பிள்ளைகள். என் பிள்ளைகளோட எதிர்காலத்திற்காவது நான் ப்ரூஃப் பண்ணனும்.''

சாரதா 'லொக்கு, லொக்கு' என வேகமாக இரும... மாத்திரையையும் தண்ணீரையும் டேபிள் மேல் வைத்துவிட்டு, தாயின் நெஞ்சை நீவிவிட்டாள் அஞ்சலி.

''நீ... நீ... வாழாவெட்டியா...'' பேச முடியாமல் சாரதா மேலும் இரும.

''பேசாதம்மா... ஏற்கனவே நீ ஆரோக்கியமான ஆளு... இதுல இந்தப் பிரச்சினை வேற...'' அலுத்துக் கொண்டாள்.

''நா வேணா மாப்பிள்ளைகிட்டேயும் அவர் அப்பா அம்மா கிட்டேயும் பேசட்டுமா?''

''சிபாரிசா...'' சிரித்தாள்.

''சிரிக்காதே... சொல்லு...''

''சொல்ல என்னம்மா இருக்கு? நத்திங் அந்த மைதிலி என்னைவிட எத்தனை வயது சின்னப் பொண்ணு. அவ என்னைப் பார்த்து என்னென்ன கேள்வி கேட்டா தெரியுமா? இந்த சசிப் பய ஃபாரின்ல இருந்து லெட்டர் போட்டு இருக்கான். உங்களை நினைத்துப் பார்க்கவே சங்கடமா

இருக்குன்னு... ஒண்ணு மட்டும் நிச்சயம்மா... ஒரு பெண்ணோட பெருமை. அவளுக்கு வாய்க்கற புருஷனைப் பொருத்து தான். அவனே அவளை சந்தேகப்பட்டு விட்டுக் கொடுத் துட்டான்னா, புகுந்த வீட்டில் இருக்கும் தூசி, துரும்பு கூட தூக்கிக் கனம் பார்க்கும்.''

''குடும்பம்னா ஆயிரமும் இருக்கும்.''

''இருக்கும்மா... ஆனா என் பிரச்சினை யாருக்கும் இருக் காது.''

''......''

''நீ பேசாம நிம்மதியா இரு நல்லாத்தான் எல்லாம் நடக்கும்.''

''அந்த நம்பிக்கையில்தான் என் உசிரு ஊசலாடிக்கிட்டு இருக்கு.''

''ரொம்பப் பேசாத. இந்தா தூக்க மாத்திரையையும் போடு.''

மறுத்தவளைக் கட்டாயப்படுத்திப் போட வைத்தாள்.

''பிள்ளைங்க எங்கே?''

''பக்கத்து வீட்டுல.''

''எந்த வக்கீலம்மா பார்த்து இருக்க?''

''லாயர் மனோஜ்குமார்.''

''நல்ல திறமைசாலியா?''

''இம்.''

''பிரிஞ்சிடமாட்டிங்களே?''

''மாட்டோம்மா.''



''இந்த விஷயம் கோர்ட்டுக்குப் போனா, கன்னா, பின் னான்னு கேட்பாங்களேடா.''

''கேக்கட்டும்மா... என்னை என்ன வேணா கேட்கட்டும்.. கொச்சை கொச்சையா விமர்சனம் பண்ணட்டும். அவருக்கே இல்லாத அவமானம் எனக்கில்லைம்மா. என்னோட மான, அவமானத்தை விட, என் குழந்தைகளுக்கு நிலையான சந் தேகம் இல்லாத இன்சியல் அவசியம்மா... அதுக்காக எந்த அவமானத்தையும் நான் சந்திக்கத் தயாரா இருக்கேன்.''

அஞ்சலி மனதில் இருப்பதைக் கொட்டிக் கொண்டிருக்க, கண்களை மூடிக் கொண்டு மெல்ல நனவு நிலையை இழக்கத் தொடங்கினாள் சாரதா.

தினமும் வக்கீல் மனோஜைப் பார்க்கத் தவறுவதில்லை அஞ்சலி. இந்த விஷயம் கோர்ட் வரை போக வேண்டாம். பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று எவ்வளவோ மனோஜ் சொல்லிப் பார்த்தும் மறுத்து விட்டாள்.

''ஒரு முறைக்கு நான்கு முறை யோசிச்சிக்குங்க.. அஞ்சலி'' கேஸ் கட்டுகளைப் புரட்டியபடியே பேசினான் மனோஜ்.

''நான் மட்டும் யோசித்து என்ன ஸார் பண்றது? சங்கர் யோசிக்கலையே!''

''எனக்கென்னவோ.''

''எனக்குப் புரியாமல் இல்லை ஸார்... பட் டூ லேட்.''

''இல்லைங்க நல்லா யோசிங்க... எனக்கென்னவோ வேண் டான்னு தோணுது.''

''கோர்ட்டுக்கு நான் இழுக்கலையே.''

''அஃப்கோர்ஸ் பேசித் தீர்க்கலாமே.''

''எத்தனையோ நாள் பேசிப் பார்த்திட்டேன்.''

''இருக்கலாம். நீங்க உங்க நியாயத்தைப் பேசி இருப் பீங்க... அவர் அவர் நியாயத்தை பேசியிருப்பார். இரண்டு பக் கத்தையும் அலசி யாராவது உங்களிடம் பேசியிருக்காங் களா?''

''இல்லை'' தலையாட்டி மறுத்தாள்.

''வெல்... அந்த நபர் நானாக ஏன் இருக்கக் கூடாது?''

''தாராளமாக இருக்கலாம் ஸார்... உங்களால அந்தக் குழந்தைகளை ஐ மீன் என் குழந்தைகளை அனாதை ஆசிரமம் அனுப்புவதுதான் நல்லதுன்னு தீர்ப்புக் கொடுக்க முடியுமா?''

''அதெப்படிம்மா சொல்ல முடியும்.''

''அப்போ நீங்க அவர்கிட்டே பேசறதுல எந்தப் பயனும் இல்லை.''

''நீங்களும் பிடிவாதமா இருக்கீங்களே!''

''விடுதலை வேணும்னு காந்தியும், மத்தவங்களும் பிடி வாதமாக இருந்ததினால்தான் அது கிடைச்சிடுச்சி. நாம ஒவ் வொருவருக்கும் இன்சியல் ஈஸ் மஸ்ட். இன்னைக்கு என் குழந்தைகளுக்கு 'ஜி' இன்சியலான்னே தெரியலையே. அதுக்கு ஒரு தீர்வு சட்டப் பூர்வமா வேணும் ஸார்.''

''நானும், நீங்களும் கோர்ட் வேணான்னு முடிவு பண்ண லாம். ஆனா.. இன்னும் இரண்டு நாட்கள் கழித்து, சாட்சிக் கூண்டில் நான் நிற்கப் போவதைத் தடுக்க முடியுமா?''

''முடியும்.''

''எப்படி?''

''எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஒதுங்கிட்டா.''

''அதாவது அவங்க சொல்றதுக்கு தலையாட்டிட்டா.''



''இம்.''

''நீங்க ரொம்ப தைரியசாலி... நீதிக்காக போராடறவர்ன்னு கேள்விப்பட்டேன்...''

சத்தம் வராமல் சிரித்தான்.

''தைரியத்துக்கும், ஒரு பெண் கோர்ட்டில் அவமானப் படக் கூடாதுன்னு நினைப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

''உங்கள் வாதத் திறமையால் என் குழந்தைகளுக்கு இந்த சமூகத்தில் நல்ல அந்தஸ்தை, ஐ மீன் அங்கீகாரத்தை வாங்கிக் கொடுங்க'' பெரியதாய் ஒரு கும்பிடு போட்டு விட்டு செல்ப வளை ஒருவித பாசத்தோடும், பரிதாபத்தோடும் பார்த்தான் மனோஜ்.

**கோ**ர்ட் வளாகம்.

கௌரிசங்கரோடு ரத்தினசாமியும் வந்திருந்தார். பார்வை யாளர் பகுதியில் முதல் பென்ச்சிலேயே இருவரும் அமர்ந் திருக்க... அவர்கள் நியமித்திருந்த வக்கீல் அவர்களைத் தேடி வந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார். மனோஜோடு வந்த அஞ்சலி, அவர்கள் இருவரையும் பார்த்து அப்படியே நின்றாள். நேரில் சங்கரைப் பார்த்துக் கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் இருக்குமா? என்று யோசித்தாள். அதே எண்ணம் சங்கருக் கும் தோன்றியிருக்க வேண்டும். பார்த்தான். பார்வைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன.

''அங்க என்னடா பார்வை?'' ரத்தினசாமி கணை தொடுக்க... ஒன்றும் பேசாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''அஞ்சலி!''

''ஸார்!''

''நான் பார் கவுன்சில் வரைக்கும் போயிட்டு வரேன். நீங்க இங்கேயே வெயிட் பண்ணுங்க.''

''ஓ.கே. ஸார்.''

அமர்ந்து கொண்டாள். உள்ளம் படபடவென அடித்துக் கொண்டது. மண்டைக்குள் ஏதோ கம்பி வைத்துக் குடைந்தது. முதல் முதலாக கோர்ட் படி மிதித்ததால், கை, கால்கள் நடுக்கம் எடுத்தது. மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு, கட்டுப்படுத்த முயற்சித்தாள்.

கோர்ட் தொடங்க...

இரண்டாவது கேஸாகத்தான், இவர்கள் கேஸ் எடுக்கப் பட்டது. கௌரிசங்கரின் வக்கீல் பேசத் தொடங்கும்போதே, கால்கள் வேகமாய் நடுங்கியது.

''மை லார்ட், என் கட்சிக்காரர் கௌரிசங்கரை விசாரிக்க அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.''

''எஸ்... பர்மிசன் கிராண்டட்.''

''கௌரிசங்கர், கௌரிசங்கர், கௌரிசங்கர்.'' அழைக்கப் பட்டதுமே அஞ்சலியைப் பார்த்துக் கொண்டு சாட்சிக் கூண்டில் ஏறினான். அவனிடம் சத்தியப் பிரமாணம் வாங்கப்பட்டதும்,

''நீங்கதானே கௌரிசங்கர்.''

''ஆமாம்.''

''என்ன பண்ணுறீங்க?''

''காலேஜ் லெக்சரர்.''

''உங்களுக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் ஆகிறது?''

''நாலு வருடம்.''

''உங்க மனைவி பேர்?''



''கீதாஞ்சலி.''

''அவங்க என்ன பண்றாங்க?''

''கம்ப்யூட்டர் எஞ்ஜினியராக இருக்கா.''

''குழந்தைங்க இருக்கா?''

''..........''

''சொல்லுங்க மிஸ்டர் கௌரிசங்கர். குழந்தைங்க இருக்கா?''

''இருக்கு.''

''இரண்டு.''

''ஆணா... பெண்ணா?''

''ஆண்.''

''இப்போ நீங்க டைவர்சுக்கு அப்ளை பண்ணி இருக்கீங்க. அதுக்குக் காரணம் என்ன?''

''காரணம்'' தயங்கினான்.

''தயங்காம சொல்லுங்க.''

''கருத்து வேறுபாடு.''

''கருத்து வேறுபாடுன்னா?''

''எங்களோட உணர்வுகள் ஒத்துப் போகலை. தினமும் சண்டையும், சச்சரவோட வாழ்வதை விடத் தனித் தனியா சந்தோஷமா இருப்பது நல்லது. அதனாலதான்.''

''ஓ.கே. நீங்க போகலாம்.''

''எக்ஸ்க்யூஸ் மீ மிஸ்டர் வரதராசன்...'' என்ற மனோஜ் எழுந்து,

''ஸாரி ஃபார்த இன்ட்ரப்ஸன் மை லார்ட். சாட்சியை நானும் விசாரிக்க அனுமதி வேணும்.''

''எஸ்.''

காலரைச் சரி செய்து கொண்ட மனோஜ்.

''மிஸ்டர் கௌரிசங்கர். உங்களுக்கும் உங்க மனைவிக் கும் கருத்து வேறுபாடு மட்டும்தானா? அதுதான் உங்க விவாக ரத்துக்குக் காரணமா?''

''எஸ் ஸார்.''

''ஆனா நான் அப்படிக் கேள்விப்படலையே... நீங்கள் இருவரும் கருத்து ஒருமித்த தம்பதிகள்ன்னு கேள்விப்பட் டேன். இன்பேக்ட் இதை உங்க மனைவிதான் சொன்னாங்க.''

''இல்லை. எங்களுக்குள் ஒத்துப் போகலை.''

''ஒத்துப் போகலைன்னா எப்படி?''

''அது வந்து...'' தயங்கினான். அவன் தடுமாற்றத்தைக் கண்டு பதறிய எதிர் தரப்பு வக்கீல் அவசர அவசரமாய் எழுந்து,

''மை லார்ட், என் கட்சிக்காரரை அருமை நண்பர் குழப்பு கிறார். கருத்து ஒத்துப் போகவில்லை. உணர்வுகள் ஒத்துப் போகாதபோது எப்படி வாழ முடியும்? அதற்கு ஆயிரம் காரணங்கள், பிரச்சினைகள் இருக்கலாம்.''

''எஸ்.. எஸ்.. அந்தக் காரணத்தைத்தான் நான் கேட்கிறேன். கருத்து வேறுபாடுன்னா எதில், எப்படி? இவருக்கு இட்லி பிடிக் கும். இவரோட மனைவிக்கு தோசை பிடிக்கலாம். இதுக்காக டைவர்ஸ் கேட்டா கொடுக்க முடியுமா'' உடனே கோர்ட்டே சிரிப்பொலியில் அதிர...

சுத்தியலை மேஜை மேல் தட்டிய நீதிபதி...



''அப்ஜெக்சன் ஓவர் ரூல்'' என்றார்.

''தேங்க் யூ யுவர் ஆனர்'' இடுப்பை வளைத்து ஒரு வணக்கம் போட்ட மனோஜ்.

''சொல்லுங்க மிஸ்டர் கௌரிசங்கர். என்ன கருத்து வேறு பாடு?''

''அதெல்லாம் வெளியே சொல்ல முடியாது ஸார்.''

''சொல்ல வெட்கப்படறவர் கோர்ட்டுக்கு வந்திருக்கக் கூடாது. ஓ.கே. நான் கேட்டதை எல்லாம் இருக்கான்னு சொல் லுங்க.''

''சரி ஸார்'' சொல்லிவிட்டு தன் வக்கீலைக் கலக்கத்தோடு பார்க்க. அவர் தான் இருப்பதாகக் கண்ணிலேயே தைரியம் சொன்னார்.

''மிஸ்டர் கௌரிசங்கர், உங்க மனைவி எப்படி? கோபப் படுவாங்களா? சாதுவா?''

''கோபப்படமாட்டா.''

''ம்கூம்... படித்த வேலையில் இருக்கும் திமிர்.''

''இல்லை.''

''உங்கப்பா, அம்மாவை மதிக்காம எடுத்தெறிந்து பேசற வங்களா?''

''இல்லை.''

''உங்க தம்பி, தங்கைங்ககிட்ட...''

''நல்லவளாகத்தான் இருந்தா.''

''இதில் எல்லாம் எந்தப் பிரச்சினையும் இல்லை... ஒரு வேளை உங்க மனைவியோட நடத்தை சரியில்லையா?''

''ஸார்.''

''சொல்லுங்க... பதட்டப்படாதீங்க.''

''அவ அப்படிப்பட்டவ இல்லை.''

''சரி.. செக்ஸ் லைஃபில் ஏதாவது?''

''ஐய்யோ இல்லை ஸார்.''

''இதெல்லாம் இல்லைன்னா, பின்ன எதுக்கு இந்த டைவர்ஸ்?''

''.........'' எதுவும் பேசாமல் தலையைக் குனிந்தான்.

அவன் மௌனத்தைப் பார்த்து...

''மை லார்ட்... ப்ளீஸ் நோட் திஸ் பொசிஸன்'' என்றான்.

''சொல்லுங்க... டைவர்சுக்கு முக்கியமான காரணம்?'' கொஞ்சம் வேகமாகக் கேட்டான். சட்டென எழுந்த லாயர் வரதராசன்.

''மை லார்ட்! என் கட்சிக்காரரை எதிர்தரப்பு நண்பர் மிரட்டிப் பார்க்கிறார். டைவர்சுக்கான காரணத்தைக் குறிப்பிட்டிருக்கின்றோம்.''

''அதான் என்னன்னு கேட்கிறேன்.''

''நான் சொல்றேன்.''

''ஏன் உங்க கிளையண்டிற்கு பேச வராதா?'' கிண்டலாய் மனோஜ் கேட்க.. வரதராஜன் தன் இருக்கையில் அமர்ந்து கொண்டார். பிறகு கௌரிசங்கர் புறம் திரும்பிய மனோஜ்.

''சொல்லுங்க ஸார், என்ன மோட்டீவ்?''

''அந்தக் குழந்தைகள் என் குழந்தைகள் இல்லை.''



அவன் பதில் கேட்டு, கோர்ட்டே ஸ்தம்பித்தது. நீதிபதி ஒருமுறை எழுந்து உட்கார்ந்தார். பார்வையாளர் கூட்டத்தில் இருந்த இரண்டு பத்திரிகைக்காரர்கள் அவசர அவசரமாய்க் குறிப்பெடுத்தார்கள்.

''அப்போ உங்க மனைவி ஒழுக்கம் கெட்டவங்களா?''

''இல்லை ஸார். அந்தக் குழந்தைகளுக்கு நான் தகப்பன் இல்லை.''

''அப்ப யாரு?''

''சந்திரகாந்த்.''

''யாரு அந்த சந்திரகாந்த்?''

நடந்த அத்தனையையும் அன்று பெற்றவர்களிடம் ஒப்பித்தது போல் அப்போது மறுமுறை ரிகர்சல் பார்த்தான். கடைசியில்...

''மை லாட்... என் மனைவி மேல் எனக்கு கோபமில்லை. அந்தக் குழந்தைகள் என்னுடைய குழந்தைகள் அல்ல. எனக்கு வேண்டாம் என்ற குழந்தைகள்... அவளுக்கு அவசியத் தேவையாக இருக்கும்போது.. எப்படி இருவருக்கும் ஒத்து வரும்?''

அதுவரை அமைதியாய் இருந்த வரதராசன் எழுந்து...

''மை லாட்... என் கட்சிக்காரரின் வாக்குமூலத்தில் இருந்து... அவர் எப்படிப்பட்ட பெருந்தன்மையான சிறந்த மனிதர் என்பது தெள்ளத் தெளிவாகிறது. இதற்கு மேல் ஒரு மனிதன் எப்படித் தியாகம் செய்ய முடியும்? தன்னுடைய குழந்தைகள் இல்லை என்ற சந்தேகம் வந்த பின்பு எப்படி நிம்மதியாக குடும்பம் நடத்த முடியும்? அதனால் அவரின் நியாயமான வேண்டுகோளுக்கு இந்தக் கோர்ட் நல்லதொரு

தீர்ப்பைத் தர வேண்டும் என்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.''

''மிஸ்டர் மனோஜ் சாட்சியை இன்னும் ஏதாவது விசாரிக்க விரும்புறீங்களா?'' ஜட்ஜ் கேட்டதும்,

''நோ யுவர் ஆனர்'' என்று அமராமல் தொடர்ந்தான்.

''மிலாட்... இந்த கேஸ் எந்தளவு குழந்தைத் தனமானது. குழப்பமானது என்பது மிஸ்டர் கௌரிசங்கர் கொடுத்த வாக்குமூலமே தெளிவுபடுத்துகிறது. தன் குழந்தை இல்லை என்று சந்தேகப்படுவது போல்.. அது அவரோட குழந்தைகளாகவும் இருக்க வாய்ப்பிருக்கிறது. அதுவே உண்மையாகவும் இருந்தால் அது எவ்வளவு பெரிய பழிச்சொல். ஆறு விரல்கள் என்பது ஒரு சாதாரண விஷயம். அதுதான் காரணம்னா... கேட்கவே அபத்தமாக இருக்கு... மனிதனை சிருஷ்டித்த கடவுள் ஒருவரைப் போலவே இன்னொருத்தரை படைப்பது இல்லை. படைத்தால் குழப்பமும் கூச்சலும் தான் மிஞ்சும். நம்பிக்கை என்ற அச்சாணியின் அடிப்படையில் தான் இந்த பூமி சுத்திகிட்டு இருக்கு. குறிப்பா கணவன் மனைவி இடையில் இந்த நம்பிக்கை வேண்டும். மனைவி மேல் உள்ள நம்பிக்கைதான்.. பிறக்கப் போற குழந்தை தன்னோடது என்று நம்ப முடியும்... மிஸஸ் கீதாஞ்சலி.. மிஸ்டர் சந்திரகாந்த் இவங்களும் விசாரிக்கப்பட்ட பின்புதான் முடிவு எடுக்க வேண்டும். அது மட்டும் அல்ல... விஞ்ஞான யுகத்தில்... ப்ளட் டெஸ்ட்... இன்னும் சில நுணுக்கமான பரிசோதனைக்கு உட்படுத்தினால்... குழந்தைகள் யாருடையது என்று காண இயலும்.''

''இது சாத்தியமா?''

''எஸ். மிலாட் சாத்தியம் என்று என் மருத்துவ நண்பர் ஒருவர் இன்று காலை கூறினார்.''



அதற்கு பின்பு கீதாஞ்சலி சாட்சிக் கூண்டில் ஏற்றப்பட்டாள். வரதராசனும்... மனோஜும் மாறி மாறி கேட்ட கேள்விகளுக்கு... அத்தனை பேர் முன்னிலையிலும் செத்து செத்து பதிலளித்தாள். இறுதியில்... ஜட்ஜ்.

''இப்படி ஒரு விநோதமான வழக்கை இந்த நீதிமன்றம் இதுவரை சந்தித்தது இல்லை. இந்த நீதிமன்றம் மட்டும் அல்ல. எந்த நீதிமன்றமும் சந்திக்கவில்லை. பிள்ளைகள் தன்னுடையது இல்லை என கணவனும்... அவருடையதுதான் என மனைவியும் எதிர் எதிரே சாட்சிக் கூண்டுகளில்... தீர்ப்பு சொல்ல முடியாத வழக்கு.... இருப்பினும் ப்ராஸிகியூஷன் தரப்பு வக்கீலின் பரிந்துரைப்படி திரு. கௌரி சங்கர் தன்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுமாறும்.. மூன்றாவது நபரான திரு. சந்திரகாந்தை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த... எதிர்தரப்பு வக்கீல் உடனே ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டு வரும் 26ந் தேதிக்கு இவ் வழக்கை ஒத்தி வைத்து கோர்ட் கலைகிறது.'' மூச்சு விடாமல் எழுதி வைத்ததைப் படித்துவிட்டு... எழுந்து கொண்டார். அன்று மாலை நாளிதழிலேயே இந்த வழக்கு கொட்டை எழுத்தில் கட்டம் கட்டி பிரசுரமாகி இருந்தது. ஒரு எடிசனிலேயே செய்திகளின் கதாநாயகி ஆகிப்போனாள் கீதாஞ்சலி.

''தாலி கொடுத்தவன் கணவன்... பிள்ளை கொடுத்தவன் காதலன்'' என ஒரு பத்திரிகை தலைப்பு கொடுத்து தங்களின் கற்பனை வளத்தை செய்தியில் காட்ட... படித்த அதிர்ச்சி சாரதாவின் ஒட்டிக் கொண்டிருந்த குற்றுயிரை எடுத்துக் கொண்டு பறக்க... தாயையும் இழந்து தனிமரமாகிப் போனாள். புகுந்த வீட்டில் இருந்து யாரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. பிரச்சினையையும்... இழப்பையும் சந்திக்க முடியாமல் துவண்டு போனாள். நீதிபதி வைத்த 26 நெருங்க... முதல் நாள் விடியற்காலை காலிங் பெல் அலற,

தன்னை இறுக்கிக் கொண்டு படுத்திருக்கும் பிள்ளைகளின் தூக்கம் கலையாமல் புரட்டி படுக்க வைத்து... உடலின் எந்தப் பகுதியும் வெளியே தெரியாமல்... போர்த்திவிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு... தொங்கிக் கொண்டு இருந்த சடையை தூக்கிக் கொண்டையாக்கிவிட்டு... கதவைத் திறக்க... ஐம்பதுக்கு... நாற்பத்தி ஐந்துக்கு மேலும் மதிக்கத் தக்க ஆணும் பெண்ணும் நின்றிருக்க...

''நீங்க!'' இதுவரை பார்த்ததில்லை என்பதை அவள் கேட்ட ''நீங்க'' என்ற வார்த்தையே தாங்கி வெளி வந்தது.

''சந்திரகாந்தோட பேரண்ட்ஸ்.''

அதைக் கேட்டதும் கொஞ்சம் நஞ்சம் ஒட்டியிருந்த தூக்கம்... குறிப்பிட்டது போல் அலறி அடித்துக் கொண்டு ஓடியது.

# 9

*அமுதத்தை விஷமாக எண்ணினால்...*
*நாளடைவில் விஷமாகவே மாறிப்போய்விடுகிறது.*

**27**-ந்தேதி கோர்ட் சேம்பரில் ஏகப்பட்ட கூட்டம். பத்திரிகைக்காரர்கள் மட்டும் அல்ல. பார்வையாளர்கள் மத்தியிலும் ஒருவித எதிர்பார்ப்பு... பரபரப்பு... சேம்பர் முழுவதும் மனிதத் தலைகள்... நீதிபதி தன் ஆசனத்தில் வந்து அமர்ந்ததுமே... குண்டூசி விழுந்தால் கூட கேட்கும் அளவிற்கு நிசப்தம் நிலவியது.

கோர்ட் அனுமதிக்க... மனோஜ் எழுந்தான்.



''மை லாட்... தீர்ப்புக்கு முன்னரும் வாதத்திற்கு முன்னரும்... ஒரு வருத்தமான செய்தியை கோர்ட்டாருக்குக் கூற கடமைப்பட்டு இருக்கின்றேன்.''

''எஸ் புரசீட்.''

''மூன்றாவது சாட்சியாக கோர்ட் கேட்டிருந்த திரு. சந்திரகாந்த் லேட். சந்திரகாந்தாகி விட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு விபத்தில் மரணமடைந்து விட்டார்.''

அதைக் கேட்டதும் கௌரி சங்கர் அதிர்ச்சி அடைந்தான்.

''சந்திரகாந்திற்கு பதிலாக அவரின் பெற்றோர் வந்திருக்கின்றனர். வழக்கின் முடிவில் குழந்தைகள் கௌரிசங்கரின் ரத்தத்தோடு சம்மந்தப்படவில்லை என்றால் அந்த குழந்தைகளை தங்களிடம் ஒப்படைக்கும்படியும்... தங்களின் மகன் மறைவிற்கு இழப்பிற்கு... குழந்தைகளை வாரிசாக்கிக் கொள்ளவும் விரும்புகின்றார்கள்.''

''தாயோட அனுமதி இல்லாமல்.''

''நோ மிலாட்... கௌரிசங்கரின் குழந்தைகள் இல்லை என ஆனால்... அவைகள் சந்திரகாந்தின் குழந்தைகள்தான். அப்படி பார்க்கும்போது தங்களின் பேரக் குழந்தைகளை சட்டப்படி பெற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகளுக்கும் உரிமையான பாதுகாப்பான இடம்... கௌரிசங்கரும் - கீதாஞ்சலியும் பிரிய வேண்டிய அவசியம் இல்லை'' மனோஜ் எப்படியாவது அவளை கௌரியோடு இணைத்து வைத்து விட வேண்டும் என்று விரும்ப... பேசிக் கொண்டே போனான்.

அன்றும் சாட்சிக் கூண்டில்... எதிர் எதிரே இவரும் ஏற்றப்பட்டார்கள். குழந்தைகள் இருவரும் சந்திரகாந்தின் பெற்றோர் மடியில் பார்வையாளர் கூட்டத்தில் அமர்ந்திருந்தார்கள்.

''மிஸ்டர் கௌரிசங்கர்... மெடிக்கல் ரிப்போர்ட் உங்க பிள்ளை இல்லை என நிருபித்தால் குழந்தைகள் சந்திரகாந்

தோட பேரன்சுகிட்ட ஒப்படைக்கவும்... கீதாஞ்சலியை திரும்ப வும் ஏற்றுக் கொள்ள முடியுமா?''

''கண்டிப்பா.''

''இம்'' மோவாயைத் தேய்த்த மனோஜ்

''அவங்க உங்க குழந்தைங்கதான்னு நிரூபிக்கப்பட்டால்...''

''அவங்க என் குழந்தைங்கன்னா ஏன் ஸார் விலகப் போறேன்.''

''வெல்...'' என்றபடி கையோடு கொண்டு வந்திருந்த கௌரிசங்கரின் மெடிக்கல் ரிப்போர்ட்டை நீதிபதிக்கு முன்பு சமர்ப்பித்துவிட்டு...

''மிலாட்... டாக்டர் வினோத்தை விசாரிக்க அனுமதி கேட்கிறேன்.''

''பர்மிஸன் கிராண்டட்.''

டாக்டர் வினோத் அழைக்கப்பட்டு... கீதை புத்தகத்தில் சத்தியம் வாங்கப்பட்டது.

''டாக்டர்... மிஸ்டர். கௌரி சங்கர் உங்களிடம்தானே செக்கப்பிற்கு வந்தார்.''

''எஸ்...''

''பண்ணிட்டீங்களா?''

''ம்... இப்போ கொடுத்த ரிப்போர்ட் அதான்.''

''உங்க ரிப்போர்ட்டை பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா?''

''வித் ப்ளஷர்... மிஸ்டர் கௌரி சங்கரோட ப்ளட் குரூப் போட... குழந்தைகளோட ப்ளட் குரூப் ஹண்ட்ரட் பர்சன்ட் மேட்சாகுது... அது மட்டும் இல்லை...'' என மருத்துவ நியா யங்களை... பரிசோதனைகளைப் புட்டு புட்டு வைக்க...

''ஸோ... குழந்தைங்க மிஸ்டர் கௌரி சங்கரோடதுங்கறீங்க.''



''எஸ்... டெப்னட்டா... அதைத்தான் ரிப்போர்ட்டிலும் சொல்லியிருக்கேன்.''

''ஆறு விரல் என்பது.''

''வெரி சில்லி மேட்டர்... அப்துல்காதருக்கும்... அய்யப் பன் கோவிலுக்கும் சம்மந்தம் இருக்குமா?... அது மாதிரி யான வெரி வெரி அப்நார்மல் மேட்டர்.''

''தேங்க் யூ... நீங்க போகலாம்.''

டாக்டர் வினோத்... நீதிபதியை பார்த்து ஒரு வணக்கம் போட்டுவிட்டு நகர... கௌரி சங்கர் பக்கம் திரும்பிய மனோஜ்...

''இப்ப என்ன சொல்றீங்க...''

''சொல்ல என்ன ஸார் இருக்கு... என் மனைவியையும்... என் குழந்தையையும் வீட்டுக்குக் கூட்டிச் செல்லத் தயாராக இருக்கிறேன்'' என்றான் சந்தோஷமாய்... அதே நேரம் அஞ் சலியையும் குழந்தைகளையும் பார்வையாளர் மத்தியில் ஆர்வமாய் தேடினான்.

நீதிபதி கண்ணாடியை போட்டுக் கொண்டு தீர்ப்பு எழுதத் தொடங்க... கீதாஞ்சலி எழுந்து வந்து...

''எக்ஸ்க்யூஸ்மி யுவர் ஆனர்.''

நிமிர்ந்து பார்த்தார்.

''நான் கொஞ்சம் பேசணும்.''

''இனிமே என்னம்மா இருக்கு... டைவர்ஸ் கேட்டவரே... கேஸை வாபஸ் வாங்கிக்கிறதா வாக்குமூலம் கொடுத்து இருக் காரே.''

''அதைப்பற்றி இல்லை. என் மனதில் இருக்கும் சில விஷ யங்களை சொல்ல ஆசைப்படறேன்.''

''சொல்றதை சாட்சிக் கூண்டில் ஏறி சொல்லும்மா.''

''தேங்க்யூ யுவர் ஆனர்'' என கூறிவிட்டு சாட்சி கூண்டின் பக்கம் திரும்பியவளை... கண்களால் தடுத்து...

''அஞ்சலி! நீ என் சகோதரி மாதிரி... உன் மனசு எந்தளவு வேதனைப்பட்டு இருக்கும்னு எனக்குத் தெரியும். இப்போ நீ என்ன பேசப் போறேங்கறதும் ஐ நோ. லைப்புங்கறதே சேக்ரிபைஸ் பண்ணிக்கறதுதான். ப்ளீஸ் கன்ட்ரோல் யுவர் செல்ப்... நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழணும்...'' காதில் வாங்கிக் கொண்டு சிரித்தபடி... சாட்சி கூண்டில் ஏறி நின்றாள்.

''மை. லாட் முதலில், பேச எனக்கு அனுமதி கொடுத்த உங்களுக்கு என் நன்றிகள். நான் பேசப் போகும் வார்த்தைகள் யாரையாவது புண்படுத்தினால்... அதற்காக இப்போதே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். யாரையும் குத்திக் காட்டவோ... நோகடிக்கவோ எனக்கு விருப்பம் இல்லை. மனதை அரித்துக் கொண்டு இருக்கிற விசயத்தை சொல்ல ஆசைப் படறேன். அவ்வளவு தான்.

''எதிர்ல நிற்பவரை என் கணவர்ன்னு சொல்வதைவிட... என் குழந்தைகளோட அப்பான்னே சொல்ல ஆசைப்படறேன். இவர் இந்த சாட்சிக் கூண்டில் ஏறி சொன்னது அத்தனையும் உண்மை நான் மறுக்கலை. சந்திரகாந்திடம் நான் மாட்டிக் கொண்டது இவர் அதைக் கண்டு கொள்ளாமல் ஆறுதல் சொன்னது... ஆறு விரலைப் பார்த்துவிட்டு இவங்க என் குழந்தைகள் இல்லை. ஆசிரமத்தில் சேர்த்திட்டு வந்தால்தான் நீ என் மனைவின்னது நடந்த அத்தனையும் உண்மைதான்.

''இவங்க தன் குழந்தைகள்தான்னு தெரிஞ்சதும்... ஏத்துக்க தயாராக இருக்கிற இவரோட வாழ எனக்கு விருப்பம் இல்ல.''

கௌரி சங்கர் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.



''எந்தக் குழந்தைகளைக் காரணம் காட்டி இவர் என்னிடம் டைவர்ஸ் கேட்டாரோ... அதே குழந்தைகளோட நலனுக்காகத்தான்... இவர்கிட்டே இருந்து எனக்கு டைவர்ஸ் வாங்கிக் கொடுங்கன்னு கேட்டுக்கறேன். இவரைப் பற்றி நான் போட்டு இருந்த கணக்கெல்லாமே தப்பு... மன்னிப்பது போல் நடிச்சிருக்கார். அவரோட சுயநலம், என்னை இழக்க விரும்பல... அதனால பெருந்தன்மையாய் நடந்து கொள்வது போல் நடித்து... ரொம்பவே சக்ஸஸ்புல்லா நடிச்சிருக்கார். ஒரு பெண்ணைக் கஷ்டப்படுத்தணும்னா அடிக்கணும்... உதைக்கணும்னு இல்லை. அவளோட உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்காம... அதைக் கொன்னுட்டாப் போதும்... கூனி குறுகிப் போய்டுவா.''

''இன்னொருத்தன் தொட்ட பொண்டாட்டிய ஏத்துக்க முடிஞ்ச மனசால... மூணு வருடம் தோள்லேயும் மார்லேயும் போட்டு வளர்த்த... அந்தக் கள்ளம் கபடம் இல்லாத பிள்ளைகளை ஏத்துக்க முடியாது? அன்னைக்கு அவர் காட்டின அன்பும் ஆதரவும் உண்மையானதா இருந்திருந்தா... இப்படி ஒரு விசயத்தையே என்னிடம் சொல்ல யோசித்து இருப்பார். நான் வருத்தப்படுவேனேன்னு.... ஆனா பிள்ளைகளை ஒதுக்கியதும்... அடித்ததும்... இன்னைக்கு வரை எட்டிப் பார்க்காததும் எந்த விதத்தில் நியாயம்?

''அனாதை ஆசிரமத்திற்கு நாங்க படிக்கப் போறமா மம்மீ''ன்னு என் பிள்ளை என்னைக் கேட்டபோது... நான் எப்படித் துடிச்சிருப்பேன்... செத்துப் பிழைச்சேன் ஸார்... செத்துப் பிழைச்சேன். அனாதைன்னா என்னன்னே தெரியாத அவங்களை அங்கே கொண்டு போய் விடுன்னபோது... அவரை மனிதனாகவே என்னால பார்க்க முடியல.

''நான் மட்டும் அன்னைக்கு நடந்த இன்சிடென்டை சொல்லலைன்னா... இவருக்கு எப்படித் தெரியும்? மறைக்கணும்னு நினைத்து இருந்தால் ரொம்ப ஈஸியா மறைச்சிருப்பேனே... இந்த கூண்டில் நான் நின்னுகிட்டு இருக்கிறது... என் நேர்மைக்கு கிடைத்த பரிசு ஸார்...

''உண்மையைப் பேசுங்க... உண்மையைப் பேசுங்கன்னு எல்லாரும் சொல்றீங்க... சொன்னதோட விளைவு... இதுதான்.. சந்திரகாந்த் என் நெஞ்சில குத்தியவர்... இவர் தந்திரமா மறைந்து இருந்து முதுகில் குத்தியவர். சந்திரகாந்த் என்னை பலவந்தப்படுத்தியது... நாலைந்து நிமிடமா... நாற்பது விநாடியான்னு கூட எனக்குத் தெரியாது.

''ஆனா இன்னைக்கு என்னைக் கூண்டில் நிற்க வைத்து... எல்லாப் பத்திரிகையிலும் என்னை நார் நாரா கிழிக்க வச்சிருக்கார்... எத்தனைபேர் எத்தனையோ விதமா எழுதி இருக்காங்க. ரோட்டில் என்னால நிமிர்ந்து போக முடியலை... நாளைக்கு என் கம்பெனி ஸ்டாப்ஸை எப்படிப் பார்ப்பேன்? பத்திரிகைகள் என்னை விபச்சாரின்னு முத்திரை மட்டும்தான் குத்தாம இருக்கு...

''எப்போ என்னைப் பற்றியோ... என் உணர்வுகள் பாதிக்கப்படுவதைப் பற்றியோ கொஞ்சம்கூட யோசிக்காம... விலை பேசி வித்தவர்கூட... அவரோட குடும்பத்தார் முன்னிலையில்... மட்டம் தட்டிப் பேசி... இவர் என்னவோ தாமரை போலவும்... நான் என்னவோ சாக்கடையில் நெளியும் புழு மாதிரியும் எண்ணி விட்டுக் கொடுத்துப் பேசினாரோ... அப்போவே எனக்குள்ள இருந்த பந்தங்கற நூல் பட்டுன்னு அறுந்து போச்சு.

''ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் துக்கத்தில் ஒன்னா சேருவாங்கன்னு சொல்லுவாங்க... இவங்க.. என் தாய் இறந்த



போது வந்து தலையைக் கூட காட்டலை. பந்தம்.. உறவுங்கறதை பற்றி நான் பார்த்தது வேற... இப்போ நடந்துகிட்டு இருப்பது வேற... நடந்த அத்தனையும் என்னால் மறக்கவும் முடியாது... மன்னிக்கவும் முடியாது. பொய்யான ஒரு வாழ்க்கை வாழ எனக்கு விருப்பம் இல்லை. என் குழந்தைகள் மேல் இன்சியலைத் தவிர எந்த உரிமையும் இவருக்கு கிடையாது. நான் கோர்ட்டுக்கு வந்தா அசிங்கப்படுவேன்னு தெரியும்... தெரிஞ்சும் நான் வந்தது... என் பிள்ளைகளோட பிறப்பு அசிங்கப்படக் கூடாது.

''ப்ளீஸ் ஸார்... எங்க பிரச்சினையைத் தீர்த்துடுங்க... வேண்டாம்... இவர் மேல் பட்ட காற்றுக்கூட எங்க மேலே பட வேண்டாம். எங்க மேலே பட வேண்டாம்'' என கதறத் துவங்கினாள். சிறிது நேர அமைதிக்குப் பின்பு.

ஜட்ஜ் பேசத் துவங்கினார்.

''இ.பி.கோ... இ.பு.கோ... என்று எந்த சட்டத்திற்குள்ளும் சிக்காத வழக்கு... ஒரு தாய்மை பட்ட அவமானம்... அந்தப் பெண்ணின் உணர்வுகளை காயமாக்க.. இந்த நீதிமன்றமும் பங்கெடுத்து இருந்தால் அதற்காக இந்த நீதிமன்றம் வருத்தம் அடைகிறது. விவாகரத்து என்பது அந்தப் பெண்ணின் தனிப்பட்ட உரிமை ரோஹித்... ராகுல் என்ற இரண்டு குழந்தைகளுக்கும் தந்தை... கௌரி சங்கர்தான் என்று இக்கோர்ட் தீர்ப்பளிக்கிறது. இருவருமே விவாகரத்திற்கு சம்மதித்தால்... குழந்தைகள் மேஜராகும் வரை தாயிடமே இருக்க வேண்டும். இது அந்தத் தாய்க்கு ஏற்பட்ட அவமானத்தின் பிரதிபலிப்பு. குழந்தைகள் மேஜராகி... தன்னிச்சையாக முடிவெடுக்கும் போது... பெற்றோர் இருவரில் யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம். இருவரும் ஒன்றாய் வாழ விரும்பினால்... அதைப் பார்த்து இந்த நீதிமன்றம் மகிழ்ச்சி

கொள்ளும். இருப்பினும் எக்காரணம் கொண்டும் எந்த ஆண் மகனும்... தாய்மையைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்றும்... அப்படி நடந்து கொண்டால் கண்டிக்கத்தக்க குற்றமாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் இந்த நீதிமன்றம் எச்சரிக்கிறது.

''அது மட்டும் அல்லாமல் முடிவான விவாகரத்து தீர்ப்பிற்காக... இருவருக்கும் இரண்டு மாத கால அவகாசம் கொடுத்து... இந்த வழக்கு முன்னறிவிப்பு தேதி இன்றி ஒத்தி வைக்கப்படுகிறது.''

படித்து முடித்து எழுந்து கொண்டார்.

இரண்டு கைகளிலும் இரண்டு சிங்கக் குட்டிகளையும் பிடித்துக் கொண்டு... நீதிமன்றப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள்.

''அஞ்சலி.''

திரும்பிப் பார்த்தாள். கௌரி சங்கர் நின்று கொண்டிருந்தான்.

''ப்ளீஸ்.''

''எதுக்கு.''

''என்னை மன்னிச்சிடு.''

''நினைச்சி நினைச்சிப் பேசற பழக்கம் எனக்கில்லை.''

''மன்னிக்கக் கூடாதா?''

''நான் தெய்வம் இல்லை. என் வாழ்க்கைக்கு ஒரு பிடிப்பு... லட்சியம்.. எல்லாம் என் குழந்தைகள் தான். இப்ப மட்டும் இல்லை இவர்கள் பெரியவர்கள் ஆனதும்.. இந்தக் கேஸ் பற்றி வந்த அத்தனை பத்திரிகையையும் தூக்கிப் போட்டேன்னா... திரும்பிக்கூடப் பார்க்க மாட்டானுங்க... ஒரு பெண்ணிற்கு



ஆண் துணை அவசியம்... அது புருஷனா இருக்கணுங்கற அவசியம் இல்லை... பிள்ளையாவும் இருக்கலாம்... உங்களைப் பார்க்கவே எனக்கு வயிற்றை குமட்டுது... இன்னும் இரண்டு மாதத்தில் சட்டப்படி பிரியப் போகிறோம். வெயிட் அன் சீ'' கூறிவிட்டு விடுவிடு என்று நடந்தாள்.

அவள் போவதையே பரிதாபமாய் பார்த்தான். வேறு என்ன அவனால் செய்ய முடியும். நடை தள்ளாட சோர்வாய் அவனும் எதிர்த் திசையில் நடந்தான்.

அன்று இரவு... அஞ்சலி வீட்டு காலிங் பெல் வேகமாய் அலறியது.

கதவைத் திறந்தாள்.

சந்திரகாந்தின் பெற்றோர், புரியாமல் பார்த்தாள்.

''உள்ளே கூப்பிட மாட்டியாம்மா?''

''வாங்க.''

உள்ளே வந்து அமர்ந்தார்கள்.

''அம்மாடி... புள்ளை போனாலும்... பேரப் பிள்ளைகளாவது கிடைக்காதா என்ற நப்பாசையில் வந்தோம்... ஆனா ஒரு மகளைத் தத்தெடுக்க ஆசைப்படறோம்மா... உன்னை என் மகளாக்கிக்க ஆசைப்படறோம். உனக்குத் தாயில்லை... உறவில்லை. எங்களுக்கும் யாருமில்லை. உனக்கு துணையா நாங்களும் எனக்குத் துணையா நீங்களும் ஏன் இருக்கக் கூடாது?

''சட்டப்பூர்வமா உன்னை மகளாவும்... இந்த தெய்வக் குழந்தைகளைப் பேரப் பிள்ளையாகவும் ஆக்கிக் கொள்கிறோம்.''

''.........''

''சம்மதம்னு சொல்லுதாயி.''

''சாப்பிட்டீங்களாப்பா...'' என்றாள் அஞ்சலி.

சில விநாடி கழித்துத்தான் அவள் போட்ட அப்பாவிற்கு பொருள் புரிந்தது. அஞ்சலியின் கையை அந்த வயதான வர்கள் இறுக்கிப் பிடித்துக் கொள்ள... இருட்டு அவள் வாழ் வில் விலக ஆரம்பித்தது.

# காதல் தந்த பரிசு

## 1

இனியவளே!

இதயம் வலிக்காமல்

எப்படிச் சொன்னாய்?

எட்டிப் போ என்று..

அந்த

மரண வார்த்தையைக் கேட்டதும்

என் செவி நரம்புகள்

சேதமடைந்து விட்டதே!..

இரவு 9.30.

மார்கழி மாதம் என்பதால் இரவு அப்படி ஒரு கும்மிருட்டை தன் மேல் அப்பிக் கொண்டு நின்றது. அந்த நேரத்திலேயே இலைகள் நனைந்து நீராய் சொட்டுமளவிற்கு பனி. அந்தப் பனியிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மனிதச் சத்தம். காதுகளைக் கூசச் செய்யும் அளவிற்கு செருப்புச் சத்தங்கள். ஏதோ ஒரு மூலையில் ஆந்தையின் அலறல். இந்த நேரத்தில் அந்த ஊர் கிராமமா? நகரமா? என்று புரியவில்லை. இருக்கும் சூழ்நிலைகளைப் பார்த்தால் இரண்டிலும் சேராத இரண்டும் கெட்டானாகத்தான் இருக்க வேண்டும். அந்த நேரத்தில் அசுர அலறலோடு ஒரு ரயில் வண்டி புறப்பட்டுப் போகும் சத்தம். அதனால் இந்த ஊரில் ரயில்வே ஸ்டேசனும் இருக்க வேண்டும்.

பேச்சு சத்தங்கள் குறைந்து செருப்பு ஒலிகள் தேய்ந்து போய்... எல்லா வீட்டிலும் விடி விளக்கை தவிர மற்ற விளக்கு கள் பட்டென தங்களை இருளாக்கிக் கொள்ள... அந்த ஒரு வீட்டில் மட்டும் வாசல் கதவு திறந்து இருக்க.. பளீர் என வெளிச் சம் வீதியில் வந்து விழுந்து கிடந்தது. எட்டி உள்ளே பார்த்தால் நடுத்தர வசதியுள்ள வீடு. பழங்காலத்து ஓட்டு வீடு. ஹாலில் இரண்டு கயிற்றுக் கட்டில் தலையணை போர்வையோடு தயாராய் இருந்தது. ஆனால் ஆள்கள் யாரையும் காணோம்.

ஹாலைத் தாண்டிப் பார்த்தால் இரண்டு பக்கமும் இரண்டு அறைகள். தாழிடப்பட்டு இருந்தன. அதையும் தாண்டிப் போனால்.. சிமெண்ட் அட்டையில் இறக்கப்பட்ட தாழ்வாரம். நான்கு பக்கமும் சுவர் எடுக்கப்பட்டு... சமையல் அறையாக இருந்தது. அதற்கு எதிர்த்தார் போல் குட்டி குட்டியாய் இரண்டு தனித்தனி கட்டிடங்கள் பாத்ரூம், லெட்ரினாய் இருக்க வேண்டும்.

சமையல் அறையில் அந்த நான்கு பேரும்.. எதிரும் புதிரு மாய் அமர்ந்து இருந்தார்கள். கை வைத்த பனியன்.. நூல்



வேஷ்டி.. காது ஓரங்களில் முன் நெற்றியிலும் நரைகளோடு ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர். அவருக்கு இடது புறம்... நூல் சேலை... கலைந்த கூந்தல்... கைகளில் ரப்பர் வளையல்.. காதுகளைத் தவிர தங்கம் பார்க்காத உடம்பு.. 45 வயது பெண்மணி.. அவளுக்கு இடது பக்கம்... அரக்கு கலர் நைட்டியில் இருபத்தைந்து வயது பெண் குத்துக் காலிட்டு தலையைக் குனிந்தபடி அமர்ந்து இருந்தாள். அவளுக்கு இடது பக்கம் அவளைப் பார்த்தபடியே இளைஞன் ஒருவன் அரும்பு மீசையோடும் வெற்று மார்போடும் கட்டம் போட்ட கைலி ஒன்றை மடித்துக் கட்டி இருந்தான்.

இவர்கள் நான்கு பேருக்கும் நடுவில் நான்கு தட்டுக்கள்.. தண்ணீர் நிரம்பிய டம்ளர்கள். ஒரு கிண்ணத்தில் சாதம்.. ஒரு கிண்ணத்தில் சாம்பார் என்று... சிறியதாய் வேறு இரண்டு கிண்ணங்கள் இருந்தன. ஒரு தட்டில் அப்பளம் பொரித்து வைக்கப்பட்டு இருந்தன. ஆனால் இதை நான்கு பேருமே கண்டு கொள்ளாமல்.. அவரவர் ஒவ்வொரு சிந்தனையில் இருந்தனர்.

அங்கு நிலவிய மயான அமைதியை அந்த இளைஞன் தான் கலைத்தான். மெல்ல அந்தப் பெண்ணின் அருகில் நெருங்கி.. அவள் முழங்காலில் புதைந்திருந்த முகத்தை தாடையில் கை கொடுத்து தூக்கினான். நிமிர்ந்தவள் விழி களை விரித்து என்ன என்பது போல் பார்த்தாள்.

''சரீ... சாப்புடுக்கா'' என்றான்.

''..........''

''இப்படி எல்லாரும் பேசாம இருந்தா எப்படி?''

''இப்போ என்னடா பண்ணனுங்கற?'' அந்த மனிதர் அவன் பக்கம் திரும்பி வெடித்தார்.

''சாப்பிடுங்கன்னு சொல்றேன். அவ்வளவுதான்.''

''ஒருவேளை சாப்பிடலன்னா... செத்துட மாட்டோம்'' மெல்ல வாய் திறந்தாள் அந்தப் பெண். அவள் பேசிய வார்த்தை களுக்கும், குரலுக்கும் சம்பந்தம் இல்லை. வார்த்தைகள் கோபத்தைக் கொடுத்ததால், குரல் புல்லாங்குழல் நுழைந்து வெளிவந்த காற்றால் செவிகளைத் தொட்டு விட்டுப் போனது.

''ஒருவேளை சாப்பிடாமல் இருந்தால் செத்துப் போகிற மாதிரி நடந்துருச்சின்னா... ஒருத்தனும் உயிரோட இருக்க மாட் டான்.'' என்றான்.

''சுசி... அம்மாடி... சாப்புட்றா... சம்பாதிக்கிறதே சாப்பிடத் தான். அது கிட்டே எதுக்குக் கோபத்தைக் காட்டிகிட்டு... சாப்பிடுமா... பசியில சரியா யோசிக்க முடியாது. சரியான முடிவையும் எடுக்க முடியாது.. முதல்ல சாப்பிடு.. அப்புறமா பேசிக்கலாம்.. வைதேகி எல்லாத் தட்டுலேயும் சாப்பாட்டை போடு'' என்றார்.

மல்லிகையாய் மலர்ந்து இருந்த ஒவ்வொரு சோறும்... ஒவ்வொரு தட்டிலும் கும்பலாய் இடம் பிடித்துக் கொண்டன. எல்லாவற்றையும் பரிமாறிய வைதேகி,

''இம்... சாப்பிடுங்க'' என்றாள்.

தட்டில் கைவைத்த சுசி என்ற சுசித்ரா.. இந்தியாவின் மேப்பை வரையத் தொடங்கினாள். இதை கவனித்த சேகர்..

''மேடம்! நீங்க ஆர்க்கிடெக் என்பது எங்கள் எல்லோருக் கும் தெரியும் கட்டிட ப்ளான் எல்லாம் பேப்பர்ல போடு... சாப்பாட்டுல போடாதே.''

திரும்பி அவனை முறைத்தாள்.

''சாப்புடுக்கா..''

வைதேகி சுசித்ராவின் தோளில் கை வைத்து..



''சாப்பிடும்மா'' என்றாள்.

''இல்ல சித்தி... எனக்குப் பசிக்கலை'' என்றாள்.

''பொய் சொல்லாதக்கா.. உன் வயிறு கொண்டா கொண் டான்னு சத்தம் போட்றது என் காதுக்கே கேக்குது'' என்றபடி அவள் வயிரருகே சேகர் தன் காதுகளைக் கொண்டு செல்ல..

அதே நேரம் சுசித்ராவின் இதழில் புன்னகை ஒன்று பெவிக் கால் கணக்காய் ஒட்டிக் கொள்ள.. அவன் தலையை செல்ல மாய் தட்டியவள். தட்டை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு.. ஒரு வாய் சோற்றை உள்ளே தள்ள... புரையேறி.. வாயில் இருந்த சோறு நாலா பக்கமும் சிதறி ஓட...

அவசர அவசரமாய் அவள் தலையில் தட்ட ஒரே சமயத்தில் மூன்று பேரும் கைகளை தூக்க நிமிர்ந்து பார்த்தவள்.. அரு கேயே இருந்த தம்பியையும் சித்தியையும் இறுக்கி அணைத் துக் கொண்டு.. கண்ணீரோடு..

''நான் போகல சித்தப்பா'' என்றாள்.

''அடடா.. என்னம்மா இது... சின்னப் பிள்ளை மாதிரி... முதல்ல சாப்பிடு.. மத்ததை அப்புறமா பேசிக்கலாம்'' என்றார் ராஜலிங்கம்.

சின்னப் பிள்ளைப் போல் தலையை ஆட்டிக் கொண்டு.. இடது கையால் கண்களையும் துடைத்துக் கொண்டு நாசியை உறிஞ்சிக் கொண்டு சாப்பிடத் துவங்கினாள் சுசித்ரா.

அடுத்த 10 நிமிடத்தில் எல்லோருமே சாப்பிட்டு இடத்தை காலி செய்தனர். வைதேகியைத் தவிர மற்ற மூவரும் ஹாலில் போடப்பட்டு இருந்த கட்டிலுக்கு வந்தார்கள்.

''இங்கே பக்கத்துல வாடா'' என சுசித்ராவை தன் அருகே இழுத்து உட்கார வைத்தார் ராஜலிங்கம்.

"இப்போ சொல்லு" என அவளின் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

"இல்ல சித்தப்பா.. ஒண்ணுமில்லை."

"ம்கூம்... நத்திங் ஈஸ் சம்திங்" இடையே புகுந்தான் சேகர்.

"டேய்! நீ வாய் மூட்றா!" மகனை அடக்கி விட்டு..

"நீ சொல்லுமா" என்றார்.

"அது... வ..ந்...து.. ஒண்ணுமில்ல சித்தப்பா."

"போகலைன்னு சொன்ன?"

"அது.. உங்களை விட்டுப் போக கஷ்டமா இருக்கு.. எனக்கு என் அப்பா அம்மா முகமே மறந்து போச்சு சித்தப்பா... போட்டோவைப் பார்க்கும்போதுதான் கீறலாய் ஏதோ நினைவு.. மத்தபடி கண்களை மூடினால் நீங்க.. சித்தி.. இவன்... அவ்வளவுதான்."

"பொய் சொல்லாதக்கா" என்றவனை முறைத்துப் பார்த்தாள்.

"என்ன முறைக்கிற.. முறைச்சிட்டா உண்மையாயிடுமா? ஒரு ஆளை லிஸ்டில் இருந்து எடுத்துட்ட?"

"யார்றா?" கேட்கும்போதே அவளுக்கு பதிலும் தெரிந்தது.

"வேற யாரு.. இன்னைக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிகிட்டு மெட்ராஸ் போக காரணமாக இருக்கும் விக்ரம்தான்."

உதட்டைக் கடித்தபடி எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"ஏம்மா! தேவையான எல்லாத்தையும் எடுத்து வச்சிகிட்டியா?"

"ம்." தலையாட்டினாள்.



"ட்ரைன் டிக்கெட்?"

"பர்ஸில் இருக்கு."

"துணிமணி எல்லாம்."

"ம்... எடுத்து வச்சிகிட்டேன்."

"யோசிச்சுகிட்டியா?"

"ட்ரான்ஸ்பர் ஆர்டரைக் கையில் வாங்கியாச்சு... இனி மேல் யோசிக்க என்ன சித்தப்பா இருக்கு?" வார்த்தைகள் ஏனோ வேதனையில் குளித்துத் தான் வெளி வந்தது.

"அந்தப் பையன்?" வார்த்தைகளைத் தொங்க விட்டார்.

"நல்லவர்னு நம்பிதாம்பா போறேன்."

"எனக்கு அந்த நம்பிக்கை இல்லக்கா.. ஆறு மாசமா ஒரு போன் இல்லை.. ஒரு லட்டர் இல்லை... சும்மா டைம் பாசிங்காக உன்னை லவ் பண்ணியிருக்கான்."

"மரியாதையா பேசுடா."

"இங்கே பார்.. அந்த ஆளோட முகம் எப்படி... கருப்பா... சிவப்பான்னு எங்க யாருக்குமே தெரியாது. நீ எப்போதும் தப்பு பண்ண மாட்ட. உன் மேலே எங்களுக்குள்ள நம்பிக்கையாலதான்.. நீ காதலிக்கிறதா சொன்னதும்... சரீன்னு தலையாட்டினோம்.. நீயும் நம்ம வீட்டுக்கு கூட்டி வர எத்தனை தடவை முயற்சி பண்ணியிருப்ப.. ஒரு தடவையாவது அந்த ஆள் வந்தானா?"

"அவருக்கு வேலை இருந்துதுடா?"

"நீதான் மெச்சிக்கணும்... அதெல்லாம் சும்மாக்கா... எத்தனை பேரைப் பார்த்து இருக்கேன். அதுவும் மெட்ராஸ்காரனை.. நம்புனுயே... இங்க பாருக்கா... எனக்கு நேரம் இல்லை. லட்டர்

போட முடியலை.. போன் பண்ண முடியலை. இப்படி எல்லாம் சாக்கு சொல்றவனை நம்பாதே. அதெல்லாம் அப்பட்டமான பொய். எதுக்குமே மனசு வேணும்! ஒரு நாளைக்கு 24 மணி நேரம் இருக்கு. அதுல.. சாப்பிடாம தூங்காம வேலை செஞ்சிகிட்டு இருக்கானுங்களா? படிச்ச நீயே முட்டாளாக இருக்கியே... லட்டர் எழுத 5 நிமிடம் போதும். போன் பண்ண 2 நிமிடம் போதும்.. ஐந்து நிமிடத்திற்கும்.. இரண்டு நிமிடத்திற்கு கூடவா.. உன் நினைவு அருகதை இல்லாமப் போச்சு?'' பட்டாசு கணக்காய் வெடித்தான்.

''சேகர்! நீ சொல்றது எல்லாம் சரிதான்டா. ஆனா எனக்கு விக்ரம சந்தேகப்படத் தோணலை. உனக்கு உன் அக்கா ஏமாந்துடுவாளோன்னு பயம். எனக்கு அவருக்கு என்ன ஆயிடுச்சோன்ற பதட்டம்.''

சிரித்தான் சேகர்.

''லேடிசோட வீக் பாயின்ட்டே இதாங்கா.''

எல்லா வேலைகளையும் முடித்த வைதேகி ஈரக் கைகளை.. முந்தானையால் துடைத்துக் கொண்டே வந்தாள். வந்தவள் சுசித்ராவின் தோளைத் தொட்டு...

''ட்ரையினுக்கு நேரமாவுதும்மா... போய் புடவை மாத்திக்க'' என்றாள்.

''சரி'' தலையாட்டியபடி எழுந்தவள்.. பக்கத்தில் இருந்த ஒரு அறைக்குள் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள்.

''என்னங்க'' என்றபடி ராஜலிங்கத்தைப் பார்த்தாள்.

''என்ன வைதேகி.''

''எனக்கென்னமோ இது சரியா படலை.''

''எது?''



''சுசி விசயந்தான்.''

''சுசி விசயம்னா மெட்ராஸ் போறதா?''

''இல்லை... மெட்ராஸ் போறதைப் பத்தி இல்லை. மெட்ராஸ் போறதுக்கு அவ சொல்ற காரணம்.''

''அந்தப் பையனைத் தேடிப் போறதா?''

''ஆமாம்! பொண்ணைத் தேடி ஆம்பளைதான் வரணும். இவ தேடிப் போறாளே. அதுவே எனக்குப் பிடிக்கலை. இவளை வேணும்னு நினைக்கிறவன் இத்தனை நாளுமா மௌனமா இருப்பான்.''

''.........'' ராஜலிங்கத்தின் நெற்றியில் பட்டையாய் கோடுகள் விழுந்தது. இதை யோசிக்காமல் விட்டு விட்டேனோ... யோசிக்கத் துவங்கினார்.

''நம்ம பொண்ணு தப்பு பண்ண மாட்டா. ஆனா தப்பான ஒருத்தனை நம்பிட்டாளோன்னு தோணுது. இதுல ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா... ஊர் என்ன சொல்லும்? ராஜலிங்கம் தான் பொண்ணா இருந்தா இப்படி விட்டு இருப்பாரான்னு கேட்க மாட்டாங்க? யோசிச்சுப் பாத்தீங்களா? சிறு பிள்ளை விட்ட வெள்ளாமை வீடு வந்து சேராது.''

''.........'' அவருக்கு குழப்பம் கூடிக் கொண்டே போனது.

''நானும் ஜாடை மாடையா எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்தேன். நீங்கதான் புரிஞ்சிக்கவே இல்லை. ஆபீஸ் விட்டு வந்த எந்த நேரமும் என்னைத்தான் சித்தி சித்தீன்னு சுத்தி சுத்தி வறா. ராத்திரியிலும் கழுத்தை கட்டிக் கொண்டு தூங்கறா. அவளை விலக்கிவிட்டு வந்து உங்ககிட்டே பேச என்னால முடியலை'' குரல் தன் பங்கிற்கு திக்க ஆரம்பித்தது. கண்களும் தன் பங்கிற்கு கரை புரளத் தொடங்கின.

''நீ முடிவா என்னதான் சொல்ற?''. என்றார்.

''எல்லாந்தான் முடிஞ்சி போச்சே.. இனிமேல் அவ பய ணத்தை நிறுத்த முடியாது. வேலை இருக்கு... ஆனா...'' தடு மாறினாள்.

''சொல்லும்மா!'' அதுவரை எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த சேகர் தாயின் இரண்டு கைகளையும் ஒன்றாய் பிடித்துக் கொண்டான்.

''அவளால சின்ன ஏமாற்றத்தைக் கூடத் தாங்கிக்க முடி யாது. சாயந்திரமா உனக்கு மெதுவடை பண்ணித் தர்றேன்னு சொல்லிட்டு... வேலையில நான் மறந்து போயி... அவ வீட்டுக்கு வந்து சித்தீ... ரொம்ப பசி. உங்க ஸ்பெஷல் அயிட் டத்தை எல்லாம் கொண்டாங்க.. அப்படிங்கற போது... மறந்துட்டேன்டா..ன்னு ஒரு நாள் சொல்லிட்டேன். உடனே அவ கண்ணில் இருந்து வந்த கண்ணீர்... இன்னும் என் கண் ணுக்குள் நிக்குது. ரொம்ப சின்ன... சாப்பாட்டு விசயந்தான் அதையே அவளால தாங்கிக்க முடியலையே... இது அவ வாழ்க்கைப் பிரச்சனை... அந்தப் பையன் ஏமாத்திட்டான்னு தெரிந்தாலே... என் புள்ளை தாங்காம.... ஏதாவது.. பண்... ணி... கி..ட்..டா?''

''வைதேகி!'' மனைவியின் தோளை வேகமாகப் பிடித்து அழுத்தினார்.

''உன் வாயால அப்படிச் சொல்லாத... நான் கூடப் போறேன்'' என்றார்.

'களுக்' அறைக்கதவு திறந்து வெளிப்பட்டாள் சுசித்ரா.

இருபது பைசா அஞ்சல் அட்டையில் உள்ள சந்தன கலர் சுடிதார். பாட்டம் நல்ல அரக்கு கலர்.. துப்பட்டாவும் அதே கலர்.. சுடிதாரின் நெஞ்சுப் பகுதியில் கருப்பும்.. வயலட்டும் கலந்த பூ டிசைன்.. அவற்றின் நடுவில் சின்னச் சின்னதாய் கண்ணாடிகள். துப்பட்டாவால் கழுத்தை ஒரு முறை நன்றாக இறுக்கியபடி வெளிப்பட்டவள்,



சித்தியின் இடுப்பை வேகமாக வந்து கோர்த்துக் கொண்டு.. தோளில் தன் முகவாயை அழுத்திக் கொண்டு...

''நீ பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டுதான் சித்தி இருந் தேன். என்னை விடக் கோழையா இருக்கியே.. எனக்கு ஆயுள் கெட்டி... பொட்டுன்னு போயிட மாட்டேன். நான் மட்டும் உன்னிடம் வளர்ந்தால் போதுமா? என் பிள்ளைகள் எல்லாம் வளர வேண்டாம்... ஒன்னு ரெண்டு எல்லாம் இல்லை. ஏகப் பட்டது. நீ நினைக்கிற மாதிரி விக்ரம் என்னை ஏமாற்றி விட் டால்.. அதுக்காக சாகமாட்டேன் சித்தி.. ஒரு வேளை வாய் விட்டு அழணும்னு தோணலாம்.. அப்படித் தோணினாலும் வந்து உன் மடியில்தான் விழுவேன்.. என்னை அழ வைக் காதே சித்தி. சந்தோஷமாக அனுப்பி வை.''

''டேய்... என்னடா செல்லம்.. நான்தான் வயசானவ ஏதோ உளறிட்டேன்.. உன் மனசுக்கு கடவுள் எந்தக் குறையும் வைக்க மாட்டார். நீ நல்லா அமோகமா இருப்ப.. சரி.. போனதும் லட்டர் போடு... அடிக்கடி போடு. நல்லா சாப்பிடு.. இட்லி பொடி... பருப்பு பொடி.. வடகம்.. ஊறுகாய்.. எல்லாம் வச் சிருக்கேன்.. சாப்பிடு.. ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளி.. நல்லெண்ணெய் பாட்டிலும் வச்சிருக்கேன். அப்போ தான் உடம்பு குளிர்ச்சி. சோம்பல்ல கண்ட கண்ட ஷாம்பூ போட்டு குளிக்காதே.''

''சரி சித்தி..'' சிரித்தாள்.

''உடம்பைப் பார்த்துக்கடா'' தலை தடவி விட்டார் ராஜ லிங்கம்.

''அக்கா.. போலாமா?''

''நானும் வரேனே?''

''வேண்டாம் சித்தப்பா.. இந்தக் குளிர்.. உங்களுக்கு ஒத்துக் காது.. இருட்டில் வேண்டாம் சேகர் மட்டும் போதும்.''

''உன் பிரிவு மனசுக்கு ஒத்துக்காதேடா?'' நீண்ட பெரு மூச்சை வெளிவிட்டார்.

''இப்படி ஆளுக்காளுக்கு மூக்கை சிந்திகிட்டு இருந்தா எப்படி... ட்ரைன் போயிடும்'' அவசரப்படுத்தினான் சேகர்.

''முதல்ல நீ சட்டையை எடுத்து மாட்றா?''

சேகர் சட்டை போட்டுக் கொண்டதும்.. கிளம்பினார்கள். இரண்டு கனமான சூட்கேஸை தான் எடுத்து.. சைக்கிளின் கேரியரில் கட்டிவிட்டு.. அவளுடைய ஹேண்ட் பேக்கையும் வாங்கி ஹேண்ட் பாரில் மாட்டிக் கொண்டு சைக்கிளின் ஸ்டேன்டை தள்ளினான்.

''வரேன் சித்தப்பா.. வரேன் சித்தி'' என்றபடி நடந்தாள். அந்தத் தெரு முனையில் அவர்களின் தலை மறையும் வரை இருவருமே கண்ணீரோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## 2



**சொல்லி வராதது காதல்..**

**சொல்ல முடியாததும் காதல்..**

**சுகமாய் வருவதும் காதல்..**

**சுமையாய் போவதும் காதல்..**

**தூக்கத்தைத் தொலைப்பதும் காதல்..**

**ஏக்கத்தை வளர்ப்பதும் காதல்..**

**கனவைத் தருவதும் காதல்..**

**நினைவைக் கலைப்பதும் காதல்..**



**நினைத்தால் இனிப்பதும் காதல்..**

**நிம்மதியை இழப்பதும் காதல்..**

'ரவிக்குமார் பில்டர்ஸ்.

கண்டுபிடிப்பது சுசித்ராவிற்கு எளிதான காரியமாகத் தான் இருந்தது. இவள் சென்னைக்குப் புதிது என்றாலும்.. ரவிக்குமார் பில்டர் - கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்.. புகழ் வாய்ந்ததாக இருந்ததால்.. சென்னையில் பஸ் ரூட் தெரியாததால் ஆட்டோ வில்தான் ஏறினாள். கம்பெனி முன்பு வந்து இறங்கியபோது.. கட்டிடத்தைப் பார்த்ததும்... லேசாய் வாய் பிளந்துதான் போனாள். உள்ளே நுழையாமலேயே... இது ஹாலாக இருக் கும்.. இது ரிசப்ஷனாக இருக்கும். இது எம்.டி. ரூமாக இருக் கும்.. இந்த பக்கம்.. எஞ்சினியர்ஸ் ரூமாக இருக்கும்... இந்தப் பக்கம் ஃபர்ஸ்ட் ப்ளோர்ல ஆர்க்கிடெக்ஸ்.. ம்.. இங்க ஆபீஸ் க்ளார்க்.. ஸ்டெனோ.. என்று மனக் கண் முன் அந்தக் கட்டிடத் தின் பிளானையே அவளின் ஆர்க்கிடெக் புத்தி கொண்டு வந்து நிறுத்தியது.

உள்ளே நுழைந்தாள்.

ரிசப்ஷனில் இருந்த பெண்ணிடம் தன்னை அறிமுகப்படுத் திக் கொண்டதும்.. அந்தப் பெண் சிரித்தபடியே எம்.டி. ரூமிற்கு வழிகாட்டிவிட்டு இன்டர்காமைத் தட்டி எம்.டி.க்கும் விவரத்தைக் கொடுத்தாள்.

எம்.டி. ரூமின் கதவில் கை வைத்தபோதே..

''எஸ் கமின்'' குரல் ஒலித்தது.

உள்ளே நுழைந்தாள். ஏ.ஸி. பர்ப்யூம் கொஞ்சம் அதிக மாய் இருந்ததால்... அது நாசி துவாரத்தை நெளிய வைத்து.. லேசாய் சுசித்ராவிற்கு நெற்றி சுளிக்கும் தர்ம சங்கடத்தைக் கொடுத்தது.

''வாம்மா!''

''..........''

''உட்கார்.''

''மார்னிங் ஸார்.''

''வெரிகுட் மார்னிங். ப்ளீஸ் பீ சீட்டட்.''

''தேங்க்யூ ஸார்'' ஒரு இருக்கையில் தன்னை இருத்திக் கொண்டாள். மடியில் இருந்த பைலை குழந்தையாய் அணைத்துக் கொண்டாள்.

''யுவர் நேம் ப்ளீஸ்.''

''சுசித்ரா!''

''வெல்.. எந்த ப்ராஞ்சில் இருந்தும்மா ட்ரான்ஸ்பர் ஆயி வர?''

''மதுரை.''

''இம்... எக்ஸ்பீரியன்ஸ்?''

''ஃபோர் இயர்ஸ்.''

''குட்... பைலை பார்க்கலாமா?''

''யெஸ் ஸார்...'' என்றபடி எழுந்து பைலை எம்.டி.யின் டேபிளில் வைக்கும்போது தான் கவனித்தாள். நல்ல சிவந்த நிறத்தில்.. எலும்புக் கூட்டிற்கு ஏழெட்டு கிலோ சதையும்.. நாலைந்து மீட்டர் தோலும் சுத்தப்பட்டது போல் அப்படி ஒரு ஒல்லி உருவம்.. விழிகளில் ஒரு காந்தம்.. அதன் சக்தியைக் குறைக்க கண்ணாடி அணிந்து இருந்தார். பவர் க்ளாஸ்தான். நெற்றியில் பட்டையாய் திருநீர். அது இரண்டு புருவங்களின் நுனிவரை தங்களின் எல்லையை அமைத்திருந்தது. திருநீருக்கு நடுவில் இருபத்து ஐந்து பைசா அளவில் குங்குமம். ஹிட்



லரின் மீசையை விட கொஞ்சம் கூடுதல் நீளத்தோடு.. வெண்ணிறத்தில் ஒரு மீசை.. அடிக்கடி மூக்கை உறிஞ்சினார். கைவிரல்கள் எல்லாம் ஸ்கெட்ச் பென்சிலை விட பருக்காமல்.. குச்சி குச்சியாய் நீள நீளமாய் இருந்தது. வேஷ்டி.. ஜிப்பா அணிந்து இருந்தார். குரலும் வார்த்தையும் தமிழின் ல, ள, ழ.. உச்சரிப்போடு பிசிறடிக்காமல் வந்து விழுந்தது.

அவற்றை வாங்கியவர் எல்லாவற்றையும் புரட்டிப் பார்த்துவிட்டு..

''குட்.. குட்...'' என தனக்குத்தானே கூறியபடி..

''சதாசிவம் கூட நேற்று போன் பண்ணி உன்னைப் பற்றி ரொம்பப் பெருமையாகச் சொன்னார். அங்கே நீ இருந்தது சின்ன ப்ராஞ்ச். இதுதான் மெயின் ஆபீஸ்.. அங்கே இருந்ததைவிட வேலை எல்லாம் இங்கே ஜாஸ்தியா இருக்கும். உன்னைப் போல் நிறைய ஆர்க்கிடெக்ஸ் இருக்காங்க.. சீனியரும் உண்டு. ஜூனியரும் உண்டு.. சில நேரம் சைட்டிற்கும் போக வேண்டும்.''

''ப்ளஷர் ஸார்.''

''குட்... நீ ரொம்ப ஆக்டிவா இருப்பன்னு சொன்னார்.. உன்னோட சேலரி எல்லாம் மதுரையை விட இங்கே அதிகமாவே இருக்கும்.. நோ ப்ராப்ளம்... ஓ கேட்க மறந்து விட்டேனே. பேமலி?''

''அவங்க எல்லாம் ஊர்ல இருக்காங்க ஸார்.''

''அப்போ தனியாவா?''

''ஹாஸ்டல்லதான் தங்கணும் ஸார்.''

''ஹாஸ்டல் பார்த்தாச்சா?''

''இல்ல ஸார்.. இன்னைக்கு லக்கேஜ் எல்லாம் ப்ரண்ட் வீட்டுல வச்சிருக்கேன். சீக்கிரம் ஹாஸ்டல் பார்க்கணும்.''

''அப்போ ஒண்ணு பண்ணுமா? நீ ஜாயின் பண்ணிட்டு.. ஹாஸ்டல் பாரு. இங்கே இருக்கிற லேடீஸ் நிறைய பேர் ஹாஸ்டல்தான். வேணா கேட்டுப் பார்.''

''தேங்க்ஸ் ஸார்'' என்றபடி எழுந்தாள்.

''ஜாயின் பண்ணிட்டுப் போம்மா'' என்றார் சிரித்தபடி.

அவசரப்பட்டு எழுந்ததை நினைத்து உதடு கடித்துக் கொண்டாள்.

டெலிபோனைத் தட்டி

''ராம்குமாரை வரச் சொல்லும்மா'' என்றார்.

''........'' எதிர்முனை என்ன கேட்டது என்று தெரியவில்லை.

''சிவில் செக்ஷன்.. எஞ்சினியர் ராம்குமார்தான்'' என்றபடி வைத்தார்.

''ஏம்மா நிக்கிற.. உட்கார்.''

தயக்கமாய் அமர்ந்து கொண்டாள்.

அடுத்து அவர் பேச எத்தனித்தபோதே... பஸ்ஸர் ஒலித்தது.

''எஸ்.. கமின்'' என்றார்.

கதவைத் தள்ளிக் கொண்டு வாட்ட சாட்டமாய் அழகான இளைஞன் ஒருவன் உள்ளே நுழைந்தான்.

''குட்மார்னிங் ஸார்.''

''வெரி குட்மார்னிங்.''

சுசித்ராவை ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு.. எம்.டி.. பக்கம் திரும்பும்போது...

''ராம்!''



''எஸ் ஸார்.''

''இவங்க பேர் சுசித்ரா... மதுரை ப்ராஞ்சில் இருந்து ட்ரான்ஸ்பர் ஆயிருக்காங்க.. ஆர்க்கிடெக்'' அறிமுகப்படுத்தினார்.

''ஹலோ!'' நட்போடு சிரித்தபடி தலையாட்டினான்.

''ஹலோ!'' பதிலுக்கு எழுந்து நின்றாள்.

''ராம்... இவங்களை ஜாயின் பண்ணி வச்சி... அனுப்பிடுங்க... அவங்களுக்கு வெளியே வேலை இருக்கு.. நாளையில் இருந்து கரெக்டா ட்யூட்டிக்கு ஆஜராயிடுவாங்க. சரிதானேம்மா'' சுசித்ராவின் பக்கம் திரும்பிக் கேட்டார்.

எதுவும் பேசாமல் தலையாட்டியபடி சிரித்தாள்.

''ராம்.''

''ஸார்!''

''இவங்களோட ஒர்க் என்ன எப்படிங்கறதை நீங்கதான் கைட் பண்ணணும். எக்ஸ்பீரியன்ஸ் கேன்டிடேட்தான்... இருந்தாலும் இந்த ஆபீஸ் புதுசு இல்லையா?''

''ஓ.கே... ஸார்.''

''வரேன் ஸார்...'' என்று எம்.டி.யைப் பார்த்துக் கூறினாள்.

''வெல்கம்.. நல்ல ஹாஸ்டலாகப் பார்த்துக்கம்மா.''

''தேங்க்ஸ் ஸார்'' என்று கூறிவிட்டு இருவரும் எம்.டி. ரூமை விட்டு வெளியே வந்தார்கள்.

''மேடம்! உங்க ஊர்.''

''மதுரைக்குப் பக்கம்.''

''உங்களுக்குத் தெரிஞ்ச நல்ல உமன்ஸ் ஹாஸ்டல் இருக்குமா ஸார்.''

''ஸாரி.. ஆனா விசாரிச்சு சொல்றேன்.''

''ஸார்.. ஜாயின் பண்ணிட்டு சீக்கிரம் போகணும்?''

''ம்.. போகலாம்.''

''தேங்க்ஸ் ஸார்.''

''என்னது! ரெண்டு நிமிடத்திற்குள் இத்தனை ஸார்? தாங் காது ராம்னே கூப்பிடலாம்.''

''அதெப்படி முடியும்.''

''முடியும்னா முடியும் மேடம்.''

''நீங்க கூட இப்போ மேடங்கலையா?''

''ஓ... ஸாரி.. உங்க பேர்.. சரியா நினைவில்லை.. ஸாரி.''

''சுசித்ரா.''

''சுசீன்னு கூப்பிடலாமா?''

''தாராளமாக கூப்பிடலாம் ஸார்'' என்றபடி யோசித்தாள். எப்படி முன்பின் அறிமுகம் இல்லாமல் இவ்வளவு சீக்கிரம் இவரிடம் நெருங்கி... சுசீ என்று கூப்பிடும் அளவு சம்மதித்து விட்டேன். அவ்வளவு சீக்கிரம் நான் ஒட்டுபவள் இல்லையே.. என்ன மந்திரம் போட்டார்?

''என்ன யோசிக்கிறீங்க?''

''நத்திங் ஸார்.''

''திரும்பவும் ஸாரா?''

''போகப் போகச் சரியாயிடும்.''

''ஓ.கே.'' என்றபடி அவளுக்கு எந்தச் சிரமமும் வைக்கா மல் அத்தனையையும் முடித்துக் கொடுத்து..



''நல்ல ஹாஸ்டலாக கிடைக்க என் மனமார்ந்த வாழ்த் துக்கள்.''

''தேங்க்ஸ்.''

வெளியே வந்து ஆட்டோ பிடித்தாள்.

''எங்கேம்மா போகணும்?'' ஆட்டோ டிரைவர் கேட்டார்.

''ராயபுரம்.''

''ராயபுரத்தில் எங்கேம்மா?''

தன் தோழி மாலாவின் முகவரியைச் சொன்னாள்.

ஆட்டோ வேகம் எடுத்த நேரம் லேசாய் தூறல் துவங்கி இருந்தது. இந்த மாதத்தில் மழையா? இப்போதுதான் எந்த நேரத்தில் மழை பெய்கிறது என்று வானிலை ஆராய்ச்சியாளர் களாலேயே கூற முடியாமல் போய் விட்டது. வானம் அந்த நேரத்திலேயே இருட்டத் துவங்கி.. ஊதக்காற்றை வேறு உலவ விட்டு.. உடம்பைக் கூசச் செய்தது.

கண்களை மூடிக் கொண்டாள்.

அதுவரை உள்ளே இருந்த விக்ரம்.. மெல்ல வெளியே வந்தான்.

''என்ன சுசி, ரொம்ப நேரம் உள்ளே வச்சிருந்திட்டியே.. துடிச்சிப் போய்ட்டேன்டா.''

''ஆனாலும் நீ என்ன ரொம்பத்தான் மறந்திட்டே.. ரெஸ்டா ரென்ட் போய் சாப்பிட்டது எல்லாம் நினைவுக்கு வரலையா?''

வந்தது.

அப்பட்டமாய் அப்படியே நினைவிற்கு வந்தது.

அந்த ஹோட்டலில்.. மங்கலான வெளிச்சத்தில்.. எதிரும் புதிருமாக உட்காரப் போனவளை இழுத்துப் பிடித்து அரு கேயே உட்கார வைத்தான்.

''நான் ஒண்ணு சொல்லட்டுமா?'' காதுக்கருகில் கிசுகிசுத்தான். அவன் மூச்சுக் காற்று அவள் கழுத்தில் சூடாய் பரவி கூசச் செய்தது.

''பேச்சே சரியில்லையே.''

''ஏய்.. கேளு.''

''இது ஹோட்டல்.. ஏதாவது ஏடாகூடமா பேசாதீங்க.''

''இல்லை நல்ல விஷயம்.''

''என்னது?''

''முத்தம் பற்றி.''

உள்ளுக்குள் அவன் குறும்பை ரசித்தாலும்... முகத்தை சுளித்தாள்.

''கேக்குறியா?''

''இம்..''

''குழந்தைகளுக்கும் வயசானவங்களுக்கும் நெற்றியில் முத்தம் கொடுக்கணுமாம்.''

''இம்.''

''வயதில் சின்னவங்களுக்கு கன்னத்தில்.''

''இம்.''

''ப்ரண்ட்ஸ்க்கு கையில்.''

''இம்.''

''காதலனுக்கு உதடு.''

''இல்லை.. கணவனுக்கு.. திருத்தி சொல்லுங்க.''



''ச்சே.. எப்படி சுத்தி வந்தாலும் உன்னிடம் முடியலை.. சரி.. உதடு வேண்டாம். உன்னைவிட நான் வயதில் பெரியவன். அதனால் நெத்தியில் கொடுக்கலாம். வயசுல பெரியவன் னாலும்.. மனசுல சின்னவன். ஸோ கன்னத்திலேயும் கொடுக்கலாம். இதையும் மீறி நான் உன் ப்ரண்ட்.. கையிலும் கொடுக்கலாம்.. வசதி எப்படி'' கண் சிமிட்டினான்.

''வர கோபத்திற்கு ப்ளேட்டை எடுத்து அடிச்சிடுவேன்.''

''அடி.. ஆனா முத்தம் கொடு.''

''யூ'' பற்களை அவள் கடித்தபோது,

''நீ கொடுக்காட்டி போ.. நான் தர்றேன்'' என்றபடி கண் சிமிட்டும் நேரத்தில் அவள் கன்னத்தில் பசக்கென தன் உதடுகளை வைத்தான்.

எதிர்பாராத முத்தம்.. திடுக்கிட்டாள்.

''அம்மா நீங்க சொன்ன இடம் வந்துடுச்சி.''

நினைவுக்கு வந்தவள். அன்று அவன் இதழ் பதித்த கன்னத்தில் இன்னும் ஈரம் இருக்கிறதா? என்று தன்னை மறந்து தடவிப் பார்த்தாள்.

'மாலாவின் வீடு இன்னும் கொஞ்சம் தூரமாயிற்றே' யோசித்தவள்.

''பக்கத்தில் எங்காவது டெலிபோன் பூத் இருக்குமா?'' ஆட்டோ டிரைவரிடமே கேட்டுப் பார்த்தாள்.

''பார்க்கலாம்'' என்றபடி ஒரு நிமிடத்திலேயே ஒரு டெலிபோன் பூத் அருகில் ஆட்டோவை நிறுத்தினான். வேகமாய் இறங்கியவள்.. அங்கு அமர்ந்திருந்தவரின் அனுமதியோடு... விக்ரம் வேலை செய்யும் பேங்கிற்கு பட்டனைத் தட்டினாள்.

'இன்னுமா மெடிக்கல் லீவில் இருப்பார்' 'இருக்கக் கூடாது' என்றபடி மனம் தத்தளிக்க ரிசீவரை காதில் வைத்துக் கொண் டாள். ரிங் போய் எடுக்கப்பட்டது.

''மிஸ்டர் விக்ரம் ப்ளீஸ்.''

''நீங்க யாரு?''

''அவரோட ரிலேஷன்.''

''ஓ.. மதுரையில் இருந்து அடிக்கடி போன் செய்வீங்களே.. அவங்களா...?'' அவள் குரலைக் கண்டு பிடித்து எதிர்முனை கேட்டது.

''எஸ் ஸார்.''

''நான் விக்ரம் ப்ரண்ட்தான். மெடிக்கல் லீவ் முடிஞ்சு ஒரு வாரத்திற்கு முன்புதான் ஜாயின் பண்ணினான். பட்... அன் பார்சுனேட்லி.. இன்னைக்கு அவன் லீவ்.. பெண் பார்க்கப் போய் இருக்கான். மேரேஜ் பிக்ஸ் ஆகி இருக்கு.''

சுசித்ராவின் கையில் இருந்த ரிசீவர் தானாய் நழுவி கீழே விழுந்தது.



# 3

**அன்பே!**
**நித்திரை என்பது**
**நிமிடத்திலும் இல்லை..''**
**அப்படி வந்தாலும்**
**நிம்மதி இல்லை..**



**வசதியாய் வாழவா**
**வரம் கேட்கிறேன்?**
**தனிமை வேண்டாம்**
**என்று தானே தவமிருக்கிறேன்...!**

எப்படி போன் பண்ணியதற்கு பணம் கொடுத்தாள்? எப்படி ஆட்டோ ஏறி உட்கார்ந்தாள்? எப்படி ஆட்டோவைக் கட் பண்ணிவிட்டு, எப்படி வீட்டிற்குள் நுழைந்தாள்? எப் போது மாலாவின் மடியில் முகம் புதைத்தாள்? எதுவுமே அவளுக்குப் புரியவில்லை. தெரியவில்லை. ஆனால் இத்தனை யும் கனகச்சிதமாய் சரியாய் நடந்து இருந்தது.

வந்து இறங்கியவள் ஓடி வந்து கட்டிக் கொண்டு இப்படிக் குமுறி அழுகிறாள்? என்னவாயிற்று? காரணம் புரியாமலேயே மாலாவிற்கு மண்டை காய்ந்தது. எவ்வளவு நேரம்தான் அழட்டும் என்று விடுவது? பொறுத்துப் பார்த்துவிட்டு, தன் மடியில் கிடந்தவளை மெல்லத் தூக்கி, சோபா மேல் கிடந்த துண்டினால், சுசித்ராவின் கண்களை அழுத்தி துடைத்து விட் டாள். ஆனால் அடங்காமல் கண்ணீர் கொப்பளித்துக் கொண்டு வெளியேறியது.

''சுசி!''

மென்மையாய் அழைத்து, முதுகை ஆதரவாய் தடவி, தன் தோள் மேல் சாய்த்துக் கொண்டதும். சுசித்ராவின் கண்ணீரில் இருந்த வெப்பம்.. தோளில் இருந்து நெஞ்சு வரை சென்று சுட்டது.

''சுசி!'' திரும்ப அழைத்தாள்.

''.......''

''இப்படியே அழுதா எப்படிம்மா?'' என்னன்னு சொல்லு?''

''............''

''சொல்லுடி. என்ன நடந்துச்சு? கம்பெனியில் ஏதாவது ப்ராப்ளமா?''

''............''

''நீ பாட்டுக்கு மௌனமா அழுதா எனக்கெப்படிடா தெரியும்.. சொல்லு.. வழியில ஏதாவது நடந்ததா?''

''................'' சுசித்ராவின் அழுகை தேம்பலாய் மாறிக் கொண்டிருந்தது.

''என்னம்மா.. சொல்லுடா.. நான் ஆபீஸ்க்கு லீவ் போட்டது எவ்வளவு நல்லதாகப் போச்சு.. இங்கே பார்.. அவர்கூட இல்லை.. மனசுல என்ன இருக்குன்னு சொல்லு.''

''................''

''ஏய்'' தோளைத் தட்டினாள்.

''..........''

''ஒன்றுமே பேசாம இருந்தால் எப்படி? இரு... கதவைத் தாழ் போட்டுட்டு வர்றேன்'' தன்னிடம் ஒட்டியிருந்தவளை விலக்கிவிட்டு.. கதவைத் தாழிட்டு திரும்பினாள் மாலா.

''பெட்ரூமுக்கு வா'' கையைப் பிடித்து இழுத்து வலுக்கட்டாயமாக உள்ளே அழைத்துக் கொண்டு சென்றாள். பெட் மேல் தோழியை உட்கார வைத்து விட்டு.. ''கொஞ்சம் இரு வர்றேன்'' எனக் கூறிவிட்டு நகர்ந்தவள். சில நிமிடங்களில் இரண்டு கப்பில் காபியோடு வந்து நின்றாள்.

''இந்தா குடி.''

''.............'' தலையைக் குனிந்தபடியே அமர்ந்து இருந்தாள்.



''சரி... நீ எதுவும் என்னிடம் சொல்ல வேண்டாம். காபி மட்டும் குடி... ப்ளீஸ்டி.''

வாங்கிக் கொண்டாள்.

''ம்... குடி.''

மெல்ல காபியை உறிஞ்சியவள் காலி கப்பை மாலாவிடம் கொடுத்தாள். இரண்டு காலி கப்பையும் பக்கத்தில் இருந்த டேபிள் மேல் வைத்து விட்டு.. தன் நைட்டியை மேலும் கீழும் சரி செய்து கொண்டு.. சுசித்ராவிற்கு நேராய் சம்மணம் இட்டு அமர்ந்து கொண்டு.. குனிந்திருந்தவளின் தலையை நிமிர்த்தி..

''இம்.. சொல்லு.. என்ன நடந்துச்சு?'' என்றாள் மாலா.

''அ... து...'' வாய் திறந்தவள் தடுமாறினாள்.

''சொல்லுடி.''

சட்டென மாலாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள். மனதிற்குள் சிரித்த மாலா.. தோழியின் தலையை தடவிக் கொண்டே..

''சொல்லு.''

''.........''

''இதோட சொல்லு... சொல்லுன்னு நூறு தடவையாவது சொல்லியிருப்பேன். ஏன் பேச மாட்டேங்கிற.. என் மேல் நம்பிக்கையில்லையா?''

கசிந்த விழிகளோடு நிமிர்ந்து பார்த்தவள்.

''நம்பிக்கை இல்லாமல் தான்.. உன் மடியில் கிடக்கிறேனா?'' என்றாள்.

''பின்ன என்ன சொல்லு.''

தயக்கத்தோடு மெல்ல விக்ரம் பாங்க் விசயமாக மதுரையில் வந்து ஆறு மாதம் தங்கியது. தாங்கள் காதலித்தது. அவன்

சென்னை வந்ததில் இருந்து பதில் இல்லாதது. தான் போன் பண்ணியபோது.. அவன் மெடிக்கல் லீவில் இருப்பதாக கேள்விப்பட்டது.. தான் இப்போது கேள்விப்பட்டது.. எல்லா வற்றையும்.. மென்று.. கசக்கித் திக்கி.. திணறி.. துப்பினாள்.

சிறிது நேரம் மௌனமாய் இருந்தவள்.

"இதுக்குத்தான் இப்படி ஒரு ஆர்ப்பாட்டமான அழு கையா?"

"மனசு கேக்கல மாலா."

"என்னடி மனசு பொல்லாத மனசு.. உனக்கிருக்கிற மனசு.. அந்த ஆசாமிகிட்டேயும் இருக்கணும் இல்லை. உன்னை ஒருத்தன் மிஸ் பண்றான்னா.. அது அவனுக்குத்தான் நஷ்டம்.. உனக்கில்லை."

"அதுக்கில்ல மாலா."

"ஏன்? வரம்பு மீறியாச்சா?"

மடியில் இருந்து தலையை எடுத்து.. மாலாவைப் பார்த்து முறைத்து விட்டு... திரும்ப மடியிலேயே தலை வைத்துக் கொண்டாள்.

"கேட்டா என்ன முறைக்கிற... சொல்லு."

"நீ கேட்ட அர்த்தத்தில் எதுவும் நடக்கல.. ஆனா அப்படி நடந்தாத் தான் வரம்பு மீறியதா அர்த்தமா? மனசால நினைச் சாலே அப்படித்தானே அர்த்தம்."

"என் மனதிற்கு பட்டதைச் சொல்லட்டுமா?"

"இம்."

"நீ ஃபீல் பண்றதில் அர்த்தமே இல்லை சுசி. இந்தக் காலத் துல காதலாவது கத்தரிக்காயாவது நத்திங். எல்லாமே பணத் தால வரும். இல்ல அழகால வரும். யாருடி மனசப் பார்த்து



காதலிக்கிறா? உனக்கே தெரியும் நான் லவ் பண்ணினது என் சொந்த அத்தை பையனை. நடுவில பணம் விளையாடுச்சி.. எங்கிட்ட பேசின கவிதை வார்த்தை எல்லாம் மறந்துட்டு.. ஒரு டாக்டர் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட் டான். இரண்டு வருடம் எனக்குப் பைத்தியம் புடிக்காத குறை தான். யோசிச்சி பார்த்தேன். யாரோ ஒரு பெண்ணோட அவன் சந்தோஷமாக இருக்கும்போது.. நான் மட்டும் என்னை அலட்சியப்படுத்துன அந்த அயோக்கியனை நினைச்சிக் கிட்டு வாழ்க்கையை வேஸ்ட் பண்ணனுமான்னு தோணிச்சு.. நல்லவங்களுக்காக வாழ்க்கையை தியாகம் பண்ணலாம்.. ஒரு அயோக்கியனுக்காக நான் ஏன் இப்படி இருக்கனும். என்னோட காதல் அன்பு உண்மையா இருக்கலாம். ஆனா அந்த ஆள் பொய்யானவன்கிறபோது.. அங்கே காதலுக்கு எந்த மதிப்பும் இல்லடி.. கடைசில ஆறு மாதத்துக்கு முன்னால எனக்குக் கல்யாணம் ஆச்சி. இவர் என்னைப் பெண் பார்க்க வந்து என்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னதும், என் அத்தை பையன் எனக்கு எழுதின காதல் கடித கதைக் கட்டைத்தான் படிக்கக் கொடுத்தேன். நிதானமா ஒரு லட்டரைக்கூட விடாம படிச்சிட்டு..

'உன்னோட நேர்மை எனக்குப் பிடிச்சிருக்கு.. ஸோ நான் எதிர்பார்த்த மனைவியாய் நீ இருப்பங்கற நம்பிக்கை பரிபூர ணமா எனக்கிருக்கு.. என் சைட் நோ பிராப்ளம். உங்கப்பா கிட்ட சொல்லி தேதி குறிக்கச் சொல் அப்படீன்னார். இப்போ மூச்சுக்கு முன்னூறு தடவை மாலா! மாலா!ங்றார். நாங்க ரொம்ப சந்தோஷமா இருக்கோம். என் அத்தை பையனைக் கல்யாணம் பண்ணியிருந்தாலும் நான் இவ்வளவு சந்தோஷ மாக இருந்திருப்பேனா என்பது சந்தேகம்தான். நடப்பது எல்லாமே நன்மைக்குதான். சந்தர்ப்பத்திற்கு தகுந்த மாதிரி நாமதான் புத்திசாலித்தனமாக முடிவெடுக்கணும்."

"............"

''என்னடி எதுவும் பேசமாட்டேங்கிற?''

''..............''

''நீ அழறதில் கொஞ்சம் கூட அர்த்தமே இல்லை. உன் அருமை அவனுக்குத் தெரியலங்கறதுக்காக நீ ஏண்டி அழணும். உன்னை மிஸ் பண்ணிட்டமேங்கற காரணத்துக்காக நாளைக்கு அவன்தான் அழணும். நஷ்டமும் அவனுக்குத்தான் உனக்கில்லை.''

''என்னால விக்ரம சந்தேகப்பட முடியலை.''

''என்னடி பைத்தியக்காரியா இருக்க?''

''இல்ல மாலா! நம்பிக்கையோடதான் ட்ரான்ஸ்பர் வாங்கிகிட்டு வந்திருக்கிறேன். விசத்தைகூட அமுதம்னு நினைச்சம்னா.. காலப் போக்கில் நம்ம எண்ணம் போலவே அமுதமாக மாறிப் போயிடும். அமுதத்தையும் விசமா நினைத்தால்.. நம்ம எண்ணம் போலவே அமுதமும் விசமா மாறிப் போயிடும்.''

கலகலவெனச் சிரித்தாள் மாலா.

''உன் நம்பிக்கை பொய்யின்னு நான் சொல்லலை. நீ அழறது எனக்குப் பிடிக்கலை. வேணா ஒண்ணு பண்ணேன். எதுக்குப் போன் அப்படி இப்படின்னு.. நேர்ல ஒரு தடவை பார்த்துப் பேசிட்டு அப்புறமா ஒரு முடிவிற்கு வா.. என்ன நான் சொல்றது சரியா?''

''ம்.''

''கொஞ்சம் சிரிச்சிட்டு சொல்லக்கூடாதா?''

''.........''

''ஒரு ஜோக் சொல்லட்டா?''

''........''



''ஏய்... இப்படி மூடியா இருக்காதே.. நீ இப்படி இருப்பதினால் ஏதாவது நடக்கப் போவுதா.. எவ்வளவு கலகலப்பா இருப்ப.. நல்லா காதலிச்சடி.. சரி.. ஒரு குளத்துல ஒரு யானை குளிச்சிகிட்டு இருந்ததாம்... கேக்றல்ல.'' காதில் சீண்டினாள்.

''கேக்கிறேன். சொல்லு.''

''அந்த யானை குளிச்சிட்டு இருக்கும்போது.. ஒரு சின்ன எறும்பு அந்த ஆற்றை சுத்தி சுத்தியும்.. எப்போ யானை குளிச்சிட்டு வெளியே வரும்னு காத்துகிட்டு இருந்ததாம். இதில் அடிக்கடி வேறு 'குளிச்சிட்டு சீக்கிரம் மேலே வா.. மேலே வா'ன்னு நச்சரிச்சிகிட்டே இருந்ததாம். யானைக்கு ஒரே கடுப்பு.. 'நீ குளிக்கிறதா இருந்தா ஒரு ஓரமா குளியேன்' இடமா இல்லைன்னு கேட்டுச்சாம். அதுக்கு எறும்பு 'நான் ஒன்னும் குளிக்க வரலை.. நீ மேலே வா'ன்னு ரொம்ப தெனாவட்டா சொல்லுச்சாம்.. சரீன்னு யானையும் கரையேறி மேலே வந்து நின்று 'என்ன?' அப்படீன்னு எறும்புகிட்டே கேட்டுச்சாம். எறும்பும் முழுசா யானையை ஒரு முறை சுத்தி மேலேயும் கீழேயும் பார்த்து, 'ஒண்ணுமில்லே போய் குளி'ன்னுச்சாம். யானைக்கு பயங்கர கோபம். 'இப்போ சொல்லப் போறியா இல்லையா?'ன்னு மிரட்டியதும்.. 'ஒண்ணுமில்லை. என்னோட ஜட்டி ஒன்னைக் காணோம்.. நீயாவது போட்டு இருக்கியோன்னு பார்த்தேன்'னு ரொம்ப அலட்சியமா சொல்லுச்சாம்.''

சுசித்ரா பற்கள் தெரியாமல் உதட்டை சுழித்துச் சிரித்தாள்.

''தெய்வமே! இந்த முகத்தை கொஞ்சம் கன்டினியு பண்ணு.. உன்னை சிரிக்க வைக்க இப்படி எல்லாம் கடியாய் ஒரு ஜோக் தேட வேண்டி இருக்கு.''

''ஸாரி மாலா!''

''ஸாரியா..? அப்புறம் ஜாக்கெட்.. இன்ஸ்கெட் அப்படி எதுவுமே இல்லையா?'' சிரித்தாள்.

பனிப்போர்வையாய் சுசித்ராவின் முகத்தில் மகிழ்ச்சி நிழலாய் படரத் தொடங்கி இருந்தது.

''வெளியே எங்காவது சாப்பிட்டியா?''

''....''

''சொல்லேன்டி... நீ சாப்பிட்டு இருக்க மாட்ட.. சாப்பிட வா'' கைகளைக் கோர்த்துப் பிடித்து இழுத்தாள்.

''வேண்டாம்!''

''பேங்கிற்கு போன் பண்ணி விக்ரத்தோட வீட்டு அட்ரஸை விசாரித்தால் என்ன?''

''ம்கூம்.. வேண்டாம்.''

''ஏன்?''

''அது அவருக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ?'' தயங்கினாள்.

''அப்புறமா கேட்கலாம்.''

''பேங்கை க்ளோஸ் பண்ணங்காட்டியும் போன் பண்ணனும். தெரியுமில்ல?''

''தெரியும்.. இதை விடு. உன் வீட்டுக்காரர் எப்போ வருவார்?''

''ஆறு மணிக்கு மேலாகும்.. ஏன் கேக்கிற?''

''சும்மாதான். நான் இங்கே இருக்கிறது?''

''தொந்திரவுதான் அப்படின்னா என்ன பண்ணப் போறே?'' மாலாவின் வார்த்தைகளில் லேசாய் கோபம் தெறித்தோடியது.

''....''

''ஏன் இப்படி மனச போட்டுக் குழப்பிக்கிற... முதல்ல வந்து சாப்பிடு... சாப்பிட்டு பேசாம படு.. 3.30க்கு மேல் எழுப்பி



விட்றேன். குளி.. இரண்டு பேரும் பேங்க் க்ளோஸ் ஆகங்காட்டியும் போய் போன் பண்ணிடுவோம்.. சரியா?''

''எனக்குப் பசிக்கலை.''

''பசிக்கலை.. சரி.. பசிக்காட்டியும் பரவாயில்லை வந்து சாப்பிடு'' தோளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினாள். சுசித்ராவின் முதுகைப் பிடித்து தள்ளிக் கொண்டே டைனிங் டேபிள் வரை கொண்டு வந்து.. உட்கார வைத்தாள்.

''சமத்தா உட்கார்ந்து இரு.. எல்லாத்தையும் எடுத்துகிட்டு வரேன்'' மாலா கிச்சனுக்குள் நுழைந்ததும் சுசித்ரா சேரை பின்னுக்குத் தள்ளி விட்டு எழுந்து.. பாத்ரூம் சென்று முகம்.. கை.. கால்களை.. குளிர்ந்த நீரினால் கழுவி விட்டு.. முகத்தை அழுத்தி துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவளுக்கு... அங்கிருந்த கண்ணாடிதான் கண்களில் பட்டது.

அருகில் போய் நின்று தன் முகத்தைப் பார்த்தாள்.

கண்கள் சுரந்து போய்.. லேசான ஆரஞ்சு நிறத்தில் காட்சியளித்தது. கன்னம் கூட அடிபட்டது போல் லேசான மினுமினுப்போடு வீங்கி இருந்தாற் போல் இருந்தது. இரண்டு முறை நாசியை உறிஞ்சிக் கொண்டு.. இடம் மாறியிருந்த ஸ்டிக்கரை இரு புருவங்களுக்கும் இடையில் வைத்து அழுத்தினாள்.

''ஏய்.. அங்கே என்ன பண்ற?'' மாலா ஹாலில் இருந்து கத்தினாள்.

''இதோ! வந்திட்டேன்'' அவசர அவசரமாய் வெளியே வந்தாள் சுசித்ரா.

மாலா அடுக்கி வைத்திருந்த ஐட்டங்களைப் பார்த்து புருவம் உயர்த்தியபோது.. காரணத்தோடு வீட்டு நினைவும் வந்து மோதியது.

சாப்பிட்டு முடித்தாளோ இல்லையோ.. இழுத்துக் கொண்டு போய் படுக்கையில் கிடத்தினாள்.

''கண்ணை மூடு.''

''.......'' மூடாமல் சிரித்தாள்.

''மூடு.''

''தூக்கம் வரலை.''

''ஏய்... அடம் புடிக்காதடி.. தூங்கு.. மென்டல் டென்ஷன் குறையும்.''

''இப்போ நான் டென்ஷனாவே இல்லை.''

''பரவாயில்லை.. கொஞ்ச நேரம் தூங்கு.''

''நீ என்ன பண்ணப் போற?''

''நானா.. இம்.. எதுக்கு லீவ் போட்டேன்.. இம்.. நானும் தூங்கப் போறேன்.''

''வா... என் பக்கத்தில் வந்து படு.''

''உன்னை தூங்க வைக்கிறேனோ இல்லையோ.. நான் தூங்கப் போறேன்டி.. இரு கதவை லாக் பண்ணிட்டு வர்றேன்'' என சுசியின் தலையில் தட்டிவிட்டுப் போனவள், அதே வேகத்தில் வந்து சுசித்ராவின் பக்கத்தில் வேகமாய் வந்து விழுந்து படுக்கையிலேயே கைகளை பின்புறம் கொண்டு போய் உடம்பை முறுக்கிக் கொண்டவள், அநாயாசமாய் திரும்பி தன் கையைத் தூக்கி தோழியின் மார்பில் போட்டாள்.

''என்னம்மா பக்கத்துல பாஸ்கர் இருக்கிறதா நினைப்பா?'' வந்ததில் இருந்து முதல் முறையாக தன் நிலை மறந்து சீண்டினாள்.

''ம்கூம்.. பக்கத்துல பாஸ்கரா இருந்தா.. நான் கை போடணும்ங்கிற அவசியம் இல்லை.''

''அப்படீன்னா?''



''அப்படீன்னா...'' என்றபடி சுசித்ராவின் காதருகில் தன்னை நெருக்கிக் கொண்டு.. முகம் சிவக்க கிசுகிசுத்தாள்.

''ச்சீய்... ஆனாலும் நீ ரொம்பப் பச்சைடி'' என்றபடி குறும்பாய் திரும்பியவளை இழுத்துப் பிடித்து..

''நான் பச்சையா... நாளைக்குப் பாக்கலாம்.. வருசம் ஒன்னா பெத்து போட்றது நீதான்.''

''ம்கூம்... நான் அரசாங்கத்துக்கு துரோகம் பண்ண மாட்டேன்.''

''நாம் இருவர் நமக்கிருவரா?''

''இல்ல.''

''நாம் இருவர் நமக்கொருவரா?''

''இல்ல.''

''பின்ன?''

''நாமே குழந்தைகள் நமக்கேன் குழந்தைகள்.''

''ம்.. பாக்கலான்டி'' என்றபடி தன் கைகளால் தோளில் அழுத்தமாய் அணைக்க நினைத்து... நினைவு வந்தாற்போல் சிரித்தபடி எதிர்புறமாய் நகர்ந்து கொண்டு...

''உன் மேலே கை போட்டால் உனக்குப் பிடிக்காதுல்ல.. மறந்துட்டேன். நிம்மதியாய் தூங்கு'' என்றபடி சுசித்ராவிற்கு முதுகு காட்டியபடி திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

சில விநாடிகள் கூட ஆகியிருக்காது.

மாலாவின் கழுத்தில் தன் முகத்தை இறுக்கமாய் - புதைத்துக் கொண்டு - தன் கைகளால் தோழியின் இடுப்பையும் இறுக்கமாய் இறுக்கிக் கொண்டாள் சுசித்ரா.

அடி வயிற்றில் இருந்து ஆவேசமாய் புறப்பட்ட சிரிப்பை, கஷ்டப் பட்டு அடக்கிய மாலா..

''என்னது பழக்கம் எல்லாம் புதுசா இருக்கு?''

''என்ன பழக்கம்.''

''இப்படி மூச்சு திணற மாதிரி கட்டிப் புடிக்கிறதுதான்.''

''இப்போ இருந்துதான்.''

''இப்போவா!'' ஆச்சர்மாய் கேட்டாள்.

''எஸ்.. மை டியர்.. மனசுக்குப் பிடிச்சவங்க... அன்பான வங்க... பரிசுத்தமான நட்பு.. இப்படிப்பட்டவங்க பக்கத்துல இருக்கும்போது.. அவங்க மடியில தலை வச்சி படுக்கிறது கை பிடிச்சிகிட்டு பேசறது.. குழந்தை மாதிரி அணைச்சிகிட்டு தூங்கறது..ஃபார் எக்ஸாம்பிள் அம்மா மாதிரி.. அந்த மாதிரி இருந்திட்டால் எல்லாம் மறந்து போய் உலகமே கைக்குள்ள அடங்கிட்ட தைரியம், நம்பிக்கை திருப்தி..''

''ம்கூம்.. மேடத்துக்கு நான் எந்த மாதிரி.''

''நீயா.. எப்போதும் வேறயா திங் பண்ணிப் பாக்க முடி யாத அளவு எனக்குள்ள இணைஞ்சிப் போன தோழி.. இப்போ.. இந்த விநாடி என் சித்தி, சித்தப்பா.. தம்பி எல்லாம் நீதான்.''

''ஐஸா.''

''உனக்கு எதற்காக நான் ஐஸ் வைக்கணும்'' என்று தன் தலையால் கழுத்தில் முட்டினாள். சிரித்தபடி... பின்னால் திரும்பாமலேயே தன் கையை வளைத்துக் கொண்டு போய்.. சுசியின் தலைக்கேசத்தை கலைத்து விட்டாள். திரும்பி தோழியின் முகத்தை நெஞ்சில் சுமக்க மனம் ஆசைப்பட்டது. ஆனால் துளிக்கூட அசைக்க விடாமல் இறுக்கிப் படுத்திருந் தாள் சுசித்ரா.

தூங்க ஆசைப்பட்டாலும்.. ஏனோ விடாப் பிடியாய் தூக் கம் வர மறுத்தது மாலாவிற்கு. இந்த அப்பாவிப் பெண்ணை



இந்த அளவு அழ விட்டவன் யார்? யார் அந்த விக்ரம்? முகம் அறியாத அவன் நல்லவனா? கெட்டவனா? கண்களுக்குள் பெரியதாய் கேள்விக்குறிதான் வந்து நின்றது. ஒருவேளை எல்லாம் எதிர் மறையாகவே நடந்து விட்டால்... இவள் தாங்குவாளா?

நேரம் வேகமாகக் கடந்து கொண்டிருந்தது.

மெல்ல மெல்ல சுசித்ராவின் கையும்.. இறுக்கமான பிடி யும் தளரத் துவங்கியது.

'தூங்கிட்டாளா?'

தன்னிடம் ஒட்டியிருந்தவளை மெல்ல விலக்கி விட்டு.. திரும்பிப் பார்த்தாள். குழந்தையாய் தூங்கிக் கொண்டிருந் தாள் சுசித்ரா.

ஃபேன் காற்றின் வேகத்தால் கலைந்து போய் அவள் முகத்தில் கிடந்த முடிகளை ஒதுக்கி விட்டு.. அவளின் தூக்கம் கலையாதவாறு நெற்றியில் தன் இதழால் ஒற்றி எடுத்து விட்டு.. கலைந்து கிடந்த போர்வையையும் சரியாய் சரி செய்து விட்டு... எழுந்தாள்.

கடிகாரத்தின் பக்கம் தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

மணி 3.10 என்று காட்டியது.

இன்னும் அரை மணி நேரம் கழித்து எழுப்பிக் கொள்ள லாம் என்று பெட்ரூமின் கதவை சாத்திவிட்டு ஹாலுக்கு வரவும். காலிங் பெல் ஒலிக்கவும் சரியாக இருந்தது.

'இந்த நேரத்தில் யார்? பாஸ்கர் வர நேரமும் இல்லையே?'

யோசித்தபடியே கதவைத் திறந்தாள்.

இருபத்தி ஒன்பது, முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன் லேசான பதற்றத்தோடு நின்றிருந்தான். ப்ளு கலர்

ஜீன்ஸ் பேன்ட்.. கருப்பு கலர் டீ சர்ட். பொருத்தம் இல்லாத காம்பினேஷன். ஆனாலும் அவன் கலருக்கும் முகச் சாயலுக்கும் எதை அணிந்து கொண்டாலும் அழகாய் இருப்பான் போல் தோன்றியது. முகத்தில் ஒவ்வொரு இடத்திலும் வேர்வை முத்துக்கள். வலது கையில் இருந்த தன் ஹீரோ ஹோண்டாவின் சாவியை பேண்ட் பாக்கெட்டில் செருகிக் கொண்டு, ஹேண்ட் கர்ச்சீப்பால் தன் முகத்தை அழுத்தமாய் துடைத்துக் கொண்டான்.

பின் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு..

''பாஸ்...க...ர்... வீ...டு.''

''இது பாஸ்கர் வீடுதான்.. நீங்க?'' பதில் சொல்லும் போதே எதிரே நிற்பவனை பாஸ்கரரோடு நெருக்கமாய் காலேஜ் ஆல்பத்தில் பார்த்ததாய் நெருடியது.

''அவர் வீட்டுல இல்லயே.''

''இன்னும் அவன் வரலையா?''

''இல்லை.. ஆறு மணிக்கு மேலாகும்.''

''இல்லங்க.. ஆபீஸ்க்கு போன் பண்ணினேன். உடம்பு சரியில்லை என்று லீவ் எடுத்து கொஞ்ச நேரத்துக்கு முன்னமே கிளம்பிட்டதாக சொன்னாங்க.''

''உடம்பு சரியில்லையா?'' பதறிப் போனாள்.

''அடடே.. நீங்க பயப்படற மாதிரி இல்லை. லேசா தலைவலிதான்னு அவனோட ஆபீஸ் கொலிக் சொன்னார்.''

''ஸாரி ஸார்.. வெளிலேயே நிக்க வச்சி பேசுறேன். உள்ளே வாங்க.''

''இல்ல பரவாயில்லை.. நான் வந்திட்டுப் போனதா சொல்லுங்க... 6.00 மணிக்கு மறுபடியும் வர்றேன். பாஸ்கர வீட்டுலேயே இருக்கச் சொல்லுங்க.''



''சொல்றேன்.. நீங்க யாருன்னே சொல்லவே இல்லையே.''

தன் பின்னந்தலையை தானே தட்டிக் கொண்டவன்.

''ஸாரி'' அசடு ஒன்றை வலுக்கட்டாயமாக வழிந்துவிட்டு.

''விக்ரம் வந்துட்டுப் போனேன்னு சொல்லுங்க'' என்றான்.

''விக்ரமா?'' பேரைக் கேட்டதும் உச்சந்தலையில் ஆணி அடித்தார் போல் அதிர்ந்தாள்.

# 4



**என்னவளே!**

**என்றாவது எப்படியாவது**

**நாம் பார்ப்போம்...**

**பேசத் தோன்றாமல்**

**விக்கித்து நின்று விழியால் விசாரிப்போம்!**

**இந்த நேசப் பிரிவில்**

**நீ நிச்சயம் இளைத்திருப்பாய்**

**இங்கு மட்டும் என்ன?**

**மனதிற்குள் நானும் மௌனமாய் அழுவேன்.**

**உன் நினைவுகளை**

**சேகரிக்கும் கவனத்தில்**

**உறக்கத்தை தொலைத்து**

**உதிரம் சுண்டக் காத்திருப்பேன்..**

''எக்ஸ்யூஸ்மி ஸார்'' மாலா தயக்கமாக சொன்னதுமே ''என்னங்க'' என்று திரும்பினான் விக்ரம்.

''உங்க நேம்!'' தயங்கினாள்.

''விக்ரம்'' ஏற்கனவேதான் பெயரைச் சொன்னோமே என்ற சலனத்திலேயே திரும்ப தன் பெயரைச் சொன்னான்.

''நிஜம்மா.. உங்க பேர் விக்ரம்தானே?''

முகத்தை தன் இரண்டு கைகளாலும் துடைத்துக் கொண்டு மாலாவை விழிகளை விரித்து அவன் பார்த்த பார்வையால் நக்கலான ஒரு சிரிப்பு தொக்கிக் கொண்டிருந்தது.

''எனக்குத் தெரிந்தவரைக்கும் என் பெயர் விக்ரம்தான்?''

''அதுக்கில்ல... நீங்க?''

''மேடம்.. நான் பாஸ்கரோட ப்ரண்டுதான்... இதுநாள் வரை வந்ததில்லையேன்னு கூட நினைக்கலாம். அதுக்கு சமயமும் சந்தர்ப்பமும் அமையல... எனக்குன்னு ஏதாவது பிரச்சனை என்றால்... பாஸ்கரிடம் டிஸ்கஸ் பண்ணுவது வழக்கம். அதுக்காகத்தான் வந்தேன். இன்னும் ஏதாவது என்னைப் பற்றி இன்பர்மேஷன் தெரியணுமா?''

''இல்லை'' வேகமாய் தலையாட்டி மறுத்தாள்.

''வரேங்க'' என்றபடி திரும்பி தன் பைக்கை அவன் தொட்டபோது..

''ஸார்!'' மீண்டும் அழைத்தாள்.

திரும்பினான்.

''எங்கே ஒர்க் பண்ணுறீங்க?'' கேட்டுவிட்டு அவளையும் அறியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''ஸ்டேட் பேங்கில்'' அவன் சொல்லி முடிக்கும் முன்னமே..



''உங்களுக்கு சுசித்ராவைத் தெரியுமா?'' கொஞ்சம் சத்தமாகவே கேட்டாள்.

'சுசித்ரா' என்ற பெயர் காது வழி நுழைந்ததோ இல்லையோ.. அத்தனை நரம்புகளும் புடைத்து எழுந்து.. ஜிவ்வென மின் சாரத்தை இன்டு இடுக்கு விடாமல் அத்தனை இடத்திற்கும் அனுப்பியது.

''என்ன! என்ன! என்ன பேர் சொன்னீங்க?'' பாய்ந்தோடி வந்து படிக்கட்டில் நின்றான்.

''சுசித்ரா'' என்றாள் மெல்ல. அவன் பதற்றம் இனம்புரி யாத ஒரு நிறைவை, நேரம் காலம் தெரியாமல் அவளுக்குக் கொடுத்தது.

''எந்த ஊர்'' குரல் நடுங்கியது.

''மதுரை.. ஆர்க்கிடெக்.''

''மை காட்.. என்னால.. என்னால... நம்பவே முடியலை.. ஐம் ஸோ ஹேப்பி.. மேடம் சுசித்ராவை உங்களுக்குத் தெரி யுமா?'' அதற்கு மேல் பேச முடியாமல் குரல் கமற... கண்ணீர் உணர்ச்சி வேகத்தில் அணைக்கட்டத் துவங்கியது.

மாலாவிற்கு பொட்டில் அறைந்தார் போல் நச்செனப் புரிந்தது. புரிந்த வேகத்திலேயே சந்தோஷம் கொப்பளித்தது.

''ப்ளீஸ் கம்.. உள்ளே வாங்க'' சந்தோஷமாய் அழைத்தாள்.

தயக்கமாய் அதே சமயம் மிகுந்த எதிர்பார்ப்போடு உள்ளே நுழைந்தான் விக்ரம்.

''உட்காருங்க!''

உட்கார்ந்தான்.

''காபி! டீ..!'' என்றாள்.

''நோ... தேங்க்ஸ்... சுசித்ரா பத்தி.''

''ப்ளீஸ் ரிலாக்ஸ்! சுசி என்னோட ப்ரண்ட்தான். அவளோட லவ்வர் பேர் விக்ரம்னு சொன்னதா நினைவு. ஸ்டேட் பேங்கல ஒர்க் பண்றதா கூட சொன்னா... அந்த க்யூரியாசிட்டிலதான் கேட்டேன். ஆனா.. உங்களோட பதற்றத்தையும் ஆர்வத்தை யும் பார்த்தா.. யூ ஆர் எ ரைட் ஃபர்ஸன்.. என்னமோ சொல் வாங்களே.. குருவி உட்கார பனம்பழம் விழுந்ததுன்னு.. அது மாதிரி இருக்கு.''

''இல்ல மேடம்! நீங்க சொன்ன பழமொழி தப்பு... கும் பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரின்னு சொல்லு வாங்களே.. அப்படி இருக்கு.''

''நீங்க.''

''நான் இங்கே பாஸ்கர பார்க்க வந்ததே சுசித்ராவைப் பற்றி பேசத்தான்.''

''என்ன பேசறதுக்கு?''

''அது... வந்து.''

''தயங்காமச் சொல்லுங்க.. பாஸ்கர் உங்களுக்கு எந்தளவு நெருக்கமோ.. அதைவிடப் பல மடங்கு நெருக்கமானவங்க நானும் சுசியும்.. சொல்லுங்க.''

சுற்றுப்புறமும் நாலைந்து முறை திரும்பிப் பார்த்தவன்.. வறண்டு போயிருந்த தொண்டையில் இல்லாத எச்சிலை பல முறை விழுங்கி வைத்து விட்டு... மெல்ல செருமி ஆரம்பித்தான்.

''நான் சுசியைப் பார்த்ததே ட்ரையினிங்காகப் போயிருந்த போதுதான்.''

''இம் ஒரு நிமிடம்'' இடைமறித்தவள் தொடர்ந்தாள்.

''நீங்க ரெண்டு பேரும் லவ் பண்ணியது.. திரும்ப மெட் ராஸ் வந்து கிட்டத்தட்ட ஆறு ஏழு மாதமாய் எந்தக் கடி



தமோ.. போன் தொடர்போ இல்லாதது.. நீங்க மாதக் கணக் கில் மெடிக்கல் லீவ் போட்டு இருந்தது. இன்னைக்குதான் ஜாயின் பண்ணியது.. வந்ததுமே பெண் பார்க்கப் போன வரை எல்லாமே தெரியும். ஸோ.. உங்க முடிவு என்னன்னு மட்டும் எனக்குத் தெரிந்தால் போதும்'' என்றாள்.

ஆச்சர்யமாய், நம்ப முடியாமல் பார்த்தான்.

''இம் சொல்லுங்க.. சுசியை கல்யாணம் பண்ணிக்கிற ஐடியா இருக்கா? இல்ல?''

''நோ... நோ... நீங்க நினைக்கிற அளவு நான் மட்டமான வன் இல்லை. சில நேரங்கள்ல சில சந்தர்ப்பங்களில் நம்மை அளவுக்கதிகமாக நேசிக்கிறவங்ககிட்டயே வெறுப்பையும் தவறானவனோ என்ற பெயரையும் சம்பாதித்து விடுவோம். அதற்கு என்ன காரணம்னு எனக்கே தெரியலை.. விதியா.. சந்தர்ப்பமா? சூழ்நிலையா.. ஒண்ணும் புரியலை.. என் சுசிக்கு கடிதம் போட்டு இருந்தாலோ.. இல்ல போன்ல பேசி யிருந்தாலோ.. என் பாரத்தை இறக்கின மாதிரி நான் ரிலீவா இருந்திருப்பேன். அவள் கடிதம் போட்டு.. அவள் வேத னையைக் கொட்டிட்டா.. என்னால முடியலை. அவளுக்கு பொய்யா போலியா ஒரு கடிதம் எழுதும் துணிவு எனக் கில்ல.. என்னோட எழுத்துக்களும் சரி.. பேச்சும் சரி அவளை சில நொடிகூட சஞ்சலப்படுத்தக் கூடாது. ஆனா இப்போ பிரச்சனை பெரிசாகி விடும் போல் தோன்றுது.. எத்தனை நாளைக்குத்தான் இதை என் அக்காவிடம் மறைக்க முடியும்.. அதனால சுசியை நேரில் போய் பார்த்து.. பேசி.. ஏதாவது ஒரு நல்ல முடிவு எடுக்கணும். அதற்கு பாஸ்கரோட ஹெல்ப் வேணும்.''

''ஏன் நான் ஹெல்ப் பண்ணக் கூடாதா?''

அவனால் எதையும் பேச முடியவில்லை.

''உங்களைத் தேடி அவள் நேற்றே மெட்ராஸ் வந்தாச்சி.. ட்ரான்ஸ்பர் ஆர்டரோடு...''

''என்ன சொல்றீங்க?'' எழுந்து நின்றான்.

''உண்மைதான். காலையிலேயே ஜாயின் பண்ணிட்டா... உங்க பேங்க் கூட போன் பண்ணினா.. அங்க யாரோ நீங்க பெண் பார்க்கப் போயிருப்பதாகச் சொல்லி இருக்காங்க. போச்சு.. வந்ததில் இருந்து ஒரே அழுகை. சமாதானப்படுத்தி தூங்க வச்சிருக்கேன்.''

''எங்கே... எங்கே இருக்கா?''

''அவசரப்படாதீங்க.. உங்க ஆள் இங்கேதான் இருக்கா.''

''நான் பாக்கணும்'' துடித்தான்.

''தூங்குறாளே.''

''ப்ளீஸ்.'' கெஞ்சினான்.

''.......''

''டிஸ்டர்ப் பண்ணமாட்டேன். முகத்தை மட்டும் பார்க்கிறேன் ப்ளீஸ்'' பரிதாபமாகக் கெஞ்சினான்.

அவனைப் பார்க்கவே பாவமாய் இருந்தது மாலாவிற்கு.

பெட்ரும் அறையைச் சுட்டிக் காட்டி...

''அங்கேதான் இருக்கிறாள்'' என்றாள்.

''போலாமா?''

''உங்க ஆளுதானே அவ.. தாராளமாகப் போகலாம்.. நான் காபி போட்டு எடுத்துக்கிட்டு வர்றேன்'' என்றபடி கிச்சனில் தன்னை மாலா திணித்துக் கொண்டதும்.

நடக்காமல் ஓடிப் போய் கதவைத் திறந்தான்.



புழுவாய் சுருண்டு.. முழங்கால் முட்டியை நெஞ்சோடு சேர்த்துப் படுத்திருந்தாள்.. பேன் காற்றில் திரும்பப் போர்வை லேசாய் விலகியும்.. முடிகள் அங்கிங்கும் அலைந்தபடியும் இருந்தன. அவள் முகம் கண்களுக்கு தென்பட்டதோ இல்லையோ.. குப்பென உள்ளுக்குள் இருந்த அத்தனை நந்தவனமும் ஒன்றாய் ஒருசேர பூத்துக் குலுங்கியது.

அருகே சென்றான். சுசித்ராவின் முகத்தை விரல்களால் வருடினான். புருவம், இமை, நெற்றி, கன்னம், காது, இதழ், நாசி என்று அவனின் ஆள் காட்டி விரல் கோலம் போட்டது. எப்படி இருந்தவள். இந்த சில மாதங்களில் எப்படி மாறிப் போனாள்?

என்னால்தானோ? குற்ற உணர்வு தலை தூக்கியது.

என்னை நம்பி, என்னைத் தேடி.. இங்கேயே வந்து விட்டாயடி அப்பாவிப் பெண்ணே. தனியாய் பக்கத்து ஊருக்குச் செல்லவே யோசிப்பவளாயிற்றே.. இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்.. எல்லாம் என் மேல் உள்ள காதலினாலா? கரகரவென கண்ணீர் சுரந்தது. அவள் மேல் விழாதபடி.. சுண்டி வேறு பக்கம் எறிந்தான்.

மென்மையாய் அவள் முகம் தட்டினான்.

''சுசி?''

குரல் அவன் காதுகளுக்கே கேட்கவில்லை. இதழ் விட்டு காற்று பிரிய மறுத்தது. இதயம் சுசி சுசி என்று கதறினாலும்.. இதழ் மட்டும் ஏனோ.. பசை போட்டு ஒட்டிக் கொண்டது. நாக்கு சுழல மறுத்தது.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு.. எச்சில் விழுங்கி.. செருமிப் பார்த்துக் கொண்டு...

''சுசி!'' என்றான்.

பாவம் அவளுக்கு நல்ல உறக்கம்.

திரும்பவும் முகத்தை ஆட்டி

''சுசி!'' என்றான்.

''.........'' லேசாய் புரண்டாள்.

''கண்ணம்மா... ஏய்...'' வார்த்தைகளில் அமுதம் தடவினான்.

''.........'' புரண்டு மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவள் தோளை மலர் மாலையாய் அள்ளித் தூக்கி... உட்கார வைக்க முயற்சித்து... தூக்கத்தில் தலை சரிய துவண்டவளை.. தோளில் சாய்த்துக் கொண்டு...

''சுசித்ரா.''

''..........''

''ஏய்.''

தனக்குள் ஏற்பட்ட அசைவை வைத்து.. விழிகளை பிரிக்க முயற்சித்தாள். கண் திறப்பதற்கு முன்பாகவே.. விக்ரமிற்குப் போன் பண்ணப் போகணுமே.. மாலா எழுந்து விட்டாளோ என்ற எண்ணம் உள்ளுக்குள் எதிரொலித்துக் கொண்டே இருக்க..

அனலில் கை வைத்தது போல் துடித்து எழ..

அவள் தோளைப் பிடித்தபடி மிக அருகில்.. கண்கள் கலங்க.. இதழ் புன்னகையை சுமக்க, பார்வை ஏக்கமாய் நிற்க.. ''விக்ரமா?''

நம்பவே முடியவில்லை. வேகமாய் விலகி போர்வையை உதறியவள்.. கனவா, நனவா என முடிவுக்கு வர முடியாமல் 'மாலா' என வீறிட வாய் திறக்க வேகமாய் அவள் வாய் பொத்தினான் விக்ரம்.



''ஏய் கத்தாத.. நான்தான்.''

நம்ப முடியாமல் திருதிருவென விழித்தாள். அவள் வாயில் இருந்து தன் கைகளைக் கொஞ்சம் கூட நகர்த்தாமல்.. மெல்ல இன்னும் நெருங்கி..

''என்னடா செல்லம்.''

அவன் கைகளை எடுத்துவிட்டு... தன்னையும்.. தன் அறையையும் சுற்றி சுற்றிப் பார்த்து... இது கனவுதானோ என்ற உச்சக் கட்ட நம்பிக்கையில் தன்னைக் கிள்ளியும் பார்த்தாள்.

வலிக்காதது போல்தான் தோன்றியது.

''என்...ன...'' திக்கினாள்.

''நம்ப முடியலையா'' என்றபடி வேகமாய் அவள் நெற்றியோடு தன் நெற்றியை வேகமாய் மோதினான்.

நச்சென அவன் இடித்த இடி.

'உஸ்' என அவளையறியாமல் சொல்லும் அளவு வலியை உண்டு பண்ணியது. அதன் பிறகுதான் மின்சாரம் பாய்ந்தார் போல் உணர்ந்தாள். 'தான் தேடி வந்தவன், ஆறு மாதமாக தன்னை அழ வைத்தவன். தன்னை அணைத்தபடி தன்னிடமா?' அதுவும் மாலா வீட்டுப் படுக்கையில்.. அத்தனையும் ஏதோ அற்புதம் போல் தோன்றியது.

''விக்ரம்... நீங்களா?'' கண்ணீர் பெருகி கன்னத்தில் வழிந்து... உதட்டுக்குள் நுழைந்து உப்பு கரிக்கத் துவங்கியது.

''நானே தான்... உன்னோட விக்ரம்தான்'' உன்னோட விக்ரம் என்பதை அழுத்தி உச்சரித்தான்.

''இங்கே... எப்படி?''

''இது நான் கேட்க வேண்டிய கேள்வியாக இருந்தாலும்.. ''இது நான் கேட்க வேண்டிய கேள்வியாக இருந்தாலும்..

''ஏன் லட்டர் போடலை அவன் கைகளைத் தன் கைகளுக்குள் அழுத்திக் கொண்டு கேட்டாள்.

''போட்டு இருக்கலாம்.. ஆனா...''

''நான் என்னென்னமோ நினைச்சிட்டேன் தெரியுமா... உங்களைப் பார்த்துட்டுதான் உயிரை விடனுங்ற கடைசி நம்பிக்கையோடதான். இவ்வளவு தூரம்...'' அதற்கு மேல் பேச முடியாமல் குரல் எடுத்து அழத் துவங்கியவளை..

''ஏய்... வேண்டாம்.. அழாத.. அதான் வந்திட்டேன்ல'' என்றபடி கதவு பக்கம் பார்வையை சுழற்றி விட்டு.. அவளை இழுத்து நெஞ்சில் சாய்த்துக் கொண்டு..

''இப்போ நீயும் நானும் அழ வேண்டிய நேரம் இல்லை. நாம ரெண்டு பேருமே வேறு ஒருவர் வீட்டில் இருக்கிறோம். ப்ளீஸ் கன்ட்ரோல் யுவர்செல்ப்.''

''என்னால முடியலை'' அவன் மார்பில் இருந்து முகத்தை அவளால் எடுக்க முடியவில்லை. எங்கே இப்போது விட்டு விட்டால் திரும்பவும் ஆறு மாதத்திற்கு அடையாளம் இல்லாமல் போய்விடுவானோ என்ற பயமே, அவனை இன்னும் இறுக்கிக் கொள்ளச் சொல்லியது.

''ஏன் எனக்கு லட்டரே போடலை. மெடிக்கல் லீவாமே உடம்புக்கு என்ன?'' தலைதூக்கி அவன் முகம் பார்த்தாள்.

''என் உடம்புக்கு ஒன்னும் இல்லை.. எனக்கு என்ன ஆகப் போவுது. மனசும் உயிரும் உங்கிட்ட இருக்கேம்மா.. அக்காவுக்குதான் உடம்பு சரியில்லை.''

''என்ன.. அதுக்கும் லட்டர் போட்றதுக்கும் என்ன சம்பந்தம்.''

''உனக்கு லட்டர் எழுதினால் ஏதாவது புலம்பிடுவேன். உன்னை, உன் உணர்வுகளை நான் காயப்படுத்த விரும்பல. கஷ்டம் என்னோடு மட்டும் போகட்டுமே.''



''அப்புறம் எதுக்கு உறவு.. சொந்தம் எல்லாம்.''

''எனிவே.. உன்னோட கண்கள்ள கண்ணீர் வருமோன்னு நினைச்சாலே... மனசெல்லாம் வெந்து போயிடும்மா.. உனக்கு லட்டர் எழுதியிருந்தால் கூட ஒரு சில வினாடிகள் உன்னை மறந்திருப்பேனா என்று தெரியவில்லை. ஆனா.. உன் லட்டரை எல்லாம் படிச்சி படிச்சி நான் அழாத ராத்திரியே இல்லை. உன் லட்டரை எல்லாம் நெஞ்சோட அணைச்சிகிட்டுதான் படுத்து இருப்பேன்.

''ஒரு லட்டர் கூடவா போட முடியலை?'' மீண்டும் மீண்டும் அதையேதான் கேட்டாள்.

''சொல்றேன். அப்புறமா சொல்றேன். இப்போ வேண்டாம் ப்ளீஸ்டா செல்லம்.''

''பொண்ணு பாக்கப் போனீங்களாமே?'' லேசான வருத்தம் குரலில் இழையோடியது.

''அதுக்குத்தான் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுனியா? பைத்தியக்காரி உன்னைத் தவிர விளையாட்டுக்குக் கூட வேற ஒருத்தியை நினைக்க முடியாது. கட்டாயம் போய் பார்த்தேன். அவ்வளவுதான். கல்யாணமா பண்ணிகிட்டு வந்துட்டேன்? இங்கே ஏன் வந்தேன்னு தெரியுமா?''

இமையை மட்டும் உயர்த்திப் பார்த்தாள்.

''மாலாவோட ஹஸ்பென்ட் பாஸ்கர் என் க்ளோஸ் ப்ரண்ட் என்னோட அக்கா பெண் பார்க்கிற அளவு வந்துட்டதினால்... இனியும் சும்மா இருக்கக் கூடாது. ஏதாவது சீக்கிரம் முடிவெடுத்து நம்ம கல்யாணத்தை நடத்திடனுங்கற எண்ணத்தோடதான் இந்த நேரத்தில் இவனைத் தேடி இங்கே வந்தேன். ஆனா.. உன்னைப் பார்ப்பேன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை.. உன் பெயரை மாலா சொன்னபோது... எனக்குள் உயிர் தண்ணி ஊத்தின மாதிரி இருந்தது தெரியுமா?'' என்றபோது அவன்

கைகால் பட்டாலே எம்பிக் குதிப்பவள். மேலும் அவனை நகர விடாமல் வேகமாய் அணைத்துக் கொண்டாள்.

ஒருவரை ஒருவர் பார்த்ததுமே படபடவென பேசிக் கொண்டவர்கள், அதன் பிறகு மௌனம் சாதிக்கத் தொடங்கினர். மௌனத்திலே அவள் கேள்விகள் கேட்க.. அதை அவ்வளவு சரியாய் புரிந்து கொண்டு.. தன் அணைப்பாலும்.. தன் கோதலாலும் பதில் சொல்லிக் கொண்டிருந்தான் விக்ரம்.

செருமியபடி கதவை தன் வலது கையால் தட்டினாள். ஏடாகூடமான நேரத்தில் தான் போய் நின்றுவிடக் கூடாதே என்ற முன்னெச்சரிக்கை உணர்வு, அவளை இலகுவாய் உள்ளே வராமல் தடுத்து நிறுத்தியது. காதலித்தவள், காதலித்துக் கொண்டு இருப்பவள், காதலர்கள் பற்றி தெரியாதா என்ன?

மாலாவின் வரவு தெரிந்ததுமே.. இருவரும் விலகி.. எழுந்து நின்றனர். உள்ளே வந்த மாலாவின் இதழில் கள்ளச் சிரிப்பு கலங்கரை விளக்கமாகவே தெரிந்தது. கையோடு கொண்டு வந்த காபி டம்ளரை இருவரும் மறுக்க, மறுக்க கைகளில் திணித்தாள்.

''என்னடி! இவர்தானா?'' சுசியின் தோளை இடித்தாள்.

''........'' பேசாமல் சிரித்தாள் சுசித்ரா.

''சமாதானம் ஆயாச்சா.. இல்லை சமாதானப்படுத்திட்டாரா.. புடிச்சி வாங்கு வாங்குன்னு வாங்கணும்னு நினைச்சேன்.. பார்த்தா பாவமா தெரிஞ்சது.. அதான் விட்டுட்டேன்.''

''பாஸ்கர் வந்துட்டானா மேடம்'' விக்ரம் தலை குனிந்தபடியே கேட்டான்.

''இங்க பாருங்க மிஸ்டர் விக்ரம்.. இந்த அம்மா, மேடம் எல்லாம் வேண்டாம். மாலான்னே கூப்பிடலாம். நானும் ஒண்ணும் நினைக்க மாட்டேன். பாஸ்கரும் ஒன்றும் நினைக்க



மாட்டார். மேடம்னு சொல்லி தயவு செய்து உங்களைவிட என்னைப் பெரியவள் ஆக்க வேண்டாம். இது என்னோட தாழ்மையான விண்ணப்பம்.''

தலையாட்டி சிரித்தபடியே வெளியே வந்து.. ஹாலில் உள்ள சோபாவில் வந்து அமர்ந்து கொண்டான் விக்ரம்.

பாஸ்கர் அடுத்த அரை மணி நேரத்தில் வந்தான். வந்தவனுக்கு சுசித்ராவின் காதலன் தன் நண்பன் என்று அறிந்தபோது வியப்பும் சந்தோஷமும் போட்டியிட குதூகலித்தான். நான்கு பேர் மட்டுமே கொண்ட குட்டி மாநாடு ஒன்று நடந்தது.

இனிமேல் ஒரு நிமிடம் கூட விக்ரமின் காதலியாக தன்னால் தவிக்க முடியாது என சுசித்ரா அழத் துவங்க. மாலாவும் வேகமாய் அதை ஆமோதித்தாள். விக்ரம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஒரு மாதத்தில் இருந்து ஒரு வாரம் வரை டைம் கேட்டும் பார்த்தான்.

'ம்கூம்' எதையுமே மாலாவும், சுசித்ராவும் காதில் வாங்கவில்லை. ஒவ்வொரு காதிலும் ஒவ்வொரு ஓட்டை இருக்கிற கணக்கில் ஒன்றில் வாங்கி மற்றொன்றில் விட்டனர். சுசித்ராவை இனியும் சமாளிக்க முடியாது என்று மிகத் தெளிவாகத் தெரியவும். மிகுந்த வருத்தத்தோடு.. கஷ்டத்தோடு.. நேரம் காலம் எதுவும் பார்க்காமல் பாஸ்கரையும் மாலாவையும்.. ஒரு ஒற்றை நாடி அய்யரை மட்டும் சாட்சியாக்கி பக்கத்தில் இருந்த அம்மன் கோவில் ஒன்றில் மஞ்சள் கயிறு ஒன்றை சுசித்ராவின் கழுத்தில் கட்டினான் விக்ரம்.

விக்ரம் சுசித்ராவின் உடல் சங்கமத்திற்கு பலமான ஏற்பாட்டை மாலா தங்கள் இல்லத்திலேயே ஆரம்பிக்க.. வருகிறேன் என வெளியே சென்ற விக்ரம்.. இரவு ஒன்பது, பத்து, பதினொன்று, பனிரெண்டு என ஆகியும் வரவே இல்லை.

ஒன்பது மணிக்கே உள்ளே சென்ற சுசித்ராவும், உறக்கம் வராமல் அங்கிருந்த அத்தனை புத்தகத்தையும் வரி விடாமல்

படித்து.. கைகளைப் பிசைந்தபடி.. விநாடிக்கு விநாடி மணி பார்ப்பதிலேயே காலத்தைப் பிடித்துத் தள்ளினாள்.

நேரம் ஆக ஆக பாஸ்கர் முகத்திலும், மாலாவின் முகத் திலும் 'ஈ' ஆடவில்லை. ஒருவரை ஒருவர் பீதியோடு பார்த்துக் கொண்டனர். தங்கள் இருவரையும் சாட்சியாகக் கொண்டு ஒரு பெரிய அசம்பாவிதம் நடந்துவிட்டது என்பதை மிகவும் சிரமப்பட்டு உணரத் தொடங்கினர்.

# 5



**அன்பே!**

**உள்ளம் உடைந்து**

**ஊமையாய் அழுகிறேன்!**

**என் விழிக்குள்**

**கோடி குண்டுசியை**

**கொட்டிக் கொட்டி**

**அழுத்தியது போல்**

**கொடூரமானதல்லவா உன் பிரிவு!**

இரவு 1.05 என்பதை பெரிய முள்ளும் சிறிய முள்ளும் ஒன்றாய் சேர்ந்து காட்டியது. உறக்கம் கண்களைச் சுழற்றினா லும், விடாப்பிடியாக முகம் கழுவி முகம் கழுவி, விழித்திருந் தார்கள் பாஸ்கரும் மாலாவும்.

அறையைத் தட்டி சுசித்ராவையும் பார்க்கவில்லை. பார்க்க இவர்களாலும் முடியவில்லை. வெளியே வர அவளாலும் முடியவில்லை.



''அவன்தான் அப்பவே சொன்னான், வேண்டாம் கொஞ்சம் டைம் கொடுங்கன்னு. ரெண்டு பேரும் கேட்டீங்களா?'' முறைத் தான் பாஸ்கர்.

''அதுக்கு இப்போ என்ன.. தாலி கட்டச் சொன்னது தப் புன்னு எனக்குத் தோணலை.. எப்போ இருந்தாலும் அவ கழுத்துல கட்ட வேண்டிய தாலிதானே அது?''

''எல்லாம் சரிம்மா.. ஆனா விக்ரம் விருப்பப்பட்டு கட் டலையே.. அவசரப்பட்டுட்டோம்னு தோணுது.''

''தோணும். நல்லாவே தோணும். ஏன் தோணாது.. காத லிக்கும்போது மட்டும் இனிக்குது. கல்யாணம்னா பின்னங் கால் உதற ஓட்டம். அப்படிப் பட்ட ஜாதியா உங்க நண்பர்?'' பொங்கி வந்த கோபத்தை பாஸ்கரிடம் கொட்டினாள்.

''அது...'' அவன் மேலும் தொடங்கும் முன்பே பஸ்ஸர் ஒலித்தது. வேகமாய் பாஸ்கர் எழுந்தான். தன்னை தடுக்கி விழ முயற்சி செய்த கைலியை இறுக்கி மடித்துக் கட்டிக் கொண்டு.. கதவைத் திறந்தான்.

விக்ரம்தான் பேயறைந்தாற்போல் நின்றிருந்தான்.

''உள்ளே வாடா.. என்னடா ஆச்சி'' கையைப் பிடித்தே உள்ளே இழுத்து விட்டான்.

மாலாவும் எழுந்து நின்றாள்.

''என்னடா ஆச்சி?''

''சுசித்ரா எங்கே?''

''அவ ஒன்பது மணிக்கே படுக்கப் போய்ட்டா'' கொஞ்சம் காட்டமாகவே கூறினாள். மாலாவை தயக்கமாகப் பார்த்த விக்ரம். தலையைக் குற்ற உணர்வோடு தாழ்த்திக் கொண்டான்.

''என்னடா'' பாஸ்கர் விடவில்லை.

''அக்காவிற்கு ரொம்ப சீரியஸா போயிடுச்சி. ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணி.. கூடவே இருக்க வேண்டியதாகி விட்டது. அரை மணி நேரத்திற்கு முன்புதான் டாக்டர்ஸ் நல்ல பதிலைச் சொன்னாங்க. அதுக்கப்புறம் தான் இங்கே ஓடி வர்றேன்.''

''ஒரு போன் பண்ணி இருக்கலாமில்ல?'' தயக்கமாக மாலா கேட்டதும்.

''அந்த நேரம் எதுவுமே எனக்குப் புரியலை.''

''சரி.. சரி.. போய் அந்தப் பொண்ணை பார்'' அவசரப் படுத்தினான் பாஸ்கர்.

விக்ரம் கதவில் கை வைத்தபோதே.. சத்தம் இல்லாமல் இடைவெளி கொடுத்து.. அவனை உள்ளே நுழைய அனுமதித்தது. உள்ளே நுழைந்தவன் கதவைத் தாழிட்டான்.

தாழிடும் சத்தம் கேட்டு, முழங்காலோடு முகம் புதைத்து இருந்தவள் நிமிர்ந்து பார்த்தாள். அவனைப் பார்த்ததும் குபீர் என சந்தோஷம் கண்களில் ஒட்டிக் கொண்டது. கட்டில் விட்டு விரைவாக இறங்கி.. அவனை நேருக்கு நேராய் பார்த்து... சந்தோஷம் சம்பிரதாயத்திற்காக கூட அவனிடம் இல்லாததை அறிந்து..

''என்னாச்சி..'' என்றாள்.

அவள் கேட்டது காதில் விழுந்தாலும்.. அறையைத்தான் சுற்றிப் பார்த்தான். எத்தனையோ முறை அவன் கனவு கண்டு ரசித்த காட்சி. உட்கார்ந்தால் ஒரு அடிக்கு உள்ளே இழுக்கும் போம் மெத்தை.. கட்டில் முழுக்க ரோஜா மல்லியாய் இறைந்து கிடந்த கட்டில் மேல் வரி வரியாய் சரம் சரமாய் கலர் கலராய் கட்டுக் கட்டாய் பூக்கள் தொங்கிக் கொண்டு இருந்தது. அத்தனையும் அவன் மனம் போல வாடத் துவங்கியிருந்தது. சோர்வைத் தாங்கிக் கொண்டு தன் உயிரோடு கலந்தவள்



நின்றாலும்.. தேவலோக மூன்று அழகியரும் ஒன்றாய் வந்து நின்றது போல் இருந்தது. இப்படி ஒரு இடத்தில் சுசித்ராவை தனியே சந்திக்க வேண்டும் என்று எத்தனை இரவுகள் புரண்டு இருப்பான்.

பட்டுச் சேலையில் அவள் இல்லை. ஆனால் பட்டை தீட்டப்பட்ட வைரமாய் நின்றாள். அதிக அலங்காரம் இல்லை. ஆனால் அள்ளி அணைத்துக் கொள்ளும் அளவு அமைதியாய் இருந்தாள். கையில் கழுத்தில் நகைகள் இல்லை. ஆனால் நழுவ விடாத பொக்கிஷமாய் புன்னகையை அள்ளிப் பூசிக் கொண்டு நின்றாள். தலையில் இருந்து கால் வரை நாலைந்து முறை உற்றுப் பார்த்தான். இன்னும் சிறிது நேரம் அவளைப் பார்த்தால்... மனம் மாறி விடுவோமோ என்று பயப்படத் தொடங்கி.. இமைகளை கீழே இறக்கிக் கொண்டான்.

''என்ன?'' அவன் கைகளைப் பற்றினாள்.

அவள் கை பட்டதுமே ஃப்ரிஜ்க்குள் நுழைந்தார் போல் உடல் சிலிர்த்து அடங்கியது. வேறு வழி தெரியாமல் அவள் கைகளை நாசுக்காக விலக்கி விட்டு.. கட்டிலின் விளிம்பில் போய் அமர்ந்தான். அவளும் அவன் அருகில் வந்து உட்கார்ந்து.. அவன் முகத்தைத் திருப்பினாள்.

''என்னய்யா... என்னாச்சி?'' பார்வை கெஞ்சியது.

''..........''

''கட்டாயப்படுத்தி தாலி கட்ட வச்சிட்டேன்னு என் மேல் கோபமா?''

இல்லை என வேகமாய் தலையாட்டி மறுத்தான்.

''பின்ன என்ன?''

''என்மேல நம்பிக்கை இருக்கா?''

''இதென்ன கேள்வி.. அபத்தமா? நம்பிக்கை இல்லாம தான், இவ்வளவு தூரம் தேடி வந்து கட்டாயப்படுத்தி தாலி கட்டிக்கிட்டேனா?''

''அதில்லம்மா.. இவ்வளவு லேட்டா வந்தேனே.. என்மேல கோபம் வரலையா?''

''ம்கூம்.. கோபம் வரலை. லேட்டாக லேட்டாக என்னாச்சோ.. என்னாச்சோன்னு மனசு பக்கு பக்குன்னு அடிச்சிகிச்சி.''

ஒரு நீண்ட பெருமூச்சு அவனிடம் இருந்து வெளிப்பட்டது.

''சுசி.''

''ம்.''

அவனருகில் நெருங்கி அவன் கழுத்தில் கை வைத்தாள். அவள் பார்வையும், மூச்சுக் காற்றும் விடாப் பிடியாய் தொட்டுப் பேசத் துடிக்கும் அன்பின் வீரியமும் ஆட்டிப் படைக்கத் துவங்க.. நகர்ந்து உட்கார முடியாமல் தத்தளித்தான். அவன் கழுத்தில் தன் விரலால் நெருடியவள்.

''என்ன..'' என்றாள்.

''என்னைப் பற்றி உனக்குத் தெரியும்தானே?''

''இம்'' தலையாட்டினாள்.

''என்னைப் பற்றினா.. நான் மட்டும் இல்லை.. நான் பிறந்து வளர்ந்தது.. எல்லாமே.''

''ம்... அதைத்தான் ஏற்கனவே சொல்லி இருக்கீங்களே.''

''என்ன சொன்னேன்.''

''இந்த நேரத்தில் அது எதுக்கு?''

''இல்லை. நான் என்ன சொன்னேன்னு சொல்லு.''



புரியாமல் அவனைப் பார்த்தாள்.

''சொல்லு சுசி.''

''சீரியஸாதான் கேக்குறீங்களா?''

''ஆமான்டா?''

''உங்க குடும்பம்னு எடுத்துக்கிட்டா... இப்போ நீங்களும் உங்க விதவை அக்காவும்தான். ரொம்ப ஆச்சாரமான.. சாஸ்திர சம்பிரதாயத்தை கடைப்பிடிக்கிற குடும்பம். சின்ன வயசிலேயே அப்பா, அம்மா இறந்திட்டாங்க. உங்கப்பாவிற்கு இரண்டு தாரம்.. பெரியவங்களோட பொண்ணுதான், உங்கக்கா... சின்னவங்களோட பையன் நீங்க.. தாய் வேற வேறயாக இருந்தாலும்.. உங்களுக்கு எல்லாமே உங்க அக்காதான். இரண்டு வயசுலயே தாயை இழந்த உங்களுக்கு.. அன்னையில இருந்து இன்னைய வரைக்கும் நீங்க பார்க்கிற தாய் முகம் உங்கக்கா கௌசல்யாதான். கல்யாணம் ஆன ஒரு வருடத்திலேயே பூவையும் பொட்டையும் உங்கக்கா இழந்திட்டாலும்.. வேறு எதையும் பற்றியும் யோசிக்காமல் உங்களுக்காகவே உங்ககூட வாழ்ந்துகிட்டு இருக்கிறவங்க.. சரிதானே?''

''இம்.''

''அப்புறம் என்ன?''

''அவங்களுக்குத் தெரியாமல் இந்தக் கல்யாணம்?'' தயங்கினான்.

''அதான் முகம் இப்படி இருக்கா?''

''.........''

''இந்த பாதிப்பு உங்களுக்கு மட்டும் இல்லை. எனக்கும் உண்டு. என் சித்தி, சித்தப்பா பற்றி, தம்பி பற்றி நிறைய உங்களுக்கு சொல்லி இருக்கேன்.''

''சரிம்மா.. ஆனா அவங்க எல்லாருக்கும் நம்ம விஷயம் தெரியும். என் அக்காவிற்குத் தெரியாதே.''

''தெரிய வைங்க.''

''வைக்க முயற்சிப்பதில் எந்தப் பலனும் இருக்காது. டி.வி. யில் காதல் பாட்டு என்றாலே டி.வி.யை ஆஃப் பண்றவ.''

''அதுக்காக எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்?''

''அதுக்குன்னு ஒரு சந்தர்ப்பம் வராமலா போயிடும்?''

''அதான் எப்போ?''

''தெரியலை.''

''உங்களுக்கு பயமா இருந்தா சொல்லுங்க.. நான் வேணா...''

''வேண்டாம் சுசி திடீர்னு அப்படியேதும் பண்ணிடாதே. எங்கக்காவைப் பிணமாப் பார்க்கிற சக்தி எனக்கில்லை'' குரல் தழுதழுக்கத் தொடங்கியது.

''இப்போ நான் என்ன சொல்லிட்டேன்?''

''ஏய்... உன்னை நான் ஒண்ணும் சொல்லலை. நம்மோட பிரச்சனை அப்படிடா. ஆறு மாச மெடிக்கல் லீவ் எனக்காக இல்லை. அக்காவிற்காக.. மதுரையில் இருந்து நான் வந்த ஒரு வாரத்திலேயே நெஞ்சு வலின்னு படுத்தவங்களை.. ஹாஸ்பிடல் கூட்டிகிட்டுப் போனபோது ஹார்ட் பராப்ளம். ஹார்ட்ல சின்னதா ஹோல் இருக்கு.. ஆபரேஷன் பண்ணணும்னு சொன்னாங்க.. ஆபரேசனை தாங்கிக்கற சக்தி அந்த உடம்புல இல்லை. தினமும் சாப்பாடு மாதிரி மாத்திரையை சாப்பிட்டா.. சந்தோஷமோ துக்கமோ சின்ன அதிர்ச்சியைக் கூட அந்த இத யத்தால தாங்கிக்க முடியாது. அதனாலதான் நம்ம பிரச் சனையை இதுநாள் வரை சொல்லவே இல்லை. சொல்ற தைரியமும் எனக்கில்லை.''



குரல் உடைய உடைய அவன் சொல்வதை இமைக்க மறந்து கேட்டாள்.

''இன்னைக்கு நான் பெண் பார்க்கப் போனது உனக்குத் தெரியும் தானே.''

''ம்'' தலையாட்டினாள்.

''பெண்ணை எனக்குப் பிடிக்கலை. எனக்கு இப்போ கல் யாணமே வேண்டாம்னு.. கொஞ்சம் வேகமா சொல்லிட் டேன். அதைத் தாங்கிக்க முடியாம.. சீரியஸாகி.. ஹாஸ்பிடல்ல சேர்த்து இருக்கேன். நாளைக்கே ஆபரேஷன் பண்ணனும்னு சொல்றாங்க. இன்டன்சீவ் கேர்லதான் அட்மிட் பண்ணி இருக்காங்க.''

''அப்புறம் எதுக்கு இங்கே வந்தீங்க?'' படபடத்தாள்.

''உனக்கு தாலி கட்டிட்டேனே.''

''கட்டிட்டா.''

''முதலிரவும் அதுவுமா.. அதுவும் இப்படி ஒரு ஏமாற்றம்.''

''அதுக்காக... இப்படி இருக்கும்போது நீங்க வந்திருக்க வேண்டாம். ஒரு போன் பண்ணி சொல்லி இருக்கலாமே.''

''இல்லம்மா.. உங்கிட்ட பேசணும்... அழணும்.. வாய்விட்டு அழணும். உன் மடியில தலை வச்சி ஐந்து நிமிடமாவது நிம்மதியா இருக்கணும் என்று தான் இந்த நிலையிலும் ஓடி வந்தேன்.''

அவன் முகத்தை நிமிர்த்தினாள். தத்தளித்துக் கொண்டிருந்த நீரை சுண்டி, வேறு பக்கம் எறிந்து விட்டு.. தன் கைகளாலேயே அவன் முகம், கண்கள், கன்னம் துடைத்து விட்டாள். பின் அவன் கைகளை எடுத்து தன் மார்பின் மேல் வைத்துக் கொண்டு..

''எதுக்கும் கவலைப்பட வேண்டாம்.. கடவுள் இருக்கார். எதுவும் நடக்காது. எப்பவுமே ஆண்டவனுக்குப் பிடிச்சவங் களை சோதித்துப் பார்த்துதான் பழக்கம். வழக்கம். நாம அவனோட அன்புக்குப் பாத்திரமானவங்களாகி இருக்கோம்னு நினைக்கிறேன். ரொம்ப நாளைக்கு வருத்தத்தைக் கொடுக்க மாட்டான். இந்த ஒவ்வொரு சொட்டு கண்ணீருக்கும் சந் தோஷமான நாட்கள் உண்டு. எதுக்கு கவலைப்படறீங்க? எல்லாம் நல்லபடியா நடக்கும். ஆபரேஷன் சக்சஸ் ஆகும்.''

''கண்டிப்பா'' குழந்தையாய் மாறிப் போய் கேட்டான்.

''சத்தியமா'' என்றாள்.

''எம்மேல உனக்குக் கோபமில்லையேடா.''

''எதுக்குக் கோபம் வரும். உங்களை எனக்குத் தெரி யாதா.. சந்தோஷத்தை பங்கு போட்டுக் கொள்வது வாழ்க்கை அல்ல. சோகத்தையும், துக்கத்தையும், மனபாரத்தையும் பங் கிட்டு.. பகிர்ந்து கொள்வதுதானே வாழ்க்கை.''

''நீ பேசறத கேட்கும்போதுதான் எனக்கு நிம்மதியா இருக்கு தும்மா.. அந்த தைரியத்தில் ஒன்னு சொல்லட்டுமா?'' மிகவும் தயங்கினான்.

''என்னப்பா.. சொல்லும்மா'' அவன் தோளில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

''சுசி.''

''ம்.''

''ஏய்.''

''ம்.''

''சுசி.''

''ம்.''



''தப்பா என்னை நினைக்க மாட்டியே.''

''ம்கூம்.''

''சத்தியமா?''

''இதென்ன சின்ன குழந்தை மாதிரி சத்தியம். அது இதுன்னு கிட்டு.. என் வார்த்தையில் அந்த அளவு நம்பிக்கை இல்லையா?''

''நமக்குள்ள நடந்தது கல்யாணம்தான். ஆனாலும் யாருக் கும் தெரியாம நடந்ததுதானே?''

''ஆமாம்.''

''அதனால...'' இழுத்தான்.

''இம்.. சொல்லுங்கள்.''

''என்னோட அக்காவையும், உன்னோட குடும்பத்தை சமாதானப்படுத்தி.. அவங்களோட ஆசியோட.. ஆசியோட.''

''ஆசியோட..''

''இதெல்லாம் வச்சிக்கலாமே'' வார்த்தையை விழுங்கி வைத்தான்.

''எதெல்லாம்'' அவன் கழுத்தில் முகம் தேய்த்தாள்.

''இதான்.''

''எதுப்பா புரியலை.''

''மனசால ஒன்னாயிட்டோம். உடம்பால.. இப்போ.. வேண் டாம்.''

''சரி'' மிகச் சாதாரணமாகச் சொன்னாள்.

''உன்னை விலக்கி வைக்க எனக்கு ஆசையில்லை. உன்னை யும் விட கனவு கண்டவன் நான்.. இப்படிப்பட்ட விரதம் நமக்குள்ளே இருந்தாதான்.. சீக்கிரமே என் அக்காவை சமா தானப்படுத்தும் தைரியம் எனக்கு வரும். ஏன்னா உன்னை ரொம்ப நாளைக்கு பிரிச்சி வைக்க என்னால முடியாதும்மா.''

''வாழ்க்கையே தியாகம் தானே. இதில் என்ன.. நத்திங்.. காத்திருப்பதிலும் ஒரு சுகம் உண்டுன்னு சொல்லுவாங் களே.. எப்படின்னு அனுபவிச்சிதான் பார்ப்போமே.''

''இதுல உனக்கு முழுச் சம்மதமா?''

''முழுச் சம்மதம் என்பதை எப்படி உங்களுக்கு நான் சொல்லணும்.''

''விலகி நின்னு'' அவன் கூறியதும் சட்டென அவனிடம் இருந்து தன்னை விலக்கிக் கொண்டாள்.

''உன் கை பட்டாலே எனக்குள்ள கரண்ட் பாஞ்ச மாதிரி இருக்கு. ரிஸ்க் எடுக்க வேண்டாம்னு தோணுது'' பரிதாப மாகச் சொன்னான்.

அவன் வேதனையும் தவிப்பும் அவளுக்குப் புரியாமல் இல்லை. காதலிக்கும்போது கையைத் தொட்டுப் பார்க்க அந்த ஆர்வம் காட்டுபவன். இன்று அருகில் எல்லாவித உரிமை யோடு இருந்தும், தயங்கும் அவன் உணர்வுகள் புரியாமல் இல்லை.

ஆயிரம் கனவுகளையும், கற்பனைகளையும், சங்கமத்தை யும் மனதில் சுமந்து கொண்டுதான் அந்தக் கட்டிலில் அவள் அமர்ந்து இருந்தாலும்.. அத்தனை ஆசையையும் பெரிய மூட்டையாய் கட்டி.. உள்ளத்தின் அடியில்.. ஒரு இருட்டு மூலையில் போட்டு வைத்தாள். அத்தோடு நில்லாமல் அவன் எண்ணத்தை மாற்ற.

''நாள்ளக்கா அக்காவிற்கு ஆபரேஷன்?'' என்றாள்.

''ஆமாம்.''

''நானும் வரட்டுமா?''

''இம்.''



''நீங்க எப்போ போகணும்?''

''காலையிலேயே போனாத்தான் எல்லாத்தையும் அரேஞ்ச் பண்ண முடியும்.''

''படுங்க.. கொஞ்ச நேரமாவது தூங்கினால் நன்றாக இருக்கும்.''

''நீ சத்தியத்தை காப்பாற்ற முடியுமா?'' என்ற பயத்தில் கேட்டான்.

''ஏன் பயமா இருக்கா? நான் இந்த ஓரம்.. நீங்க அந்த ஓரம்.''

''வருத்தமில்லையே?''

''ஏய்.. இல்லப்பா. தலையில் ஓங்கி அடிக்கட்டா'' என்ற படி பொய்யாய் கைதூக்கியவளைப் பார்த்து.. சிரிக்க முடியா மல் சிரித்து வைத்தான். படுக்கையின் ஓரமாக தன்னை கிடத் திக் கொண்டவன். நெற்றியை அழுத்தி தேய்த்தபடி சுசித்ரா வின் பக்கம் ஒருக்களித்து..

''சுசி'' என்றான்.

''இம்'' அவளும் இவன்புறம் திரும்பினாள். இருவருக்கும் இடையில் மூன்று பேர் படுக்கும் அளவு இடைவெளி விட் டிருந்தனர்.

''ஸாரி.''

''இப்போ எதுக்கு ஸாரி. இந்த மாதிரி ஏதாவது பேசினால் திரும்பி படுத்துக்குவேன்'' மிரட்டினாள்.

''ஏய்...ய்...ய்.. வேண்டாம்.. இந்த முகத்தையாவது ஆசை தீர பார்க்கிறேன்'' அவன் குரல் வண்டி வண்டியாய் ஏக்கத்தை சுமந்திருந்தது. அவளுக்கு பெரிஸ்கோப் வைத்துப் பார்த்தது போல் தெரிந்தது. வெகு நேரத்திற்கு அவள்

முகத்தையே பார்வையால் விழுங்கி.. உள்ளே அனுப்பி.. பத்திரப்படுத்தி.. பார்த்துப் பார்த்து பூரித்தான். இடையிடையே அக்காவின் நினைவும் வந்து அவஸ்தை படுத்தியது.

விடிகின்ற நேரம் இருவருமே உறங்கிப் போயிருந்தனர்.

இந்த ஒரு இரவைத் தவிர இனி எந்த இரவும் நிம்மதியாய் உறங்கப் போவதில்லை என்பதை அறியாமல்.. தங்களுக்குள் பூட்டிக் கொண்டது புனித விலங்கல்ல.. புதிராய், புரியாத கேள்விக்குறியாய் கொக்கி போட்டு தங்களை இழுக்கப் போவதை அறியாமல்.. ஆளுக்கொரு பக்கம் புரண்டு படுத்தார்கள்.



# 6

**கண்ணுக்கு உலகம்**
**காண்பவை அனைத்தும்!**
**விண்ணுக்கு உலகம்**
**அது விரிந்து இருக்கும்**
**பரப்பனைத்தும்...**
**வீணைக்கு உலகம்**
**விரல் மீட்டும் சுதியனைத்தும்!**
**வள்ளலுக்கு உலகம்**
**வறியவர்கள் வாழுமிடம்**
**ஏழைக்கு உலகம்**
**இரண்டு வேளைச் சாப்பாடு**



**எனக்கு உலகம்**
**என்னவளைத் தொட்டு வந்த**
**இனிய தென்றல் மட்டும்..**

ஆப்ரேஷன் தியேட்டரில் இருந்து வெளியே வந்த டாக்டரைப் பால் பாட்டிலுக்கு தாவும் பச்சைக் குழந்தையாய் பின் தொடர்ந்து ஓடினான். இவன் பதற்றமாய் ஓடி வந்து கொண்டிருப்பதை அறிந்த வயதான மருத்துவர் உள்ளுக்குள் நகைத்தபடி நின்று திரும்பி..

''மிஸ்டர் விக்ரம்.. ஆபரேஷன் சக்ஸஸ்... இனி பயப்படற மாதிரி எதுவும் இல்லன்னு சொல்லியும் ஏன் பதட்டப்படறீங்க. பீ ரிலாக்ஸ்.''

''அதுக்கில்ல டாக்டர்.. வந்து.''

''பதட்டப்படாமல் ரூமிற்கு வாங்க, பேசுவோம்'' என்றார்.

அவர் தன் பர்சனல் அறைக்கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்ததும்.. விடாப் பிடியாய் பின் தொடர்ந்தான்.

''ப்ளீஸ் டேக் யுவர் சீட்.''

''தேங்க் யூ டாக்டர்'' கூறிவிட்டு ஒரு இருக்கையில் தன்னை இருத்திக் கொண்டான். டாக்டர் தன் கைகளை வாஷ்பேஸினில் கழுவிக் கொண்டிருந்தார். பார்த்துவிட்டு டேபிள் மேல் இருந்த பெரிய பெரிய மெடிக்கல் புத்தகத்தைத் தூக்கிப் பார்த்தான். ஸ்டெத்தஸ் கோப்பைத் தவிர வேறு ஒரு பொருளும் அவனுக்கு அறிமுகமானதாய் தெரியவில்லை.

தன் ஈரக் கைகளை பக்கத்தில் இருந்த ஒரு நீலக்கலர் டவலில் துடைத்துவிட்டு.. விக்ரமிற்கு எதிரே இருந்த தன் சீட்டில் வந்து அமர்ந்தவர்,

''ம்.. சொல்லுங்க..'' என்றார்.

''டாக்டர்.. எத்தனை நாளைக்கு அக்கா ஹாஸ்பிடலில் இருக்க வேண்டும்?''

''ஒன் வீக் இருந்தா போதும்.. அது மட்டும் அல்ல ரொம்ப கேர்புல்லா பார்த்துக்கணும்'' என்றதுமே..

''எப்படி டாக்டர்'' என்றான்.

''ஆப்ரேஷன் சக்சஸாக இருந்தாலும்.. இது மேஜர் ஆபரேஷன். குறைந்தது ஆறு மாதத்திற்காவது பெட்ரெஸ்ட் எடுக்கணும். அவங்ச உடம்பும் சரி. மனசும் சரி ரொம்ப பலகீனமா இருக்கு.. அதனால ஒரு பர்சன்ட் அதிர்ச்சியைத் தரக்கூடிய விசயமாக இருந்தாலும் அவங்களுக்குத் தெரியாம இருக்கிறது தான் அவங்க உயிருக்கு உத்திரவாதம். இன்னும் தெளிவாக உங்களுக்குச் சொல்லணும்னா.. வருசக் கணக்காக ஓடி ஓடி தேய்ந்து போன ஒரு எஞ்சின். ரிப்பேர் என்ற பெயரில் ஏதோ பார்த்து இருக்கின்றோம் அவ்வளவுதான். நல்ல நேஷனல் வேயில் ரொம்ப மெதுவாகப் போகக் கூடிய இயந்திரத்தை.. கரடு முரடான பாதையில் ரெண்டு செகண்ட் ஓட்டினாலும் ஸ்டக்காயி நின்னுடும். ஸோ வெரி கேர்புல்.''

''டாக்டர்.''

''பயப்படற அளவு ஒண்ணும் இல்லை. பத்திரமா பார்த்துக்கிட்டாலே போதும்.. ஆமாம்! கேட்கணும்னு நினைச்சேன். உங்ககூட இருந்த பொண்ணு யாரு? ரிலேஷனா?''

''அவளை உறவுன்னு சொல்றதைவிட உயிர்னு சொல்லலாம்.''

வியப்பாய் தன் கண்ணாடியைக் கழற்றி விட்டுப் பார்த்தார் டாக்டர்.

''அவ என்னோட மனைவி.''



''வாட்! உங்களுக்கு இன்னும் மேரேஜ் ஆகலைன்னு'' இழுத்தார்.

''உங்களிடம் சொல்றதுக்கு என்ன டாக்டர் இருக்கு'' என்றவன் தனக்கும் சுசித்ராவிற்கும் ஏற்பட்ட காதலில் இருந்து தாலி கட்டி முடித்தவரை ஒன்று விடாமல் எல்லாவற்றையும் மனப்பாடமாய் ஒப்பித்தான்.

''இது.''

''அக்காவிற்குத் தெரியாது.''

''இந்த உண்மையை எத்தனை நாளைக்கு, எத்தனை மாதத்திற்கு மறைக்க முடியுமோ.. அத்தனை மாதத்திற்கு மறைக்கணும்.''

''கண்டிப்பா டாக்டர். அக்காவோட உயிரை விட எங்களோட வாழ்க்கை எங்களுக்குப் பெரிது இல்லை.''

''உங்களைப் பார்க்கும்போது ரொம்ப ஆச்சர்யமாக இருக்கு. அதிசயமாகவும் இருக்கு. பெருமையாகவும் இருக்கு. உடல் சுகம்தான் வாழ்க்கைன்னு நினைக்கிற.. ஏன் அதுக்காகவே வாழ்ற இந்தக் காலத்தில்... எங்ஸ்டரான நீங்க இப்படி ஒரு முடிவு எடுத்து இருப்பது.. ஆச்சர்யம்தான். உங்களோட இந்த மனதிற்காகவாவது.. சீக்கிரமே உங்க இரண்டு பேரையும் உங்கக்கா மனப்பூர்வமா ஏத்து... நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா வாழணும். விஷ் யூ ஆல் த பெஸ்ட்'' என்றபடி தன் வலது கையை நீட்டினார்.

நீட்டிய அவரின் கைகளை தன் இரண்டு கையாலும் பிடித்துக் கொண்டவன்.

''தேங்க் யூ ஸார்.. தேங்க் யூ'' உணர்ச்சி வசப்பட்டான்.

''இட்ஸ் ஓகே விக்ரம்.. சும்மா நான் சொல்லலை. மனசாரத்தாம்பா சொல்றேன்.. அக்காவைப் பற்றி கவலைப்பட வேண்

டாம். எல்லாம் நல்லபடியா நடக்கும்.. இன்னும் ஒரு வாரத்தில் வீட்டிற்கு கூட்டிப் போகும் அளவு நல்லாயிடுவாங்க. வீட்டிற்கு உடனே ஏதாவது சர்வன்ட் ஏற்பாடு பண்ணிக்கோங்க.''

''சர்வன்டா?''

''எஸ்.. அவங்க கம்ப்ளீட்டா பெட் ரெஸ்ட் எடுக்கணும்.. ஒரு சின்னத் துரும்பைக் கூட எடுக்கக் கூடாது. அசைக்கக் கூடாது.''

''ஓ.கே. டாக்டர்.. அக்கா வீட்டிற்கு வருவதற்குள் ஏதாவது ஏற்பாடு பண்ணிட்றேன்.''

''குட்.''

''வறேன் டாக்டர்'' எழுந்தான்.

''ஓ.கே... எதுக்கும் கவலைப்பட வேண்டாம்'' என்றவர் கூறியதும்.. முகத்தில் சந்தோஷத்தை சுமந்து கொண்டு வெளியே வந்தான்.

அன்று மாலை... மணி ஆறுக்கு மேல் நிச்சயம் இருக்கும். சென்னைக் கடற்கரையில் கண்ணகி சிலைக்கு பின்புறம் உள்ள கடற்கரை மணல் மேடுகளில்.. ஆள் நடமாட்டம் அவ்வளவாக இல்லாத இடத்தில் சுசித்ரா தன் முழங்காலைக் கைகளால் கட்டிக் கொண்டு.. அதன் மேல் தன் முகத்தை வைத்துக் கொண்டு விக்ரமைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சம்மணம் இட்டபடி அவளுக்கு அருகிலேயே அமர்ந்தபடி.. கைப்பிடி கைப்பிடியாய் மணலை அள்ளிக் கொட்டிக் கொண்டு இருந்தான்.

மணற் துகள்களை சுழற்றிக் கொண்டு வரும் அளவு காற்று கொஞ்சம் வேகமாகவே விசிறியடித்தது. விக்ரமின் தலைமுடிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாய் பறந்தன. திசை மாறிப் பறந்த முடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவள்.. முழங்காலைக் கட்டியிருந்த தன் கைவிலங்கை விடுவித்து, அவன் காது பக்கம் கை வைத்து.. ஒதுக்கி விட்டாள். அவள் கை தன் கழுத்துப்புறம் பட்டதும்தான்.. தலையை திருப்பி முதல் நாள் தாலி கட்டிய தன் புத்தம் புது மனைவியைப் பார்த்தான்.



''பேசணும்னு கூட்டிகிட்டு வந்து.. இதென்ன பார்வை'' அவன் காதுமடலை லேசாய் பிடித்து சுளித்தாள்.

''உன்னைப் பார்த்தால் பேச்சே வரமாட்டேங்குதே.''

''இம்.. அப்புறம்.''

''நீ பக்கத்தில் வந்தாலே அப்படி பயம் வருது.''

''ஏன்.. நான் அவ்வளவு அகோரமா இருக்கிறேனா?''

''ம்கூம்... அவ்வளவு அழகா இருக்கே.. சத்தியம் எல்லாம் சருகு மாதிரி ஆயிடுமோன்ற தற்காப்பு உணர்ச்சிதான்.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது..'' என்றபடி நெருங்கி அவன் தோளை இடித்தபடி உட்கார்ந்தாள்.

''ஏய்.. வேண்டாம்.. உனக்கு கன்ட்ரோல் இருக்கலாம்.. எனக்கில்லம்மா.. காதலியா உன்னைப் பார்த்தபோதெல்லாம்.. சீண்டணும்.. உன்னை சிணுங்க வைக்கணும்.. உன் காது மடலை வருடணும்.. கன்னத்தை எச்சில் படுத்தணும்.. இந்த மாதிரி சின்னச் சின்ன ஆசைதான் இருக்கும். ஆனா இப்போ.''

''இப்போ'' உதட்டைக் கடித்துக் கொண்டு அவனைத் தூண்டினாள்.

''எப்போ உனக்குத் தாலி கட்டினேனோ.. அப்ப இருந்தே என்னோட கோணமே.. உன்னைப் பார்க்கும் பார்வையே வேறயா இருக்கு. உன் மூச்சுக் காத்து பட்டாலே எனக்கு

மூச்சுத் திணறுது. நீ என் பக்கத்துலேயே எந்த நேரமும் இருக்கணும்னு தோணுது. உன் நெஞ்சு மேலேயே என் முகம் எப்போதும் இருக்கணும். காற்றுக்கூட நுழைய விடாத அளவு உன்னை இறுக்கிக் கட்டி புடிச்சிக்கணும்னும், என் சுசியை, என் உயிரை, என் இதயத்தை, என் மனைவியை அணு அணுவா ரசிக்கணும்னு தோணாதா?''

உடனே சட்டென ஒரு அடி தள்ளி உட்கார்ந்து கொண்டவள் -

''அம்மாடி.. நான் பக்கத்துலேயே வரலை'' பயப்படுவது போல் நடித்தாலும்.. குரல் வெளிப்பட்டாலும்.. 'எனக்கு மட்டும் ஆசையில்லையா.. உன்னோடு எந்நேரமும் அருகில் இருக்க, முகத்தோடு முகம் இழைக்க. அர்த்த ராத்திரியில்.. அந்த இருட்டில் உன்னை இறுக்கிக் கட்டிக் கொள்ள எனக்கு மட்டும் ஆசையில்லையா.. பொறுத்துக் கொள்ளடா.. கொஞ்ச நாள்..' உள்ளம் அலைபாய்ந்து உருகியது.

''நகர்ந்து உட்கார்ந்திட்டா.. என்னால அங்கே வர முடியாதா?''

''முடியாது?''

''இல்ல சுசி. ஒரு புத்தகத்தில் படிச்சிருக்கேன். சில நேரங்களில் இல்லை, பல நேரங்களில் மனதை உடம்பு ஜெயிச்சிடுமாம். அதனால உன்னைப் பார்க்காமலேயே இருந்திடலாமோன்னு கூட சில நேரம் தோணுது.''

''என்னது.. பாக்காம இருக்கப் போறீங்களா?'' சட்டென அவன் அருகில் வந்து ஒட்டிக் கொண்டாள்.

''ஆமாம்.''

''பாக்காம இருந்தா இந்த வேதனை இன்னும் அதிகமாயிடும் தெரியுமா.. வேண்டாம்பா.. கண்ணால கூடவா நாம ரெண்டு பேரும் பார்த்துக் கொள்ளக் கூடாது.. எனக்கு அப்படி ஒரு கொடுமையைக் கொடுக்கணுமா?'' என்றவளை பாவமாய்ப் பார்த்தான்.



''மூட்டை பூச்சிக்கு பயந்துகிட்டு வீட்டை கொளுத்தற மாதிரி இருக்குடா கண்ணா.''

''........'' அப்போதும் எதுவும் பேசாமல் பார்த்தான்.

''டேய்.. கண்ணா.. இந்த டாபிக்கே வேண்டான்டா.. வேற ஏதாவது பேசுவோம். இம்.. என்ன?''

தலையாட்டினான்.

''அக்கா எப்படி இருக்காங்க?''

''ம்.. பரவாயில்லை.''

''என்னைக்கு டிஸ்சார்ஜ்?''

''வர்ற புதன்கிழமை.''

''உங்கக்கா இவ்வளவு வயசானவங்களா இருப்பாங்கன்னு நான் கொஞ்சம்கூட நினைக்கவே இல்லை.''

''ஏன்?''

''ஏதோ நாலைந்து வயது வித்தியாசம் இருக்கும்னு நினைச்சேன்.''

''அக்காவிற்கும் எனக்கும் கிட்டத்தட்ட பதினெட்டு வயதுக்கு மேல கூட வித்தியாசம் இருக்கும்?''

''அவ்வளவு பெரியவங்களா?''

''ம்.. ஏய் சொல்ல மறந்துட்டேனே. ஏதாவது சர்வண்ட் ஏற்பாடு பண்ணனும்.''

''சர்வண்டா. எதுக்கு.. எங்கே.. ஏன்?''

"அக்கா முழுக்க முழுக்க பெட் ரெஸ்ட்தான் எடுக்கணும். வீட்டிற்கு ஆள் வேண்டாமா? நான் இல்லாதபோது, பாத்துக்க யாராவது வேண்டாமா?"

"....."

"நம்பிக்கையானவங்களா இருக்கணும்.. என்னால இனி மேல் மெடிக்கல் லீவ் எல்லாம் எடுக்க முடியாது.. லாஸ் ஆஃப் பேயில் கூட எடுக்கலாம். ஆனா அது இப்போ எந்த அளவு சாத்தியமாகும்னு தோணலை."

"நான் ஒரு ஐடியா சொல்லட்டா?"

"சொல்லும்மா.. உனக்கு தோன்றதை சொல்."

"பேசாமல் நான் லீவ் போட்டுட்டா."

"நீயா..?"

"ஏன்.. நான் உங்க வீட்டுக்கு வரக்கூடாதா?"

"அப்படி நான் சொல்லலை.. எஜமானியா கம்பீரமா நீ வரவேண்டிய வீடு.. அங்கே வேலைக்காரியாவா?"

"வேலைக்காரின்னா மட்டமா? பல வீட்ல வேலைக்காரிங்க தான் எஜமானியம்மா தெரியுமா?"

"இல்ல சுசி."

"நோ.. நீங்க எந்தத் தடங்கலும் சொல்லக்கூடாது.. உங் கக்காவோட மனதை மாற்றுவதற்கு.. அவங்களைப் புரிஞ்சுக்க எனக்கு இது ஒரு வாய்ப்பு.

"நீ சொல்றது சரி.. வேலையை ரிசைன் பண்ணப் போறியா?"

"ம்கூம்.. வேலையை ரிசைன் பண்ண மாட்டேன். என் தம்பியை நான் படிக்க வைக்கணும்.. மெடிக்கல் லீவ்தான்."



"கிடைக்குமா?"

"கிடைக்கணும்."

"ஏன்டா இப்படி.. எப்பப் பார்த்தாலும் நெகட்டிவா பீல் பண்ற. என்னோட எம்.டி. நல்லவர் மாதிரி தோணுது. எனக்கு மேல இருக்க எஞ்சினியர் ராம்குமார் கூட நல்ல டைப்பாதான் தோணுது."

"எதுவுக்கும் நீ நல்லா யோசிச்சிக்கோ."

"இதுல யோசிக்கிறதுக்கு ஒண்ணுமே இல்லை."

"இதைப் பற்றி.. உங்க வீட்டுக்கு.." இந்த முடிவு வேண் டாம் என்பது போல்தான் அவன் முகம் காட்டியது.

"இன்னைக்கு நைட்டே லட்டர் எழுதிட்றேன்."

"என்னன்னு."

"உங்க பொண்ணுக்கு கல்யாணம் ஆயிடுச்சி.. அப்படி ஆரம்பிச்சி எல்லாத்தையும் எழுதிட்றேன்."

"என்னைத் தப்பா நினைக்க மாட்டாங்களா?"

"தப்பா நினைக்காதவாறு எழுதிட்றேன்.. போதுமா?"

"பேசாமல் எல்லாரையும் வரச் சொல்லேன். நான் நேரில் பார்த்து மன்னிப்புக் கேட்டு விடுகிறேன்."

"எதுக்கு."

"மனச உறுத்துது."

"தெரியாம தாலி கட்டிட்டதாவா?"

"ம்."

"நானே யோசிக்காம கழுத்தை நீட்டிட்டேன். என்னோட கட்டாயத்தில்தானே தாலி கட்டுனீங்க. எல்லார்கிட்டேயும்

மன்னிப்புக் கேட்க வேண்டியவள் நான்தானே தவிர.. நீங்க இல்லை. எதையாவது நினைச்சிகிட்டு மனசை போட்டுக் குழப்பிக்காதீங்க. முதல் வேலையே உங்கக்காவை நல்லாப் பார்த்துக்கறதும்.. நம்ம விசயத்தை அவங்க காதுல போட்ற தும்தான்.''

''அப்படிங்கறியா?''

''இம்... அப்படித்தான்.''

''சரி.. நீ என்ன சொல்லுறியோ அப்படிக் கேக்கிறேன்.''

''மாலாகிட்ட சொல்லிட்டா போதும்.''

''அவங்களுக்கு நம்ம எல்லா விஷயமும் தெரியுமா?''

''எல்லா விஷயமும் தெரியாது. குறிப்பா 'அந்த' விஷயம் தெரியாது.''

''சொல்லாதே.''

''ஏன்?''

''என்னை ஒரு மாதிரியா பார்க்கப் போறாங்க.''

''அப்படித் தெரிஞ்சாலும் மாதிரியா பாக்கமாட்டா. மதிப்பாத் தான் பார்ப்பாள். இப்போ அதெல்லாம் எதுக்கு? என்னை எப்படி இன்ட்ரடியூஸ் பண்ணப் போறீங்க.''

''அதையும் நீயே சொல்லேன்.''

''ஏன்.. இந்த மண்டைக்குள் எதுவும் தோணலையா?''

''எப்படித் தோணும்? எல்லாத்தையும் உங்கிட்டே அடகு வச்சிட்டேனே.''

''மீட்டுக்கிறது.''

''வேண்டாம் தாயே.. எல்லாம் உன்னிடமே பத்திரமாய் இருக்கட்டும். நான் ஃப்ரியா இருந்துகிறேன்'' என தோளைக் குலுக்கினான்.



''பொதுவா ஆம்பளைங்களே ரொம்ப மோசம்..'' என்றவளின் இடுப்பில் கையைப் போட்டு இழுத்து..

''எதுவுமே பண்ணாதபோது.. என்னையும் எல்லாத்தோடயும் சேர்த்து மோசம்ங்கற.. நியாயமே இல்லை'' என்றான்.

''எப்பா.. ஆளை விடு'' என எழுந்தாள்.. உட்கார்ந்து இருந்தவன் சோம்பலாய் எழாமல் கையை நீட்டினான்.

''என்ன?''

''தூக்கு.''

''வெயிட் எவ்வளவு.''

''பாக்கணுமா?''

''ச்சீ... வேற பேச்சே இல்லையா?''

''ஏய்.. நீ ஏன் தப்பா எடுத்துக்கிற.. எடை மிசின்ல நிக்கணுமான்னு கேட்டேன்.''

''ஐய்யோ...'' மண்டையைத் தட்டிக் கொண்டாள். ''சரி சரி மண்டையைப் பிச்சிக்காதே. உனக்கு அழகே.. இந்த முடி தான். அதை குறைச்சிடாதே'' என்று சிரித்தபடி எழுந்தவனின் கைகளை நறுக்கென கிள்ளி.

''அப்போ நான் அழகில்லையா?'' நிஜமாகவே வருத்தத் தோடு கேட்டாள்.

''அழகுடா செல்லம்.. அழகு.''

''அப்புறம் முடி மட்டும்தான் அழகுன்னீங்க.''

''என்னென்ன அழகுன்னு உண்மையை மறைக்காமச் சொல்லட்டுமா?''

''ம்.'' ஆர்வமாய் அவனோடு இணைந்தபடி நடந்தாள்.

''இன்னும் பக்கத்துல வா.''

''எதுக்கு?''

''இதெல்லாம் சத்தம் போட்டு சொல்ல முடியுமா?'' என்றபடி அவள் காதருகே.. அவளிடம் அவனுக்கு அழகாய் படுவது அனைத்தையும் வரிசைப்படுத்த.. அவள் முகம் வெட்கத்தால் செம்பருத்தியாய் சிவக்க.. அவர்களின் பின்னால் இரத்தக் களறியாய் இரு கண்கள் சிவக்க பற்களைக் கடித்துக் கொண்டு ஒரு ஆசாமி பின் தொடர்வதை கவனிக்காமல் கனவோடும் கற்பனையோடும் இவர்கள் நடந்தனர்.

# 7



**என் விழிகளுக்கு**

**வெளிச்சம் இல்லையடி! இதயம் கூட**

**ஏதோ ஓர் இருட்டறையில்!**

**சிலுசிலுக்கும் தென்றலால்**

**சிதறி சேர்கிறேன்!**

**சீக்கிரம் வந்துவிடு**

**முகாரி ராகத்தை**

**மூச்சுபோல் முணுமுணுக்க என்னால் முடியாது!**

''இம்.. இறங்கு.. இதுதான் நம்ம வீடு'' கால்களைத் தரையில் ஊன்றிக் கொண்டு பைக்கின் சத்தத்தை கட்டுப் படுத்த.. சாவியை உள்ளிருந்து இழுத்து, சர்ட் பாக்கெட்டிற்குள் போட்டுக் கொண்டான் விக்ரம். அவன் தோளைப் பற்றிக் கொண்டு அமர்ந்திருந்த சுசித்ரா, லேசாய் குதித்தபடி கீழே இறங்கினாள். கையில் தேவையான துணிமணிகள் அடைக்கப் பட்டு இருந்த ப்ரீப்கேஸ்.



நிமிர்ந்து வீட்டைப் பார்த்தாள்.

கொஞ்சம் கூட தோட்டம், காம்பவுண்ட் என்று எதற்கும் இடம் விடாமல் வரிந்து கட்டி வைத்த வீடு. நாலைந்து படிகள் ஏறிதான் வீட்டுக் கதவைத் திறக்க வேண்டும். இரு பக்கமும் போர்டிகோ என்று நினைத்துக் கொள்ளும்படி இருந்த இடத்தில் இரண்டு ஸ்கூட்டரை நிறுத்தலாம். விக்ரமின் பைக்கை வீட்டிற்குள் எடுத்துச் செல்ல வசதியாய் படிகளுக்கு நடுவில் பலகையைப் போடுவதற்குப் பதில் சிமெண்டினால் சரிவாய் பூசப்பட்டும் இருந்தது. தன் பைக்கை படிக்குப் பக்கத்தில் நிறுத்தியவன்.. பூட்டைத் திறந்து.. கதவுகளை இரு பக்கமும் பலம் கொண்ட மட்டும் தள்ளி விரித்து வைத்து.. சுசித்ராவைப் பார்த்து 'வா' என்பது போல் தலையாட்டினான். அவள் கால்களை எடுத்து படியில் வைக்கும்போது..

''மறந்துடாதே! வலது காலை எடுத்து வச்சி வா'' என்றான்.

சிரித்தபடி தலையாட்டியவள்.. நிதானமாய்.. பொறுமையாய்.. தன் வலக்காலை எடுத்து அந்த வீட்டின் உள்ளே வைத்தாள்.

படு சுத்தமாய் அந்த வீடு பளிச்சென இருந்தது. வெளிர் நீல நிற டிஸ்டம்பரில் பச்சைக் கிளி கூடாய் மின்னியது. நிறத் திற்கும் குணம் உண்டு என்பதை அனுபவப்பூர்வமாய் உள்ளே நுழைந்ததுமே சுசித்ரா உணர்ந்தாள். பதினைந்து நாட்களாய் அந்த வீட்டில் பெண் இல்லை என்பதை எந்தப் பொருளும் உணர்த்தாமல்.. அதது அதது இடத்தில் இருந்தது.

ஹாலில் போர்டபிள் சைஸ் கலர் டி.வி. அதன் கீழே செல்பில் வி.சி.ஆர். அதற்கு அருகிலேயே நாலைந்து வீடியோ

கேசட்ஸ்.. அதற்குக் கீழ் செல்பில் ஒரு டீ இன் ஒன்.. அதற்கு பக்கத்திலேயே அடுக்கி வைக்கப்பட்ட ஆடியோ கேசட்ஸ்.. ஹால் நடுவில் நான்கு பேர் அமரும் அளவுள்ள குஷன் சோபா. அதற்கு முன்பு இருந்த கண்ணாடி டீபாய் மேல்... கோல்ட் கலரில் ஒரு ப்ளவர் வாஷ்.. அதற்கு பக்கத்திலேயே டி.வி.யின் ரிமோட் அமைதியாய் படுத்துக் கிடந்தது. சுவற்றில் இரண்டு பக்கம் இயற்கை காட்சிகள் நிறைந்த வால் பேப்பரால் தன்னை மறைத்துக் கொண்டன. இடது பக்கம் படிகள் வைக்கப்பட்டு.. மேல் மாடிக்கு செல்ல வழி செய்யப் பட்டு இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த வளின் தோளைத் தட்டி, ''என்ன பாக்குற... இது ஹால்.. கிச்சன், ரூம்ஸ்.. மேலே அப்புறம் பெட் ரூம்'' என்று கண்களை சிமிட்டினான்.

''......'' அவனை ஓரக் கண்ணால் அளவெடுத்தாள்.

''இதெல்லாம் பார்க்க வேண்டாமான்னு சொன்னேன். தட்ஸ் ஆல்.''

கீழேயே.. ஸ்டோர் ரூம்.. கிச்சன், பூஜை ரூம்.. பாத்ரூம்.. அது மட்டும் அல்லாமல் இரண்டு அறைகளில் நிறைய பாத்திரங்களும்.. இரண்டு பீரோக்களும் இருந்தன. அதற்கு அருகே.. ஒரு அறை கட்டில் மெத்தையோடு.. மிக எளிமை யாகத் துடைத்து விட்டார் போல் இருந்தது.

''இதுதான் உங்க ரூமா?'' என்றாள்.

''ம்கூம்.. அக்கா ரூம்.''

''ஒன்னையுமே காணோம்.''

''அக்காவோட தேவைகள் ரொம்ப ரொம்ப கம்மி.. வாழ்க் கையில் எதையுமே அக்கா அனுபவிச்சது இல்லை. அதனா லேயோ என்னமோ நான் அனுபவிக்கணும்னு ரொம்ப ஆசை உண்டு.. வாயேன் நான் படுக்கிற ரூமைப் பார்'' என்றவன்



அவள் கைகளைப் பற்றி.. வெளியே ஹாலுக்கு அழைத்து வந்து.. அங்கிருந்த ஸ்டெப்சின் வழியாய் மேலே அழைத்து சென்று.. அங்கிருந்த ஹாலையோ.. மற்ற அறைகளையோ பார்க்க விடாமல் தன் அறைக் கதவைத் திறந்து காட்டினான்.

பிரமித்துப் போய் நின்றாள்.

அத்தனைப் பொருட்களும் அழகாய் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. பெரிய ஹாலாய் அவன் அறை இருந்தது. உயர்ரக கட்டில் மெத்தை.. அவனுக்கு என தனியாய் டி.வி. ப்ரிஜ்.. ட்ரஸ்ஸிங் டேபிள்.. டீபாய்.. என்று அசத்தியது. இதையும் மீறி அந்த அறை ஏ.சி. செய்யப்பட்டு இருந்ததுதான் அவ ளுக்கு இன்னும் பிரமிப்பாய் இருந்தது. அட்சாச்சிடு பாத் ரூம்.. வீட்டைக் கட்டும்போதே விக்ரமின் சௌரியத்திற்காக திட்டமிட்டு அவன் அக்காவால் கட்டப்பட்டிருந்தது.

விக்ரம் ஏன் அக்கா! அக்கா! என்கிறான் என்று சில நேரம் கொக்கிப் போட்ட வினாக்கூட.. ஓடி ஒளிந்து கொண்டது..

ஒன்றும் பேசாமல் வெளியே வந்தவளை.. பின் தொடர்ந் தவன்..

''என்ன சுசி.. எதுவும் பேசமாட்டேங்ற?'' என்றான்.

''உங்கக்காவை நினைச்சா இன்னும் பயம் அதிகமாச்சி. இந்தளவு பாத்து பாத்து வளர்த்தவர்களை.. அவ்வளவு எளி தாய் விட்டு கொடுக்க முடியாது.. நானாக இருந்தாலும் அப் படித்தான்.. அதுவும் தான் பார்த்துப் பேசி முடிவு பண்ணாத ஒரு பெண்ணிற்கு.. இந்தளவு நேசிக்கும் தன்னோட தம்பியை விட்டு கொடுப்பாங்கன்னு எனக்குத் தோணலை.''

''ஏய்.. நீயே மனச விட்டுட்டா எப்படி? நீ தைரியமா இருக் கிறதால தான் நானே தைரியமா இருக்கேன். எந்தளவு என் அக்கா கண்டிப்பானவளோ அந்த அளவு கருணையான வளும் கூட..''

''என்னைப் பார்த்தால் வேலைக்காரி போல் தெரியுமா? உங்கக்கா நம்புவார்களா?''

''எனக்கும் அதே சந்தேகம்தான்.'' பேசிக் கொண்டே கீழே இறங்கி வந்தார்கள். சோபாவில் தன்னை இருத்திக் கொண்ட வள்.. விக்ரமை வேதனையோடு பார்த்தாள்.

''உன்னை என் நண்பனோட தங்கைன்னு சொல்லிடட்டா?''

''சொன்னா?''

''ப்ரண்ட் வெளிநாடு போய்ட்டான். திரும்பி வர ஆறு மாதம் ஆகும். அதுவரை தங்கையை நம் வீட்டில் விட்டுச் சென்றிருக்கிறான். அப்படி ஏதாவது?''

''காதுல பூஇல்ல.. காலி ப்ளவரையே சுத்தற மாதிரி இருக்கு.''

''இல்ல சுசி.. இப்படித்தான் ஏதாவது சொல்லணும்.. நீ வேலைக்காரி மாதிரி இல்லை.. அப்படியே உன்னை வேலைக் காரின்னு நம்ப வச்சாலும்.. நாள் முழுக்க இங்கே இருக்க முடி யுமா? பொய் சொல்றதுன்னு முடிவு பண்ணியாச்சு.. என் அக்கா நம்பற மாதிரி சொல்லணும். அக்காவை சாயந்திரம் வீட்டிற்கு அழைத்து வந்து விடுவேன். அதற்குள் ஏதாவது நல்ல தகுந்த பொய்யாய் யோசிக்கிறேன்.''

''பிரச்சனை ஒன்றும் வராதே.''

''வராது.. உனக்கு கம்பெனியில எந்தப் பிரச்சனையும் இல்லையே?''

''ம்கூம்.. எனக்கு ஃசீப்பாக இருக்கிற ராம்குமார் ஸோ கைன்ட். அவராலதான் இவ்வளவு நாளைக்கு எனக்கு லீவ் கிடைச்சது.''

''கேக்கணும்னு நினைச்சேன். மறந்துட்டேன். சமைக்கத் தெரியுமா?''



''இம்.. சுடுதண்ணி வைக்கத் தெரியும்.''

''விளையாடாதே.''

''உண்மைதான். சமையல் புத்தகம் எல்லாம் நிறைய வாங்கி வைத்து இருக்கிறேன். முடிந்தளவு ஒரு வாரத்தில் கற்றுக் கொள்கிறேன். உங்கக்கா இப்போதைக்கு சாப்பிடப் போவது இல்லை.. நீங்க கொஞ்ச நாளைக்கு ஹோட்டலில் பார்த்துக் கொள்ளுங்களேன்'' என்றபடி அவன் தாடையை பிடித்துக் கெஞ்சினாள்.

அவள் கைகளை தன் கைகளுக்குள் இறுக்கிப் பிடித்துக் கொண்டு..

''சமையல் விருந்தை மெதுவாக கற்று வை.. அட்ஜெஸ் பண்ணிக்கிறேன்.. அந்த விருந்தை சீக்கிரம் வச்சிட்றா?'' என்ற வனை தன் கைகளை விடுவித்துக் கொண்டு தன் நெற்றியில் அவன் முகத்தைத் தள்ளி..

''எனக்கு மட்டும் அந்த ஆசையில்லையா? எல்லாம் நல்ல படியாக நடக்கணும். எல்லாரோட சம்மதத்தோட நாலு சுவத் துக்குள்ளே உன்னை..'' என நிறுத்தியவனை..

''என்னை.''

''.........''

''சுசி.. சொல்லு. என்னை என்ன பண்ணுவே?'

''ம்கூம்'' முகத்தை மூடிக் கொண்டாள்.

''ஏய்.. என்னிடம் என்ன வெக்கம். வெக்கப்பட்ற விசயமா.. சொல்லு.''

''ம்கூம்'' மீண்டும் தலையைக் குனிந்து கொண்டு தலை யாட்டி மறுத்தாள்.

''நான் உன் புருஷன்டி... சொல்லு.''

''வேண்டாம்.''

''சொன்னாத்தான் விடுவேன்.''

''வேண்டாம்.''

''சொன்னாத்தான் விடுவேன்.''

''வேண்டாம்.''

''ஏய்.. சொல்லுடி.. என்ன பண்ணுவே'' அவன் வற்புறுத்தல் தாங்காமல்.. யாரோ இருப்பதுபோல் சுற்றும் முற்றும் பார்வையைச் சுழற்றியவள்.

''சொல்லணுமா?'' என்றாள் மீண்டும்.

''எஸ்.'' கண்களை மூடித் திறந்தான்.

''ஒண்ணுமில்லை. உன்னைக் கதற கதற ரேப் பண்ணப் போறேன் அவ்வளவுதான்'' என்றபடி கேஷுவலாக எழுந்தவளைப் பிடித்து நிறுத்தி..

''தெய்வமே.. பேசறது நீயா?.. எங்கே கால காட்டு.''

''எதுக்கு?''

''கும்பிடத்தான்.''

''இப்போ கால் வேணாம். அதைப் போகப் போக பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு இந்தக் கைகளைத் தொட்டுக் கும்பிட்டுக்கலாம்'' என இரு கைகளையும் அவன் முன் நீட்டினாள். நீட்டியவளை இழுத்து அணைத்து..

''நீ இந்த விஷயத்தில் இவ்வளவு ஸ்பீடா இருப்பன்னு நான் எதிர்பார்க்கல கண்ணம்மா.. உன் பேச்சே எனக்கு மூச்சு முட்டுது'' என பேசிக் கொண்டே அவள் முகத்தை வேகமாய் நெருங்கியவனை படக்கென தள்ளிவிட்டு..



''இது எல்லாம் அப்புறம்.. முதல்ல உங்கக்கா என்னை நம்பட்டும்.. அவங்க உடம்பும் நல்லபடியாக ஆகட்டும்'' என அவனிடம் உதடு சுழித்து விட்டு.. ஏதோ சமையல் பற்றி எல்லாம் தெரிந்தது போல் சமையல் அறைக்குள் நுழைந்து.. ஒவ்வொரு டப்பாவாகத் திறந்து பார்க்கத் தொடங்கினாள்.

அன்று மாலையே தன் அக்கா ஜானகியை வீட்டிற்கு மிக பாதுகாப்பாய் அழைத்து வந்தான் விக்ரம். நடக்க முடியாமல் தடுமாறிய நிலையிலும் தன் வீட்டில் இருக்கும் இந்தப் பெண் யார் என்று ஜானகிக்கு புருவம் உயர்ந்தது.. விக்ரமைப் பார்த்து யார் எனப் பார்வை கேட்டது.

''சொல்றேன்.. முதல்ல நீ வந்து படுக்கா?''

சமாதானம் அடையாமலேயே தன் படுக்கையில் சரிந்தாள் ஜானகி.

தன் நண்பனின் தங்கை.. தவிர்க்க முடியாமல் அவன் வெளிநாடு செல்ல வேண்டிய நிர்பந்தம்.. தன் தங்கையை ஹாஸ்டலில் விட்டுச் செல்ல அவனுக்குத் துளிக்கூட விருப்பம் இல்லை. தன் மேல் உள்ள நம்பிக்கையில் கேட்டதாகவும்.. அந்த பெண் நர்ஸ் ட்ரைனிங் முடித்து இருப்பதால்.. இங்கே தங்குவது அக்காவிற்குதான் நல்லது என்பது போல் பொய்யை மூட்டை மூட்டையாய் அவிழ்த்து விட்டான்.

தம்பி மேல் உள்ள அளவுக்கதிகமான அன்பு, சுசித்ராவைப் பார்த்ததும் உள்ளுக்குள் ஏற்பட்ட சின்ன நம்பிக்கை.. ஜானகியை வேண்டாம் என்று சொல்லிவிடவில்லை.. இருந்தாலும் மனம் கேட்காமல்.

''டேய்.. விக்ரம்'' பலமிழந்து குரல் தொங்கலாடியது.

''என்னக்கா'' தலையருகே அமர்ந்து.. தலை கோதி விட்டான்.

''என்னதான் இருந்தாலும்.. வயசுக்கு வந்த பொண்ணு.. நாளைக்கு ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டிய பெண்.. இப்படி நம்ம வீட்டுல வந்து இருப்பது.. சரியா?

''இல்லக்கா.. அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் ஆயிடுச்சி?'' என்றான்.

அதிர்ச்சியில் பார்வையை சுருக்கியவள்,

''ஆயிடுச்சா.. அவ வீட்டுக்காரன்.''

''பாத்து பாத்துதான் வளர்த்தான். ஆனா தங்கைக்கு சரி யான துணையை தேடித் தர தவறிட்டான். தாலி கட்டினவன். பணத்துக்கு ஆசைப்பட்டவன். ஒரு நாள் ராத்திரி நகை யெல்லாம் சுருட்டிக்கிட்டு ஓடிட்டான்.''

இதையெல்லாம் கதவுக்கு வெளியே நின்றபடி கேட்டுக் கொண்டிருந்த சுசித்ராவிற்கு தலை சுற்றியது. விக்ரமிற்கு இந்தளவு பேசத் தெரியுமா? இப்போதைக்கு சமாளிப்பவன். பின்னால் எப்படி சமாளிக்கப் போகிறான்.. நான் இந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன் அக்கா என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுப் போவதை விட்டு விட்டு.. எனக்கொரு அண் ணன். அவன் வெளிநாடு.. எனக்கு ஒரு கல்யாணம்.. கட்டிய வன் ஓடி விட்டான்.. இத்தனை பொய்யா? ஒரு பொய்யை சமாளிக்க எத்தனை பொய்கள்.. அப்பப்பா... வரட்டும் வெளியே.. என்று எண்ணிக் கொண்டாள்.

ஜானகியின் படுக்கைக்கு அருகேயே.. தேவையான எல்லா மெடிசன்களையும் பார்த்துப் பார்த்து வைத்துவிட்டு டாக்டர் கொடுத்த பிரிஸ்கிரிப்சன்படி எப்படி எப்படி கொடுக்க வேண் டும் என சொல்ல.. சுசித்ராவைத் தேடி வெளியே வந்தான்.

அவன் வெளியே வந்ததுமே சுசித்ரா முந்திக் கொண்டு.. அவன் காலரைப் பிடித்து இழுத்து ஹாலுக்கு அழைத்து வந்தாள்.



''என்னது! இப்படிப் புளுகி வைக்கிறீங்க?''

''............''

''என் புருஷன் நகையைத் தூக்கி ஓடிட்டானா?'' பற்களைக் கடித்தாள்.

சத்தம் இல்லாமல் சிரித்தான்.

''இதுக்குத்தான் கோபமா? அவன் கற்பனை புருஷன் அதான் நகையைத் தூக்கிகிட்டு ஓடிட்டான். நான் நிஜம் உன்னைத்தான் தூக்கிட்டு ஓடுவேன்'' என்றபடி அவள் எதிர் பார்க்காத விநாடி அவள் செழிப்பான கன்னத்தில் தன் இதழை வேகமாய் வைத்து.. முத்தமிட்டு.. அவள் சுதாரிக்கும் முன்பு அங்கிருந்து நகர்ந்தான்.

தலைசுற்றி அவள் கீழே விழவில்லை. அவ்வளவுதான் மனம், உடல் மயக்கத்திற்கு ஆட்பட்டு இருந்தன. இது எந்த வகை மயக்கம் என்று அவளுக்கே விளங்கவில்லை. இது விக்ரமின் குறும்பினால் ஏற்பட்ட மயக்கமா? இல்லை பிரச்சனை களை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பிரமிப்பின் மயக்கமா? ம்கூம் புரியவில்லை. சுதாரித்துக் கொண்டு பார்த்தபோது.. விக்ரம் கண்ணில் படவில்லை.. அக்காவிடம் தன்னைப் பற்றி புளுகியவனுக்கு... தன்னை அழைத்துப் போய் அறிமுகப்படுத்த வேண்டும் என்று தோன்றாமலா போய்விட்டது. கடுப்பாக இருந்தது.

நாமே போய் பேசுவோம் என்ற தீர்மானத்தோடு.. ஜானகி யின் அறையை மெல்ல எட்டிப் பார்த்தாள். கதவைப் பார்த்த படி ஜானகியின் படுக்கை இருந்ததால்... சுசித்ராவின் முகம் அரை குறையாய் திறந்து இருந்த ஜானகியின் விழிக்குள் சிக்கிக் கொண்டது.

சிரமப்பட்டு இமைகளை மேலேற்றிய ஜானகி.. விழிகளை அசைத்து.. சுசித்ராவை உள்ளே அழைத்தாள்.

நடக்கத் தெரியாதவள் போல் நடந்து.. அருகே சென்றாள். உள்ளுக்குள் அத்தனை நாடி நரம்பும் நடுங்கிக் கொண்டு.. வேர்த்து வழிந்தது.

''உட்காரும்மா'' கைகளைத் தூக்கி தனக்கு பக்கத்திலேயே காட்டினாள். தயங்கியபடி படுக்கையின் ஓரத்தில் அமர்ந் தவள். உச்சிமுதல்.. பாதம் வரை முழுமையாகப் பார்த்தாள். பாவமாகத் தோன்றியது.. இப்படி நலிந்து கிடக்கும் ஜீவனையா கூட்டணி அமைத்து ஏமாற்றுகிறோம்.. உள் மனம் உறுத்தியது.

ஜானகிக்கும் விக்ரமிற்கும் முகச்சாயல் கொஞ்சம்கூட ஒத்துவரவில்லை. ஒருவேளை தாய் இருவர் என்பதாலோ என்னவோ... அந்த 46 வயது பெண்மணி.. இன்னும் பத்து வயது அதிகமானது போல்.. கிழிந்த துணியாய் நைந்து போய் கிடந்தாள். ஜானகி நல்ல நிறம்.. இப்போது இன்னும் வெளுத் துப் போய்.. சாம்பலாய் நிறம் காட்டியது. தம்பியை விட உயரம் அதிகம்.. நல்ல நிலத்தில் களைகளும் பயிராய் வளர்ந்து நிற்பது போல்.. கருப்பும் வெளுப்பும் கலந்த தலைமுடி.. கை கால்கள் மூங்கிலாய் மெலிந்திருந்தது. உடல் முழுக்க சோர்வு அப்பிக் கிடந்தாலும்.. கண்களில் மட்டும் ஏதோ ஓர் தீட் சண்யம்.

சுசித்ராவின் நினைவுகளை கலைக்கும் வண்ணம்,

''நல்லா உட்காரும்மா'' என்றாள் ஜானகி.

''பரவாயில்லை'' முனகினாள்.

சுசித்ராவை உற்றுப் பார்த்தவள்.. மனம் கசிந்தாள்.. ஆறு மாதத்தில் கணவனை இழந்த தன் நிலையை விட இவள் நிலை மோசம் என்று தோன்றியது.. விதவை என்பதை விட வாழா வெட்டி மிக கொடுமை.. அந்த ஆறு மாதத்தில் தனக்குள் ஒரு கரு ஊன்றப்பட்டு இருந்தால்.. இப்படி ஒரு பெண் பிள்ளை நமக்கும் இருக்குமே.. எண்ண அலைகள் மோதிச் சிதறின.



காரணமே இல்லாமல்.. வாழாவெட்டி என்ற ஒரே வார்த்தை.. சுசித்ராவின் மேல் ஒரு அனுதாபம் இல்லற வாழ்க்கைப் பற்றி அதிகம் கேட்டால்.. மனம் புண்படும்.. நாமாவது கனிவாய் இருப்போம் என்று.. அவளின் கடந்த கால வாழ்வைப் பற்றி எதுவும் கேட்க வேண்டாம் என்ற முடிவிற்கு வந்தாள்.

''இப்படி பக்கத்துல உட்கார்.''

கொஞ்சம் நகர்ந்தாள்.

ஜானகி தன் கையை கடினப்பட்டு நகர்த்தி.. சுசித்ராவின் கை மேல் வைத்து..

''பொண்ணுங்களுக்கு கஷ்டங்றது.. தும்மல் வர மாதிரி.. ரொம்ப சகஜமானது. மனச விட்டுடக் கூடாது. தைரியமா இருக்கணும். படிச்சிருக்க.. நல்ல உத்தியோகத்தை தேடிக்கிட்டா வேறென்ன வேணும்'' ஆறுதலாய் கூறக் கூற சுசித்ராவும் மண்டையை மண்டையை ஆட்டினாள்.

''உம் பேரென்னம்மா?''

''சுசித்ரா!'' சொல்லிக் கொண்டே ஜானகியின் தலைமுடி முகத்தில் வந்து விழுந்ததை கவனித்து.. ஒதுக்கி விட்டாள்.

''இதை உன் வீடா நினைச்சிக்கோ?''

'இது என் வீடுதானே' உள்ளம் வார்த்தைகளை வெளியே விடாமல் அசை போட்டது.

''ரொம்ப சிரமப்படாதே.. உன்னால முடிஞ்சத செய்.''

''சரிம்மா!'' என்று தலையாட்டினாள்.

''என்ன கண்ணு சொன்ன?'' ஆர்வமாய் அம்மா என்ற வார்த்தை ஜானகியை உசுப்பியது.

''சரீன்னு சொன்னேன்.''

''இல்லம்மா.. சரிக்குப் பக்கத்துலேயே ஒரு வார்த்தையை சேர்த்து சொன்னியே.''

அப்போதும் இவளுக்குப் புரியவில்லை.

''என்ன சொன்னேன்?'' விழித்தாள்.

''அம்மான்னியே.. அப்படியே கூப்பிடேன்.. நீ அப்படிச் சொன்னபோது.. என்னமோ தெரியலை மனசைப் பிசையுது.. நான் நல்லா வாழ்ந்திருந்தா.. உன் வயசுல எனக்கு ஒரு பொண்ணோ பையனோ இருக்கும்'' கண்கள் கலங்கின.

இப்படி தன் மேல அன்பு காட்டும் ஜீவனையா ஏமாற்றப் போகிறோம்? கண்ணாடியை மென்றது போல் குடல் அறுபடத் துடித்தாள். ஜானகியின் கண்களைத் துடைத்து விட்டவள்,

''எதுக்கும்மா பழையதை எல்லாம் நினைத்துக் கொண்டு... உங்க உடம்பு இருக்கிற நிலையில் நீங்கள் உணர்ச்சி வசமே படக்கூடாது'' என்றபடி கொடுக்க வேண்டிய மாத்திரை மருந்துகளை பார்த்து கவனமாகக் கொடுத்தாள்.

பதமாகக் காய்ச்சி.. ஆற வைத்த பாலை.. தாதி போலவே புகட்டி.. ஜானகியை தூங்க வைத்தபோது விக்ரம் இரவு டிபனை ஹோட்டலில் முடித்துக் கொண்டு சுசித்ராவிற்கும் கையோடு பார்சல் கொண்டு வந்திருந்தான்.

மிகவும் வெற்றிகரமாக இவர்களின் நாடகம் தொடர்ந்து அரங்கேறியது. சுசித்ரா மேல் ஜானகிக்கு ஏற்பட்டுள்ள அன்பு. அவள் வாழாவெட்டி என்ற அனுதாபத்தின் அஸ்திவாரத்தில் என்பதை ஏனோ இருவரும் மறந்து.. ஜானகி சுசித்ராவை மிகவும் நேசிக்கத் தொடங்கி விட்டதாக கனவுலகில் இருந்தனர்.

நாட்கள் நகர நகர வேகமாகவே ஜானகியின் உடல்நிலை தேறியது. ஓரளவு சமைக்கக் கூட கற்றுக் கொண்டாள் சுசித்ரா.



சோபாவில் அமர்ந்து டி.வி. பார்க்க அந்த தெருக்கோடியில் உள்ள முருகன் கோவிலுக்கு.. மெல்ல நடந்து சென்று வரும் அளவு ஜானகியின் உடல் தேறியது.

விக்ரம் தைரியமாக இருந்தாலும்.. சுசித்ராவிற்கு மட்டும் அச்ச உணர்வு ஆட்டி வைத்தது. தம்பி மேல் அந்த அக்காவிற்கு இருந்த அளவுக்கதிகமான நம்பிக்கை பாசம். எதிர்த்து ஒரு எழுத்தைச் சொன்னாலும் தாங்கிக் கொள்ள முடியாத கோழை மனசு.. இதெல்லாம்.. பின்னால் வெடிக்கப் போகும் பூகம்பத்திற்காக இவளுக்குள் புகைந்து கொண்டு இருந்தது.

வழக்கம் போல் அன்று விக்ரம் கிளம்பி பேங்கிற்குச் சென்றதும்.. ஜானகிக்குத் தேவையான அனைத்தையும் செய்து முடித்து.. இளஞ்சூட்டில் ஜானகியை குளிக்கவும் வைத்து.. சாப்பிடவும் வைத்த பின்பு தன் துணிகளை அள்ளிக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்து கதவடைத்துக் கொண்டாள் சுசித்ரா. முதல் நாள் பார்த்த அறிவிப்பு மனக் கண் முன்பு வந்து நிற்க.. அந்த 10.00 மணி சாமி படத்திற்காக டி.வி.யை போட்டுக் கொண்டு ஹால் சோபாவில் ஜானகி உட்கார்ந்ததும்..

''சுசித்ரா,'' கொஞ்சம் குரலை உயர்த்தினாள்.

பாத்ரூமில் தண்ணீர் சொட்டும் சத்தம் சட்டென நிறுத்தப் பட்டு.. மெலிதாகக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்து.. நெஞ்சோடு இறுக்கியிருந்த டவலை இறுக்கிக் கொண்டு..

''என்னம்மா'' என்றாள்,

''நல்ல படம் சீக்கிரம் குளிச்சிட்டு வா?''

''சரிம்மா'' கதவை சாத்திக் கொண்டாள். இவள் கதவை சாத்திய நேரம் காலிங் பெல் ஓசை கேட்டது. யாராக இருக்கும்? ச்சே.. யாராக இருந்தால் என்ன? என எண்ணிக் கொண்டே மார்பின் மேல் இருந்த டவலின் முடிச்சில் கை வைத்தாள்.

''வாங்க தம்பி'' ஜானகி வரவேற்பதும் சுசித்ராவிற்கு மெல் லியதாய் கேட்டது. ஷவரைத் திறந்துவிட நீர்த்துளிகளின் சத்தத்தை தவிர வேறு எதையும் அவள் காதுகள் கேட்க வழி இல்லாமல் போனது.

''உட்காருங்க.. என்ன சாப்புட்றீங்க?''

ஜானகியின் உபசரிப்புக்கு பதில் சொல்லாமல் அந்த வாட்ட சாட்டமான இளைஞன் ஜானகியின் பக்கத்திலேயே சோபா ஓரத்தில் தன்னை இருத்திக் கொண்டான்.

இருவரும் சில நிமிடங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு தலையைக் கவிழ்த்துக் கொண்டனர்.

''என்னப்பா விஷயம்?'' ஜானகி கேட்டதும், நிமிர்ந்து பார்த்தவன்,

''உங்களுக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட் டேன். அதான் பார்த்துட்டு போலான்னு வந்தேன்'' என்றான்.. வார்த்தையில் பரிவோ, பாசமோ மருந்துக்குக் கூட இல்லை.

''ரொம்ப சந்தோஷம்பா.''

''ஒரு மாதத்திற்கு முன்னாலேயே வந்து பார்க்கணும்னு நினைச்சேன். வந்தா சத்தம் போட்டுடுவோம்னு பயம். என் னால உங்க உடம்பு பாதிக்கப்படக்கூடாது. அதான் வரலை.''

''என்னப்பா சொல்ற?''

''தங்கச்சிக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு. இந்தாங்க பத்திரிகை'' பேச்சை மாற்ற பத்திரிகை நீட்டினான். தயக்கமாக பத்திரிகையை பெற்றுக் கொண்டவள் பிரிக்காமலேயே..

''நான் பதில் சொல்லாமல் மௌனமாக இருப்பதை.. நீங்க வேறு விதமா புரிஞ்சி கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணிட் டீங்கன்னு நினைக்கிறேன்.''



''நீங்க எப்பவுமே பதில் சொல்ல முடியாது.''

''இல்லப்பா. இப்ப கல்யாணம் வேண்டான்னுதான் என் தம்பி சொன்னானே தவிர.. நித்யாவைப் புடிக்கலன்னு சொல் லலையே'' அதைக் கேட்டு,

சத்தமாகச் சிரித்தான் அந்த இளைஞன்.

''எங்களுக்கும் உங்க வீட்டு சம்பந்தத்தில் ரொம்ப சந் தோஷம்தான். நானும் அந்தக் காட்சியைப் பார்க்கலன்னா.. உங்க முடிவான பதிலுக்கு காத்துகிட்டுதான் இருந்திருப் போம்.''

''என்னப்பா சொல்ற? புரியலையே'' நிஜமாகவே குழம்பத் தொடங்கினாள்.

''ஒரு பொண்ணைக் காதலிச்சிக்கிட்டு.. இன்னொரு பொண்ணைப் பெண் பார்க்க வரக்கூடாது.''

''என்னப்பா சொல்ற? எனக்கு விளங்கலை.''

''இன்னும் உங்களுக்கு விஷயம் தெரியாதா? உங்க தம்பி ஒரு பொண்ணை லவ் பண்றார். அன்னைக்கு இரண்டு பேரை யும் பீச்சுல.. அவ்வளவு நெருக்கமாப் பார்த்தபோதே.. அப் புறம் ஏன்டா பொண்ணு பார்க்க வந்தேன்னு காலரைப் புடிச்சி கேக்கணும்னு நினைச்சேன். ஏதோ ஒண்ணு தடுத்துடுச்சி.''

அதைக் கேட்டதுமே சீராக ஓடிக் கொண்டிருந்த இதயத் துடிப்பு.. யோசிக்கத் தொடங்கியது. 'என் தம்பி காதலிக் கிறானா?' யாரோ இதயத்திற்கு விலங்கிட்டு இறுக்கியது போல் இருந்தது.

''அப்போ நான் வர்றேன்.. கல்யாணத்துக்கு வந்துடுங்க'' என்றபடி எழுந்தவனை காபி குடிச்சிட்டு போங்க தம்பி என்று கூறக் கூடத் தோன்றாமல்.. எந்திரமாய் தலையாட்டி வைத்தாள். அவன் கிளம்பிப் போய் பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகியும்

எதையும் சிந்திக்கத் தோன்றவில்லை. வற்றிப் போயிருந்த கண்களில் ஈரம் கூட கசிந்தது. மூச்சுக்காற்று எளிதாய் வர சிரமப்பட்டது.

''வந்தது யாரம்மா?'' என சுசித்ரா வந்து தோள் தொடும் வரை ஜடமாகத்தான் இருந்தாள்.

''அ... து.. ஏ...ன்... ப...த்..தி...ரி..க்..கை.''

தடுமாறவும் நெற்றி சுருக்கியவள்.

''என்னம்மா ஆச்சு.. என்ன பண்ணுது'' என்றபடி தலை யிலும் கழுத்திலும் கை வைத்துப் பார்த்தாள்.. சூடு தெரிந்தது.

''காபி போட்டு மாத்திரை எடுத்துகிட்டு வரட்டுமா?'' கேட்டாள்.

''ம்'' அநிச்சையாய் தலையாட்டினாள்.

சுசித்ரா கிச்சனுக்குள் நுழைந்த அதே நேரம்.. ஹார்ட் சர்ஜரி செய்த டாக்டர் ரூபத்தில் இன்னொரு பூகம்பம் கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தது.

டாக்டரைப் பார்த்ததும் ஆனந்தத்தைவிட அதிர்ச்சிதான் ஜானகிக்கு ஏற்பட்டது. சொடுக்கிய வலியைப் பொருத்துக் கொண்டு எழுந்து நின்று வரவேற்றாள்.

''வாங்க டாக்டர்.''

சிரித்தபடி வந்தவர்.

''இங்கே பக்கத்தில் ஒரு ரிலேஷன் இருக்காங்க. பார்க்க வந்தேன்.. அப்படியே உங்க நினைவும் வந்தது.. சரி.. நம்ம பேஷண்ட் எப்படி இருக்காங்கன்னு பார்த்துட்டுப் போகலாம்ன்னு வந்தேன்.''



''ரொம்ப சந்தோஷம்'' என்றவள் உட்காராமல் நின்று கொண்டே இருந்தாள்.

''உட்காருங்க.''

''பரவாயில்லை.. என்ன சாப்பிடறீங்க?''

''எது கொடுத்தாலும்'' சிரித்தார்.

''அம்மாடி.. இன்னொரு காபி.''

''சரிம்மா.'' உள்ளிருந்து குரல் வந்தது.

''உடம்பு இப்போ எப்படி இருக்கு?''

''நல்லா இருக்கு'' சொல்லும்போதே இரண்டு கப் காபி யோடு வெளிப்பட்ட சுசித்ராவைப் பார்த்தபோது.. டாக்டரின் முகமும் மனமும் சந்தோஷத்தை அப்பிக் கொண்டது.

''நீ இங்கதான் இருக்கியாம்மா.. ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்றபடி காபியை பெற்றுக் கொண்டபோதே.. பதறிப் போனாள் சுசித்ரா.. எப்படி இந்த மனிதரிடம் இந்த சூழ் நிலையில் தன்னை விளக்குவது.. புரியாமல் வேர்க்க ஆரம் பித்தது. அதையெல்லாம் உணராத டாக்டர்.. ஜானகியைப் பார்த்து..

''காலம் நேரம் சாதகமாக அமைந்தால் நானே உங்க கிட்டே பேசணும்னு நினைச்சேன். இந்தக் காலத்துல இப்படிப் பட்ட பிள்ளைகளைப் பார்ப்பது கடினம். விக்ரம் மாதிரி தம்பியும்.. சுசித்ரா மாதிரி ஒரு தம்பி மனைவி கிடைக்கவும் நீங்க கொடுத்து வச்சிருக்கணும்..'' என்று பேசிக் கொண்டே போக.. கண்கள் இருட்ட.. சட்டென சாட்டையால் அடித் தாற்போல் வலி அதிகரிக்க.. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு ஜானகி வேகமாய் கீழே சரிந்தாள்.



# 8

**விளக்கைத் தொடாத**

**விட்டில்கள் இல்லை!**

**தென்றலைத் தழுவாத**

**பூக்கள் இல்லை**

**கனவுகள் காணாத**

**காதல்கள் இல்லை!**

**விரிசல் ஏற்படாமல்**

**விதைகள் முளைப்பதில்லை!**

**ஆனால்**

**வெளிச்சத்தைப் பார்க்காத சூரியனும்**

**அல்லியை அறியாத நிலவும்**

**நானும் நீயும்தானடி..**

தன் அறையில் உட்காரவும் முடியாமல், நிற்கவும் முடியாமல்.. கண்ணாடியைக் கழற்றுவதும் போடுவதுமாக கைகளைப் பின்புறம் இறுகக் கட்டிக் கொண்டு.. நாலு சுவரையும் தவணை வைத்து நடந்தபடி தொட்டுக் கொண்டிருந்தார் டாக்டர் சுந்தரமூர்த்தி. அடிக்கடி பார்வை கதவைப் பார்த்தது. அவரின் தவிப்பிற்கு தகுந்தபடி யாரும் வந்தபாடில்லை. சட்டென யோசனை வர.. இன்டர்காமை தட்டி.. அடுத்த ஒரு மணி நேரத்திற்கு எந்தக் காரணம் கொண்டும்.. தன்னைப் பார்க்க யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்று கட்டளை பிறப்பித்தார்.



கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும்..

''எஸ் கமின்'' என்றபடி தன் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டார். ஒரு இளம் வயது நர்ஸின் உதவியோடு உள்ளே ஜானகி அழைத்து வரப்பட்டாள்.

''பார்த்து உட்கார வைம்மா.''

''எஸ் டாக்டர்.''

ஜானகி அமர்ந்து கொண்டு தான் சௌகர்யமாக உட்கார்ந்து இருப்பதாக தலையாட்டியதும்..

''நீங்க போகலாம்'' என்று நர்ஸைப் பார்த்துக் கூறினார்.

''ஓ.கே. டாக்டர்'' நர்ஸ் அங்கிருந்து நகர்ந்ததும்.

தன் கண்ணாடியைக் கழற்றி டேபிள் மேல் வைத்து விட்டு.. கர்ச்சீப்பால் முகத்தை துடைத்துக் கொண்டு.. டேபிள் மேலே இருந்த ஃப்ரிஜ் வாட்டரையும் எடுத்து இரண்டு மடக்கு குடித்தார். எப்படிப் பேச ஆரம்பிப்பது என்று தயங்கி.. தொண்டையைச் சரி செய்து கொண்டு.. நிமிர்ந்து ஜானகியைப் பார்த்தார்.

ஜானகியிடம் எந்த எதிர்பார்ப்போ சலனமோ தென்படாமல் பார்வை நிறமிழந்து வெறுமையைத் தாங்கிக் கொண்டு நின்றது.

''இங்கே பாருங்கம்மா. நீங்க என்னைத் தப்பா நினைச்சாலும் பரவாயில்லை. சில விசயங்களை அதுவும் எனக்கு சம்மந்தம் இல்லாத விஷயத்தை உங்ககிட்ட பேசணும்னு ஆசைப்படறேன். திரும்ப உங்களை உயிரோட பார்ப்போமான்னு நாலைந்து நாட்களுக்கு முன்னால பயந்தவங்கள்ல நானும் ஒருத்தன். அதுக்குக் காரணம் என்னோட முன் யோசனை இல்லாத பேச்சாகக் கூட இருக்கலாம். என்னைக்கோ ஒரு நாள் நீங்க தெரிஞ்சுக்க வேண்டிய விஷயத்தை.. என்

னோட அவசரத்துனால முன்னாடியே உங்களுக்கு தெரிஞ்சி போச்சு.. உங்களையோ விக்ரமையோ முன்னப் பின்ன எனக்கு அறிமுகம் இல்லை. எல்லாரையும் போல நீங்களும் ஒரு பேஷன்டாகத்தான் எனக்கு அறிமுகம்.''

டாக்டர் சுந்தரமூர்த்தி தடையில்லாமல் தெளிந்த நீரோடை போல் பேசிக் கொண்டே போக.. ஜானகியின் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. அதை சுந்தரமூர்த்தி கண்டு கொள்ள வும் இல்லை.

''என்னோட பொண்ணுகிட்டேயோ.. பையன்கிட்டேயோ கூட இப்படி டைம் ஒதுக்கி நான் பேசியது இல்லை. ஒரு வேளை நான் இப்படிப் பேசறது.. எனக்குள்ள ஏற்பட்ட குற்ற உணர்வாகக் கூட இருக்கலாம். பத்து இருபது நாட்கள் மட்டும் தெரிந்த விக்ரமை நான் புரிஞ்சிகிட்ட அளவு கூட இத்தனை வருடம் வளர்த்த நீங்க புரிஞ்சுக்கலையோன்ற சந்தேகம் எனக்கு.''

அதைக் கேட்டதும் ஜானகியின் புருவங்களில் மட்டும் அசைவு தெரிந்தது.

''காதல் பெரிய சமூகக் குற்றம் இல்லை. கண்ணு முன்னாடி கொலை பண்றவனையே மன்னிச்சிட்றோம்.''

''உயிரைக் கொல்றவனை மன்னிச்சிடலாம். உணர்ச்சிகளைக் கொல்றவனை மன்னிக்க முடியாது டாக்டர்'' உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் வாய் திறந்தாள் ஜானகி.

''யாரும்மா உணர்ச்சிகளைக் கொல்றது? நீங்கதான் பழங் காலத்து இடியாட்டிக் கல்சரை மனசுல வச்சுகிட்டு.. இன்னைக்கு இருக்கிற சூழலோடு ஒத்துப் போகாம.. இருக்கீங்க. இன்னைக்கு இருக்கிற எங்ஸ்டரோட நிலையும்.. ஸ்பீடும் உங்களுக்குத் தெரியுமா? அது தெரிஞ்சு இருந்தா உங்க தம்பிக்கு கோயில் கட்டி இருப்பீங்க.''



ஜானகியின் விழியின் வட்டம் கொஞ்சம் விரிந்தது.

''அம்மா! இப்ப இருக்க பசங்க.. காதலுக்காக பெத்தவங் களைத் தூக்கி எறிஞ்சிடுவாங்க.. இல்லை ஒரு சிலர் பெத்த வங்களுக்காக காதலைத் தூக்கி எறிஞ்சிடலாம்.. ஆனா சுசித்ரா. விக்ரம் மாதிரி விட்டுக் கொடுக்கவும் முடியாம.. வாழ வும் முடியாம.. தங்களுக்குள்ளே வட்டம் போட்டுகிறவங்க கோடியில் சிலர்தான்.''

''............''

''விக்ரம் தன்னோட உணர்வை வெளிப்படுத்த முடியாத அளவு.. உங்க கட்டுப்பாடும் அன்பும் இருந்து இருக்கு.. யாரைத் திருமணம் செய்து கொண்டாலும் உங்க தம்பி சந்தோச மாக இருக்கணும்னுதான் விரும்புவீங்க. அப்படி இருக்கும் போது தனக்கு வரப் போகிறவளை அவன் செலக்ட் பண்ணட் டுமே.. அவனுக்கு அந்த உரிமைகூடக் கிடையாதா?''

''............''

''விக்ரமோட தாய் இந்த இடத்தில் இருந்தா.. கண்டிப்பாக ஆத்திரப்பட்டு இருக்க மாட்டாங்க.''

அந்த வார்த்தை ஜானகியைத் தூக்கி எரிமலைக் குழம்பில் போட்டது.

''சந்தர்ப்ப சூழ்நிலையினால் தாலி கட்டிகிட்டாலும்.. இன் னும் அவங்க இரண்டு பேரும் கணவன் மனைவியா வாழலை.. திருமணத்திற்கு முன்பே உடல் சுகத்திற்காக தங்களை மாற் றிக் கொள்ளும்.. இளைஞர்களுக்கு மத்தியில் இந்த இரண்டு பிள்ளைகளும் எவ்வளவோ உசத்தி.. காதல்ங்ற மனச்சங் கமம் அந்த நேரத்தில் அப்பா அம்மாகிட்ட பர்மிஷன் வாங் கணும். அக்கா தங்கைக்கிட்ட பர்மிஷன் வாங்கணும்னு தோணாது. இன்னும் யாராலும் விளக்கிச் சொல்ல முடியாத ஒரு வகையான வித்தியாசமான உணர்வுதான் காதல். தாலி

கட்டிய பின்பும் தங்களோட உணர்ச்சிகளை தீ வச்சிக் கொளுத்திட்டு உங்க ஆசிக்காகக் காத்திருக்காங்களே.. இந்தப் பிள்ளைகளா உங்க உணர்ச்சிகளைக் கொன்னுட்டாங்க. நீங்க கண்ணு விழித்தால் போதும்னு இந்த நாலு நாலாக ரெண்டு பேரும் கண்களை மூடல.. நான்தான் கட்டாயப்படுத்தி ஒரு மணி நேரத்துக்கு முன்னால வீட்டுக்குப் போய்ட்டு வாங் கன்னு அனுப்பி வச்சேன். உங்களை சமாதானப்படுத்த முடிய லன்னா.. இரண்டு பேரும் நிரந்தரமா விலகிடலாமான்னும் யோசிக்கிறாங்க. அப்படிப்பட்ட இந்தப் பிள்ளைகளுக்காக நீங்க ஏன் கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாது?''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''சுசித்ராவோட குடும்பத்தாருக்கு அந்த பெண் மேல் இருந்த நம்பிக்கை. உங்க தம்பி மேல் உங்களுக்கில்லாமல் போயிடுச்சேம்மா.''

''...........''

''என் வாயால இப்படிச் சொல்லக் கூடாது. வேற வழி இல்லை. இன்னொரு ஹார்ட் அட்டாக்கை நீங்க தாங்க மாட்டீங்க. வாழ்நாளை எண்ணிகிட்டு இருக்க நீங்க வாழப் போற அவங்களைத் தண்டிக்கிறதில என்ன லாபம்? யாருக்குப் பிரயோஜனம்?''

''............''

''தன்னோட வேலையைக் கூடப் பொருட்படுத்தாம.. ஒரு வேலைக்காரி போல் உங்களுக்குப் பணிவிடை செய்யக் காரணம் என்ன.. நீங்களே யோசிச்சுப் பாருங்க.. மனசார ஒருத் தரை ஒருத்தர் காதலிச்சிட்டு.. இப்படி அவங்க பிரிஞ்சி இருக் கிறது.. கொடுமையில்லையா?''

''என்னால.. உக்கார முடியலை டாக்டர்.. என்னை பெட்ல கொண்டு போய் விடச் சொல்றீங்களா?''



அமைதியாய் நிமிர்ந்து பார்த்தவர்.. அதற்கு மேல் பேசி எந்தப் பயனும் இல்லை என்று உணர்ந்து... நர்ஸை வர வழைத்து ஜானகியைப் படுக்கைக்கு அழைத்துச் செல்லக் கட்டளையிட்டார். இவ்வளவு தூரம் பேசிப் பார்த்தும் ஜானகி யின் செயல் கொஞ்சம் நஞ்சம் இருந்த தலைமுடியும் டென்ஷ னில் உதிர்ந்து விடும்போல் இருந்தது. அதுவரை கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஸ்டெத்தை கழற்றி கொஞ்சம் வேகமாகவே உருவி வைத்து விட்டு.. இரண்டு சர்ட் பட்டன் களை கழற்றிப் பின்னுக்கு இழுத்து விட்டு இரண்டு கைகளை யும் கழுத்துக்கு முட்டுக் கொடுத்து தளர்ந்து சேரில் சாய்ந்தார்.

விக்ரமும் சுசித்ராவும் உடை மாற்றிக் கொண்டு ஹாஸ் பிடல் வந்தபோது கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தாள் ஜானகி. இருவரும் அந்த அறைக்குள் நுழையவே சங்கடப் பட்டார்கள். கால்கள் இயல்பான வேகத்தோடு எட்டு வைக்க மறுத்தது. ஏஸி அறையிலும் வேர்த்தபடி அக்காவின் காலடி யில் தயக்கமாய் அமர்ந்து.. ஜானகியின் காலில் தன் இரண்டு கைகளையும் வைத்தான். மூடியிருந்த கண்களை விக்ரமின் தொடுதலால் விரித்துப் பார்த்தாள்.

கண்களில் கலக்கத்தோடு விக்ரம் பார்க்க.. அவனுக்குப் பக்கத்தில் தலையைக் கவிழ்த்தபடி சுசித்ரா.

''இங்கே வாம்மா'' ஈனக்குரலில் ஜானகி அழைத்ததும்.. விலுக்கென நிமிர்ந்தவள்.. தன்னையா என்பது போல் நெஞ்சில் கை வைத்துக் கேட்டாள். கண்களை மூடித் திறந்து ஆமோதித் தாள் ஜானகி. விக்ரமைப் பார்த்தபடியே நெருங்கினாள்.

''உங்கப்பா அம்மாவிற்கு தந்தி கொடுத்து வரச் சொல் லும்மா.''

''எது...க்...கு.'' புரியாமல் விக்ரமைப் பரிதாபமாய் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையில் தெரிந்த பயத்தை படித்தவன்.. எழுந்து வந்து அவளுக்குப் பின்னால் நின்று கொண்டான்.

''சொ...ன்...னா..த் தான் தந்தி கொடுப்பியா?''

''அப்... ப.. டி.. இல்..லை'' வேகமாய் மறுத்துப் பதறினாள்.

''அக்கா!'' விக்ரம் அழைத்தான்.

''என்ன!''

''நான்.''

''வேண்டான்டா நீ எதையும் சொல்ல வேண்டாம். நான் வயசானவ. இந்தக் காலத்துக்கு ஏத்த சில விஷயங்களை என்னால புரிஞ்சிக்க முடியலை. நீயாவது புரிய வச்சிருக் கலாம். சரி விடு. உன் சந்தோஷத்தைவிட பெரிய சந்தோஷம் வேற என்ன இந்த உலகத்துல இருக்கு? எந்த ஒரு விசயத் தையும் மனம் விட்டுப் பேசிட்றது நல்லது. அப்பத்தானே யாராரு என்ன நினைக்கிறாங்கன்னு தெரியும்.. ஏதோ ஓர் பயத்துல மௌனமாகவே இருந்திட்டியேடா.. இன்னொரு மனிதன் உன்னைப் பத்தி எனக்கு சொல்ற அளவு ஆளாக்கிட் டியே பரவாயில்லை. விடு.. இப்படி ஒரு தங்கச் சிலையைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்றேன்னு சொல்லி இருந் தீன்னா.. கண்ண மூடிக்கிட்டு சம்மதித்து இருப்பேனே..''

''அக்கா!'' ஆச்சரியத்தின் விளிம்பில் அவன் உள்ளம் சட் டென தொத்திக் கொண்டது.

''கல்யாணத்தைத்தான் கண்ணால பார்க்கலை. உங் களோட சாந்தி முகூர்த்தமாவது.. பெத்தவங்க ஆசியோட நல்ல நாளில் நடக்கட்டும்.''

வேகமாய் சந்தோஷமாய் சுசித்ராவின் கையை அக்கா விற்குத் தெரியாமல் பிடித்து அழுத்தினான். உதடு கடித்து தலை குனிந்து சிரித்தாள்.

தானே தந்தி கொடுப்பதாக ஓடினான். அடுத்த நாள் மாலையே ஹாஸ்பிடலுக்கே சுசித்ராவின் சித்தப்பா, சித்தி,



தம்பி.. அனைவரும் என்னவோ ஏதோ என்று அலறிக் கொண்டு வந்து சேர்ந்தனர். அவர்களின் தவிப்பிற்கும் துடிப்பிற்கும் ஹாஸ்பிடலில் ஜானகி சொன்ன செய்தி.. வெட்ட வெயிலில் வேர்வையில் குளித்துக் கொண்டிருந்தவர்களை தூக்கி வந்து பனிகொட்டும்.. தென்றல் தாலாட்டும் நந்தவனத்தில் போட்டது போல் மகிழ்ந்து போய் விரைந்தனர்.

ஜானகி வீட்டிற்கு அழைத்து வரப்பட்டதும்.. நல்ல ஜோதிடர் ஒருவர் வரவழைக்கப்பட்டார். அந்த மனிதர்.. அத்தனை கிர கங்களையும் பிடித்துப் பார்த்து. இன்னும் 12 நாட்கள் செல் லட்டும் என தேதி குறித்து விக்ரம் சுசித்ராவின் வயிற்றெரிச் சலையும் மறக்காமல் வாங்கிக் கொண்டார். அடுத்த 12வது நாளுக்காக அந்தக் குடும்பமே மகிழ்ச்சியோடு காத்திருந்தது. சாந்தி முகூர்த்தம் சாந்தியில்லாத முகூர்த்தமாகப் போவதை அறியாமல்,

# 9



**அன்பே!**

**என் இதயத்துடிப்பை**

**உற்றுக் கேள்..**

**சந்தோஷம் காணாமல்**

**தவிப்பது புரியும்..**

**கண்ணிமையாய் உன்னிடம்**

**நான் கொண்ட கனிவெல்லாம்**

**கல்லில் அடிபட்டது போல்**

கன்னிப் போய்

உன்னைக் கவலையோடு பார்க்கிறது..

காலம் உன்னை என்னிடமிருந்து

கவர்ந்து விடுமோ என்று..

இரவு நேரம்.

8.30 இருக்கும். சிலுசிலுவென காற்று சிறகடித்துக் கொண்டு வந்தது. அன்று என்று பார்த்து ஆரவாரங்கள் தங்களின் ஆர்ப் பாட்டத்தைக் கம்மிப் படுத்திக் கொண்டிருந்தன. இன்று பௌர்ணமி என்பதை வட்ட நிலவு தன் அங்கத்தில் எந்தக் குறையும் இல்லாமல் வெண்ணிற பட்டு வட்டிலாய் வலம் வந்து கொண்டிருந்தது. ராணியாய் வலம் வந்த நிலாவை சுற்றி எந்தவித நட்சத்திரக் கூட்டமும் இல்லாமல் வெட்ட வெளியாய் இருந்தது. மேகக் கூட்டங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. வெற்று மார்போடு மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்த விக்ர மிற்கு.. வேதனையைத்தான் கொடுத்தது.. கைகளைப் பிசைந்து கொண்டான். குறுக்கும் நெடுக்குமாக சிறிது நேரம் நடந்து பார்த்தான். ம்கூம்.. மனது நிலை கொள்ளவில்லை.

ஏழு நாட்கள் கடந்து விட்டது.. இன்னும் எட்டு நாட்கள் இருக்கின்றனவா.. முதல் வகுப்பு மாணவன் போல் விரல் விட்டு எண்ணிப் பார்த்தான். பெருமூச்சுதான் வேகமாய் வெளி வந்தது. சுசித்ராவைத் தவிர மற்ற அனைவர் மேலும் கோபம் மலையாய் பொங்கிப் பொங்கி வந்தது. எந்த நேரம் அந்த ஜோசியன் வந்து நாள் குறித்தானோ.. அப்போது இருந்தே சுசித்ராவின் மேல் பட்ட காற்றுகூட அவன் மேல் படக்கூடாது என்று அத்தனை பேராலும் பாதுகாக்கப்பட்டதுதான்.

இதில் ஜானகி கட்டாயப்படுத்தி சுசித்ராவை வேலையில் சேர வைத்தாள். இது வேறு இன்னும் ஆத்திரத்தை அதிகப் படுத்தியது. தொடாதே தொடாதே என்றால்தானே தொடத் தோன்றும்.. இவர்களாலே இவனுக்கு ஆசையும் ஆர்வமும் அதிகமாகிக் கொண்டே இருந்தது.



இதையெல்லாம்விட இவன் சுசித்ராவிற்கு போன் பண் ணும்போதெல்லாம் ராம்குமாரோடு சைட்டிற்கு சென்று இருப்பதாகவே தகவல் வந்தது. நொந்து நூலாகிப் போயிருந் தான். காலையிலும், மாலையிலும் ஓரக் கண்ணால் இருவரும் பார்த்துக் கொள்வதோடு சரி.

ஒருவாறு முடிவிற்கு வந்தவன்.. தன் அறைக்கு வந்து, பேப்பரையும் பேனாவையும் எடுத்து.. வேக வேகமாய் எழுதி.. நான்காய் மடித்துக் கொண்டு கீழே இறங்கி வந்தான். ஹாலில் எல்லோரும் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவனைப் பார்த்ததுமே சுசித்ராவின் சித்தி வைதேகி, முந் தானையால் தன் தோளை போர்த்திக் கொண்டு எழுந்து நின்றாள்.

''என்னடா வேணும்'' ஜானகி கேட்டதும்.

''தண்ணி குடிக்கலாம்னு.''

''ரூம்ல தண்ணி இல்ல?''

''ஐஸ் வாட்டர்தான் இருக்கு.. தொண்டை சரியில்லை. அதான் வெந்நீர் குடிக்கலாம்னு வந்தேன்.''

''சுசி கிச்சனில்தான் இருக்கிறாள். போய் குடி'' ஏதோ நினைவாக டி.வி. திரையில் இருந்து தன் பார்வை அகற்றாமல் ஜானகி கூறியதும்.. இதைவிட்டால் இனியொரு நல்ல சந் தர்ப்பம் கிடைக்காது என்று.. நாலே எட்டில் கிச்சனில் கதவரு கில் சாய்ந்தபடி நின்றான்.

சிவப்பு நிற நைட்டியில்.. தூக்கி போடப்பட்ட கொண் டையை சரி செய்தபடி கேசை ஆஃப் பண்ணிவிட்டு.. அங்

கிருந்த பாத்திரங்களை எல்லாம் ஒரு ஓரமாக ஷெல்பில் அடுக்கிக் கொண்டு இருந்தாள் சுசித்ரா. பூனை போல் அடியெடுத்து உள்ளே நுழைந்தவன்.. கதவை சத்தமில்லாமல் முக்கால்வாசி சாத்திவிட்டு.. பின்புறமாய் அவளை வேக மாய் இறுக்கி அணைத்தான். அவளைச் சத்தம் போட விடா மல் ஒரு கை அவளின் இடுப்பையும், மற்றொரு கை அவள் வாயையும் வளைத்துக் கொண்டிருந்தது. தன் முகத்தை அவள் கழுத்திலும் தோளிலும் அழுத்தமாய் வைத்து வாசம் பிடித்து உள்ளிழுத்தான். அவள் பயன்படுத்தும் சோப்பின் வாசமும், உடல் வாசனையும் அப்போது அவள் உடலில் பூத்திருந்த வேர்வை வாசமும், ஒன்றாய் கலந்து.. அவனைக் கிறங்கடித்தது.

அவனிடம் இருந்து விடுபட பொய்யாய் திமிறினாள்.

''இம்... ம்... ம்..'' அவன் கைகளை மீறி வார்த்தைகள் எதுவும் வரவில்லை.

''திமிறினால், கத்தினால் கையெடுக்க மாட்டேன்'' கன் டிசன் போட்டதும்.. அவன் சொல்வதற்குக் கட்டுப்படுவதாய் அவள் தலையாட்டியதும்.. அவள் வாயில் இருந்த கையை எடுத்து.. இரண்டு கையாலும் அவள் இடுப்பை மேலும் வளைத்துக் கொண்டான்.

''அம்மனைப் பார்க்கிறது ரொம்ப கஷ்டமா இருக்கு'' தன் தாடையை அவள் கழுத்தில் தேய்த்தான். அவன் செய்கை யால் அவளின் உடல் நரம்புகள் நடுக்கத்தால் அதிர்ந்தது.

''அங்க மட்டும் என்ன அய்யாவைப் பார்க்கிறதும் கஷ் டமாதான் இருக்கு'' என்றாள்.

''அப்படியா'' என்றபடி அவளை முன் பக்கமாகத் திருப் பினான்.

''உன்னைக் கடத்திகிட்டுப் போயிடலாமான்னு தோணுது.''



''ஆக்கப் பொறுத்த ஆசாமிக்கு.. ஆற பொறுக்கலையோ'' அவன் மூக்கைப் பிடித்துத் திருகினாள்.

''இன்னும் எட்டு நாள்டா செல்லம்.''

''இம்.''

''என்னால முடியாது.''

''முடிஞ்சிதான் ஆகணும்.. ஆமாம் உங்களை யார் இங்கே விட்டது. யாராவது வந்திடப் போறாங்க..'' நிஜமாவே பதறினாள்.

''யாரும் வரமாட்டாங்க.. வெந்நீர் வேணும்னு சொல்லி நைசா வந்திட்டேன். எல்லாரும் டி.வி. சீரியல்ல படு சீரியஸா இருக்காங்க.''

''வெந்நீர் எதுக்கு.''

''சும்மா... கப்ஸா'' கண்ணடித்தான்.

''சரீ.. ரீ.. ரீ... விலகுங்க'' அவனைத் தள்ளினாள்.

''கிடச்ச சந்தர்ப்பத்தை நழுவ விடமாட்டேன்.. ஸ்ட்ராங்கா ஒரு முத்தம் கொடு.. போய்றேன்.''

''ம்கூம்'' தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''ரொம்ப பிகு பண்ணினால்.. அப்புறம் ஏடாகூடமா இன் னும் ஏதாவது கேட்பேன்.''

''ம்கூம்'' என்னால முடியாது.. கிளம்புங்க'' காலை உதறி னாள்.

''ஏய்.. ய்.. கம்முனு இரு'' என்றபடி கையோடு கொண்டு வந்த கடிதத்தை.. அவள் கைகளில் திணித்தான்.

''என்னது'' ஆச்சர்யமாய் கேட்டாள்.

''லவ் லெட்டர்.''

''லவ் லெட்டரா?''

''ம்.. எங்கே பார்க்க விடுறாங்க.. பேச விட்றாங்க. அதான்.. படுத்து கிட்டு.. நைட் எல்லாரும் தூங்கினதும் படி.. என்ன'' நெற்றியில் செல்லமாய் மோதினான். அவன் கண்களை நேருக்கு நேராய் சந்தித்தவள்.

''எம்மேலே உங்களுக்கு அவ்வளவு ஆசையா?''

''சொல்ல முடியாத அளவு.''

''இம்.. அப்படியா?'' என்றவள் அவன் கழுத்தைப் பிடித்து இழுத்து.. அவன் நெற்றியில் தன் இதழை அழுத்தமாய் பதித்து..

''ஐ லவ் யூ செல்லம்.. ஐ லவ் யூ ராஸ்கல்'' என்றவள்.. கூடவே

''இதோ வர்றேம்மா..'' என்று குரல் கொடுத்ததும் சட்டென விலகினான்.

அவள் ஏமாற்றி வெளியேறி விட்டாள் என்பதே அதன் பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. பைத்தியக்காரன் போல்.. அவள் இதழ் பதித்த இடத்தில் ஈரம் காய விடாமல் தொட்டு.. தொட்டு பார்த்துக் கொண்டு.. மாடி ஏறினான்.

எல்லோரும் தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட அறையில் புகுந்து கொள்ள.. சுசித்ரா.. எல்லாவற்றையும் கடைசியாய் ஒருமுறை ஒழுங்குபடுத்தி விட்டு ஜானகியின் அறைக்கு வந்து ஜானகியின் படுக்கைக்கு அருகிலேயே கீழே ஒரு பாயை விரித்துப் போட்டு.. மேலே ஒரு பெட்சீட்டை விரித்துப் போட்டு.. இரண்டு தலையணைகளையும் போட்டுவிட்டு.. ஜானகியைப் பார்த்தாள்.

நல்ல உறக்கத்தில் சீரான மூச்சுக் காற்று வெளிவந்து கொண் டிருந்தது. கழுத்தில் ஒதுங்கிக் கிடந்த போர்வையைச் சரி



செய்து விட்டு.. பாயில் ஒருக்களித்துப் படுத்து.. மார்பிற்குள் பத்திரப்படுத்தியிருந்த கடிதத்தை மெல்ல உருவினாள்.. வேர்வையில் கடிதம் லேசாய் கசகசத்தது. எழுத்துக்கள் அழிந்து இருக்குமோ என்று கலக்கமாய் பிரித்தாள். நல்லவேளை பால் பாயின்ட் பேனாவால் எழுதியிருந்தான். அவள் பார்வை ஒவ்வொரு எழுத்தையும் ஆசையோடு பார்த்தது.

*''ஏய்..*

*என்ன அப்படிப் பாக்குற.. ஒரே வீட்டில் இருந்து கொண்டு.. கடிதம் கொடுக்கிறான் என்றா? என்னடா கண்ணு பண்றது. உன்னையும் என்னையும்தான் இரண்டு துருவமாக்கி இருக்கிறார்களே.. உன் நினைவைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தோணலம்மா.. நான் பார்க்கிற ஒவ்வொரு துளி சொட்டு தண்ணீரிலும் உன் முகம் தான் பிரமாண்டமாய் தெரியுது. எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு சுசி. உனக்கு அப்படி எதுவும் தோண லையா? இப்போ உன்னைத் தவிர வேற எதுவுமே எனக்குப் புடிக்கலை. ஒவ்வொரு நிமிஷமும் ஒவ் வொரு வருசமா இருக்கு.*

*எப்போடா அந்த நாள் வரும்னு இருக்கு. உடனே நான் தாம்பத்யத்திற்காக அவசரப்பட்றேன்னு நினைக் காதே. உன் அருகாமை எனக்கு வேணும்.. உன் அணைப் பிற்குள்ளேயே நான் சுருண்டு கிடக்கணும்.. இன்னும் எழுத முடியாத நிறைய ஆசைகள்.. ஏக்கங்கள்.. கற் பனைகள் இது அத்தனைக்கும் அஸ்திவாரமே நீதானடி செல்லம்.*

*ஒவ்வொரு நாளும்.. ஒவ்வொரு நொடியும் உன்மேல் உள்ள ஆசை அளவுக்கதிகமாகிக் கொண்டே இருக்கு. சரியாய் இன்னும் எட்டு நாளில் என்னிடம் தனியாய் நீ மாட்டப் போகிறாய். அன்னைக்கு விடிய*

*விடிய உங்கிட்ட பேசணும். உன்னோட இருக்கணும். அன்னைக்கு மட்டும் இல்லை.. ஒவ்வொரு இரவுமே.. நமக்கு உறங்காத இரவுதான். உன் கால் விரல் நகத்தில் இருந்து.. நெற்றியில் விழும் முடி வரை.. ஒவ்வொரு அணுவாய் உன்னை ரசிக்க வேண்டும். இத்தனை நாள் எட்ட இருந்து என்னைப் படுத்தி விட்டாயடி என்று.. அங்குலம் விடாமல் கிள்ள வேண்டும்.. டேய் செல்லம் பயப்படாதே.. வலிக்காமல் தான் கிள்ளுவேன்.'*

இன்னும் அவள் முகம் சிவக்கும் அளவு என்னன்னவோ எழுதியிருந்தான். ஒருமுறைக்கு பலமுறை திரும்பத் திரும்பப் படித்தாள். எத்தனை முறை படித்தாலும் திகட்டவில்லை. கண்களும் சோர்வடையவில்லை. சத்தமில்லாமல்.. சத்தான முத்தமாய்.. எண்ணிக்கையில் அடங்காமல் கொடுத்தாள்.

'நீ மட்டும்தான் என்னை ரசிப்பாய்.. அங்குலம் அங்குலமாய் கிள்ளுவாயா?' அதைவிடப் பெரிய திட்டத்தோடு நானும் வருகிறேனடா' எனச் சொல்லிப் பார்த்து.. புரண்டு புரண்டு படுத்து.. கடிதத்தை அவனாக நினைத்து நெஞ்சோடு சேர்த்துக் கொண்டு உறங்கிப் போனாள்.

அன்று சாந்தி முகூர்த்தம்.

வீடே களைகட்டி இருந்தது. அந்த சடங்கே சங்கடமாய் நெளிய வைத்தது சுசியை. விடாப்பிடியாக விக்ரமை பாங்கிற்கு அனுப்ப வேண்டியதாகி விட்டது. சந்தோஷத் தவிப்பின் உச்சியிலேயே இருந்தான். மாலா, பாஸ்கர் கூட வீட்டிற்கு வரவழைக்கப்பட்டு இருந்தார்கள். மாலா வேறு அடிக்கடி சுசியை சீண்டுவதிலேயே இருந்தாள்.

முகம் சிவந்து சிவந்து.. அடிக்கடி நிறம் மாறிக் கொண்டு இருந்தது சுசிக்கு. ராஜலிங்கமும், வைதேகியும் தங்கள் மகளை மணிக்கொரு தடவை உச்சி மோர்ந்து ஆசீர்வதித்தார்கள். சேகர்கூட அக்காவைப் பார்த்து நமுட்டாய் சிரித்தான்.



மாலை நேரம் வரத் தொடங்கியபோது.. சமையல் எல்லாம் தடபுடலாக மூக்கைத் துளைக்கும் வாசனையோடு வீட்டை விட்டு வெளியே வந்து தெருவையே அசத்தியது. மாலாதான் சுசித்ராவைப் பார்த்துப் பார்த்து அலங்கரித்தாள். சந்தனக் கலர் பட்டுப் புடவையில் அரக்கு கலர் பார்டரில் விண்ணில் இருந்து வந்தவளாய் ஜொலித்தாள்.

''சுசி.''

''ம்.''

''ஆனாலும் அநியாயத்துக்கு அழகா இருக்கே.''

''ஏய். பொய் பேசாதேடி..''

''நிஜம்மா.. உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கும்போது.. எனக்கே என்னன்னவோ ஞாபகம் வருது. விக்ரம் கொடுத்து வச்சவர்.''

''சர்டிபிகேட் போதும்.. ரொம்ப கிண்டல் பண்ணாதே.''

''உண்மையைச் சொன்னா கிண்டலா'' கன்னத்தை பிடித்துத் திருகினான்.

''மாலா!'' விக்ரமின் அக்கா அழைத்தாள்.

''ஏய்.. உன் அம்மா.. அதான் நாத்தனார் கூப்பிடறாங்க.. என்னன்னு கேட்டுட்டு வர்றேன்'' சொல்லிவிட்டு, ஜானகி முன்பு நின்றாள்.

''என்னங்க.''

''எங்க குலதெய்வமே முருகன்தான்.. விக்ரம் வந்திடுவான்னு பார்த்தேன். ஆனா இன்னும் காணோம். என்னாலயும் வர முடியாது. அவங்க வீட்டுக்காரர்களுக்கோ மெட்ராஸ் பழக்கம் இல்ல'' பீடிகையாய் பேசினாள்.

''சொல்லுங்க நான் என்ன பண்ணனும்.''

''சுசியை கூட்டிகிட்டு வடபழனி முருகன் கோவில் வரை போய்ட்டு வறியாம்மா.''

"இதுக்குதான் இவ்வளவு பீடிகையா? இதோ கிளம்பிட்டோம்."

கோவில் விட்டு கீழிறங்கி வரும்போது மணி 7.30ஐயும் தாண்டியிருந்தது. திடீர் என்று ஏற்பட்ட ஸ்டிரைக்கில் ஆட்டோவில் இருந்து.. பல்லவன் வரை எல்லாமே அதனதன் இடத்தில் ஸ்தம்பித்தது.

"என்னடி பண்றது?" மாலா பதற.

"இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தால்... நடந்துடுறது பெஸ்ட்.. கால் மணி நேரம்தான் ஆகும்."

"பேசாம விக்ரமிற்கு போன் பண்ணி பைக் எடுத்துகிட்டு வரச் சொல்லலாமா?"

"இங்க பாருடி.. விக்ரம் வந்தா.. நான் மட்டும்தானே போக முடியும்.. நீ பேசாம வா.. யோசிக்கிற நேரம் நடந்திடலாம்."

"நடந்தா டயர்டாயிடுவடி."

"நோ ப்ராப்ளம்."

இருவரும் சாலையின் இடப்பக்கம் நடக்கத் தொடங்க.. ஒதுக்குப்புறமாக உள்ள அந்த சந்தில் நடந்த காட்சி இருவரையும் மூச்சு விடாத அளவு ஸ்தம்பிக்க வைத்தது.

பதினைந்து பதினாறு வயது இருக்கும் பெண்ணை நிர்வாணப் படுத்தி.. நாலைந்து முரட்டு தடியர்கள்.. கொத்துகறியாக்கி, வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள். மாலாதான் சுதாரித்துக் கொண்டு கத்தியதும்.. ஆளுக்கொரு பக்கமாய் அவர்கள் சிதற.. அந்த சின்ன பெண் அருகே இருவரும் ஓடி வந்தார்கள்.

"சுசி! நீ இங்கேயே இரு. நான் போலீசுக்கு போன் பண்ணிட்டு வந்திட்றேன்."



மாலா பக்கத்தில் இருந்த டெலிபோன் பூத் நோக்கி ஓட.. சுசித்ரா அந்த கசக்கி எறியப்பட்ட பூவையே உற்றுப் பார்த்தாள். முகம், தோள், மார்பு என எல்லா இடமும் நகக் காயங்கள். இடுப்புக்குக் கீழ் ரத்தம் நனைந்த உடலாய் இருந்தது. இமைகள் மூட மறந்து பார்த்தாள்.

எந்தக் கடவுள் புண்ணியமோ, போலீஸ் ஜீப்.. ஆம்புலன்சோடு வந்தது. வந்தவர்களிடம் மாலாதான் எல்லாவற்றையும் விளக்கினாள். சுசித்ராவின் நிலையையும் விளக்கியவள்.. தன் முகவரியைக் கொடுத்து.. காலையில் தானே ஸ்டேசன் வருவதாய் வாக்குமூலம் கொடுத்தாள். சுசித்ரா எதுவும் பேசாமல்.. உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணை ஆம்புலன்சில் ஏற்றப்படுவதையேதான் பார்த்தாள். ஜீப்பும் ஆம்புலன்சும் கிளம்பியதும் இருவரும் நடக்கத் தொடங்க.. எதேச்சையாய் மாலா சுசித்ராவின் கரம் பற்ற.. அவள் கரம் வேக வேகமாய் நடுங்கிக் கொண்டு இருந்தது.

"சுசி! என்னாச்சு?"

"......."

"இங்கே பார்.. எதையாவது போட்டுக் குழப்பிக்காதே. இன்னைக்கு உனக்கு சந்தோஷமான நாள். இப்போ வீட்டுக்குப் போனதும் எதையும் உளறிக் கொட்டாதே என்ன புரிஞ்சுதா?"

"......."

"ரிலாக்ஸ் சுசி. ப்ளீஸ்.. இது சாதாரண விசயம் இல்லைதான். இருந்தாலும் நீ இப்போ இருக்கிற நிலையில் இதைப் பற்றி யோசிக்கிறது.. அவ்வளவு சரியில்லை."

"........."

வழி நெடுக ஒரே அறிவுரை மழையாகப் பொழிந்தும்.. சுசித்ராவிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. பிரம்மை பிடித்தாற் போலவே உடன் நடந்தாள்.

வீட்டிற்கு வந்தபோது வாசலில் அத்தனை பேருமே தவிப் போடு.. எல்லோரிடமிருந்தும் ஏகமாய் ஒரு நிம்மதிப் பெரு மூச்சு வந்து விழுந்தது. ஓடி வந்து தன் மகளைக் கட்டிக் கொண்டாள் வைதேகி.

''பதறிப் போய்டேன்டா கண்ணு. திடீர்னு ஸ்டிரைக்கின் னுட்டாங்க. கையும் ஓடல காலும் ஓடல.. தம்பி கூட உங்க ரெண்டு பேரையும் தேடிட்டு வரத்தான் கிளம்பினாங்க. நீங்க ஒரு பாதையில் வந்து.. இவர் ஒரு பாதையில் போய்ட்டா.. கொஞ்ச நேரம் பார்ப்போம்னுதான் பார்த்துகிட்டு இருந் தோம்.. உங்களைப் பார்த்ததும்தான் வயிற்றில் பால் வார்த்த மாதிரி இருக்கு. பிரச்சனை எதுவும் இல்லையே?''

''இல்ல சித்தி'' வாய் திறந்தாள்.

மிக ஆடம்பரமாய் விக்ரமின் அறை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. உள்ளிருந்தபடி நிலை கொள்ளாமல் தவித்தான். கட்டிலின் ஒவ்வொரு முனையாய் உட்கார்ந்து உட்கார்ந்து பார்த்தான். மிச்ச மீதி தட்டில் இருந்த பூக்களை கட்டிலில் அள்ளிக் கொட்டி உதிர்த்து விட்டான். புகைந்து கொண்டு இருந்த சாம்பிராணியை வேகமாய் உள்ளிழுத்து.. மீண்டும் அது இருந்த இடத்தில் சொருகி வைத்தான். மூடியிருந்த கதவை நன்றாய் திறந்து வைத்தான். அடிக்கொரு முறை கண்ணாடி பார்த்து முகத்தையும் தலையையும் சரி செய்து கொண்டான்.

கீழே சேகரைத் தவிர அத்தனை பேர் கால்களிலும் விழுந்து எழுந்தவளை மாலாதான் மேலே அழைத்து.. ''சொன்னது எல்லாம் நினைவிருக்கட்டும்'' என்று காதில் ஓதிவிட்டு.. உள்ளே தள்ளி கதவைத் தாழிட்டு நகர்ந்தாள்.

'ஏ.ஸி. ரீங்காரத்தில் பூ பர்ப்பூம்.. பூக்கள் எல்லா மணமும் ஒன்றாய் சேர்ந்து ஒருவித மயக்கத்தையே உண்டு பண் ணியது. அவள் உள்ளே நுழைந்ததுமே, ஆசையோடு அள்ளி அணைக்க வேகமாய் அவளை நெருங்கி.. இடுப்பை அணைத்த



போது, நகக் காயங்களோடு.. இடுப்பிற்கு கீழே ரத்த சகதி யோடு அந்தப் பெண் மின்னலாய் தோன்றி மறைந்ததும்..

''நோ... ஆ.. ஓ.. என்னைத் தொடாதீங்க'' வீறிட்டு தன் பலம் கொண்ட மட்டும் விக்ரமைப் பிடித்து தள்ள.. திடீர் தாக்கு தலில் நிலை குலைந்து போய் வேகமாய் கட்டிலில் போய் விழுந்தான்.

# 10



**காதல்!**

**இனிக்கின்ற விஷம்!**

**கலைகின்ற நிஜம்!**

**சுடுகின்ற தென்றல்!**

**குளிர்கின்ற வெப்பம்!**

**ஆக மொத்தத்தில்**

**முன்னுக்கு முரணாய்**

**ஆண்டவன் கொடுத்த**

**ஆயுள் தண்டனை!**

அன்று மட்டும் அல்ல.. அடுத்து வந்த ஒவ்வொரு இரவும் இருவருக்கும் இடையே இடைவெளியே ஏற்படுத்தித்தான் கண்ணாமூச்சி ஆடியது. முதல் நாள் இரவு திடீர் என்று ஆத்திரப்பட்டவள்.. அடுத்த நாள் எல்லாம் தன்னை சுதாரித் துக் கொண்டு.. நாசுக்காய் அவனிடம் இருந்து விலகத் தொடங் கினாள். தலைவலி, காய்ச்சல், உடல்வலி, கண் எரிச்சல்..

வீட்டிற்கு தூரம்.. இப்படி காரணங்களைக் கொண்டு திறமை யாய் செயல்பட்டாள். ஜானகிக்கு சந்தேகம் வரக்கூடாது என்று மட்டும் சர்வ ஜாக்கிரதையாக இருவருமே இருந் தார்கள்.

சுசித்ராவிடம் விசேஷம் உண்டா? என்று கேட்கும் அளவு நாட்கள் நகரத் தொடங்கியது. மாதம் ஒரு முறை ராஜலிங் கமும் வைதேகியும் வந்து மகளைப் பார்க்கவும் தவறுவது இல்லை. இந்த நான்கு மாத காலத்தில் இந்த நிமிடம் வரை தான் ஏன் விலக்கப்படுகின்றோம் என்று தெரியாமல்.. மண் டையைப் பிய்த்துக் கொண்டிருந்தான்.

வீட்டில் இருக்கும் நேரம் பேசலாம் என்றால்.. ஜானகி யோடு ஒட்டிக் கொண்டு அவனை வாய் திறக்காமல் செய்தாள். இரவு நேரங்களில் அவனுக்கு முன்பே உறங்கினாள். எப்படி எழுப்பினாலும் அடித்துப் போட்டார் போல் தூங்கி நடித்தாள். கம்பெனியில் தான் இல்லாதவாறு.. எந்த நேரமும் ராம்குமா ரோடு சைட் ஒர்க் சைட் ஒர்க் என்று.. கம்பெனி பக்கமும் அவனை வர விடாமல் பார்த்துக் கொண்டாள். சைட்டிற்கே வந்து சண்டை போடும் அளவு நாகரீகம் தெரியாதவன் விக்ரம் இல்லை என்ற தைரியம்.

காரணமே தெரியாமல் எத்தனை நாள்தான் ஒரு ஆண் பிள்ளை அவதிப்படுவான். மெள்ள மெள்ள சுசித்ரா மேல் கோபம் வளரத் தொடங்கியது. இவனே அவளிடம் பேச வேண்டும் என்ற எண்ணத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொள்ளத் தொடங்க,

அந்த சனிக்கிழமை. அதிசயமாய் மதியமே வீட்டிற்கு வந்தாள் சுசித்ரா. சல்வாரில் இருந்த தன்னை நைட்டிக்கு மாற்றியவள், ஜானகியிடம் வந்து..

''அம்மா! சாப்பிடலாமா?'' என்றாள்.



''இன்னைக்கு சனிக்கிழமைதானே.. விக்ரமிற்கு பாதிநாள் தானே ஃபாங்க் அவனும் வந்துடட்டுமே.''

''சரிம்மா'' என்று நகர்ந்தவளை,

''சுசி!'' அழைத்தாள்.

''என்னம்மா'' திரும்பினாள். முகம் புன்னகைப் பூக்களால் செய்தது போல் இருந்தது.

''இப்படி உட்கார்!''

உடன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

''உனக்கும் விக்ரமிற்கும் ஏதாவது பிரச்சனையா?'' நேரடி யான இந்த கேள்வி உள்ளுக்குள் ஒரு உதறலை வரவழைத்துப் பார்த்தது.

''அப்படி எதுவும் இல்லையேம்மா'' அவசர அவசரமாக மறுத்தாள்.

''இல்லை என்றால் ரொம்ப சந்தோஷம்.. எனக்கென் னமோ.. உங்களுக்குள் எந்த ஒட்டுதலும் இருக்கிற மாதிரி தெரியலை.''

''ஐய்யய்யோ! அப்படி எல்லாம் இல்லம்மா.. ரெண்டு பேருக்குமே.. வேலை பளு ஜாஸ்தி.. அதனாலேயே உங் களுக்கு அப்படித் தோன்றலாம். ஏம்மா எங்களைப் பார்த்தா இந்த சந்தேகம்'' ஒன்றும் அறியாதவள் போல் கேட்டாள்.

''அப்படி இல்லடா.. விக்ரமைப் பார்த்தால் ஏதோ பறி கொடுத்தார் போல இருக்கு.. மனசு கேக்கலை.. அதான் கேட் டேன். தப்பா எடுத்துக்காதே..'' என்றபடி சுசித்ராவின் தோளில் தன் கை வைத்து அழுத்தினாள்.

விக்ரம் மதியம் வீட்டிற்கு வருவான். வருவான் என்று எதிர்பார்த்து.. நிமிடங்கள் மணியாக மாறி ஓடியதும், இரு

வரும் சாப்பிட்டார்கள். எந்த சந்தேகமும் இருவருக்கும் வரவில்லை. இரவு 9.00 மணி வரை விக்ரமும் வரவில்லை. அவனிடம் இருந்து எந்தத் தகவலும் வரவில்லை.

சுசித்ராவின் அடிவயிறு.. கலங்கத் தொடங்கியது. ஜில் லென்ற உணர்வு அவ்வப்போது எழுந்து எழுந்து அடங்கியது.

''ஏதாவது அவசர வேலையாக எங்காவது போயிருப் பான்மா.''

ஜானகி சமாதானப்படுத்தியும் இவள் மனம் சமாதானத் திற்கு மட்டும் சம்மதிக்கவில்லை. இனம் புரியாத பயம் ஒன்றும் இறுக்கமாய் அவள் இதயத்தைப் பிடித்துக் கவ்வியது. நேரம் ஆக ஆக.. இதயத்தின் ஓசை.. செவிகளுக்கு குண்டு வைப்பது போல் அவளைச் சிதறடித்தது. ஜானகியின் மாத்திரைகளில் ஸ்லீப்பிங் டேப்லெட்டும் உண்டு என்பதால் தூக்கம் விழிகளைக் கவ்விப் பிடிக்க.. ஒன்பது மணிக்கெல் லாம் விழிக்க முடியாமல் 'வந்திடுவாம்மா' என்று உளறிக் கொண்டே உறங்கப் போனாள். ஜானகி உறங்கியதும்.. படுக் கையை சரி செய்து.. அவளின் மூச்சு திணறாத அளவு ஃபேன் காற்றை குறைத்து வைத்துவிட்டு.. படபடக்க கைகளைப் பிசைந்து கொண்டு.. ஹாலிலேயே உட்கார்ந்து கொண்டிருந் தாள்.

நிசப்தமாய் இருப்பது பயத்தையும் ஒருவிதமான அச்ச உணர்வையும் கொடுத்ததால் டி.வி.யை ஆன் பண்ணி.. வால்யூமை கம்மி பண்ணினாள்.

விக்ரமின் பைக் சத்தம்தான். காற்றில் கரைந்து வந்தது. வேகமாய் வந்து கதவு திறந்தபோது விக்ரம்தான் பைக்கை ஆஃப் பண்ணி.. வண்டியை வீட்டிற்குள் தள்ளினான். உள்ளே அவன் வண்டியை நிறுத்தி.. சாவியை உருவி.. டி.வி. மேலேயே வைத்துவிட்டு சுசித்ராவை லட்சியம் பண்ணாமல்



மாடிப்படிகளில் ஏறினான். அவன் நடையில் எழுந்த தள்ளாட் டத்தை இவள் கவனிக்கத் தவறவில்லை.

'குடித்திருக்கிறாரோ' சந்தேகமே கருந்தேள் ஒன்று கொட் டியது போல் இருந்தது. வேகமாய் கதவைத் தாழிட்டுவிட்டு.. எல்லா விளக்கையும் அணைத்து விட்டு மனம் துடிக்க மாடி ஏறினாள்.

உள்ளே நுழைந்தவன்.. தன் ஷூவைக் கழற்றி எறிந்து.. திரும்பியபோது அவன் பின்னாலேயே இவனைக் கலக்கத் தோடு பார்த்தபடி இவள். கைலி கூட மாற்றாமல் பேண்டோடு படுக்கையில் உட்கார்ந்து.. கன்னா பின்னாவென்று கழுத்தை யும், தலையையும் தேய்த்துக் கொண்டான். அவன் அருகில் நெருங்கும்போதே அந்த வித்தியாசமான நெடி அவள் முகத்தில் தோன்றியது.

''குடிச்சிருக்கீங்களா?''

அலட்சியமான பார்வை ஒன்றை மட்டும் அதற்குப் பதி லாகத் தந்தான்.

''கேக்கிறேன்ல.. குடிச்சிருக்கீங்களா?''

''ஆமான்னா என்ன பண்ணப் போற?''

அவன் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

''சாப்பிடலையா?'' என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? என்று புரியாமல் திரும்பவும் கேட்டாள். உட்கார்ந்து இருந் தவன்.. படுக்கையில் படுத்துக் கொண்டு..

''சாப்பிடலன்னா.. ஊட்டிவிடப் போறியா?'' ஏளனமாகவே கேட்டான்.

அவன் அருகில் வந்து.. அவனின் இடுப்பருகில் அமர்ந் தவள்,

''இப்போ ஏன் இப்படிப் பேசுறீங்க.. நீங்க குடிச்சிருக்கிறது உங்களுக்கே நல்லா இருக்கா?''

''மத்தவங்க குறையைப் பார்க்கிறவங்க.. முதல்ல தான் கிட்டே இருக்கிற குறையை மாத்திக்கக் கத்துக்கணும்.. இது என்னோட பர்சனல். இதை கே..க்...க.. உ....னக்கு.. எந்த ரைட்சும்.. இ..ல்..லை..'' வார்த்தைகள் தனித்தனியாய் பிய்த்துக் கொண்டு வெளிவந்தன.

''எனக்கு ரைட்ஸ் இல்லையா.. நான் உங்க பொண்டாட்டி'' அவள் வார்த்தைகளில் கோபத்திற்கு பதில் ஏக்கம்தான் இழையோடியது. அதைக் கேட்டதுமே சத்தம் போட்டு சிரித்தான்.

''பொண்டாட்டியா.. நீயா.. எனக்கா.. வேடிக்கையா இருக்கு.''

''.........'' மௌனமாகவே பேச முடியாமல் அவனைப் பார்த்தாள்.

''பொண்டாட்டின்னா என்னன்னு தெரியுமா? எப்படி நடந்துக்குவான்னு தெரியுமா?''

''............''

''உங்கிட்டே கேக்கணும், கேக்கணும்னு நினைச்சேன்.. அந்த ராம்குமார் என்னைவிட அழகோ?'' அவன் வார்த்தையில் தெரிந்த ஏளனம்.. அவளை லேசாய் சீண்டி விட்டது. குடித்து விட்டு வந்ததும் அல்லாமல்.. தன் நடத்தையை சந்தேகப் படுகிறானோ என்று தோன்றியதும். அவன் முகத்தை நேருக்கு நேர் பார்த்தவள்.

''ஆமாம்! ஆமாம்! உங்களை விட எல்லா விதத்திலும் அழகு போதுமா?''

''அப்போ அவனையே லவ் பண்ணியிருக்க வேண்டியது தானேடி.''



''பண்ணியிருக்கணும்.. என் தலைவிதி. உங்ககிட்டே கழுத்தை நீட்டிட்டேன்'' என்றபடி விருட்டென எழுந்தவளை ஆத்திரத்தோடு கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி வேகமாய் எழுந்து அவளை சுவர் பக்கம் தள்ளிக் கொண்டு போய் கழுத்தில் கை வைத்து அழுத்தி..

''அதுக்கு எதுக்கு என்னைக் காதலிச்ச'' பற்களைக் கடித்தான்.

அவன் முரட்டுத்தனமாய் அவள் கழுத்தை அழுத்தியிருந்ததால்.. அவளுக்கு மூச்சுத் திணறியது.

''என்னைப் பைத்தியக்காரனா உன் பின்னால அலைய விட்டு.. தேடி வந்து கட்டாயப்படுத்தி நீதானடி தாலியை கட்டிகிட்ட இப்போ.. நான் உனக்கு கசந்து போயிட்டேன்..''

அவனிடம் இருந்து திமிறிக் கொண்டு அவன் மூச்சுக் காற்று குடலைப் புரட்ட.. பெண். புலியின் ஆக்ரோஷமாய்.. அவனைப் பிடித்துத் தள்ளினாள். போதையில் இருந்தவன் தடுமாறி.. கீழே விழுந்தான்.. அதனால் ஏற்பட்ட வலி அவனை வெறி கொண்ட பைத்தியக்காரனாக்கியது. புயலாய் எழுந்தவன், தன் பலம் கொண்ட மட்டும் வேகமாய் அவளை அறைந்தான். ஐந்து விரலும் அச்சாய் கன்னத்தில் பதிய.. சுவரில் போய் மோதினாள். புருவத்திற்கு மேலே இருந்த நெற்றிப் பரப்பு.. தன்னை கிழித்துக் கொண்டு.. சிவப்பான ரத்தத்தை சிந்தத் துவங்கியது.. கையை வைத்து நெற்றியை அழுத்திக் கொண்டவள்..

''உங்களுக்கு என்ன வெறிபுடிச்சிப் போச்சா'' வீறிட்டாள்.

''ஆமாம்! நீ எனக்கு வேணும்.''

''இதைச் சொல்ல அசிங்கமா இல்ல.''

''எதுடி அசிங்கம்? அசிங்கம்னா நீயும் பொறந்து இருக்க முடியாது. நானும் பிறந்து இருக்க முடியாது.''

"இவ்வளவு மட்டமானவரா நீங்க இருப்பீங்கன்னு எனக்குத் தெரியாம போயிடுச்சி. உங்களை ஏண்டா காதலிச்சோம். ஏண்டா தாலி கட்டிக்கிட்டோம்னு ஒவ்வொரு நாளும் வெந்து வெந்து சாகிறேன்."

"என்னடி, சொன்ன.. என்னை.. என்னை.. புடிக்கலையா? இதுக்கெல்லாம் காரணம் அவன் தானே.. நாளைக்கு அவனை என்னன்னு கேட்டுட்றேன்" என்றபடி வேகமாய் அவளை நெருங்கியவன்.

"வ்வொ..வ்.." அவள் நெஞ்சிலேயே வாந்தி எடுத்து கண்கள் இருட்ட மயங்கிச் சரிந்தான். தனக்கு ஏற்பட்ட வலிக் கொடுமைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு.. பாத்ரூம் சென்று எல்லாவற்றையும் கழற்றி எறிந்து.. ஐந்தாறு குவளைத் தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றிக் கொண்டு.. அவசர அவசரமாய் வேறு நைட்டிக்குள் தன்னை நுழைத்துக் கொண்டு.. அவன் வாந்தி எடுத்து மயங்கிக் கிடந்த இடத்தை சுத்தப்படுத்தி துடைத்துவிட்டு.. அவன் உடைகளைக் களைந்து.. மிகவும் கஷ்டப்பட்டு பாத்ரூமிற்குள் இழுத்துச் சென்று.. ஷவருக்கு அடியில் உட்கார வைத்து.. ஷவரைத் திருகினாள். அவனைச் சுத்தப்படுத்தி படுக்கையில் கொண்டு வந்து போடு வதற்குள் அமெரிக்கா, ரஷ்யா யுத்தமே.. நடந்தது போல் இருந்தது.

படுக்கையின் ஓரத்தில் அவனைக் கிடத்திவிட்டு.. தன்னையும் மற்றொரு ஓரத்தில் சாய்த்துக் கொண்டாள்.

'சுசித்ரா.. சுசி.. சுசி.த்..ரா" அவனையும் மீறி உளறிக் கொண்டு இருந்தான். அழுவதைத் தவிர வேறு எந்த வழியும் அந்த நேரத்தில் அவளுக்கு புலப்படாததால் ஓசை இல்லாமல் கதறத் துவங்கினாள்.

தலையில் ஏற்பட்ட காயம் வேறு விண்.. விண் என்று தெறித்தது.



அடி தாங்காத உடல்.. சாப்பிடாத களைப்பு. எல்லாம் ஒட்டு மொத்தமாய் அவளுக்கு மயக்கமான உறக்கத்தைக் கொடுத்தது.

முதல் முதலாய் மது உள்ளுக்குள் போனதால்.. இரவு 2.35 இருக்கும் தலைவலி ரூபத்தில் அவனைத் தட்டி எழுப்பியது. முனகியபடி.. தடுமாறி எழுந்தான். கண்கள் மிளகாயைத் தேய்த்துக் கொண்டது போல் எரிந்தது. தேடி பிடித்து ஸ்விட்சை தட்டினான். திடீர் என்று ஏற்பட்ட ஒளி வெள்ளத்தில் கண் களும் கூசியது. சுசித்ரா ஒரு ஓரமாய் சுருண்டு கிடப்பதும் பார்வையில் பட்டது. அவள் நெற்றியும் முகமும்.. வீங்கியிருப்பதைப் பார்த்து.. திடுக்கிட்டவனுக்கு.. தான் தண்ணி அடித்து விட்டு வீட்டிற்கு வந்ததில் இருந்து ஒவ்வொன்றாய் மங்கலாய் நினைவுக்கு வந்து நிழலாட

"மைகாட்!" வாய்விட்டு அலறினான். பயந்து போய் சுசித் ராவின் நாசி துவாரத்தில் கை வைத்துப் பார்த்து.. சூடான மூச்சு விரல் மீது பட்டதும்.. நிம்மதிப் பெருமூச்சு விட்டு..

"மருந்துகூட போட்டுக்காம படுத்துட்டாளா?"

"ஸாரி சுசி! ஐ'ம் ஸாரி. நான் ஒரு பைத்தியக்காரன். அடி முட்டாள்! தனக்குத்தானே புலம்பிக் கொண்டு.. ஏதாவது ஆயின்மென்ட் கிடைக்குமா என்று பீரோவை.. அவசர அவசரமாகக் குடைந்தான். நிதானமாய் பார்க்கத் தோன்றாமல் எல்லாவற்றையும் அள்ளி கீழே எறிந்தான். புடவைக் குவியலுக்கு நடுவில் அந்த ப்ரவுன் கலர் டைரியும் அவசர அவசரமாய் வெளியே வந்து விழுந்தது. கண்களை சுருக்கிக் கொண்டு அந்த டைரியை எடுத்தான். முதல் பக்கம் புரட்டினான். ப்யூர்லி பர்சனல் என்று மார்க்கரில் எழுதப்பட்டு அடிக்கோடு இடப்பட்டு இருந்தது. சில விநாடி தயக்கத்திற்குப் பின்பு. ஆயின்மென்ட் தேடுவதை விட்டுவிட்டு.. டைரியை எடுத்துக் கொண்டு படுக்கையின் ஒரு மூலையில் வந்து அமர்ந்து கொண் டான். ஒவ்வொரு பக்கத்தையும் அவன் விரல்கள் புரட்டத் தொடங்கின.

ஒவ்வொரு பக்கமும்.. இவன் புராணம்தான்.. இவன் அழகுதான். இவன் காதல்தான். இவன் மேல் அவள் கொண்ட ஆசை கனவு.. எல்லாம் அவனைப் புருவம் உயர்த்த வைத்தது. அவன் விரல் நுனி அவள் மேல் பட்டதைக்கூட அவ்வளவு சந்தோஷப்பட்டு எழுதியிருந்தாள். அவர்களின் சாந்தி முகூர்த்தம் அரங்கேற குறித்த நாளில் இருந்து.. அடுத்த நாள் இருந்து சிவப்பு மையால் எழுதியிருந்தாள். ஒவ்வொரு பக்கத்திலும் பாதி பக்கத்தில் சொட்டு சொட்டாய் நீர் துளிகள் விழுந்து காய்ந்திருந்தன. அந்தப் பக்கம் அவனைக் கடிவாளம் போட்டு தடுத்து நிறுத்தியது.

'வர வர விக்ரமை பேஸ் பண்றதே எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. அந்தக் கண்கள்ல தெரியற காதல்.. ஏக்கம்.. தவிப்பு.. என்னை அணு அணுவாக் கொல்லுது.. எந்த ஜென்மத் தில் என்ன பாவம் பண்ணினேனோ.. அது என்னை மட்டும் இல்லாமல் விக்ரம்மையும் சேர்த்து ஆட்டணுமா? பெண்களை நிர்வாணமாக்கி பேயாட்டம் ஆடும் ஆண்கள் மத்தியில.. வாய விட்டுக் கேக்கக்கூட யோசிக்கும்.. இந்த மனிதனை வாட்டலாமா? கண்களை மூடிக்கோ.. ஜடமா கிடந்துடேன்னு கூட உள் மனசு சொல்லி பாத்துடுச்சி.. செக்ஸ் பத்தி நினைச் சாலே.. குமட்டுது. உடம்பெல்லாம் கம்பளியை அள்ளிக் கொட் டுன மாதிரி அறுவெறுப்பா இருக்கு. அந்தப் பெண்ணோட நிலைமைதான் கண் முன்னால விஸ்வரூபம் எடுத்து நிக்குது. நான் என்ன பண்ணுவேன். விக்ரமை விட்டு விலகணும்னு எனக்கென்ன ஆசையா? முடியலை. என்னால அந்த நிலையை நினைச்சிப் பார்க்கவே முடியலை. மீறி யோசிச்சா வாந்தியே வருது.. இதை யார்கிட்டே போய் சொல்வேன்.. என்ன சொல்லி என்னை நியாயப்படுத்துவேன். கடவுளே என்னக் கொன் னுடேன். ஐந்தறிவு உள்ள ஜீவன் கூட அனுபவிக்கிற ஒரு சந்தோஷத்தை என் புருஷனுக்கு என்னால கொடுக்க முடி யலையே. விக்ரமை விட்டுப் பிரிய.. அவருக்கு சந்தோஷத்தைக்



கொடுக்க சட்டப்படி நான் பிரியணும்.. இல்லை சாகணும்.. இந்த ரெண்டும் அவங்க அக்காவோட உயிரை வாங்கிடு மோன்னும் பயமா இருக்கு.. என்மேல வெறுப்பு வர எத் தனையோ வழியில முயற்சி பண்ணினாலும்.. மனசு கிடந்து துடிக்குதே.. நான் பார்த்த காட்சி என்னை தாம்பத்ய வாழ்க் கைக்கு உட்படுத்தாது. மாலாகிட்ட சொல்லலாம் என்றால் என்னைப் பைத்தியக்காரிம்பா. விக்ரம்கிட்டேயே மனசு விட்டு பேசினாலும் நீ மட்டும் போதும்னு சன்னியாசி வாழ்க்கை வாழ ஆரம்பிச்சிடுவார். அவருக்கு என்னால சந்தோஷத்தைத் தான் கொடுக்க முடியலை. துக்கத்தையும் இரவு வேதனையை யுமா கொடுக்கணும்.''

அதற்கு மேல் இருந்த அத்தனை வரிகளும் கண்ணீர் பட்டு பாதி பாதி மறைந்து போயிருந்தது.

அவன் டைரியை மூடியபோது.. கண்களில் கங்கை கொப் பளித்துக் கொண்டிருந்தாள். திரும்பி சுசித்ராவைப் பார்த்தான். கோழிக் குஞ்சாய் சுருண்டு இருந்தாள். அருகில் போய் கன்னத் தில் கை வைத்தான். கை கிடுகிடு என நடுங்கியது. அவளின் கன்னம் கதகதப்பது போல் இவனுக்குப் பட்டது. அவளைக் கூப்பிடக்கூட முடியாமல் உதடு துடித்தது. சுருண்டு கிடந்த வளை.. குழந்தையாய் அள்ளி.. மார்பில் சாய்த்துக் கொண்டு, தாவாய் பற்றி..

''டேய்.. கண்ணம்மா'' என்றான்.

வலி தாளாமல் முனகினாள்.

''என் செல்லமே. எழுந்திருடா.. ஏய் கண்ணம்மா.. மூணு மாசமா மனசுக்குள்ளேயே செத்து இருக்கியேடி.. உன் உணர்வு களைவிட உடம்பா எனக்கு முக்கியம்..'' ஏதேதோ பிதற்றிக் கொண்டு.. அவளை எழுப்பினான்.

கண்களைத் திறந்தாள்.

விக்ரம் கண்ணீரோடு அவளைத் தாங்கிக் கொண்டிருப்பது புரிந்தது. புருவத்தை கசக்கிக் கொண்டு விலக நினைத்தபோது, படுக்கையின் மேல் கிடந்த டைரியை எதுவும் பேசாமல் எடுத்துக் காட்டினான். எல்லாம் புரிந்து போனது சுசித்ரா விற்கு.. தன் அவல நிலையை அவன் அறிந்து கொண்டான் என்றதுமே.. இயலாமை அழுகையாய் பீறிட்டது. வேகமாய் அவளை இறுக்கிக் கொண்டான்.

''என்னை மன்னிச்சிடுமா.. நீ துடிச்சிகிட்டு இருந்தது தெரியாம துடிக்க வச்சிட்டேன்டா.''

சுசித்ராவால் எதுவும் பேச முடியவில்லை. கண்ணீர் மட்டும் பெருகி அவன் மார்பில் வழிந்தோடியது.

''ஏன்டா செல்லம்.. செக்ஸ் மட்டும்தான் வாழ்க்கைன்னு நினைக்கிற பைத்தியக்காரனாவா என்னை நினைச்சிட்டே.. என்கிட்டே கூட பேசாம.. நீயே புழுங்கி இருக்கியே.''

''.............''

''ரொம்ப வலிக்குதா?'' அவள் கரயத்தில் கை வைத்துக் கேட்டான்.

''ம்கூம்'' தலையாட்டினாள்.

''மன்னிச்சிடுமா. அரக்கத்தனமா நடந்துகிட்டேன். இனிமே எப்போதும் இப்படி நடந்துக்க மாட்டேன்.''

''நீங்க..தான்.. என்னை மன்னிக்கணும்.. என்னால முடியலங்க.. உங்களை சந்தோஷப்படுத்த என்னால முடியலங்க..'' வார்த்தை அழுகையின் ஊடேதான் நுழைந்து வந்தது.

''செக்ஸ்தான் சந்தோஷம்னு யார் சொன்னது?''

''இல்லை.. என்னை சமாதானப்படுத்தத்தான் சொல்லுறீங்க.''



''இல்லடா நிஜமாத்தான் சொல்றேன்.''

''ஒவ்வொரு நாளும் நான் செத்துப் பிழைக்க வேண்டி வரும்.''

''சரி.. உன் நிம்மதிக்காக என்ன பண்ணலாங்ற..'' என்றான்.

''நீங்க வேற கல்யாணம்..''

''இப்படி சொல்றதுக்கு பதில்.. உன் கையால விசத்தைக் கொடுத்துடு சுசித்ரா.''

''............''

''ஒண்ணு பண்ணலாம்.''

''என்ன.''

''இது ஒரு பெரிய பிரச்சனையா எனக்குத் தெரியலை. திடீர்ன்னு மனசுல ஏற்பட்ட பாதிப்புதானே. ஒரு நல்ல மனோ தத்துவ டாக்டரைப் பார்த்தால் என்ன?''

''பார்த்தா?''

''இதுக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்படும்.''

''எப்படி?''

''மனோதத்துவ முறையில்.. இப்படி ஒரு பாதிப்பு உனக்கு ஏற்பட்ட சுவடே இல்லாமல் கூட உன் மனசுல அழிச்சிட முடியும்.''

''நிஜமாவா?''

''இம்.. டாக்டரைப் பார்க்க உனக்கு உடன்பாடுதானே?''

''இம்..''

''பயப்படாதே.. எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

''உங்களை சந்தோஷமா வச்சிக்குவேனா?''

''நீ என்கூட இருக்கிறதே எனக்கு சந்தோஷம்தான்.. வலிக்குதாடா'' அழுது விடுவது போல் கேட்டான்.

''இல்லை'' மறுத்தாள்.

''காலையிலேயே ஹாஸ்பிடல் போகலாம்.''

ம்.. ஹாஸ்பிடல் விசிட்டும் அவர்களுக்கு அதிர்ச்சியைத் தான் வைத்திருந்தது.



# 11

**தாம்பத்தியம்**

**தா - தனிமை**

**ம் - இளமை**

**ப - பாசம்**

**த் - திருப்பம்**

**தி - தியாகம்**

**ய - யாசிப்பு**

**ம் - இயலாமை**

மனோஜ்குமார் நர்ஸிங் ஹோம்.

வருடக் கணக்கிலும் அப்பாயிண்ட்மெண்ட் கிடைக்காத டாக்டரிடம்.. அவருக்குப் பழக்கமான ஒரு நண்பர் மூலம். அன்றே அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொண்டான்.

டாக்டர் மனோஜ்குமார் அறைக்கதவை இருவரும் தட்டிய போது.. சரியாய் மணி 2.30 உள்ளே நுழையும்போதே.. டாக்டரின் பர்சனல் அஸிஸ்டெண்ட் டாக்டர் மூலம்,



'இது எப்போதும் ரெஸ்ட் எடுக்கிற நேரம்.. அவரோட ஃப்ரெண்டின் ரெக்கமண்டினால் அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்து இருக்கிறார்.. ஆஃபனவரில் உங்களோட பிரச்சனையை முடித்துக் கொண்டு வரவேண்டும்' என்று அறிவுறுத்தப்பட்டு இருந்தார்கள். அந்த முன்னெச்சரிக்கை வேறு ரெட் சிக்னலாய் எரிந்து எரிந்து அணைந்தது. விக்ரம் பஸ்ஸரில் கை வைத்த நொடியே.

''எஸ்!'' குரல் உள்ளிருந்து ஒலித்தது.

இருவருமே ஒருவர் பின்னால் ஒருவர் செல்ல எத்தனித்து.. அது சரியாய் வராது என்று தோன்ற.. விக்ரம் முன்னால் நுழைய.. அவனைப் பின் தொடர்ந்தாள் சுசித்ரா.

இருவரிடமும் எதையும் பேசாமல் சீட்டைக் காட்டி உட்காரச் சொன்னார் டாக்டர்.

அமர்ந்து விட்டு நிமிர்ந்து அவரைப் பார்த்தான்.

அறுபதைத் தாண்டிய வயது. ஒடிசலான தேகம்.. அனுபவம் எல்லாம் நரையாய் பூத்திருக்க.. வெள்ளை நிறத்தில் கஞ்சி போடப்பட்ட கைத்தறி சர்ட்.. பேண்ட் என்னவென்று அவர் அமர்ந்து இருந்ததால் தெரியவில்லை. இன்னும் கண்ணாடி போடாமல் இருந்தது ஆச்சர்யம்தான். மெலிந்த சிவந்த தேகம். வெட்டி விடப்பட்டு இருந்த மீசையில் கருப்பு சாயம் ஏறாமல் இருந்தது.

''பார்த்துகிட்டே இருந்தா எப்படி? என்ன பிரச்சினை?'' குரல் பிசிறில்லாமல் தெளிவாய் ஒலித்தது.

''டாக்டர்'' விக்ரம்தான் பேசினான். சுசித்ரா தலையைக் கவிழ்த்தபடி அமர்ந்திருந்தாள்.

''எஸ்.''

''ஷீ ஈஸ் மை வொய்ப்?''

''எஸ்.''

''பேர் சுசித்ரா.''

''இம்.''

''நாங்க ரெண்டு பேரும் லவ் பண்ணித்தான் கல்யாணம் பண்ணிகிட்டோம்..'' எனத் தொடங்கியவன் முதல் நாள் நடந்த நிகழ்ச்சி வரை ஒன்று விடாமல் ஒப்பித்தான். எல்லா வற்றையும் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் கேட்டவர்..

''ஏம்மா.. நீங்க பார்த்த அந்த இன்சிடென்டை.. விளக்கமா விரிவாகச் சொல்ல முடியுமா?'' என்றார்.

தயக்கமாய் பார்த்தாள்.

''மிஸ்டர் விக்ரம் நீங்க கொஞ்சம் வெளியே இருக்கீங் களா?'' கைகளைப் பிசைந்தபடி பார்த்தான்.

''பயப்பட ஒண்ணுமே இல்லை. உங்க மனைவிக்கு ஏற் பட்டு இருக்கிறது ஒரு சின்ன அதிர்ச்சி.. ரொம்ப சென்சிட்டி வானவங்க.. இந்த மாதிரி மனபாதிப்புக்கு ஆளாயிறது உண்டு. என்னன்னு அவங்க மூலம் முழுமையா தெரிந்தால் தான் என்னால் சரியான ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியும். நீங்க இருந்தா அவங்க பேசத் தயங்கலாம்.. ப்ளீஸ்.''

''ஓ.கே. டாக்டர்'' என்றவன் சுசித்ராவிற்கு பார்வையால் தைரியம் சொல்லிவிட்டு.. அறையை விட்டு வெளியேறி னான்.

''இங்கே பாரும்மா.. டாக்டர்கிட்டே பொய் பேசக்கூடாது. பேசினால் நஷ்டம் பேஷண்டுக்குத்தான். உன்னைப் பார்த் தால் என் பேத்தி மாதிரி இருக்கு. அச்சப்பட்றதுக்கோ வெட்கப் பட்றதுக்கோ. வேலை இல்லை. தெரிந்ததை மனதில் பட்டதை தைரியமா சொல்லு.''



''என..க்கு.. அதை எப்படிச் சொல்றதுன்னே தெரியலை டாக்டர்.. அதைப் பற்றி பேசவே நா கூசுது.. அறுவெறுப்பா இருக்கு.''

''அம்மா! இந்த உலகத்துல இருக்கிற எல்லா விசயமும் நல்ல விசயம்தான். அது நல்லது கெட்டதுன்னு நாம் முடிவு பண்றதுக்குக் காரணமே, நாம் அதைச் சந்தித்த கோணத்தைப் பொறுத்தது. எந்த ஒரு விசயத்தையும்.. நாம நல்லபடியா.. நல்ல வழியில்தான் கத்துக்கணும்.. அதான் செக்ஸ் பத்தி தெரிஞ்சிக்க கல்யாணம் என்ற சம்பிரதாயமான வழி. தப்பா ஒரு விசயத்தை தெரிஞ்சிகிட்டதனால.. அது தப்பான விஷயம் என்ற முடிவுக்கு வந்துடக் கூடாது. அப்படி வந்துட்டா. அதைப் பார்த்த உன் கண்களே உன்னிடம் இருக்கக் கூடாது.''

''இல்ல டாக்டர்.. நீங்க சொல்றது எல்லாம் எனக்குப் புரியுது. ஆனா.. அந்தக் காட்சி கண் முன்னால நின்னு.. அரு வெறுப்பைத்தான் கொடுக்குது. எந்த ஆம்பளைய அந்தக் கண் ணோட்டத்தில் பார்த்தாலும் வெட்டிப் போடணும் போலத் தோணுது.''

''வெளிப்படையா உன்னால சொல்ல முடியலை. ஆம் ஐ கரெக்ட்.''

''எஸ் டாக்டர்.''

''ஓ.கே. உன்னோட சப் கான்சியஸில் என்ன ஸ்டோர் ஆயிருக்கு. அதனால உனக்கு எந்தளவு ப்ராப்ளம்னு நானே தெரிஞ்சிக்கிறேன். அங்கே போய் உட்காரும்மா'' என்று அந்த அறையின் ஓரத்தில் இருந்த சேரை சுட்டிக் காட்டினார்.

''டாக்டர் பிரச்சனை எதுவும்.''

''நோ ப்ராப்ளம்.. பயப்படாம போய் உட்கார்'' அவள் போய் அமர்ந்ததும்.. பளிச்சென எரிந்த அத்தனை விளக்கை யும் பட்டென அணைத்தார். ஒரு ஜீரோ வாட்ஸ் பல்ப் மட்டும் ஆரஞ்ச் கலரில் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தது.

''உடம்பை ரிலாக்ஸாக வைத்துக் கொள்ளம்மா.''

அவர் சொன்னதும்.. உடம்பை தளர்த்திக் கொண்டாள். அவளுக்கு முன்பு வந்து அமர்ந்தவர்.. மெல்ல மெல்ல தன் ட்ரீட்மெண்ட் மூலம்.. உறங்க வைத்து.. உள் மனதை தட்டி எழுப்பினார்.

''சுசித்ரா!'' அழைத்தார்.

''ம்'' உறங்கிப் போயிருந்தவளிடம் குரல் வெளிப்பட்டது.

மெல்ல மெல்ல ஒவ்வொரு நாளாக அவளைப் பின்னோக்கி போகச் சொல்லி.. அவர்களின் சாந்தி முகூர்த்த நாளன்று பிடித்து நிறுத்தினார்.

''கோவிலுக்குப் போயிட்டு வரும்போது என்ன நடந் துச்சு'' என்றார்.

''திடீர்னு ஸ்டிரைக்.. நாங்க ரொம்ப பயந்திட்டோம்.''

''அப்புறம்.. நடந்து வரும்போது என்ன பார்த்தீங்க.''

''வந்..து.. வ..ந்து..'' கண்ணீருடன் தேம்பலுடனும்.. ஒவ் வொரு நிகழ்ச்சியாய் விவரித்தாள். எந்தளவு அவள் மனதை பாதித்தது என்பதை அவள் கூறிய வரம்புக்கு மீறிய வார்த் தைகள் மூலம் தெரிந்து கொண்டார்.

''செக்ஸ்.. அசிங்கம், அறுவெறுப்பு.. காட்டுமிராண்டித் தனம்'' கத்தினாள்.

''ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்.''

''..........''

''ரோஜா அழகான பூச் செடியில் இருக்கும்போதும்.. தலை யில் சூடும்போதும் சந்தோஷப்படுகின்றோம்... பறித்து முகர்ந்து பார்த்தால் வாசம் மனதை மயக்கும். அதே பூவை நல்லா



கசக்கி மோந்து பார்த்தால்.. அறுவெறுப்பாகவும்.. வயிற்றை யும் தான் குமட்டும்.. நம்மோட அணுகுமுறையால அந்த பூவோட தன்மையே மாறிப் போயிடுது. அதே போல்தான்.. தாம்பத்தியங்கறது.. செடிக்கே வலிக்காமல் ரோஜாவை கையில் ஏந்தி மோந்து பார்க்கிற ரகம்.. கற்பழிப்பு.. கசக்கி எறிகிற ரகம்.''

''..........''

''செக்ஸ். அசிங்கமா அற்புதமாங்கறது முக்கியமில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான விசயம். நீ பார்த்தது ஒரு கனவு.

''நிஜமாவா டாக்டர்.''

''ஆமாம். அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கவே இல்லை.. நீயும்.. உன் கணவனும் எப்போதும் சந்தோஷமா இருக்கணும்.''

''..................''

''கனவு கண்டுட்டு.. நிஜத்தோட ஒப்பிடக் கூடாது.''

''..........''

''நீ பார்த்தது கனவு.. அதற்கும் தாம்பத்தியத்திற்கும் சம்மந்தம் இல்லை. தாம்பத்தியம் தெய்வீகமானது.. புனித மானது.. தாம்பத்தியம் எப்படிப்பட்டதும்மா?''

''தெய்வீகமானது.''

''தட்ஸ் குட்..'' என்றவர்.. அவளை சப் கான்சியஸில் இருந்து.. கான்சியஸிற்கு கொண்டு வந்தார். அவள் விழித்த போது.. உறங்கிய தெளிவும்.. கண்களில் தூக்கக் கலக்கத்தின் சாயலும் ஒட்டி இருந்தது.

''என்ன டாக்டர் சொன்னேன்.''

''ஒண்ணும் இல்லம்மா.. ஸோ சிம்பிள் மேட்டர்.. பீ ஹேப்பி.. ஓ.கே.''

மூன்று வார சிகிச்சை முடிந்தது. வாடிய பயிர் போல் இருந்தவன் சிரிக்கும் ரோஜாவாக காட்சியளித்தான். ஹாஸ்பிடல் விட்டு வெளியே வந்தபோது.. விக்ரமிற்கு சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை. அசட்டுத்தனமாய் அடிக்கடி மனைவியைப் பார்த்து சிரித்தான். மனதை பிடித்துக் கவ்வும் கவர்ச்சி சிரிப்பால் அவளும் தன் பங்கிற்கு அவனைக் கிறங்கடித்தாள். பைக்கில் அவன் பின்னால் அமர்ந்தபோது.. அவனே எதிர் பார்க்காத.. ஆசையோடு அவன் இடுப்பை தன் இரு கைகளாலும் இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.. பூரித்துப் போய் வேகமாய் பைக்கை உசுப்ப.. நாற்பது.. ஐம்பது.. என்று மீட்டர் எகிறியது. மனசு சலங்கை கட்டிக் கொண்டதால்.. இன்ப வானில் பறந்தார்கள்.